தொகுதி - I ஜனவரி - 2025 இதழ் - 1

தரிசனம்

பிரதம பதிப்பாசிரியர்
பேராசிரியர் ச.முகுந்தன்

இந்துக் கற்கைகள் பீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்

TARISANAM

The Journal of the Faculty of Hindu Studies, University of Jaffna is published in January and July

TARISANAM is a bi - annual research Journal. It's referees come from University Scholars and the National scholarly community.

Chief Editor : Prof. S. Muhunthan

Associate Editor : Prof. (Mrs) V. Pavanesan

Managing Editor : Dr. M. Balakailasanathasarma

Editorial Committee Members
: Dr. (Mrs) S. Srimuralitharan
: Dr. P. Chandrasegaram
: Dr. I. Jeyandran
: Dr.A.Palaravayan (Retired Prof)

Board of Advisory : Emeritus Prof.P.Gopalakrishna Iyer
Emeritus Prof.Pathmanathan
Emeritus Prof.A.Sanmugadas
Emeritus Prof. V. Maheswaran
Dr. N. Gnanakumaran (Retired Prof)
Dr. (Mrs.) K. Ramanathan (Retired Prof)
Dr.M.Vethanathan (Retired Prof)
Dr. (Mrs.) V. Sivachchanthiran
Mrs. N. Selvanayakam

Subscription : 1500/-SLR/15US $

Published by : The Faculty of Hindu Studies,
University of Jaffna, Jaffna, Sri Lanka

Printed by : Mickey Printing Specialist
A9 Road, Sankathanai, Chavakachcheri.

ISSN : 3084-9160

- *'தரிசனம்' யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துக்கற்கைகள் பீடத்தினால் வெளியிடப்படும் தரநிர்ணய ஆய்விதழாகும்.*

- *இது ஆண்டுக்கு இருமுறை ஜனவரி, ஜூலை மாதங்களில் வெளியிடப்படுகிறது .*

- *இந்துசமயம், இந்துநாகரிகம், இந்துதத்துவம்-சைவசித்தாந்தம், சம்ஸ்கிருதம், இந்துக்கலைகள் மற்றும் இவற்றோடு இயைபுறும் வகையில் அமையப்பெறுகின்ற இன்னபிற அறிவுப்புலங்கள் தொடர்பிலான ஆய்வுகளை வெளிக்கொணர்தல் இதன் பிரதான நோக்கமாகும்.*

- *தரிசனத்தில் ஆய்வுக்கட்டுரைகளை வெளியிட விரும்புவோர் கட்டுரையின் மூன்று பிரதிகளைக் கணினிப்பதிப்பாக பிரதம ஆசிரியருக்கு அனுப்புதல் வேண்டும். அத்தோடு இலத்திரனியல் பிரதி ஒன்றும்* (Softcopy) tarisanam@univ.jfn.ac.lk *என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.*

- *கட்டுரைகளை அனுப்புவோர் தங்கள் பெயர், கல்வித்தகைமை, பதவிநிலை, அலுவலகமுகவரி, மின்னஞ்சல் ஆகிய விபரங்களைக் கட்டுரையின் இறுதியில் தனிப்பக்கத்தில் குறிப்பிடவும்.*

- *கட்டுரைகள் தமிழிலோ அன்றி ஆங்கிலத்திலோ பத்து முதல் பதினைந்து பக்கங்களில்* (A4) *அமையப்பெறலாம். தமிழிலும் ஆங்கிலத்திலும் முறையே* Bamini *மற்றும்* 'Times New Roman' *எழுத்துருக்களைப் பயன்படுத்தவும். எழுத்துருவின் நியம அளவு 12ஆகும்.*

- *கட்டுரையாளர்கள்* Harvard referencing *முறையினைப் பின்பற்றவும்.*

- *துறைசார் புலமையாளர்களால் தரநிர்ணயம் செய்யப்பட்டுப் பிரசுரிப்பதற்குத் தகுதியானவை என ஏற்றுக்கொள்ளப்பட்ட கட்டுரைகளே தரிசனத்தில் வெளிவரும்.*

'TARISANAM' – Bi-Annual Refereed Journal of the Faculty of Hindu Studies, University of Jaffna

Author Guidelines for Research Article Submission:

- Research articles submitted to 'TARISANAM' must be original and should not be under consideration for publication elsewhere.

- Articles for Tarisanam may be written in either Tamil or English. However, footnotes, citations, and references may also include Sanskrit if the original texts are available in that language.

- Use the Harvard referencing style and follow the standard format of a research article.

- Three clear hard copies, along with a soft copy, must be submitted.

- The article, including the title, author information, abstract, main text, tables, figures, notes, references, and appendices, should be between 10 and 15 A4 pages in length. The text should be in Bamini font (for Tamil articles) or Times New Roman (for English articles), with a font size of 12.

- Hard copies should be submitted to the following address, along with the soft copy in both 'Word' and 'PDF' formats: Editor-in-Chief, TARISANAM Faculty of Hindu Studies, University of Jaffna, Sri Lanka.

- Additionally, the soft copy may be sent via email to tarisanam@univ.jfn.ac.lk. along with details regarding the submission of hard copies.

- For more details, please visit our Faculty website www.hindu.jfn.ac.lk

கட்டுரை ஆசிரியர்கள்

கலாநிதி (திருமதி)சுகந்தினி சிறிமுரளிதரன், Ph.D,
சிரேஷ்ட விரிவுரையாளர் - Gr. I,
இந்துநாகரிகத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
ssuganthini@univ.jfn.ac.lk

பேராசிரியர் (திருமதி) விக்னேஸ்வரி பவநேசன், Ph.D,
தலைவர், இந்துநாகரிகத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
pvigneswary@univ.jfn.ac.lk

கலாநிதி மகேஸ்வரக்குருக்கள் பாலகைலாசநாதசர்மா, Ph.D,
சிரேஷ்ட விரிவுரையாளர் - Gr. I,
தலைவர், சம்ஸ்கிருதத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
mbklsarma@univ.jfn.ac.lk

பிரம்மஶ்ரீ சர்வேஸ்வரஜயர் பத்மநாபன், M.Phil
சிரேஷ்ட விரிவுரையாளர் - Gr. I,
பீடாதிபதி, இந்துக்கற்கைகள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
padmanaban@univ.jfn.ac.lk

திரு சுப்ரமணியம் நவநநீதகிருஷ்ணன், M. Phil,
விரிவுரையாளர், சம்ஸ்கிருதத்துறை, , யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
ksnavan@univ.jfn.ac.lk

திரு சின்னராசா ரமணராஜா, M. Phil,
சிரேஷ்ட விரிவுரையாளர் - Gr. II,
இந்துநாகரிகத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
sramanaa@univ.jfn.ac.lk

கலாநிதி இளையதம்பி ஜெயந்திரன், Ph.D,
சிரேஷ்ட விரிவுரையாளர் - Gr. II,
சைவசித்தாந்தத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
jeyandran@univ.jfn.ac.lk

செல்வி துஹுயா பேரானந்தம், B.A (Hons),
விரிவுரையாளர், இந்துநாகரிகத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
pthukaya@univ.jfn.ac.lk

செல்வி கிஷாந்தினி திருச்செல்வம், B.A (Hons),
விரிவுரையாளர், இந்துநாகரிகத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
tkishanthiny@univ.jfn.ac.lk

Ven.Walapane Gnanasena,
Ph.D., Researcher,
Faculty of Graduate Studies,
University of Jaffna.

திருமதி கவிதா கதிரமலை,
முதுதத்துவமாணி ஆய்வாளர்,
பட்டதாரிக்கற்கைகள் பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

திரு. குணரத்தினம் கோபிராஜ்,
முதுதத்துவமாணி ஆய்வாளர்,
பட்டதாரிக்கற்கைகள் பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

கலாநிதி மாரிமுத்து வேதநாதன்,
பேராசிரியர், ஓய்வுநிலை இந்துநாகரிகத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
மேற்பார்வையாளர், முதுதத்துவமாணி
பட்டதாரிக்கற்கைகள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

பொருளடக்கம்

1. யாழ்ப்பாணத்துச் சிவாலயக்கட்டடக்கலை - சிவாகமங்களை முன்னிறுத்தியது. 01

   சுகந்தினி,சி.

2. அறநோக்கில் பகவத்கீதையும் திருக்குறளும் 22

   விக்னேஸ்வரி, ப.

3. Word Frequency analysis of Devīkālottarāgama 41

   Navaneethakrishnan,S., Balakailasanathasarma,M., Padmanaban,S.

4. மாணிக்கவாசகரின் நீத்தல் விண்ணப்பப் பதிகத்தில் 'தற்சிறுமை' கொள்ளல் - ஓர் நோக்கு 48

   ரமணராஜா, சி.

5. சைவசித்தாந்தம் கூறும் முத்திநிலையில் ஆணவமலம் 60

   ஜெயந்திரன்,இ.

6. சோழர் கல்வெட்டுக்களில் திருக்கோயில் நிர்வாகம் 69

   துஹாயா,பே.

7. இந்துப்பண்பாட்டுக்குரிய சித்தமருத்துவப் பாரம்பரியத்தில் அசுரமருத்துவ முறைகள்: பரராசசேகரத்தினை முன்னிறுத்தியது 82

   கிஷாந்தினி,தி.

8. Hindu - Buddhist Perspective on Ethics for Social Relationship 95

   Walapane Gnanasena, Balakailasanathasarma,M.

9. சிவாகமங்களும் சிவதீட்ஷைகளும் 105

   கவிதா,க.,

   பாலகைலாசநாதசர்மா,ம.

10. தெல்லிப்பளைப் பிரதேசத்து இந்துக் கோயிற்கலைகள்- பாதிப்பும் மீளுருவாக்கமும் 112

    கோபிராஜ்,கு.

    வேதநாதன், மா.

මගේ අංකය
எமது இல.
My Number

ඔබේ අංකය
உமது இல.
Your Number

දුරකථනය යාපනය
தொலைபேசி: யாழ்ப்பாணம்
Telephone : Jaffna 2483 2006

කැ.පෙ. අංකය 57,
තිරුනෙල්වේලි
යාපනය.

த.பெ. எண் 57,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

P.O. Box 57,
Thirunelvely,
Jaffna.

යාපනය විශ්වවිද්‍යාලය, ශ්‍රී ලංකාව
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
UNIVERSITY OF JAFFNA, SRI LANKA.

துணைவேந்தரின் வாழ்த்துச் செய்தி

न हि ज्ञानेन सदृशं पवित्रमिह विद्यते ।
तत्स्वयं योगसंसिद्धः कालेनात्मनि विन्दति ।।३८

ஞானத்தைப் போல் தூய்மை தரும் பொருள் இவ்வுலகத்தில் வேறெதுவுமில்லை. யோகத்தில் நல்ல ஸித்தியடைந்தவன் தானாகவே தக்க பருவத்தில் அதைத் தனக்குள் கிடைக்கப் பெறுகிறான்.

*- ஸ்ரீமத் பகவத்கீதை அத்.*IV: *38*

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இந்துக் கற்கைகள் பீடத்தின் ஆய்வுச்சஞ்சிகையாக வெளிவருகின்ற 'தரிசனம்' ஆய்விதழுக்கான ஆசிச்செய்தியை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். இந்துக்கலாசாரத்தை அறிவுலகில் முன்னிறுத்தவல்ல செழுங்கலை நியமமாக இப்பல்கலைக்கழகம் திகழ வேண்டும் என்கிற அதன் ஸ்தாபகர்களின் கனவினை மெய்ப்பிக்கும் இலட்சிய பீடமாக இந்துக்கற்கைகள் பீடத்தின் ஸ்தாபிதத்தை நோக்க முடியும். 2019இல் அமையப்பெற்ற இப்பீடமானது பல்வேறு ஆளணி, உட்கட்டுமான நெருக்கடிகளுக்கு மத்தியிலும் தனது பணிகளைச் சிறப்பாக முன்னெடுத்து வருகின்றது. அத்தகைய முன்னெடுப்புக்களின் இன்னொரு பரிமாணமாகவே 'தரிசனம்' ஆய்விதழின் வருகையும் அமைகிறது. இது ஓராண்டுக்கு இருமுறை வெளிவரும் தரநிர்ணய ஆய்வுச்சஞ்சிகை ஆகும். இந்துநாகரிகம், சைவசித்தாந்தம், சம்ஸ்கிருதம் ஆகிய மூன்று முக்கிய அறிவுப்புலங்களின் விகசிப்பையும் உள்வாங்கி அமையப்பெற்ற ஆய்வுக்கட்டுரைகளை இத்தரிசனம் தாங்கி வரும் என்பதனை அறியப்பெற்று மிக்க மகிழ்ச்சி அடைகின்றோம். ஏனெனில் சமகால ஆய்வுலகில் குறித்த துறைகளுக்கான ஆய்வுத்தளங்கள் அருகிவருகின்றன. வெகுஜனமயப்பட்டவையாக அன்றித் தூய ஆய்வுகளுக்கான ஆய்விதழ்களின் எண்ணிக்கை மேற்படி துறைகளைப் பொறுத்தவரையில் வெகுசொற்பமாகவே காணப்படுகின்றன. இத்தகையதோர் பின்புலத்தில் 'தரிசனத்தின்' வருகை மகிழ்ச்சிக்குரியது.

'தரிசனம்' என்பது வெறுமனே பார்வை என்கிற மேலோட்டமான தொனிப்பொருளில் மட்டும் அமைந்த பதமன்று. அது 'அகக்காட்சி', 'உள்நோக்கு', 'ஆய்வு நோக்கு' முதலிய பொருண்மைகளுடன் இந்துசமய, மெய்யியற் புலத்தில் வழங்கப்பெறுகின்ற சொல்லாடலாகும். இதனாலேயே சாங்கியம், யோகம், நியாயம், வைசேடிகம், மீமாம்சை, வேதாந்தம் ஆகிய இந்து மெய்யிற் பிரிவுகளை 'ஷட்தரிசனங்கள்' என்று வழங்குவர். எனவே மேற்படி ஆய்விதழும் தரிசனத்தின் மெய்ப்பொருளை உணர்ந்து ஆய்வுச்சிறப்பு மிக்க ஆழமான கட்டுரைகளைத் தாங்கிவர வேண்டும் என்று வாழ்த்துவதோடு, இந்துக்கற்கைகள் பீடத்தினைச் சிறப்பாக வழிநடத்திச் செல்கின்ற அதன் பீடாதிபதி பிரம்மஶ்ரீ ச.பத்மநாபன் அவர்களையும் தரிசனத்தின் பிரதம பதிப்பாசிரியர் பேராசிரியர் ச.முகுந்தனையும் அவரது 'தரிசனம்' ஆசிரிய குழுமத்தினரையும் வாழ்த்தி அமைகின்றேன்.

பேராசிரியர் சி. சிறிசற்குணராசா,
துணைவேந்தர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
25.02.2025

FACULTY OF HINDU STUDIES
UNIVERSITY OF JAFFNA

வாழ்த்துச்செய்தி

அறிவுத்திருக்கோவில் எனப் போற்றப்படும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமானது தனது பொன்விழா ஆண்டில் பயணித்துக் கொண்டிருக்கும் இக்காலப்பகுதியில் எமது இந்துக்கற்கைகள் பீடம் தனது ஐந்தாண்டுகளை நிறைவு செய்துள்ளது. எமது பீடத்தின் ஆய்வுப் புலத்தின் தலைப்பிரசவமாக 'தரிசனம்' என்ற பெயர் தாங்கிய இந்த ஆய்வுச் சஞ்சிகையின் முதற்றொகுதி வெளிவருவதையிட்டு மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

பல்கலைக்கழகச் செயற்பாட்டில் கற்றல், கற்பித்தல் ஆய்வுகளை மேற்கொள்ளல் என்பதற்கு மேலாக ஆய்வுச்சஞ்சிகையினை வெளியிடுதல் மிகுந்த சவால்கள் நிறைந்த முயற்சியாகும்.

"தரிசனம்" எனும் இந்த ஆய்வுச் சஞ்சிகை ஆண்டுக்கு இருமுறைகள், ஆறு மாத காலத்திற்கு ஒன்றாக வெளிவருவதற்கானதோர் ஆய்வுச்சஞ்சிகை ஆகும். இவ் ஆய்வு சஞ்சிகையின் உருவாக்கம் பற்றிய முன்மொழிவு 27.04.2024 அன்று 15வது இந்துக்கற்கைகள் பீட அவையில் ஏனைய விடயங்கள் தொடர்பாக HSFB/14/16.4உறுதி செய்யப்பட்டது. அதன் பிரகாரம் உப குழுவாக இந்துநாகரிகம், சம்ஸ்கிருதம், சைவசித்தாந்தம் ஆகிய துறைகளுக்காக முறையே திரு.சி.ரமணராஜா, திரு.சு.நவநீதகிருஷ்ணன், கலாநிதி.பொ. சந்திரசேகரம் ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

26.05.2022 அன்று 16வது பீட அவையில் பேராசிரியர் (திருமதி).வி. பவனேசன் பதிப்பாசிரியர் குழு நியமிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தார். அதன் பிரகாரம் பிரதம பதிப்பாசிரியராக கலாநிதி.ச. முகுந்தன் அவர்களை பேராசிரியர் (திருமதி).வி. பவனேசன் முன்மொழிய திரு.சி.ரமணராஜா வழிமொழிந்தார். உதவிப்பதிப்பாசிரியர்களாக கலாநிதி.ம.பாலகைலாசநாதசர்மா, பேராசிரியர் (திருமதி).வி. பவனேசன் ஆகியோரும்: உறுப்பினர்களாக கலாநிதி (திருமதி) சு. சிறிமுரளிதரன், கலாநிதி.பொ.சந்திரசேகரம், கலாநிதி.இ. ஜெயெந்திரன் ஆகியோரும் தெரிவாகினர். வெளிநிலை அங்கத்தவராக கலாநிதி அருணை பாலறாவாயன் (இந்தியா) நியமிக்கப்பட்டார். தொடர்ந்து 04.10.2022 அன்று 19ஆவது பீட அவையில் முதலாம் வரைவு சமர்ப்பிக்கப்பட 03.11.2022 அன்று 20வது பீட அவையில் சிறப்பாக ஆய்வுச்சஞ்சிகை தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது. 28.03.2023 அன்றைய 474வது

மூதவையில் (S/474/16/HST/I) அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டு ***03.09.2024*** அன்று ***483***வது மூதவையின் அனுமதி பெறப்பட்டதும் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து கோரப்பட்டன. இதனைத் தொடர்ந்து ஆசிரிய பீடத்தினால் மேற்கொள்ளப்பட்ட மிக நீண்ட உழைப்பின் பிரதிபலனாக இச் சஞ்சிகை வெளிவருகின்றது.

"தரிசனம்" எனப் பெயர்தாங்கி இந்த ஆய்வுச் சஞ்சிகை வெளிவருவதற்குப் பலரது அர்ப்பணிப்புக்களும் காரணமாகின்றன. தம்மை அர்ப்பணித்து ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் இந்துக்கற்கைகள் பீடத்தின் சார்பில் மனமார்ந்த நன்றிகள் உரித்தாகுக.

பிரம்மஶ்ரீ சர்வேஸ்வரஐயர் பத்மநாபன்,
பீடாதிபதி
இந்துக் கற்கைகள் பீடம்

ஆசியுரை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இந்துக் கற்கைகள் பீடம் அண்மையில் உருவாகியமை அனைவருக்கும் மகிழ்ச்சி தருவதொன்றாகும். இப்பீடத்தில் இந்து நாகரிகம், சைவ சித்தாந்தம், சம்ஸ்கிருதம் ஆகியவற்றிற்கான மூன்று துறைகள் உள்ளடங்கியுள்ளன. இவற்றில் பல்கலைக்கழக இலட்சியத்திற்கேற்ப கற்றல், கற்பித்தல், ஆய்வு செய்தல் ஆகிய மூன்று முக்கிய பணிகளால் இளந்தலைமுறையினர் தமது அறிவை விருத்தி செய்து சிறந்த பயனடைந்து வருகின்றனர்.

இப்பணிகளை மேலும் வளம்படுத்துவதற்கு ஏதுவாக இந்துக் கற்கைகள் பீடம் "தரிசனம்" என்னும் ஆய்வுச் சஞ்சிகையை முதன் முதலாக வெளிவிடவிருப்பது அப்பீடத்திற்கு பெருமையளிப்பதாகும். அவ்வகையில் அப்பீடத்திற்கு முதற்கண் எமது நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தொடங்கப்பெற்று 50 வருடங்களை (1974-2024) நிறைவு செய்யும் நிலையில் பொன் விழா கொண்டாடப்படும் இவ்வருடத்தில் இந்த ஆய்வுச்சஞ்சிகை முதன் முதலாக வெளிவருவது மிகப் பொருத்தமானதொன்றாகவும் வரலாற்றுச் சிறப்பிற்குரியதாகவும் அமைகின்றமை குறிப்பிடத்தக்கது. அவ்வகையில் பீடத்தின் பீடாதிபதி பிரம்மஶ்ரீ ச. பத்மநாபன் அவர்களுக்கும் பீடச்சபை உறுப்பினர்களுக்கும் இச்சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் இந்து நாகரிகத்துறையைச் சார்ந்த பேராசிரியர் ச. முகுந்தன் அவர்களுக்கும் அவரது ஆய்வுச் சஞ்சிகைக் குழுவினர்க்கும் எமது நல்லாசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றோம்.

இந்த ஆய்வு சஞ்சிகை இப்பீடத்தைச் சார்ந்த கல்விமான்களின் ஆய்வுத்திறனை வளர்க்கவும் ஆய்வுக் கட்டுரைகளால் ஆசிரியர்களும் மாணவர்களும் நலன்விரும்பிகளும் பயனடையவும் இளம்தலைமுறையினரிடையே வாசிப்புப் பழக்கத்தை ஊக்கப்படுத்தி அதன்வழி சிந்தனை மலர்ச்சிபெறவும் பெரிதும் உதவும் என்பதில் ஐயமில்லை. புதிய பீடத்தில் 'தரிசனம்' ஆய்வுச் சஞ்சிகையின் வரவு காலத்தின் கட்டாய தேவை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த ஆய்வுச் சஞ்சிகைக்கு ஆய்வுநிலை சார்ந்த ஆக்கங்களைப் பீடத்தைச் சேர்ந்த பேராசிரியர்கள், முதுநிலை விரிவுரையாளர்கள், விரிவுரையாளர்கள் ஆகியோர் வழங்கி இச்சஞ்சிகையின் பயன்பாட்டிற்கு உதவுவது இன்றியமையாததாகும். சுருங்கக்கூறின் இச்சஞ்சிகையின் தரமும் எதிர்காலமும் இப்பீடத்தின் கல்விமான்களின் கைகளிலேயே தங்கியுள்ளது. மேலும் ஏனைய ஆய்வாளர்கள், அறிஞர்கள் ஆகியோரிடமிருந்தும் சஞ்சிகைக்குரிய ஆக்கங்களைப் பெறுவதும் வரவேற்கத்தக்கதாகும்.

'தரிசனம்' ஆய்வுச்சஞ்சிகை சிறப்பாக அமையவும் வெளியீடு வெற்றி பெறவும் சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் பேராசிரியர் ச. முகுந்தன் அவர்களுக்கும் சஞ்சிகைக் குழுவினர்க்கும் எல்லாம் வல்ல ஶ்ரீபார்வதி சமேத பரமேஸ்வரப் பெருமானின் திருவருள் பொலிவதாகுக! 'தரிசனம்' ஆய்வுச் சஞ்சிகை எமது பீடத்திற்கும் பல்கலைக்கழகத்திற்கும் பெருமை சேர்ப்பதாக! என எமது வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.

“வாழ்க்கை முழுவதும் ஒருவன் கற்றுக் கொண்டே இருக்க வேண்டும். கற்க மறுப்பவன் வாழ மறுக்கின்றான்” என்ற மெய்ஞ்ஞானியொருவரின் வாக்கிற்கேற்ப யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மகுடவாசகமாகிய “மெய்ப்பொருள் காண்பது அறிவு” என்றதன் வழி தரிசனம் ஆய்வுச் சஞ்சிகையால் நாமனைவரும் பயன்பெறுவோமாக!

பேராசிரியர் இலக்கிய கலாநிதி ப. கோபாலகிருஷ்ண ஐயர்
வாழ்நாள் பேராசிரியர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
25.10.2024

யாழ்ப்பாணத்து சிவாலயக்கட்டடக்கலை சிவாகமங்களை முன்னிறுத்தியது

சுகந்தினி, சி.

ஆய்வுச்சுருக்கம்

சிவாலயங்கள் சைவப்பண்பாட்டின் நிலைக்களனாக விளங்குகின்றன. சைவப்பண்பாட்டில் சமயம், தத்துவம், கலை ஆகிய துறைகளை நெறிப்படுத்துவதில் சிவாலயங்கள் சிறப்புப் பெறுகின்றன. சிவாலயக் கட்டட அமைப்பு விதிமுறைகளைச் சிவாகமங்கள் மிக விரிவுபடக் கூறுகின்றன. சிவனை பிரதான மூர்த்தியாகக் கொண்ட சிவாலயமானது கர்ப்பக்கிருகத்தை மையமாகக்கொண்டு மண்டபங்கள், பிரகாரங்கள், விமானங்கள், கோபுரங்கள், மூலாலயம், பரிவாராலயம் என்று விரிந்து செல்லும் சிறப்புடையன. சிவாகமங்கள் இருபத்தெட்டாகும். எனினும் சிவாலயக்கட்டட விதிமுறைகளை சிறப்பாக எடுத்துக் கூறுகின்ற காரணாகமம், காமிகாகமம் இவ்வாய்வின் மூலநூல்களாகும். ஏனைய சிவாகமங்களில் கூறப்படுகின்ற விடயங்கள் துணைமூலங்களாக அமைகின்றன. இவ்வாய்வானது விபரணஆய்வு, பகுப்பாய்வு ஆகிய முறையியல்களில் மேற்கொள்ளப்படுவதுடன், சிவாகமங்களில் கூறப்பட்ட விடயங்களை சிற்ப சாஸ்திரங்களுடன் ஒப்பிட்டுக் கூறுவதினால் ஒப்பிட்டாய்வு முறையும் பயன்படுத்தப்படுகின்றது. மேலும், இவ்வாய்வுக்கான விடயங்கள் களவாய்வு மூலம் வெளிக்கொணரப்படுகின்றன. இவ்வாய்வானது யாழ்ப்பாண மாவட்டத்தை ஆய்வு எல்லையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டது. யாழ்ப்பாணப்பிரதேசத்தில் சுமார் முப்பத்தேழு சிவாலயங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் வண்ணை வைத்தீஸ்வரன், பருத்தித்துறை சிவன், வல்வெட்டித்துறை சிவன், காரைக்கால் சிவன், நல்லூர் சிவன், காரைநகர் சிவன், சட்டநாதர் சிவன், கீரிமலை சிவன் மற்றும் பல்கலைக்கழக பரமேஸ்வரன் ஆகிய சிவாலயங்கள் இவ்வாய்வுக்கு முக்கியத்துவப்படுத்தப்பட்டுள்ளன. சிவாகமங்கள் கூறுகின்ற சிவாலயக் கட்டட அமைப்பு விதிமுறைகளை யாழ்ப்பாணத்து சிவாலயங்கள் எந்தளவிற்குப் பேணுகின்றன என்பதனைத் தொடர்புபடுத்தி ஆராய்வதே இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும். அதேவேளை சமீபகாலங்களில் சிவாலயக்கட்டட நிர்மாணங்களின் போது குறிப்பாக ஒரு சிவாலயத்தை விரிபுபடச் செய்கின்ற சந்தர்ப்பங்களில் பல சவால்களை எதிர்நோக்குகின்றனர். இவ்வாறான சந்தர்ப்பங்களில் ஐயங்கள் ஏற்படுகின்றபோது சிவாகமங்களை ஆதாரப்படுத்தி கூறக்கூடிய சிவாலயக் கட்டட விதிமுறைகளை இவ்வாய்வு தெளிவுபடுத்த முனைகின்றது. யாழ்ப்பாணத்தில் சிவாகம மரபு ஒன்று நிலவிவருவதற்கு சிவாலயக் கட்டட அமைப்பு ஒன்றே சிறந்த சான்றாக அமைவதை இவ்வாய்வு நிலைநிறுத்துகின்றது.

திறவுச்சொற்கள் : *சிவாலயம், கட்டடம், சிவாகமம், சிற்பசாஸ்திரம், அளவுமானம்.*

அறிமுகம்

சிவாலயம் சிவலிங்க திருவுருவத்தைப் பிரதான மூர்த்தியாகக்கொண்டு பரந்து விரிந்து விளங்குகின்றது.

> *"சிவாலயத்தின் நினைவைத் தன்மனதிலிருந்துஅழித்துக்கொண்ட இருதயத்தை உடையவர்களிடம் செல்லாதே" (நெஞ்சுவிடுதூது, பா.116-117)*

என உமாபதிசிவம் தனது மனதிற்குக் கூறுகின்றார். சிவாலயங்களின் அமைப்பு முறையானது சிவாகமமரபு சார்ந்தது. சிவாகமங்கள் கூறுகின்ற கிரியைமரபுகளுக்குரிய முக்கிய ஸ்தானமாக விளங்குவது சிவாலயத்தில் இடம்பெறுகின்ற திருவுருவங்களும், சிவாலயக்கட்டட அமைப்பு முறைகளுமாகும். அத்தகைய சிவாலயக் கட்டட அமைப்பு முறைகள் கர்ப்பக்கிருகத்தை மையமாகக்கொண்டு மண்டபங்கள், பிராகாரங்கள், விமானம், கோபுரங்கள் பரிவாராலயங்கள் என்று விரிந்து செல்லும் சிறப்புடையன.

> *"ஆலயம் அமைப்பதற்கு எந்த ஆகமப்பிரமாணத்தின்படி கர்ஷணம் முதல் அர்ச்சனை வரை செய்ய ஆரம்பிக்கப்பட்டதோ அதன்படியே*

செய்ய வேண்டும். இடையில் வேறு தந்திரங்களால் செய்யக்கூடாது (காரணாகமம் I.*1.70* , காமிகாகமம் *1.1.113*)

என்பது ஆகமம் கூறுகின்ற விதிமுறையாகும். எனினும்,

> "ஒரே மூலாகமத்தில் அனைத்து விடயங்களும் கூறப்படாதவிடத்து ஏனைய மூலாகமங்களிலிருந்து பெற்றுச் செய்யவேண்டும்." (காரணாகமம் I.*1..71*)

> "கர்ஷ்ணாதி முதல் பிரதிஷ்டை வரையும் மூலாகமங்களினாலேயே செய்யும் போது அவ்வாலயங்கள் ஆகம வரையறைக்குள் உட்பட்ட ஆலயங்களாக விளங்கும்" (காரணாகமம் I.*1.70,71*)

எனவும் காரணாகமம் கூறுகின்றது. எனவே சிவாலய நிர்மாணம் என்பது சாஸ்திரோக்தமாகவே செய்யப்பட வேண்டும் என்பது சிவாகம நியதியாகும்.

யாழ்ப்பாணத்துச் சிவாலயக் கட்டடக் கலையின் அளவுமானம்

சிவாலயக் கட்டடக்கலையின் அளவு மானம் மிகவும் முக்கியமானதொன்றாகும். அளவுப்பிரமாணங்கள் கூடியோ அல்லது குறைந்தோ அமையுமிடத்து அதன் விளைவாக ஏற்படும் பலாபலன்களை காரணாகமம் எடுத்துக் கூறுகின்றது. ஆதலால் உரிய அளவுப்பிரமாணங்களில் கட்டடங்களை நிர்மாணம் செய்ய வேண்டும் எனும் சிவாகம மரபைப் பின்பற்றியே வாஸ்து சிற்பசாஸ்திரங்களும் இத்துறை தொடர்பான அளவுமுறைகளை விரித்துரைக்கின்றன. திருக்கோயில் ஒன்றினை அமைப்பதற்குத் தேவையான மூலகர்த்தாக்கள் யாவர் என்பதனை காமிகாகமம் கூறுகின்றது.

> "ஆலயம் அமைக்கவேண்டிய இடத்திற்குஉரிமையாளரானஆலயம் கட்ட வேண்டிய யஜமானன், ஆலய அமைப்பு விதிகளை நன்கு அறிந்த சிற்பி, சிவாச்சாரியர் என்பவர்கள் குறிப்பிடப்படுகின்றனர்." (காமிகாகமம் *1.10.21*)

ஓர் ஆலயம் கட்டப்பட்டு அங்கு பிரதிஷ்டை நடக்கும் வரை இம்மூவரின் தொடர்பு இன்றியமையாததாகும்.

யாழ்ப்பாணத்துச் சிவாலயக் கட்டடக்கலையின் சிறப்பியல்புகளில் நாம் கவனிக்கும் ஒரு முக்கிய அம்சம் ஸ்தபதிகள் கால்ப்புறவாய் அளவை வைத்துக் கொண்டு அதன் பங்கு மானங்களில் ஆலய உறுப்புக்களை நிர்மாணித்தல் ஆகும். பிராசாதம் எனப்படுகின்ற கர்ப்பக்கிருக அமைப்பில் உபபீடம், அதிஷ்டானம், பாதவர்க்கம், பிரஸ்தரம் என்பன முக்கியத்துவமுடையவையாகும். இவற்றில் பாதவர்க்கம் எனப்படும் தூண்கள் அல்லது கால்களின் வெளியளவின் அளவையே கால்ப்புறவாய் அளவு என்பார். இந் அளவே சிவாலயங்களில் ஏனைய கட்டட அமைப்புக்கள் யாவற்றிற்கும் அடிப்படையாக அமைகின்றது. இதனை,

> 'கர்ப்பக்கிருகத்தின் கால்ப்புறவாய் எவ்வளவு நீளம் உடையதாக கணிக்கப்படுகின்றதோ அந்த நீளம் தான் மானதண்டத்தின் நீளம். சிவாலய கர்ப்பக்கிருகம் சற்சதுரமாக அமைந்திருக்கும். கர்ப்பக்கிருகத்தையும் அர்த்த மண்டபத்தையும் இணைப்பது அந்தராளம் ஆகும். இது கர்ப்பக்கிருகத்தின் கால்ப்பங்கு அளவு அமைந்திருக்கும். அதை அடுத்துவரும் மண்டபம் அர்த்த மண்டபம். இதன் அகலம் பிரமாணத்திற்கு ஏற்ப

கர்ப்பக்கிருகத்தின் அகலத்தினின்றும் சிறிது குறைவாக இருக்கும். எனினும் மானதண்டத்தின் உதவியுடனே இதன் நீளம் அகலம் கணிக்கப்படும். இதற்கு அடுத்தாற்போல் அந்தராள மண்டபம். இம்மண்டபமும் கர்ப்பக்கிருகத்தின் கால்பங்கு அளவு அமைந்திருக்கும். அடுத்து மகாமண்டபம். இதன் அகலம், நீளம் கர்ப்பக்கிருகத்தின் இரு மடங்காகவோ அல்லது மூன்று மடங்காகவோ பெருக்கமுடையதாக அமைக்கலாம். அடுத்து தரிசன மண்டபம். இம்மண்டபமும் மகாமண்டபத்திற்கு ஒத்த அகல முடையதாகவும் நீளம் வசதிக்கேற்ப மகாமண்டபத்தின் நீளத்திற்குக் குறைவுபடாத அளவு இருக்க வேண்டும்." (மயமதம் 25.175)

என மயமதம் முதலிய சிற்பசாஸ்திரங்கள் கால்ப்புறவாயின் அளவுப்பிரமாணத்தினை வைத்து சிவாலய உறுப்புக்களின் அளவுப்பிரமாணங்களைத் தீர்மானிக்கும் முறைமையைக் கூறுகின்றது.

உதாரணமாக, ஓர் ஆலயத்தின் கால்ப்புறவாயின் உத்தம அளவு 9 அடி 4.5 அங்குலம் (9' 4.5") எனக் கொண்டு கணிப்பதன் அடிப்படையில் ஆலயத்தை அமைக்கும் முறையை யாழ்ப்பாணத்துச் சிவாலயக் கட்டடக் கலையோடு தொடர்புபடுத்தி ஆராயலாம்.

அவ்வளவுமானம் பற்றிய விபரம் மூன்று பிரிவான அட்டவணைகள் மூலம் காட்டப்படுகின்றது.

முதலாவது அட்டவணையின் மூலம் கால்புறவாயின் பங்குமானத்தால் சிவாலயக் கட்டட உறுப்புக்களின் நீளம், அகலம் தீர்மானிக்கப்படுகிறது. (பின்னிணைப்பு இல 01) அதாவது உதாரணமாக,

கால்ப்புறவாய் அளவில் பங்கு கொண்டது அந்தராளம்.

ஆதலால் அந்தரவாளத்தின் அளவு 9' 4.5" x = 2'.4.125" ஆகும்.

எனவே கால் புறவாயிலிருந்து 9' 4.5" + 2' 4.125" தள்ளி அந்தராளத்தின் முடிவு அமையும் எனத் தீர்மானிக்கப்படுகிறது.

இரண்டாவது அட்டவணையில் சிவாலயக் கட்டட உறுப்புக்களுக்கு இடையில் உள்ள இடைவெளி கால்ப்புறவாயின் பங்குமானத்தால் தீர்மானித்தல் பற்றிய விடயங்கள் உள்ளடங்குகின்றன. (பின்னிணைப்பு இல 02) அதாவது உதாரணமாக,

கோபுரவாசலில் இருந்து கால்ப் புறவாயின் பங்கு இடைவெளியில் மணிக்கூட்டுக் கோபுரம் அமைத்தல் வேண்டும் என்ற விதி உள்ளது. ஆதலால் மணிக்கூட்டுக் கோபுரம் அமையவேண்டிய இடம் 9' 4.5 x = 4'8.25"

எனவே கோபுரவாசலில் இருந்து 4' 8.25" தள்ளி மணிக்கூட்டுக் கோபுரத்தின் முடிவு அமைய வேண்டும் எனத் தீர்மானித்தல்.

மூன்றாவது அட்டவணையின் மூலம் சிவாலயக் கட்டட உறுப்புக்களின் உயரங்களைத் தீர்மானித்தல். (பின்னிணைப்பு இல.03) அதாவது உதாரணமாக

ஏகதளவிமானமாயின் கால்ப் புறவாயின் ஒருபங்காக அமையும். 9'4.5" x 1= 9 அடி 4.5 அங்குலம். ஆதலால் ஏகதளவிமான உயரம் 9 அடி 4.5 அங்குலம் எனத் தீர்மானித்தல்.

இவ்வாறான மூன்று அட்டவணைகளின் மூலம் யாழ்ப்பாணத்தில் ஓர் ஆலயமானது எவ்வகையில் அளவுப் பிரமாணங்களுடன்

அமைக்கப்படுகின்றது என்பதனை நோக்க முடிகின்றது.

சிவாகமங்கள் கூறுகின்ற சிவாலயக் கட்டட அமைப்பு விதிமுறைகளும் யாழ்ப்பாணத்துச் சிவாலயங்களில் அவற்றின் பயில்நிலையும்

சிவாகமங்கள் கூறுகின்ற சிவாலயக் கட்டட அமைப்பு விதிமுறைகளை யாழ்ப்பாணத்துச் சிவாலயங்கள் எவ்வளவு தூரம் பின்பற்றி இருக்கின்றன என்பதனை கர்ப்பக்கிருகம், கோமுகம், விமானம், கோஷ்டம், மண்டபங்கள், பரிவாராலயங்கள், தூண்கள், கோபுரங்கள் மற்றும் ஏனைய கட்டட உறுப்புக்களினைத் தனித்தனியாக நோக்குவதன் மூலம் அறிந்து கொள்ளலாம்.

கர்ப்பக்கிருகம்

கர்ப்பக்கிருகத்தில் நிறுவப்படும் மூலமூர்த்தி எத்திசையில் அமையவேண்டும் என்பதனை சிவாகமங்கள் கூறுகின்றன.

'சிவாலயங்கள் மேற்கு முகமாக அமைதல் விசேஷமானது.' (காமிகாகமம்,*1.4.17).*

எனக் காமிகாகமும்,

> 'கிராமங்களில் சிவாலயமானது கிழக்கு முகம் அல்லது மேற்கு முகமாக இருக்க வேண்டும். அந்த சிவாலயமானது கிராமாபிமுகமாக இல்லாமல் இருப்பது சுபத்தை அளிப்பதாகும்.'(மயமதம், *9.83).*

என மயமதமும் கூறுகின்றன. எனினும் திக்குகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமான பலன்களை அளிப்பதை காமிகாகமம் எடுத்துக் கூறுகின்றது.

> 'கிராமத்தின் பிரமஸ்தானத்தில் இருக்கின்ற சிவலிங்கமானது அந்தணர் அரசர்களுக்குச் சுபத்தைத்தரும், கிழக்கிலிருக்கின்ற சிவலிங்கம் ஸமஸ்தத்தையும், தென்கிழக்கில் ஆயுளின் விருத்தியையும், மேற்கில் ஆரோக்கியத்தையும், அக்கினி திக்கில் சுகத்தையும், தென்மேற்கில் ஜயத்தையும், வடமேற்கில் சம்பத்துக்களையும், வடகிழக்கில் ஸமஸ்தத்தையும், வடக்கு அல்லது கிழக்கு இவை இரண்டிற்கும் நடுவிலோ, கிழக்கு வடக்கிற்கு நடுவிலோ சிவலிங்கம் இருக்குமாயின் கிராமம் முதலானவைக்கும், அரசர்க்கும், ராஜ்யத்திற்கும் அபிவிருத்தி உண்டாகும். அதிஸ்டம், ஆரோக்கியம் இவைகள் உண்டாகும் என்பதில் சந்தேகம் இல்லை.' *(காமிகாகமம், 01.26.38 - 41).*

எனக் காமிகாகமம் சாந்தமூர்த்தியின் பிரதிஷ்டையின் பலனை எடுத்துக் கூறுகின்றது. இவற்றின் அடிப்படையில் யாழ்ப்பாணத்திலும் சிவாலயங்கள் அமைக்கும் மரபு பேணப்பட்டுள்ளதை அவதானிக்கலாம். உதாரணமாக இணுவில் காரைக்கால் சிவன் மேற்கு நோக்கியும், வண்ணைவைத்தீஸ்வரன் கிழக்கு நோக்கியும், நல்லூர் சிவன் வடக்கு நோக்கியும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பரமேஸ்வரன் தெற்கு நோக்கியும் அமைக்கப்பட்டுள்ளன.

சிவாலயத்தின் கருவறையில் பிரதிஷ்டை செய்யப்படுகின்ற சிவபிரானுடைய வடிவமாகிய சிவலிங்கத்திலே தெய்வீக சந்நித்தியம் நிறைந்து விளங்கும் வகையில் கருவறையானது ஒரு வாயிலுடன் கூடியதாக மிகவும் நுட்பமாக அமைக்கப்படுகின்றது. எனினும் "விஸ்வதோமுக" என்பது இறைவனுக்குரிய பெயர்களில் ஒன்றாக அமைந்து, அனைத்து திக்குகளுக்கும் உரிய அவனது ஐந்து முகங்களையும் குறிப்பதாக அமைகின்றது. ஈசான, தத்புருஷ, அகோர, வாமதேவ, சத்யோஜாத என்ற பெயர்கள்

இதற்குச் சான்றாக அமைகின்றன. எனவே இறைவனுக்குக் கருவறை அமைக்கும் போது நான்கு திக்கிலும் வாயில் அமைத்து சிவனை பூசிக்கும் மரபொன்று யாழ்ப்பாணத்துச் சிவாலயங்களில் பேணப்பட்டு வந்துள்ளதை அவதானிக்க முடிகின்றது. இம்மரபுக்கேற்ப இணுவில் காரைக்கால் சிவன்கோயிலின் கருவறை நான்கு வாயில்களைக் கொண்டு விளங்குகின்றது. கருவறை மேற்கு பக்க வாயிலையும், ஏனைய வடக்கு கிழக்கு, தெற்குப் பக்கங்களில் சாளரங்களையும் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. கிழக்குப் பக்கம் தவிர்ந்த ஏனைய இரண்டு சாளரங்களும் தினமும் திறக்கப்படுகின்றன. கிழக்குப் பக்கம் மாத்திரம் சிவராத்திரி தினத்தன்று லிங்கோற்பவ காலத்தில் மட்டும் திறக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணத்துச் சிவாலயங்களில் கருவறை தனியாகவும், சமசந்நிதான நிலையில் இரண்டு, மூன்று கருவறைகளாகவும் அமைக்கப்பட்டுள்ளன. உதாரணமாகக் காரைநகர் சிவன் கோயில் கருவறை கள் கிழக்குப் பக்கம் பார்த்தபடி அமைந்து, சிவனும், ஐயனாரும் அவற்றில் தெய்வங்களாகப் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. அம்பாள் சந்நிதானம் தெற்கு நோக்கியதாக உள்ளது. மற்றும் வண்ணைவைத்தீஸ்வரன், வல்வெட்டித் துறைசிவன், பருத்தித்துறைசிவன் போன்ற ஆலயங்களில் கிழக்கு நோக்கியவாறு அம்மனின் கருவறையும் அமைந்து ஆகம மரபிற்கு அமைவாக உள்ளன. அடுத்து நல்லூர் சிவன் ஆலயத்தில் நான்கு கருவறைகளிலும் நான்கு மூர்த்திகள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன.

கர்ப்பக்கிருக கட்டடமானது கீழிருந்து மேலாக பின்வரும் பகுதிகளைக் கொண்டதாக அமைகின்றது. நிலப்பகுதிக்குள் அமைந்துள்ள பகுதியாகிய அடித்தளம், அடித்தளத்தின் மேல் அமைந்திருக்கும் கர்ப்பக்கிருக கட்டடத்தின் உயரத்தை மிகுதிப்படுத்தும் உபபீடம், வெளியே காணப்படும் பகுதியாகிய அதிஷ்டானம், அடுத்து சுவர், பிரஸ்தரம் அதாவது கூரை, கீரிவம் அதாவது கழுத்து, ஸ்தூபி எனும் ஆறு பகுதிகளைக் கொண்டு விளங்குகின்றது. இந்த கட்டட அமைப்பு முறையில் காணப்படும் ஒழுங்கு அந்தந்த அளவுப் பிரமாணங்களுக்கு ஏற்ப வேறுபடினும் அடிப்படையில் எத்தகைய வேறுபாடும் இன்றி ஆலயங்களில் அமைக்கப்பட்டுள்ளமை யாழ்ப்பாணத்து சிவாலய கட்டடக்கலையில் நாம் காணக் கூடிய மற்றுமொரு சிறப்பான அம்சமாகும்.

கர்ப்பக்கிருகத்தில் இடம்பெறும் அலங்கார வேலைப்பாடுகள் மூன்று விதமாக இடம்பெறுவதை நோக்கலாம். இவை தனித்தனி பெயர்களால் குறிப்பிடப்படுகின்றன. அவையாவன, உத்தரமட்டவேலை, இரட்டைப் பஞ்சாங்கவேலை, முகபத்திரவேலை என்பனவாகும். யாழ்ப்பாணத்து ஆலய கர்ப்பக்கிருக வேலைப்பாடுகளைப் பொறுத்தவரை மேற்கூறிய மூன்று வேலைப் பாடுகளை விட மேலும் இருவகையான வேலைப்பாடுகள் இடம்பெறுகின்றன. அவையாவன, உத்தரமட்ட அமைப்பில் முகபத்திரவேலை இடம்பெறுதல் ஒருவகை, மற்றையது துண்டு பத்தரவேலை ஆகும். சில ஆலயங்களில் இரண்டிற்கும் மேற்பட்ட வேலைப்பாடுகள் கூட இடம்பெறுகின்றன. குறிப்பாக மட்டுவில் சிவன் ஆலயத்தில் உத்தரமட்ட வேலை, இரட்டைப்பஞ்சாங்க வேலை, முகபத்திரவேலை இடம்பெறுவதை அவதானிக்கலாம். ஒப்பீட்டு ரீதியில் சிவாலயங்களில் மட்டுமன்றி ஏனைய இந்து ஆலயங்களிலும் இவ்வாறான வேலைப்பாடுகள் இடம்பெற்றுள்ளமை அவதானிக்கத்தக்கதாகும். உதாரண மாக அராலி அம்மன் கோயில் இரட்டைப்

பஞ்சாங்க அமைப்புடனும், அராலி தெற்கு காளி கோயில் துண்டுபத்ர வேலை அமைப்புடனும் மிளிர்கின்றன. இவ்வேலைப்பாடுகள் வியாள மட்டம் வரை இடம்பெற்றுள்ளன. இதற்கு மேல் விமானம் ஏகதளம், துவிதளம், திரிதளம் எனத் தொடர்ந்து அமைக்கப்படுவதும் குறிப்பிடத்தக்கது. நல்லூர் சிவன், பல்கலைக்கழக பரமேஸ்வரன் ஏகதள விமான அமைப்புடையதாகவும், பருத்தித்துறை சிவன் ஆலயம் துவிதள, திரிதள விமான அமைப்புடையதாகவும், வண்ணைவைத்தீஸ்வரன் ஆலயம் துவிதள விமானத்துடன் கூடியதாகவும் உள்ளன.

கோமுகம்

யாழ்ப்பாணத்து சிவாலயங்களில் பிரதான வாயில் எத்திசை நோக்கியதாக அமைகின்றதோ அதற்கேற்ற வகையில் ஏனைய ஆலயக் கட்டட உறுப்புகளும் இடம்பெறுகின்றன. அந்த வகையில் ஆலயக்கட்டட உறுப்புகளில், கோமுகமானது பீடத்திலிருந்து அபிஷேக ஜலம் வெளிச்செல்வதற்காக நீண்ட வடிவத்தில் அமைக்கப்படும் சிறுவாய்க்கால் போன்றதாகும். கோமுகம் பற்றிய இலட்சணங்களை சிவாகமங்களும் சிற்பசாஸ்திரங்களும் கூறுகின்றன.

> 'கிழக்கு அல்லது மேற்கு முகமான பிம்பங்களின் பீடத்தில் கோமுகை வடக்கு நோக்கியிருக்க வேண்டும். தெற்கு அல்லது வடக்கு முகமான பிம்பங்களின் பீடத்தின் கோமுகை கிழக்கு நோக்கி இருக்க வேண்டும்' (சிற்பரத்தினம், உத்தரபாகம், 27.50).

யாழ்ப்பாணத்து சிவாலயங்களில் இடம்பெறும் கோமுகங்கள் அமைக்கப்பட்ட இடம், திசை ஆகியவற்றைப் பொறுத்தவரையிலும் ஆகம பிரமாணத்தை கடைப்பிடித்துள்ளமையைக் காணமுடிகின்றது. கிழக்கு நோக்கியதாக அமைக்கப்பட்டுள்ள வண்ணை வைத்தீஸ்வரனின் கோமுகம் வடக்கு நோக்கியதாகவும், வடக்கு நோக்கியதாக அமைந்த நல்லூர் சிவன் ஆலய கோமுகம் கிழக்கு நோக்கியதாகவும் அமைக்கப்பட்டுள்ளமை சிறப்பான அம்சமாகும். கர்ப்பக்கிருகத்தினை இரண்டாகப் பிரிக்கும் மத்திய கோடு சோமசூத்திரம் எனப்படும். இச்சோமசூத்திரத்திலேயே வெளியே கோமுகம் அமைய வேண்டும். யாழ்ப்பாணச் சிவாலயங்களில் பிரதோச விரதகாலத்தில் சோமசூத்திர பிரதட்சிணம் எனும் வழிபாட்டில் கோமுகையைக் கடக்காது வழிபடும் முறைமையை சிவாகமங்கள் விரிபடக் கூறுகின்றமை நோக்கத்தக்கது.

விமானம்

சிவாகமங்களும் சிற்பசாஸ்திரங்களும் விமானம் பற்றி குறிப்பிடும் போது, கர்ப்பக்கிருகத்தினுடைய முடிவில் பாதுகாப்பதற்காக எது சிந்திக்கப்பட்டதோ அதுவே விமானம் என்கிறன. விமானங்கள் பரிவாராலயங்களுக்கு அவசியமில்லை என்பதனையும் சிவாகமங்கள் விளக்கி நிற்கின்றன.

> 'அறிவாளியானவன் விமானத்துடன் கூடியதாகவோ இல்லாமலோ பரிவாராலயத்தை ஸ்தாபிக்கலாம்.' (காரணாகமம், I, 60.25).

அதேவேளை,

> 'விமானமின்றி எந்தக்கர்மாவைச் செய்தாலும் அவையனைத்தும் பலனற்றதாகிவிடுகின்றன.' (சிவாகம பரிபாஷா மஞ்சரி, 124)

என சிவாகம பரிபாஷா மஞ்சரி கூறுகின்றமையை நோக்குகின்ற போது மூலாலயம் விமானத்துடன் அமையவேண்டிய

அவசியத்தையும் பரிவாராலயம் விமானமின்றி அமையலாம் என்பதையும் நோக்கமுடிகின்றது.

> 'கண்டம் முதல் வட்டமாக விமானம் இருப்பின் அது வேசரம் என்றும், கழுத்து முதல் எண்கோண அமைப்பில் விமானம் இருப்பின் அது திராவிடம் என்றும், விமானம் முழுவதும் சதுரவடிவில் இருப்பின் அது நாகரம் என்றும் அழைக்கப்படுகின்றது.' (சிவாகம பரிபாஷாமஞ்சரி,105).

யாழ்ப்பாணத்து இந்து ஆலயங்களில் இடம்பெறும் விமானங்களின் ஒழுங்கு முறை பற்றி நோக்கும் போது, விநாயகருக்குரிய ஆலயங்களில் வட்டமான விமானமும் சிவனுக்குரிய ஆலயங்களில் வட்டம், சதுரம், எண்கோணம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றினை வடிவமாகக் கொண்ட விமானமும், அம்பாளுக்குரிய ஆலயங்களில் சதுரவடிவமைப்பும், முருகனுக்குரிய ஆலயங்களில் அறுகோண அமைப்புடைய விமானமும், நவக்கிரக ஆலயம் வட்டம் அல்லது சதுரமான விமானமும் கொண்டு விளங்குகின்றன. முருகனுடைய ஆலயங்களில் அறுகோண அமைப்புடைய விமானங்களே விசேடமாகும். ஆனாலும் சிற்பசாஸ்திரங்களில் இடம்பெறாது விட்டாலும், கலை எழிலுடன் விளங்கவும் எளிதாக திருவாசி அமைப்பதற்காகவும் எண்கோண அமைப்புடைய விமானங்களே முருகனுடைய ஆலயங்களில் இடம் பெறுகின்றன.

இவ்வாறான விமான ஒழுங்கு முறையினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பரமேஸ்வரன் ஆலயத்தின் மூர்த்திகளின் விமானங்களுடன் ஒப்பிட்டு நோக்குவோமானால், இவ்வுண்மை தெளிவாகின்றது. அவ்வகையில், மூலமூர்த்தியாகிய பரமேஸ்வரனின் விமானம் வட்டவடிவமாகவும் பரிவாரங்களாகிய விநாயகருடைய விமானம் வட்ட வடிவமாகவும் நவக்கிரக ஆலயத்தின் விமானம் சதுரமாகவும் பைரவருடைய விமானம் சதுரமாகவும் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இம்மூர்த்திகளுக்கு ஒழுங்கு முறையான விமான அமைப்பு இடம்பெறுவதனால் விமானங்களின் அமைப்பைக் கொண்டே அங்கு எழுந்தருளியுள்ள மூர்த்தி என்ன வென்பதை வெளித்தோற்றத்தில் இருந்தே அறியக் கூடிய வாய்ப்புக் கிடைக்கின்றது. இது யாழ்ப்பாணத்துச் சிவாலயக் கட்டடக்கலையின் சிறப்பான தன்மை எனலாம்.

கோஷ்டம்

> 'சிவாலய அமைப்பில் அர்த்த மண்டபத்துடன் இணைந்து கர்ப்பக்கிருகத்தில், கர்ப்பக் கிருகத்தின் வாயிலின் இரு மருங்கு, அர்த்த மண்டபத்தின் வலது இடது புறச்சுவர்கள், கர்ப்பக்கிருகத்தின் வலது இடது இருபுறச்சுவர்கள், பின்புறச்சுவர்கள் இவைகளில் கோஷ்டங்கள் அமைகின்றன'. (காமிகாகமம் I .55)

கர்ப்பக்கிருகத்தின் பிரதான வாயிலைத்தவிர ஏனைய மூன்று பக்க வெளிப்புறச்சுவர்களின் மையத்திலும், கோஷ்ட பஞ்சரங்கள் இடம்பெறும். பாதவர்க்கத்தில் வேதிகைக்கு மேல் உத்தரம் கீழ் மட்டம் வரையிலுள்ள அளவில் தேவகோஷ்டம் அமையும். இவை விக்கிரகங்கள் வைப்பதற்காக அமைக்கப்பட்டுள்ளன.

> 'தென்புறச்சுவரிலுள்ள கோஷ்ட பஞ்சரத்தில் தட்சிணாமூர்த்தி இடம்பெறும். மேற்கேயுள்ள கோஷ்ட பஞ்சரத்தில் இலிங்கோற்பவரை நிறுவுவர். வடக்கேயுள்ள கோஷ்டபஞ்

சரத்தில் பிரமன் அல்லது துர்க்கை ஆகியோரின் விக்கிரகங்களை பிரதிஷ்டை செய்வர்.' (கைலாச நாதக்குருக்கள். கா: 1992:74).

கோஷ்ட பஞ்சரங்களில் முறைப்படி தெய்வங்களைப் பிரதிஷ்டிக்கும் மரபு யாழ் பாணத்துச் சிவாலயங்களில் பேணப்படுகின்றன. கர்ப்பக்கிருக தென்புறச்சுவரிலுள்ள கோஷ்டத்தில் தட்சிணாமூர்த்தியும், வடபுறத்திலுள்ள கோஷ்டத்தில் பிரமன் அல்லது துர்க்கையும் பிரதிஷ்டிக்கப்படுகின்றனர். மேற்குத்திக்கிலுள்ள கோஷ்ட பஞ்சரத்தில் இலிங்கோற்பவர் இடம்பெறுவது சிறப்பானதாகும். எல்லாச் சிவாலயங்களிலும் இத்திருவுருவம் நிறுவப்பட்டுள்ளதைக் காணலாம். கட்டடக்கலையில் நாம் அவதானித்த இந்த கோஷ்ட அமைப்பினுடைய ஓர் ஒழுங்கான தன்மையினை வண்ணை வைத்தீஸ்வரன், பருத்தித்துறை சிவன், நல்லூர் சிவன் ஆகிய ஆலயங்களில் அவதானிக்கலாம். யாழ்ப்பாணத்து சிவாலயங்களில் இடம்பெறும் அர்த்தமண்டபத்தின் வாயிலில் துவாரபாலகர்கள் இருபக்கச்சுவர்களிலும் கோஷ்டங்களிலும் இடம்பெறுவர். உதாரணமாக பருத்தித்துறை சிவன் ஆலய அர்த்தமண்டபம் வலது பக்கச் சுவரில் நர்த்தன விநாயகரும், இடதுபக்கச் சுவரில் துர்க்கையும் பிரதிஷ்டிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடற்பாலது. சிவாலயங்களில் உள்ள கோஷ்ட பஞ்சர விக்கிரகங்களைப் பொறுத்தவரையில் நாம் காணுகின்ற ஒழுங்கான தன்மை கோஷ்ட பஞ்சர கட்டட அமைப்பைப் பொறுத்தவரை சிறிது வேறுபடுவதை நாம் காணலாம். குறிப்பாக தட்சிணாமூர்த்திக்குரிய கோஷ்ட பஞ்சரம் சிறிய விமானத்துடன் அமைக்கும் மரபினை வண்ணைவைத்தீஸ்வரன், பருத்தித்துறை சிவன், வண்ணபுரத்து சிவன், சட்டநாதர் சிவன் போன்றவற்றில் நாம் காணலாம். இவை யாவற்றிலும் இருந்து வேறுபடும் வகையில் நல்லூர் சிவன் கோயிலில் கோஷ்ட விக்கிரகங்கள் யாவற்றிற்கும் தனித்தனி சிறிய பரிவாராலயங்கள் எழுப்பப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும்.

மண்டபங்கள்

'அர்த்த மண்டபத்திற்கு வெளியில் உள்ளது மகா மண்டபம். அல்லது தேவ மண்டபம். அதற்கு வெளியில் உள்ளவை விருஷ மண்டபமும் அடுத்து நிருத்த மண்டபமும் அமையும்'. (சுப்பிரபேதாகமம், கிரியாபாதம் 31 - 99)

யாழ்ப்பாணத்துச் சிவாலயக் கட்டடக்கலை அமைப்பில் கர்ப்பக்கிருகத்தைத் தொடர்ந்து, அதனுடன் தொடுக்கப்பட்டவாறே முன்னே இருப்பது அர்த்த மண்டபம். இந்த அர்த்த மண்டபத்தையும் கருவறையையும் பிரிக்கும் பகுதியாக அந்தராளம் எனும் அமைப்பு இடம்பெறுகின்றது. அந்தராளம் என்பது இடைநாழி. சில ஆலயங்களில் கர்ப்பக்கிருகம் தனித்து அமைந்திருந்த நிலையில் அவற்றை இணைக்க அமைக்கப்பட்டதாக தெரிகின்றது. பல அறிஞர்களது கருத்துப்படி காஞ்சியிலுள்ள கைலாசநாதர் கோயிலைப் பின்பற்றி இவ்வகையில் அந்தராளம் அமைக்கப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகின்றது.

இந்த அந்தராள அமைப்பை வெளிப்பக்க பார்வையில் தெளிவாகக் கண்டு கொள்ள முடிகின்றது. யாழ்ப்பாணத்துச் சிவாலயங்களில் கர்ப்பக்கிருகத்தையொட்டி அர்த்தமண்டபம் அமைக்கப்படுகின்ற முறையும் இடம்பெறுகின்றது. அதே வேளை கருவறையையும், அர்த்த

மண்டபத்தையும் இணைப்பதற்காக அந்தராளம் அமைக்கப்பட்ட முறையையும் கண்டு கொள்ளலாம். காரைநகர் சிவன் ஆலயத்தில் அந்தரவாள அமைப்பு இடம்பெற்றுள்ளது. அதில் கர்ப்பக்கிருகத்தின் விமானத்தின் அழகினை எடுத்துக் காட்டுவதற்காகவும், அந்தராள அமைப்பினை வெளிப்படுத்துவதற்காகவும் அந்தராளத்தில் விமானம் அமைக்கும் முறையும் இடம்பெறுகின்றது. காரைநகர் சிவன் கோயிலின் அந்தராள விமானத்தில் அழகிய சிற்பங்கள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

அந்தராளத்தினை அடுத்து இடம் பெறுவது அர்த்தமண்டபம் ஆகும். யாழ்ப்பாண சிவாலயக் கட்டடக் கலையில் அர்த்தமண்டப அமைப்பைப் பொறுத்தவரையில் அது கால்ப்புறவாய் அளவிலிருந்து நாலில் மூன்று பங்குமானத்தைக் கொண்டே அமைக்கப்படுகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது. ஒரு மனிதனின் அளவுப் பொருத்தத்துடன் கூடிய கழுத்து அவனது அழகிய தோற்றத்திற்கு எவ்வாறு சிறப்பளிக்கின்றதோ, அது போன்று ஆலயத்தினுடைய கழுத்தை நிகர்க்கும் அர்த்தமண்டபமும் உரிய அளவுப் பிரமாணங்களுடன் அமைக்கப்படும் போது அதில் ஒரு சிறந்த கட்டடக்கலையின் சிறப்பினை நாம் உணரமுடியும். அதற்கேற்ற வகையில் யாழ்ப்பாணத்து சிவாலயக் கட்டடக்கலையில் இவ் அளவுப்பிரமாணங்களுடன் கூடிய அர்த்த மண்டபத்தினைக் காணலாம்.

யாழ்ப்பாணத்து சிவாலய அமைப்பில் அர்த்தமண்டபத்தை அடுத்து பெரிய அளவினதாக அமைக்கப்படுவது மகாமண்டபம் ஆகும். இந்த மகாமண்டபமானது ஆலயத்தில் சிவன் அல்லது அம்மன் சந்நிதிகளுக்குப் பொதுவாக அமைந்து விளங்குகின்றமையை யாழ்ப்பாணத்துச் சிவாலயங்கள் சிலவற்றில் கண்டு கொள்ளலாம். பருத்தித்துறை சிவன் கோயில், வண்ணைவைத்தீஸ்வரன் கோயில் என்பன இவ்வமைப்புக்குச் சிறந்த உதாரணங்களாக அமைகின்றன.

மகாமண்டபத்தை அடுத்து சிவாலய அமைப்பில் இடம் பெறுவது நிருத்தமண்டபம் ஆகும். நிருத்த மண்டபத்தினை அடுத்து ஸ்தம்ப மண்டபம் இடம் பெறுகின்றது. மகோற்சவத்தின் போது கொடியேற்றுவதற்காக ஸ்தம்பமும், அதன் அருகில் பலிபீடமும், அதனை அடுத்து மூலவரை நோக்கியவாறு அமையும் நந்தியின் அமைப்பும் அனைத்துச் சிவாலயங்களிலும் ஒழுங்காக அமைக்கப்பட்டுள்ளமை அவதானிக்கத்தக்கது. இதே போல அம்மன் வாயிலிலும் ஸ்தம்ப மண்டபத்தில் தனியாக கொடிஸ்தம்பம், மற்றும் மூலவரை நோக்கியவாறு சிங்கமும், பலிபீடமும் அமைக்கப்படுகின்ற மரபு யாழ்ப்பாணத்து சிவாலயங்களில் பருத்தித்துறை சிவன் ஆலயம், வல்வெட்டித்துறை சிவன் ஆலயம், வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயம் என்பவற்றில் நோக்கமுடிகின்றது.

சிவாலயங்களில் மகோற்சவத்தின் போது அளிக்கப்படும் உபசாரங்கள் விரிந்து நிகழும் ஸ்தானமாக வசந்த மண்டபம் விளங்குகின்றது. அரசனுக்கு ராஜ உபசாரங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டதை நிகர்க்கும் வண்ணம் இறைவனுக்கும் சிவாலய வழிபாட்டு மரபில் ராஜ உபசாரம் வழங்கும் மரபுக்கு வசந்த மண்டபம் நிலைக்களனாக உள்ளது. சிவாலயங்களில் முதலாவது அல்லது இரண்டாவது வீதியில் வடக்கில் ஈசானத்தில் யாகசாலைக்கு அடுத்ததாக இம்மண்டபம் அமையும். யாழ்ப்பாணத்து சிவாலயங்கள் சிலவற்றில் வசந்த மண்டபம்

முதலாம் வீதியிலும், சில ஆலயங்களில் இரண்டாம் வீதியிலும் அமைந்துள்ளமை அவதானிக்கத்தக்கது. முதலாம் வீதியில் வசந்த மண்டபம் அமைந்துள்ள ஆலயமாக வல்வெட்டித்துறை சிவன் ஆலயம், காரைக்கால் சிவன் ஆலயம், அராலி வண்ணபுரத்து சிவன் ஆலயமும் விளங்குகின்றது. இரண்டாம் வீதியில் வசந்தமண்டபம் அமைந்துள்ள ஆலயமாக வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயம், காரைநகர் சிவன் ஆலயம் என்பவற்றைக் கூறலாம்.

பரிவாராலயங்கள்

சிவாலயக் கட்டட அமைப்பில் ஆலயங்களுக்கு அழகைத் தரும் பிராகாரங்கள் அடுத்து முக்கியம் பெறுகின்றன. ஆலயங்களில் பிராகாரங்கள் ஆலயத்தைச் சுற்றித் திட்டமிட்டு அமைக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்து சிவாலயங்கள் பொதுவாக மூன்று பிரகார அமைப்பைக் கொண்டவை. சில ஆலயங்கள் இரு பிராகாரங்களுடன் திகழ்கின்றன. கர்ப்பக்கிருகத்தை அடுத்து அமைவது முதல் பிராகாரம் ஆகும். மயமதம் பிராகாரங்கள் அமைவதன் காரணத்தைக் குறிப்பிடுகையில்

> 'விமானங்களின் ரக்ஷைக்காகவும், அழகுக்காகவும், பரிவாரங்களை வைப்பதற்காகவும் புத்திமான்கள் பிராகாரத்தைக் கூறியிருக்கிறார்கள்'. *(மயமதம், 23.1)*

என்பதன் மூலம் பரிவாரங்களை ஸ்தாபனம் செய்வதற்காகவும் பிராகாரங்கள் அமைக்கப்படுகின்றன என்பது தெளிவுறுகின்றது.

முதலாவது பிராகாரத்திலே பரிவார மூர்த்திகள், பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடற்பாலது. சிவாலயக் கட்டடக்கலை வளர்ச்சியில் பரிவார தெய்வங்களுக்கு முக்கிய இடம் உண்டு. இந்து சமய நெறியில் உள்ள ஆறு சமய நெறிகளையும் உள்ளடக்கியதாகவும், ஏனைய சமய நெறி மரபுகளை சைவநெறி தன்னளவில் ஏற்றுக் கொண்ட ஒரு தத்துவத்தை பிரதிபலிப்பதாகவும் சிவாலய பரிவாரத் தெய்வங்களது மரபு காட்டி நிற்கின்றது. அதாவது காணாபத்தியம், கௌமாரம், சாக்தம், சௌரம், வைணவம் ஆகிய நெறிகள் பரிவாரத்தெய்வ வரிசையில் இடம்பெற்றுச் சிவாலயக் கட்டடக்கலை மரபில் உரிய இடத்தைப் பெற்றுள்ளன. சிறப்புமிக்க சைவநெறியானது இவ்வைந்து நெறிகளையும் தன்னுள் ஏற்று அத்தெய்வங்களைப் பரிவாரத் தெய்வங்களாகக் கொண்ட சிறப்பு சிவாலயத்திற்கே உரியது. அதேவேளை பிரமா, சரஸ்வதி, இந்திரன் போன்ற லோகபாலகர்களும், அகஸ்தியர், ஜ்யேகூஷ்டாதேவி, வைரவர் போன்ற தெய்வங்களும் சிவனது பரிவாரங்களாக அமையும் மரபுகளை சிவாலயவிதிகள் தெளிவுபடக்கூறுகின்றன. இம்மரபு பரந்த தன்மையுடைய சிவாலயப்பண்பாட்டைத் தெளிவுபடுத்துகின்றன.

பரிவாரங்கள் நோக்கவேண்டிய திசைபற்றிய விடயங்களையும் சிவாகமங்கள் விளக்குகின்றன.

> 'விருஷபத்தை (நந்தி) கிழக்கிலும், அகஸ்தியரை அக்கினிதிக்கிலும், தெற்கில் காத்யாயனியையும் (துர்க்கை), நிருதியில் கணேஸ்வரரையும், மேற்கில் பிரம்மாவையும், வாயுதிக்கில் சண்முகரையும், வடக்கில் கேசவனையும் (விஷ்ணு), வடகிழக்கில் பாஸ்கரனையும் (சூரியன்) ஸ்தாபிக்க வேண்டும்.' *(காரணாகமம், I, 60.9-10)*

அஷ்டபரிவாரங்களின் ஸ்தானங்கள் பற்றி சிவாகமங்கள் ஒவ்வொன்றும்

ஒவ்வொரு விதமான கருத்துக்களை எடுத்துக்கூறுவதைக் காணமுடிகின்றது. (பின்னிணைப்பு இல. 04)

யாழ்ப்பாணத்துச் சிவாலயங்களில் பரிவார தெய்வத்தைப் பொறுத்தவரையில் சில பொதுவான அம்சங்களை அவதானிக்கலாம்.

சிவாலய வழிபாட்டில் திருநந்தி தேவருக்கு முக்கிய இடம் உண்டு. நந்தியில்லாத சிவாலயம் சிவாலயமாகாது. சிவாகமங்கள் பரிவாரங்களில் ஒன்றாக நந்தியை விருஷபம் என்ற பெயருடன் குறிப்பிடுகின்றன.

> "மேற்கு வாயிலுடைய கர்ப்பக் கிருகமாயின் விருஷபத்தை மேற்கில் ஸ்தாபிக்கவேண்டும்" (காரணாகமம், I, 60.13)

தென்னிந்தியக் கோயில்களில் பிராகாரங்களைக் கடக்கும் தோறும் பிரமாண்டமான உருவங்களுடன் பல நந்திகளைக் காணமுடிகின்றது. இதற்கான விதிமுறைகளையும் சிவாகமங்கள் எடுத்துக் கூறுகின்றன.

> "வேறு இடங்களிலும் மஹோட்சம் எனும் மகாவிருஷபத்தை நன்கு அறிவாளியானவன் செய்தல் வேண்டும்." (காரணாகமம், I, 60.73)

பல்கலைக்கழக பரமேஸ்வரன் ஆலயத்தில் 2023 ஆம் ஆண்டு நடைபெற்ற மகா கும்பாபிஷேகத்தின் போது பிரமாண்டமான நந்தி கோபுரவாசலுக்கும் ஆலயத்தின் பிரதான வாயிலுக்கும் இடையில் வெளிவீதியில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

ஆலயச்சுற்று பிராகாரத்தில் சந்நிதியை நோக்கியவாறு வலது புறத்தில் சூரியனும், இடது புறத்தில் சந்திரனும் அமைவதைப் பிரமாண நூல்கள் எடுத்துக் கூறுகின்றன.

> 'சிவாலயங்களில் சூரியனுடைய ஸ்தானம் பற்றி நோக்கும் போது கோபுரதுவாரத்திற்கு வலதுபக்கத்திலோ அல்லது இடதுபக்கத்திலோ சூரியனின் ஆலயத்தை அமைக்கவேண்டும்' (காரணாகமம் 11,105.4, அஜிதாகமம் 111. 54.11-12)

வல்வெட்டித்துறை சிவன், சட்டநாதர் சிவன் போன்ற சிவாலயங்களில் கருவறைக்கு எதிரில் சந்நிதானத்தைப் பார்த்தபடி வலது புறத்தில் சூரியனும், இடது புறத்தில் சந்திரனும் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. அதேவேளை வண்ணைவைத்தீஸ்வரன், காரைநகர் சிவன் ஆலயம் என்பவற்றில் பைரவரை அடுத்த சந்நிதானத்தில் இடது புறத்தில் சூரிய, சந்திரன் ஒருமித்து தனியொரு ஆலயத்திலேயே இடம்பெறுகின்றமையும் நோக்கத்தக்கது.

சூரியனது பரிவாரங்களான நவக்கிரகங்களும் சூக்சும நிலையினின்றும் ஸ்தூல நிலையில் பிரதிஷ்டை செய்யும் மரபு யாழ்ப்பாண சிவாலயங்களில் காணமுடிகின்றது. பெரும்பாலான ஆலயங்களில் ஸ்தம்பமண்டபத்தின் வலது புறம் நேரெதிரே நவக்கிரகக் கோயில் அமைந்துள்ளது. நவக்கிரகங்களில் ஒன்றாகிய செவ்வாயில் பலிபீடத்தின் மேற்பார்வை விழக்கூடாது என்பதற்காக சிறிது நூலிழை தள்ளி அதன் நேரை யாழ்ப்பாணத்துக் கட்டடக்கலைஞர் சாஸ்திர விதிமுறைகளைப் பின்பற்றி அமைப்பதை அவதானிக்க முடிகின்றது. நவக்கிரகப் பிரதிஷ்டையில் ஆகம பிரதிஷ்டை, வைதிகப் பிரதிஷ்டை என இரு பிரிவுகள் காணப்படுவதையும், நவக்கிரகங்கள் நோக்கும் திசைகள் வேறுபடுவதனால் இவ்விரு பிரிவுகளும் மேலும் பலவாக விரிவடைவதையும்

குறிப்பிடலாம். நவக்கிரக ஸ்தானம் சூரியனிலிருந்து எவ்வாறு இடம்பெற வேண்டுமென காரணாகமம் கூறுகின்றது.

> 'வடக்கில் சந்திரன், கிழக்கில் சுக்கிரன், தெற்கில் செவ்வாய், மேற்கில் வியாழன். ஈசானத்தில் சனி, அக்கினியில் இராகு, நிருதியில் கேது, வாயுவில் புதனையும் பூசிக்க வேண்டும்.' (காராணகாமம், I. 55 18 - 20)

என்பதால் அறியலாம். யாழ்ப்பாணத்துச் சிவாலயங்களில் ஆகம பிரிதிஷ்டைப்படி அமைக்கப்பட்ட நவக்கிரக ஆலயத்திற்கு உதாரணமாகக் காரைநகர் சிவன் ஆலயத்தையும், வைதிக பிரதிஷ்டையின் படி அமைக்கப்பட்ட நவக்கிரக ஆலயத்திற்கு வண்ணைவைத்தீஸ்வரன் ஆலயத்தையும் உதாரணமாகக் குறிப்பிடலாம். சமீப காலங்களில் நவக்கிரக ஆலயத்தை அமைப்பதிலும், அதனைப் புதுப்பொலிவுடன்திகழச்செய்வதிலும்யாழ்ப்பாணத்துக் கட்டடக்கலைஞர்கள் முயன்று வருவதை அவதானிக்க முடிந்தது. அந்த வகையில் சுன்னாகம் கதிரைமலை சிவன் ஆலயத்தில் நவக்கிரகம் அமைந்துள்ள கட்டட அமைப்பு தேர் போன்ற அமைப்பில் அலங்கார ரூபமாகக் காட்சி தருகின்றது. இந்தியாவில் அமைக்கப்பட்ட நவக்கிரக ஆலயங்களை நிகர்க்கும் வண்ணம் சுன்னாகம் கதிரைமலை தேவஸ்தான சிவாலய நவக்கிரக கோயிலும் அமைந்துள்ளமை குறிப்பிடற்பாலது. மேலும் கீரிமலை சிவன் கோயிலில் நவக்கிரகங்கள் தமது சக்தியுடன் கூடியவர்களாக அவரவர்களுக்குரிய வாகனங்களில் அமர்ந்த நிலையில் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

பரிவாராலயங்கள் பற்றி ஆகம சிற்ப சாஸ்திர நூல்களில் கூறப்படும் அம்சங்கள் யாழ்ப்பாணத்திலுள்ள சிவாலயங்களுடன் தொடர்புபடுத்திப் பார்க்கும் போது, ஒற்றுமையுற்றுக் காணப்படுகின்றது. தென்கிழக்கு மூலையில் விநாயகரும், வடமேற்கு மூலையில் முருகனும் அமையும் முறையை வண்ணை வைத்தீஸ்வரன், பருத்தித்துறை சிவன், வல்வெட்டித்துறை சிவன், சட்டநாதர் சிவன் ஆலயம் போன்ற பல ஆலயங்களில் கண்டு கொள்ளலாம். இவ் அமைப்பிலும் விட சிறிது வித்தியாசமான பரிவாராலயங்களாக முருகனும், பிள்ளையாரும் அமைவதை யாழ் பல்கலைக்கழக பரமேஸ்வரன் ஆலயத்தில் காணலாம். இங்கு கருவறையுடன் இணைந்ததாக மூலமூர்த்திக்கு வலது புறத்தில் இதன் மேற்கு மூலையாக தெற்கு நோக்கி பிள்ளையாரது பரிவாராலயமும், வடகிழக்கு மூலையில் தெற்கு நோக்கி முருகனது பரிவாராலயமும் இடம் பெறுகின்றது.

பொதுவாக யாழ்ப்பாணத்துச் சிவாலயங்களில் ஐந்து இலிங்கங்கள் பரிவார நிலையில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள மரபை அவதானிக்க முடிகின்றது. யாழ்ப்பாணத்து சிவாலயங்களில் குறிப்பாக வல்வெட்டித்துறை சிவன் ஆலயத்தில் மேற்குப் பிரகாரத்தில் பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் எனும் ஐம்பூதங்களை உருவகப்படுத்தும் வண்ணம் மேற்குப் புறத்தில் இராமலிங்கேஸ்வரர், ஸ்ரீமுன்னேஸ்வரர், ஸ்ரீவேதபுரீஸ்வரர், ஸ்ரீசோமசுந்தரேஸ்வரர், ஸ்ரீவிஸ்வநாதர் என்ற திருநாமங்களில் இவ்வைந்து இலிங்கங்களும் பரிவாரங்களாக பிரதிஷ்டிக்கப்பட்டுள்ளன. அதேசமயம் இவ்வைந்து இலிங்கங்களும் பருத்தித்துறை சிவன் ஆலயத்தில் கருவறையின் மேற்குப் புறத்தில் பிள்ளையாரது பரிவார ஆலயத்தை அடுத்து விஸ்வநாதர். சிதம்பரர், சோமசுந்தரர், இராமலிங்கர், வைத்தீஸ்வரர் எனும் திருநாமங்களுடன் பரிவாரங்களாக பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. நல்லூர் சட்டநாதர் சிவன் ஆலயத்திலும் பஞ்சலிங்கங்கள் பரிவார நிலையில்

விமானங்களுடன் கூடியதாகப் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளமை அவதானிக்கத்தக்கது. பஞ்சபூதலிங்கங்களை உருவகப்படுத்த நிறுவப்பட்டுள்ள இப்பஞ்சலிங்கங்களும் யாழ்ப்பாணத்து சிவாலயக் கட்டடக்கலையில் மற்றுமொரு சிறப்பம்சத்தை வெளிக்காட்டி நிற்பது குறிப்பிடற்பாலது.

சிவாலயங்களில் நடராசருக்குரிய பரிவாராலயம் நிருத்த மண்டபத்தை நோக்கியதாக அமைந்துள்ளது. பரிவாரங்கள் நடராஜருக்குரிய ஆலயமாக அமைந்த ஆலயங்களில் வண்ணைவைத்தீஸ்வரன், சட்டநாதர் சிவன், பருத்தித்துறை சிவன், வல்வெட்டித்துறை சிவன் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

அடுத்து யாழ்ப்பாணத்துச் சிவாலய பரிவார ஆலயங்களில் சனீஸ்வரனுக்கு விமானத்துடன் கூடிய தனிப்பரிவாரக் கோயில் அமைத்துப் பிரதிஷ்டை செய்வது அவதானிக்கத்தக்க விடயமாகும். கிழக்கு நோக்கிய சிவாலயங்களில் வடமேற்கு மூலையில் இடம்பெறும் முருகனது பரிவாராலயத்தை அடுத்துத் தெற்கு நோக்கியவாறு சனீஸ்வரன் ஆலயம் இடம்பெறும். இவ்வாறான அமைப்பினை பருத்தித்துறை சிவன், சட்டநாதர் சிவன், வண்ணை வைத்தீஸ்வரன் போன்ற சிவாலயங்களில் காணலாம்.

சிவாலயங்களில் சிவபக்தர்களின் ஸ்தானம் பற்றியும் ஆகமங்கள் எடுத்துக்கூறுகின்றன.

> 'சவாலம்சாமரைஏந்தியகைகள்எனஉரிய இலட்சணங்களுடன் கூடியவைகளாக பிம்பங்களின் வடிவங்களை பாகுபாடு செய்து மகாமண்டபத்தை அடுத்தோ மணிமண்டபத்திலோ பிரகாரத்திற்குள்ளேயோ உரிய விதிப்படி மிகுந்த முயற்சியுடன் பிரதிஷ்டை செய்ய வேண்டும், சிவாகம முறைப்படி நித்திய பூசை செய்ய வேண்டும்' (அஜிதாகமம் III - *63.40 - 42)*

என அஜிதாகமம் கூறுகின்றது. அதற்கமைய யாழ்ப்பாணத்துச்சிவாலயங்களில்குறிப்பாக வண்ணைவைத்தீஸ்வரன், பருத்தித்துறை சிவன் என்பவற்றில் நாயன்மார்களின் திருமேனிகள் இடம்பெற்றுள்ளன. இதற்குரிய இடம் பொதுவாகச் சிவாலய அமைப்பில் யாகசாலைக்கு அடுத்ததாக தென்திசையில் வடக்கு நோக்கியதாக (அக்கினி மூலை) அமைய வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருப்பினும் வண்ணைவைத்தீஸ்வரன், பருத்தித்துறை சிவன், காரைநகர் சிவன் என்பவற்றில் தெற்கு வீதியில் வடக்கு நோக்கியதாக அம்பிகைக்குரிய பிரதான வாயிலை அடுத்து இடம்பெறுவதை அவதானிக்கலாம்.

அடுத்து சிவாலயங்களில் முக்கியமான பரிவாரமூர்த்திகளில் ஒன்றாக விளங்குவது பைரவர் மூர்த்தி ஆகும். கிழக்கு நோக்கிய ஆலயங்களில் வடகிழக்கு மூலையில் மேற்கு நோக்கியவாறு அதாவது ஈசான மூலைக்கு அண்மித்ததாக விமானத்துடன் கூடிய தனிப்பரிவாராலயமாக பைரவர் ஆலயம் அமையும். இம்மரபின் படியே யாழ்ப்பாணத்துச் சிவாலயங்களில் பைரவரது ஆலயம் இடம் பெற்றுள்ளமை நோக்கத்தக்கது.

சிவாலயக் கட்டட அமைப்பில் முக்கியம் பெறும் சண்டேஸ்வரருடைய ஆலயத்தை அடுத்து நோக்கலாம். அஷ்டபரிவாரங்களுள் சண்டேஸ்வரர் சேத்திரபாலர் ஆகியோரை பரிவாரத் தெய்வங்களாகக் காரணாகமம் குறிப்பிட வில்லை. எனினும் காரணாகமம்,

> 'அந்தர் மண்டலம் எனும் முதலாவது வீதியில் ஸ்ரீகரம் எனும் விமானத்தில் சண்டேஸ்வரரை ஸ்தாபனம் செய்தல்

வேண்டும்.' எனக்கூறுகின்றது. (காரணாகமம், I,60.2)

அதேவேளை ஈசானதிக்கில் அஷ்டபரி வாரங்களுள் ஒன்றாக சண்டேஸ்வரரையும் இணைத்து யோகஜாகமமும் சுப்பிரபேதா கமமும் குறிப்பிட்டுள்ளமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். கர்பக்கிருகத்திற்கு வடக்குப் புறத்தில் தெற்கு நோக்கியவாறு சண்டேஸ்வரர் தனிப்பரிவாராலயமாக அமைந்திருக்கும். கருவறையை அடுத்து மிகவும் அருகில் விமானத்துடன் கூடிய ஒரு சிறிய தனிக்கோயிலாகவே சண்டேசுவரருடைய ஆலயத்தை யாழ்ப்பாணத்து சிவாலயங்களில் காணலாம். இதன் வாயில் கருவறையை நோக்கியவாறு அமையும். இறைவனுக்கு மிகவும் அண்மையிலிருந்து சிவபூசையில் ஈடுபட்டிருக்கும் நிலையைச் சுட்டுவதாக இந்த அமைப்பு காட்டுகின்றது. ஆகம முறையில் அமையும் வழிபாட்டில் விநாயகருக்கு உரிய முக்கியத்துவம் சண்டேசுவரருக்கும் உண்டு. கிரியை தொடங்கும் போது விநாயகரை முதலில் வணங்குவது போன்று, சிவபூசை முடிவில் சண்டேசுவரரை வழிபடுதல் மரபு. சிவாலய வழிபாட்டில் சிவபூசா பலனை சண்டேசுவரரை வழிபட்டதன் பின்னே பெறவேண்டும் எனும் சாஸ்திர விதியின் பின்னணியில் சாஸ்திர பிர மாணங்களுக்கு அமைய ஆலய அமைப் பில் ஒழுங்கு பேணப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது. யாழ்ப்பாணத்து ஆலயங்களில், கால்ப்புறவாய் அகலத் தின் அரைப் பங்கு தூரத்திலேயே கருவறையிலிருந்து சண்டேசுவரர் ஆலயத்தை ஸ்தபதிகள் அமைக்கின்றனர். சண்டேசுவரரைச்சுற்றி வலம் வருவதற்கு ஆகமத்தில் விதி கிடையாது. அவ்வாகம விதியைக் கட்டட அமைப் பில் அவதானிக்கக் கூடியவாறு சிவாலயக் கட்டட அமைப்பு விளங்குகின்றது. யாழ்ப் பாணத்துச் சிவாலயங்களில் சண்டேசுவரர் ஆலயம் பிரமாண நூல்கள் கூறும் விதிமுறைகளுக்கு இயைபாக அமைந்துள்ளது.

சிவாலயங்களில் பரிவாரங்களாக விளங்கும் சக்தியின் ஸ்தானம் பற்றி நோக்கும் போது,

'யோகம், போகம், வீரம் என்று மூன்று விதமாக சக்தி கூறப்படுகின்றாள்' (காரணாகமம் II 8 .14)

"யோகசக்தி சிவலிங்க பீடமாக இருப்பவளும், போக சக்தி அருகில் இருப்பவளும், வீர சக்தி வெளியில் தனி ஆலயத்தில் இருப்பவளுமாக அமைக்கப்பட வேண்டும். மூலலிங்கத் திற்கு சமீபமாகவோ அல்லது இடது புறம் அர்த்தமண்டபத்திலோ முறையே இருந்ததாகவோ நின்றதாகவோ இரண்டு விதமாக போகசக்தியை அமைக்கலாம்." (காரணாகமம் II 84 2,3)

இந்நிலைசார்ந்த அமைப்பினை யாழ்ப்பாணத்துச் சிவாலயக் கருவறையில் காணலாம். போகசக்தி என்பவள் சிவனுக்கு அருகிலோ அல்லது அர்த்த மண்டபத்திலோ இருப்பவள் ஆவாள். இவ்வாறு மூலமூர்த்தியோடு அருகில் சக்தி உறைகின்ற தன்மையினை முன்னேச்சர ஆலயத்தில் காணலாம். மற்றும் போகசக்தி அர்த்தமண்டபத்தில் சிவனோடு உறைகின்ற நிலையை பல்கலைக்கழக பரமேஸ்வரன் ஆலயத்தில் காணலாம். தனி ஆலயம் ஒன்றில் அமைகிறவள் வீரசக்தி ஆவாள். யாழ்ப்பாணத்தில் வீரசக்தியைக் கொண்டு விளங்கும் ஆலயங்களாக காரைநகர் சிவன் கோயில், பல்கலைக்கழக பரமேஸ்வரன் ஆலயம் போன்றவற்றைக் கூறலாம். வீரசக்தி ஆலயம் கிழக்கு நோக்கிய சிவாலயத்தில் தெற்கு நோக்கிய வண்ணம் அமைவது குறிப்பிடத்தக்கது.

சிவாலயங்களில் விளங்கும் மகேஸ்வரத் திருமேனிகளில் மிகச்சிறப்புடையது சோமாஸ்கந்த மூர்த்தமாகும். இத்திருமேனி மேற்கு வீதியிலும் உற்சவ மூர்த்திகளாக மகாமண்டபத்திலும் இடம்பெறும். ஆலயத்தின் மேற்கு வீதியில் பரிவாரங்களில் பிள்ளையாருக்கு அடுத்த பரிவாரக்கோயில் சோமாஸ்கந்தருடையது ஆகும். இவ்வமைப்பு முறை காரைநகர் சிவன் கோயிலிலும், கீரிமலை சிவன் ஆலயத்திலும் உள்ளது. சோமஸ்கந்தரின் உற்சவமூர்த்தி மகாமண்டபத்தில் இடம்பெறுகின்ற நிலையை வண்ணைவைத்தீஸ்வரன் ஆலயத்தில் காணலாம்.

சிவாலயங்களில் ஏனைய கட்டட உறுப்புகள்

'அக்கினி திக்கில் அமைவது பவனாலயம் ஆகும் இரண்டாம் பிரகாரத்தில் வடகிழக்கு மூலையில் கிணறு இடம்பெறும். கிழக்கிற்கும் வடகிழக்கிற்கும் நடுவில் இருக்க வேண்டுவது வாத்யசாலை, கிழக்கிற்கும் தென்கிழக்கிற்கும் நடுவில் பொக்கிஷசாலையை நிர்மாணித்தல் வேண்டும். தெற்கிற்கும் தென்கிழக்கிற்கும் இடையில் புஷ்பமண்டபம் இடம் பெறும். தெற்கிற்கும் தென்மேற்கிற்கும் இடையில் குளிப்பதற்கு அமைக்கப் பட்ட திருக்குளம் இருத்தல் வேண்டும். தென்மேற்கிற்கும் மேற்கிற்கும் இடையே விளங்குவது தர்மசிரவணமண்டபம், மேற்கிற்கும் வடமேற்கிற்கும் வடக்குக் கும் நடுவில் பள்ளியறை அமையும். வடக்குக்கும் வடகிழக்குக்கும் இடையில் யாகமண்டபம் இடம்பெறும். திருக்கோவிலின் முன்பு நடுவதாக அமைவது ஆஸ்தான மண்டபம்'. *(காரணாகமம் 1 , 8.28 - 33)*

சண்டேசுவரருக்கு அருகில் திருமஞ்சனக் கிணறு யாழ்ப்பாணத்து சிவாலயங்களில் இடம்பெறுவது குறிப்பிடற்பாலது. இது தென்மேற்கு மூலையில் மேற்கு நோக்கியவாறு அமைந்துள்ளது. யாகசாலைக்கு உட்புறத்திலும் சில ஆலயங்களில் கிணறு அமைக்கப்படுகின்றது. இவ்வாறு இரு கிணறுகள் உள்ள யாழ்ப்பாணத்து ஆலயங்களில் குறிப்பாக பருத்தித்துறை சிவன் கோயிலைக் குறிப்பிடலாம்.

யாகசாலை என்பது இறுதி நிலையை நோக்கி நடைபெறும் ஆத்மாவின் பிரயாணமே ஆகும். கர்ப்பக்கிருகத்தை மறைக்காமல் முதலாவது, இரண்டாவது அல்லது மூன்றாவது பிராகாரத்தில் இடம்பெறும் யாகசாலை யாழ்ப்பாணத்துச் சிவாலயங்களில் பெரும்பாலானவற்றில் முதலாம் பிரகாரத்தில் வடக்கு வீதியில் அமைந்துள்ளது. இதற்குச் சிறந்த உதாரணமாக பருத்தித்துறை சிவன், வண்ணைவைத்தீஸ்வரன், காரைநகர் சிவன் ஆலயம் என்பவற்றைக் கூறலாம். இது நாற்கோணம், முக்கோணம், அர்த்த சந்திரம் முதலிய வடிவங்களில் அமைக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சிவாலயக்கட்டடக்கலை அமைப்பில் இடம்பெறும் யாகசாலையானது வண்ணைவைத்தீஸ்வரன், பருத்தித்துறை சிவன், காரைநகர் சிவன் ஆலயம் என்பவற்றில் கோபுரவாசலுக்கு அண்மித்ததாக அக்கினி மூலையில் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது.

சிவாலயக் கட்டடக்கலை அமைப்பில் ஆலயத்திற்குத் தேவையான பொருட்களைச் சேமித்து வைப்பதற்காக உதவுவதே களஞ்சியம் ஆகும். யாழ்ப்பாணத்து சிவாலயங்கள் பெரும்பாலானவற்றில் களஞ்சியவறைகள் ஆலயத்தின் தெற்கு வீதியில் யாகசாலையை அடுத்ததாக உள்ளன.

இறைவன் திருவீதி உலாவருவதற்கான வாகனங்களைப் பாதுகாப்பாகப்

பேணுவ தற்கேற்ப வாகனசாலை சிவாலயக் கட்டட அமைப்பில் தனித்துவமானதாக அமைகின்றது. யாழ்ப்பாணத்துச் சிவாலயங் களில் குறிப்பாக காரைநகர் சிவன் ஆலயத்தின் முதலாம் வீதியில் ஆலயத்தின் தெற்கு வீதியில் அமைந்துள்ளது. ஆலயத்தின் பொதுவான அமைப்பில் இடம்பெறும் வாகனசாலையின் அமைவிடத்திற்கு நிகராக இவ்வாலயத்திலும் வாகனசாலை அமைந்துள்ளமை நோக்கத்தக்கது. பருத்தித்துறை சிவன், வண்ணை வைத்தீஸ்வரன் ஆலங்களிலும் இரண்டாம் வீதியில் வாகனசாலை அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சிவாலயங்கள் பலவற்றில் வெளிப் பிராகாரத்தில் அழகிய திருநந்தவனம் அமைக்கப்படுகின்றது. இதற்கு எடுத்துக் காட்டாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பரமேஸ்வரன் ஆலயத்தின் நந்தவனத்தைக் குறிப்பிடலாம். இதே போன்று பருத்தித்துறை சிவன் ஆலயத்திலும் இரண்டாம் பிரகாரத்தில் வடக்குப் பகுதி யில் வசந்தமண்டபத்திற்கு பின்பாக நந்தவனம் அமைக்கப்பட்டுள்ளது. சிவாலய வழிபாட்டை நிறைவாக மேற்கொள்ளும் வகையில் நந்தவன அமைப்பு கட்டட அமைப்பிற்கு ஏற்றவகையில் யாழ்ப்பாணத்து சிவாலயங் களில் ஏற்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடற் பாலது.

சிவாலயக் கட்டடக்கலை அமைப் பில் உறுதியும், அழகும் தரும் உறுப் பாகத் தூண்கள் விளங்குகின்றன. வண்ணார்பண்ணை சிவன்கோயிலிலும், ஈழத்துச் சிதம்பரத்திலும் கருங்கல்லால் ஆன தூண்களே காணப்படுகின்றன. பெரும்பாலான ஆலயங் களில் கண்டக்கல், சுண்ணாம்புக்கலவை ஆகிய மூலப்பொருட்கள் கொண்டு வட்டவடிவத்தில் அமைக்கப்பட்ட தூ ண்களாகவே விளங்குகின்றன. பாதம் சதுரமாகவும், அதன்மேல் வெண்டயம், நடுப்பகுதி வட்டம், மேல்பகுதியில் வெண்டயம், சதுரமாகிய வடிவங்களில் அமைக்கப்பட்டுள்ள தூண்களைக் காணலாம். இதற்கு சிறந்த உதாரணமாக நல்லூர் சட்டநாதர் கோயில், அராலி வண்ணபுரத்து சிவன் ஆலயம் என்பவற்றைக் கூறலாம். இத் தூண்கள் யாவும் அடிப்பாகத்தை விட மேற்பாகம் சுற்றளவில் சிறிதாக அமைக்கப்பட்டிருத்தல் கண்கூடு.

பெரும்பாலும் யாழ்ப்பாணத்துச் சிவாலயங்களில் மூன்று அல்லது ஐந்து அல்லது ஏழு நிலைக்கோபுரமே அமைக்கப்பட்டுள்ளமை அவதானிக்கத் தக்கது. கோபுரத்தின் உச்சியில் அமைக்கப் படும் கலசமானது பருத்தித்துறை சிவன் கோயிலில் மூன்று நிலைக் கோபுரத்திற்கு ஐந்து கலசங்களும், பல்கலைக்கழக பரமேஸ்வரன் ஆலயத்தில் ஐந்து நிலைக்கோபுரத்திற்கு ஏழு கலசங்களும் இடம்பெற, வல்வெட்டித்துறை சிவன் கோயிலில் ஐந்து நிலைக் கோபுரத்திற்கு ஐந்து கலசங்களும் இடம்பெறுகின்றமை நோக்கத்தக்கது. இதிலிருந்து தளங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப கலசம் வைக்கின்ற முறையும் அதே நேரம் இரண்டு மகாநாசி களின் இடைவெளிக்குத் தகுந்தவாறு கலசம் அமைக்கும் முறையும் காணப்படுவதை யாழ்ப்பாணத்துச் சிவன் ஆலயங்களில் அவதானிக்க முடிகிறது.

நிறைவுரை

சிவாகமம் கூறும் சிவாலயக் கட்டடக் கலையானது கர்ப்பக்கிருகத்தினை மையமாகக் கொண்டுள்ளது என்பதும், யாழ்ப்பாணத்திலுள்ள பெரும்பாலான சிவாலயங்களில் கட்டடக்கலையைப்

பொறுத்தவரையில் ஆகமங்களும், சிற்பசாஸ்திரங்களும் கூறும் அளவு முறைகள் பின்பற்றப்பட்டுள்ளதையும் சிறப்பாக, கால்ப்புறவாய் அளவை வைத்துக்கொண்டு அதன் பங்குமானங்களில் ஆலய உறுப்புக்களை நிர்மாணிப்பதையும் அவதானிக்க முடிகிறது.

சிவாலயம் கட்டுவதற்குரிய இடத்தைத் தேர்ந்தெடுப்பது முதல் கும்பாபிஷேகம் வரை எல்லா விதிகளையும் முறையாக இப்பிரமாண நூல்கள் விளக்கும் அதேநேரத்தில் ஒவ்வொரு விஷயத்தின் கீழும் ஆலயம் கட்டுபவர், இடம், நோக்கம், ஆகியவற்றுக்கு ஏற்ப பல மாறுதல்களும் கூறப்படுகின்றன. இவற்றினை ஆதாரமாகக் கொண்டே ஸ்தபதியானவர் ஆலயம் கட்டும் கலையிலும் கால, நேர, இடவசதிகளுக்கு ஏற்றவகையில் சில மாறுதல்களையும் செய்வதைக் காணலாம். இவ்வகையில் நம் முன்னோர்கள் சிவாலயங்களை நிர்மாணிப்பதில் சுருதி, யுக்தி, அனுபவம் ஆகியவற்றின் வழி பெரிதும் ஈடுபாட்டுடன் பணியாற்றியமையை அவதானிக்கமுடிகிறது.

யாழ்ப்பாணத்துச் சிவாலயக் கட்டடக்கலை ஆகமம் கூறுகின்ற கட்டடமரபுகளுக்கும், அவற்றை அடிப்படையாகக் கொண்டு எழுந்த வாஸ்து சிற்ப சாஸ்திர மரபுகளை அனுசரித்தும் பெரும்பாலும் ஒரே சீரான நிலையில் கோயில் கட்டட அம்சங்களை உள்ளடக்கியவாறு வளர்ச்சி பெற்றுள்ள நிலையை நாம் அவதானிக்க முடிகின்றது. அதேவேளை தமிழ்நாட்டில் எழுச்சி பெற்ற கோயில்கள் போன்று ஒரு கிராமத்தில் மிகப்பாரிய நிலையில் பல பிராகாரங்கள் கொண்டு கோயில்கள் உருவாக்கப்பட்டமை போல் அன்றி அதனுடைய அடிப்படை அம்சங்களை ஏற்று எமது பிரதேசத்தின் சூழலுக்கும், வசதிகளுக்கும் ஏற்ப சிவாலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன என்பதும் முக்கிய அம்சமாகும்.

உசாத்துணைநூல்கள்

அழகப்பமுதலியார், மயிலை., (பதி.), (1922), **பூர்வகாரணாகமம்** (கிரந்தலிபி), சிவஞானபோத யந்திரசாலை, சென்னை.

அழகப்பமுதலியார், மயிலை., (பதி.), (1927), **உத்தரகாரணாகமம்** (கிரந்தலிபி), சிவஞானபோத யந்திரசாலை, சென்னை

கைலாசநாதக்குருக்கள், கா., (1961), **சைவத்திருக்கோயில் கிரியைநெறி**, இந்துகலாசார அபிவிருத்திச் சங்கம், கொழும்பு.

சுவாமிநாதசிவாச்சாரியார், செ., (பதி.), (1907), **ஸுப்ரபேத ஆகமம்** (கிரந்தலிபி), தென்னிந்திய அர்ச்சகர் சங்கம், சென்னை.

சுவாமிநாதசிவாச்சாரியார், ஸ்ரீ., (பதி.), (1975), **காமிகாகமம் - பூர்வபாகம்** (தேவநாகரலிபி), தென்னிந்திய அர்ச்சகர் சங்கம், சென்னை.

சுவாமிநாதசிவாச்சாரியார், ஸ்ரீ., (பதி.), (1988), **காமிகாகமம் - உத்தரபாகம்** (தேவநாகரலிபி), தென்னிந்திய அர்ச்சகர் சங்கம், சென்னை.

பத்மநாபன், ச., (2019), **சிவாகமங்களின் திருக்கோயில் அமைப்பு**, முன்னேஸ்வர தேவஸ்தான வெளியீடு, சிலாபம்.

ஸுப்ரமண்யசாஸ்திரிகள், கே.எஸ்., நாராயணஸ்வாமிஅய்யர், B.A., (பதி.), (1966), **மயமுனிவரின் மயமதம்**, ஸரஸ்வதி மஹால், தஞ்சை.

Bhatt, N.R. (Ed.), (1961, 1972, 1988), **Rauravagama**,**VolI,II,III**, Institut Francais, D'indologic, Pondichery.

Bhatt, N.R., (Ed), (1964, 1967,1991), **Ajithagama,Vol I,II,III,** Institut Francais, D'indologic, Pondichery.

Bruno Dagens, (Ed), (1979), **SivagamaParibhasaManjari**, Institut Francais, D'indologic, Pondichery.

Kramrisch, Steela, (1976), **The Hindu Temple, Vol 01**, Motilal Banarsidas, Delhi.

பின்னிணைப்பு இல - 01

கால்ப்புறவாய் அளவினை மூலாதாரமாகக் கொண்ட கோயிலின் அமைப்பு

இல	உறுப்புக்கள்	கால்ப் புறவாயின் பங் குமானம்	பெறுமா-னம்	கால்ப்புறவாய் புறத்-தியிலிருந்து உறுப்பு-க்களின் முடிவு இருக்க வேண்டிய தூரம்
1	கருவறை	1பங்கு	9'4.5"	9'4.5"x 1 = 9'4.5
2	அந்தராளம்	பங்கு	2'4.125"	9'4.5"+ 2'4.125"= 11'8.625"
3	அர்த்தமண்டபம்	பங்கு	7'0.375"	11'8.625"+ 7'.0.375"=18'9"
	நீளம்	பங்கு	7'0.375"	
	அகலம்	பங்கு	0'9.375"	
4	மகாமண்டபம்	2 பங்கு	18'9"	18'9"+18'9" = 37'6"
	நீளம்	2 பங்கு	18'9"	
	அகலம்	2 பங்கு	18'9"	
5	தரிசனமண்டபம் ஃ (கும்பமண்டபம்)	2பங்கு	23'5.25"	23'5.25" + 37'6" = 60'11.25"
	நீளம்	2பங்கு	23'5.25"	
	அகலம்	2 பங்கு	18'9"	
6	நந்தி	7 வது பங்கில்	65'7.5"	75'
7	பலிபீடமத்தி	7 வது பங்கில்	70'3.75"	
8	ஸ்தம்பமண்டபம்	8வது பங்கில்	75'	
9	வசந்தமண்டபம்	10 வது பங்குமத்தி	93'9"	112'6"
	நீளம்	1 பங்கு	14'0.75	
	அகலம்	2 பங்கு	18'9"	
10	கோபுரவாசல் மத்தி	12வது பங்கில்	112'6"	

(கால்புறவாய் அளவு 9 அடி 4.5 அங்குலம் எனக் கொள்க)

இல	உறுப்புக்கள்	கால்புறவாயின் பங்குமானம்	பெறுமானம்
11	பிராகாரங்கள்		
	முதலாம் வீதி		
	கிழக்குவாசல் சிவன் கோயில்		
	தெற்கு வீதி	3பங்கு	
	வடக்குவீதி	பங்கு	
	மேற்கு வீதி	3 பங்கு	
	இரண்டாம் வீதி	-	
	வடக்குவீதி	பங்கு	
	தெற்கு வீதி	4 பங்கு	
	மேற்கு வீதி	4 பங்கு	
	தேரோடும் வீதி	-	
	எல்லாத் திக்குகளிலும்	7 பங்கு	
12	பரிவாராலயங்கள்		
		பங்கு	
	பிள்ளையார், முருகன், சந்தான கோபாலர், மஹாலட்சுமி, பஞ்சமுகப்பிள்ளையார்	பங்கு	7’-0.375”
	நீளம்	பங்கு	7’-0.375”
	அகலம்	பங்கு	7’-0.375”
	பைரவர்	+ (+x)	5’-10.3125”

பின்னிணைப்பு இல -02

சிவாலயக் கட்டட உறுப்புகளுக்கு இடையே உள்ள இடைவெளி.

இல	உறுப்புக்களிலிருந்து தூரம்	கால்புறவாயின் பங்கு	பெறுமானம்
1	மகாமண்டபத்திலிருந்து தீர்த்தக்கிணறு முடிவு		4’ 8.25”
2	பலிபீடத்திலிருந்து நவக்கிரக முடிவு	2	18’ 9”
3	கோபுர மத்தியிலிருந்து மணிக்கோபுர முடிவு	2	4’ 8.25”
4	மணிக்கோபுரத்திலிருந்து பைரவர் முடிவு		4” 8.25”
5	பைரவரிலிருந்து யாகசாலை		12’ 10.6875”
6	கர்ப்பக் கிருகத்திலிருந்து சண்டேஸ்வரர்		4’ 8.25”
7	மூலஸ்தான மத்தியிலிருந்து பிள்ளையார் மத்தி		23’ 5.25”

பின்னிணைப்பு இல - 03

சிவாலய கட்டட உறுப்புக்களின் உயரம் - கனம்

இல	உறுப்புக்கள்	கால் புறவாயின் பங்கு மானம்	பெறுமானம்	உயரம்	கனம்
1	மணிக்கோபுரம்		32’-9.75”	32’ -9.75”	
2	தூண் 1.தடிப்பு 2.உயரம்		1’- 4.0714” 14’ – 0.75”	14’ – 0.75”	1’-4.0714”
3	சுவர்		1’ – 4.0714”		1’-4.0714”
4	விமானம் 1.ஏகதள விமானம் 2.துவிதள விமானம் 3.திரி தள விமானம்	1 2	9” -4.5” 14’- 0.75” 18’-9”	9’- 4.5” 14’ – 0.75” 18’ – 9”	
5	கோபுரம் 1.உயரம் 2.அகலம்	2 அல்லது 3 உயரத்தில்	18’-9”/28’ -1.5”	18’-9” / 28’ – 1.5”	

பேட்டி கண்டோர் விபரம் :

01. *ஸ்தபதி திரு.க.கோபாலசிங்கம்*
02. *ஸ்தபதி திரு.கு.நவரட்னம் (அமரர்)*

நாகம்மாள கோயிலடி அராலி தெற்கு
அராலி மத்தி, வட்டுக்கோட்டை
வட்டுக்கோட்டை

பின்னிணைப்பு - 04.

திசை	காரணகாமம் பாகம்-1 60. 9, 10	ரௌரவாகமம் பாகம் - 11 32. 1-3	அஜிதாகமம் பாகம் - 11 39.7-10	தீப்தாகமம் 67.1,2	யோகஜாகமம் 17.15½ - 17	வீராகமம் 41.3-6	சுப்பிர பேதாகமம் 39.26–28½	தீப்தாகமம் 11.15- 17
கிழக்கு	விருஷ்பம்	விருஷ்பம்	விருஷ்பம்	விருஷ்பம்	விருஷ்பம்	விருஷ்பம்	சூரியன்	விருஷ்பம்
அக்னி	அகஸ்தியர்	துர்க்கா	ப்ரம்மா	காத்யாயனி	துர்க்கா	துர்க்கா	அக்னி	சிம்மவாஹினீ
தெற்கு	காத்யாயனி	சாமுண்டீ	மாத்ருகணம்	மாத்ருகணம்	சப்தமாத்ரு	மாத்ருகணம்	மாத்ருகணம் / விஷ்ணு	மாத்ருகணம்
நிருதி	கணேஸ்வரர்	கணேசர்	விநாயகர்	கணநாயகர்	கணநாதர்	விக்னேசர்	விக்னேசர்	விக்னநாயகர்
மேற்கு	பிரம்மா	சண்முகர்	ஸ்கந்தர்.	சுப்ரம்மண்யர்	சுகுமாரன்	குமாரன்	சுப்ரம்மண்யர்	குமரன்
வாயு	ஷண்முகர்	ஜ்யேஷ்டா	ஜ்யேஷ்டா	ஜ்யேஷ்டா	ஜ்யேஷ்டா	ஜ்யேஷ்டா	ஜ்யேஷ்டா / லட்சுமி	காகவாஹினீ
வடக்கு	கேசவர்	விஷ்ணு	விஷ்ணு	கேசவர்	விஷ்ணு	விஷ்ணு	துர்க்கா / பிரம்மா	கேசவர்
ஈசானம்	பாஸ்கரன்	பானு	ரவி	பாஸ்கரன்	சண்டேசர்	பாஸ்கரன்	சண்டேஸ்வரர்.	பாஸ்கரன்

சிவாகமங்கள் சுட்டும் சிவாலய அஷ்டபரிவாரங்கள்.

குறிப்பு : மூலாகமங்களிலிருந்து தொகுக்கப்பட்டவை.

அறநோக்கில் பகவத்கீதையும் திருக்குறளும்

விக்னேஸ்வரி, ப.

ஆய்வுச்சுருக்கம்

இந்துப்பண்பாட்டுத் தளத்திலே வேதமரபின் வளர்ச்சிக்கட்டமான இதிகாச மரபின் வாழ்வியலுக்கு வடிவம் தந்த நூல் பகவத்கீதை. வேதமரபு, சமணம், பௌத்தம் முதலிய அனைத்து சிந்தனைகளையும் உள்வாங்கித் தமிழ் மரபில் நின்று உலகப்பொதுமறை எனக்கொள்ளத் தக்க சிறப்புமிக்க நூல் திருக்குறள். வடமொழியிலும் தமிழிலும் தோற்றம் பெற்ற இவ்விரு நூல்களும் இந்திய வரலாற்றில் உயரியவையாக மதிக்கப்படுவன. இந்து தர்மத்தின் ஆதாரநூல் களாக உபநிடதம் பகவத்கீதை, பிரம்மசூத்திரம் எனும் மூன்று பிரஸ்தான திரயங்களும் கருதப்படுகின்றன. இவற்றுள் பகவத்கீதை இதிகாசங்களுள் ஒன்றாகிய மகாபாரதத்தில் இருபத்தைந்து தொடக்கம் நாற்பத்தியிரண்டு வரையுள்ள பதினெட்டு அத்தியாயங்களில் அமைந்துள்ளது. திருக்குறள் 'தமிழ்மறை' என்ற சிறப்புப் பெயர் பெற்றது. இவ்விரு நூல் களும் மானிட வாழ்வுக்கு வழிகாட்டுவன. அகத்தூய்மை, செயலூக்கம், பொதுநலன் என்பன பற்றிப் பேசுவன. ஆனால் பேசும்நிலையில் வேறுபடுவன. இவ்வகையில் வேதமரபு சார்ந்த சிந்தனைத்தளத்தில் நின்று இறைநம்பிக்கையை முன்வைத்துச் சிந்திப்பது பகவத்கீதை. திருக்குறள் உலகளாவிய மனிதநேயம் பற்றிப் பேசுகின்றது. எனவே ஒற்றுமையும் வேற்றுமையும் கொண்டு விளங்கும் இவ்விரு நூல்களின் உள்ளடக்கம் பற்றி ஆராய்வதன் மூலம் அவற்றின் சிறப்புக்கள் மற்றும் பெறுமானங்களை அறிந்துகொள்ள முடிகின்றது.பகவத்கீதை ஒரு சந்நியாச நூலன்று. வீடு, மனைவி, மக்கள் சுற்றத்தைத் துறந்துவிட்டு சந்நியாச நெறியில் செல்லும்படி கீதை கூறவில்லை. அது கடமையையே வற்புறுத்துகின்றது. இவ்வகையில் ஒவ்வொருவரும் தமக்கு வாழ்வில் இயல்பாக அமைந்துள்ள கடமைகளைச் சரிவரச்செய்வதே வாழ்க்கையின் உயர்ந்த தர்மம் என்ற கொள்கையை அழுத்தமாக உபதேசிக்கின்றது. இத்தகைய கடமையைச் செய்யமுடியாது நிலைகுலைந்து போன மிகப்பெரிய வீரனான அர்ச்சுனனுக்கு இந்த தர்மத்தை மிகத்தெளிவாக அது வலியுறுத்துகின்றது.திருவள்ளுவர் தமிழ்நாட்டில் தோன்றியருளிய சான்றோர்கள் பலருள்ளும் தலைசிறந்தவர். அவர் அருளிச்செய்த திருக்குறளின் கருத்துக்களையும் சொற்பொருளையும் அவருக்குப் பின்வந்த சான்றோர்கள் அனைவரும் வியந்து போற்றி உவந்து தழுவிக் கொண்டுள்ளனர். இவ்வகையில் அருளியற் சான்றோர்களாகிய ஆழ்வார்கள் மற்றும் நாயன்மார்களும் திருவள்ளுவரின் கருத்துக்களை ஆங்காங்கு தம் பாடல்களில் போற்றியுள்ளனர். திருவள்ளுவர் சிறந்த பெருங்கவிஞர். ஒப்புயர்வற்ற நீதிநூலாசிரியர். மிகச்சிறந்த தத்துவஞானி. இலக்கியப் பேராசிரியர். அரசியல் நுண்ணறிஞர். பொருளியல் மேதை. பல்கலைக்குரிசில். உலகுக்கே ஒரு பெரும் வழிகாட்டி. காலமும் இடமும் கடந்து, சாலவும் நிலை பெற்று, ஞாலமே புகழ்ந்து வியக்கும் 'திருக்குறள்' எனும் செந்தமிழ் அறநெறிப் பெருநூலை இயற்றி அளித்த பெருவள்ளல். உலகப் பெரும் சமயத்தவர்களும், சான்றோர்களும் கூறியுள்ள கருத்துக்கள் யாவும் திருக்குறளில் செறிந்துள்ளன. திருவள்ளுவர் எல்லாச் சமயத்தவரும் ஏற்கும் உண்மைகளை நடுநிலை பிறழாமல் விளக்கியுள்ளார். ஒரு நாடு - ஒரு காலம் - ஒரு மொழி - ஓர் இனம் என்பனவற்றிற்கே உரியதாகிவிடாமல், எல்லாக்காலமும், எல்லாநாடும், எல்லாமொழியும், இனமும் ஆகியவற்றைச் சேர்ந்த மக்களுக்கும் உரிய மாபெரும் பொதுமறை நூலாகத் திருக்குறள் திகழ்கின்றது. இல்லறத்தான், துறவறத்தான், அரசன், அமைச்சன், நண்பன், பகைவன், போர்வீரன், கற்றான், கல்லான், கள்ளுண்பான், சூதாடுபவன், ஆண், பெண் முதலிய அனைவருக்குமே அறிவுரைகள் கூறும் சமுதாயப் பெருநூலாகத் திருக்குறள் திகழ்கின்றது.சமுதாயத்தின் ஒட்டுமொத்த நலனுக்காக தனிமனிதன் தன்னை முழுமையாக ஒப்படைக்க வேண்டும் என்பதே கீதையின் சாரம்சமாகும். அதன் பதினெட்டு அத்தியாயங்களில் அமைந்த எழுநூறு சுலோகங்களும் இதன் விரிவுரைகளாகும். இவ்வாறு கீதை, 'பலனில் பற்று வைக்காத செயல்திறன் - செயலில் துறவு' என்பது பற்றிப் பேசுகிறது. இவ்வாறான பற்றின்மை செயலாக்கத்தைப் பாதிக்கலாகாது என்பதைச் சுட்டுவதற்காகக் கடமையுணர்வு வற்புறுத்தப்படுகிறது. கடைமையில் உணர்வுபூர்வமாக ஈடுபடுவதற்காக தியானம், பக்தி எனும் அணுகுமுறைகளை முன்வைக்கிறது.இவ்வாறு திருக்குறள் அறம், பொருள், இன்பம் பற்றி 133 அதிகாரங்களில் 1330 திருக்குறளுடன் முப்பாநூலாக அமைவதுடன், பகவத்கீதை அறத்தின் அடிப்படையில் அமைந்த வாழ்வியல் நூலாக அமைகின்றது. எனவே இவ்வாய்வில் பகவத்கீதைக்கும் திருக்குறளுக்கும் இடையேயான கூறுபொருளில் ஒத்ததன்மை, தனித்துவம், வேறுபாடுகள் என்பன எவ்வாறு விரவியுள்ளன என இவ்விரு நூல்களையும் ஒப்புநோக்கி இலக்கிய விவரண ஆய்வு முறையியலையும், ஒப்பியல் ஆய்வு முறையியலையும் வரலாற்றாய்வு முறையியலையும் ஆய்வு முறையியலாகக் கொண்டு இவ்வாய்வு முன்னெடுக்கப்படுகின்றது. இவ்வாய்வினூடாக வாழ்வியல் என்ற நிலையில் தனித்த அடையாளங்கள் பல காணப்படுகின்றமையும் வடமொழி இலக்கிய மரபு, தமிழ் இலக்கிய மரபின் புதிய பரிமாணத்திற்கு அடிப்படையாய் அமைந்தமை பற்றியும் வெளிக்கொணர முடிகின்றது.

ஆய்வின் நோக்கம்

இன்றைய உலகில் அறம், ஒழுக்கம், வாழ்க்கைத் தத்துவம் சார்ந்த சிந்தனைகள் இன்றியமையாதவையாக விளங்குகின்றன. இவ்வகையில் அறத்தை வியந்து பேசும் இவ்விரு நூல்களிலும் விபரிக்கப்படும் கருத்துக்கள் அறவியலின் அடிப்படையாக அமைந்தன என்பதன் அடிப்படையில் ஆய்வு செய்வதே இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும்.

ஆய்வின் எல்லை

பகவத்கீதை மற்றும் திருக்குறள் ஆகிய நூல்களில் இழையோடியுள்ள அறக்கருத்துக்களை இந்த ஆய்வின் எல்லையாக அமைகிறது.

ஆய்வு முறையியல்

அறநோக்கில் பகவத்கீதையும் திருக்குறளும் என்ற தலைப்பில் அமையும் இவ்வாய்வில் வரலாற்று முறையியல் விபரணமுறையியல் பகுப்பாய்வு முறையியல் மற்றும் ஒப்பீட்டு முறையியல் ஆகிய முறையியல்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

திறவுச்சொற்கள் : *பகவத்கீதை, திருக்குறள், அறம், வாழ்வியல், தத்துவம்*

அறிமுகம்

'கீதை' என்பதன் பொருள் பாட்டு என்பதாகும். பகவானைப் பற்றிய பாடல் என்று கொள்ளலாம். இதிகாசங்களாகிய இராமாயணம், மகாபாரதம் என்பவற்றில் இராமாயணத்தை வான்மீகியும், மகாபாரதத்தை வியாசரும் எழுதியுள்ளனர். மகாபாரதம் ஒரு லட்சம் சுலோகங்களால் ஆகிய பெரியநூல். இதில் பீஷ்ம பர்வத்தில் 25-42 அத்தியாயங்களாக மிளிரும் பகுதியே பகவத்கீதையாகும். பதினெட்டு அத்தியாயங்களைக் கொண்ட கீதை எழுநூறு சுலோகங்களால் ஒளிவிடுகிறது. இது பகவான் கண்ணன் திருவாயாலேயே அருளிச் செய்யப்படுவதால் புனிதமானதாகக் கொள்ளப்படுகின்றது. கீதை பிரஸ்தானத்திரயம் எனப்படும் மூன்று நூல்களில் ஒன்றாகும். ஏனையவை உபநிடதங்கள் மற்றும் பிரம்மசூத்திரம். முடிவான பிரமாணமாக அமைந்த மூன்று நூல்கள் என்பது பிரஸ்தானத்திரயம் என்பதன் பொருள். பகவத்கீதை சூத்திரங்கள் அடங்கிய நூலன்று. அது ஒரு மகத்தான தர்மகாவியம் எனத்தேசத்தந்தை காந்தி கூறுகிறார். அது ஒரு கர்மகாண்டப்பகுதி எனத்திருமூலர் சுட்டுகிறார். மகாகவி பாரதி, மோட்சசாஸ்திரம் என்கிறார். இவ்வாறு ஞானிகளும் தேசப் பெரியார்களும் சிறப்பித்துக் கூறுமளவிற்குக் கீதை விளங்குகின்றது. கீதையில் உள்ள தியான சுலோகத்தின் 4வது கீதை, சுலோகம் 'உபநிடதங்கள் யாவும் பசுக்கள்: கிருஷ்ணன் பால் கறப்பவன்: பார்த்தன் கன்று: அருந்துபவர் பேரறிஞர்!: கீதை எனும் அமிர்தம் ஒப்பற்ற பாலாகிறது' என்கிறது.

கீதை தோன்றியதன் நோக்கம், எச்சூழ்நிலையில் தோன்றியது? கீதை கூறும் உபதேசம் தோன்றிய சூழலுக்கு ஏற்புடையதா? இது ஒரு அறநூலா? இது எவ்வாறு அறத்தைப் பேசுகிறது? என ஆராய்ந்தால், பகவத்கீதையானது போர்க்களத்தில் தோன்றிய நூலாகும். குருஷேத்திரப் போரில், போரிடச் சென்ற அர்ச்சுனன் எதிர்த்தரப்பிலே உறவினர்கள், குருமார், நண்பர்கள் என அனைவரையும் கண்டு இவர்களை எதிர்த்துப் போர் செய்வதா? என உளச்சோர்வடைந்த நிலையில், அவனது உளச்சோர்வினைப் போக்கி அறப்போர் செய்யும்படி கண்ணனால் உபதேசிக்கப்பட்டதே பகவத்கீதை ஆகும். இவ்வாறு போர்க்களத்தில் தோன்றிய இந்நூல் எவ்வாறு அறத்தைப் போதிக்கிறது என ஆராய்வது இன்றியமையாதது.

அறம் என்பது, மனித சமூகத்தைச் செம்மைப்படுத்துவதற்காகக் கட்டமைக்கப்பட்ட ஒன்றாகும். இது நன்மை தீமை, சரி பிழை என்பன பற்றிய ஆய்வாகவும், முழுச் சமூகத்தினது பண்பையும் நடத்தையையும் கருத்தில் கொள்வதாகவும் அமைகிறது. இதனடிப்படையிலே நோக்கும் போது, அறம் அனைவரிற்கும் இன்றியமையாத ஒன்றாக விளங்குகின்றமை தெளிவாகின்றது. பகவத்கீதையானது கடவுட்கோட்பாடு, ஆன்மக்கோட்பாடு, வர்ணதர்மக் கோட்பாடு, ஆச்சிரமக்கோட்பாடு, மனிதருள் தேவரும் அசுரரும், மரணம் பற்றிய அறங்கள், கன்மம் மறுபிறப்பு மற்றும் முத்திக்குரிய வழிகள் என்பவற்றின் ஊடாக அறத்தைக் கூறுவதைக் காணலாம்.

கீதை தோன்றிய சூழல்

அர்ச்சுனன் கேட்டுக் கொண்டபடி கண்ணன் அவனை இருபடைகளுக்கும் நடுவே கொணர்கிறான். எதிர்படையில் நிற்கும் வீரர்களைப் பார்த்துக் கலங்குகிறார். கலக்கமுற்ற அருச்சுனனுக்குக் கண்ணன் பல்வேறு நீதிகளையும், தத்துவங்களையும் போதிக்கிறான். பெருந்தோளுடையாய் பரதரேறு (கீதை, சுலோகம் 11, அத்தியாயம் 7) பகைவரைச்சுடுபவன் (கீதை, சுலோகம் 27, அத்தியாயம் 7) உடம்பெடுத்தோரில் உயர்ந்தவன் (கீதை, கீதை, சுலோகம் 4, அத்தியாயம் 8) பகையைச் சுடுபவன் (கீதை, சுலோகம் 3, அத்தியாயம் 9) இடக்கை வீரன் (கீதை, சுலோகம் 33, அத்தியாயம் 11) பாரதக்காளை (கீதை, சுலோகம் 27, அத்தியாயம் 13) புருடப்புலி (கீதை, சுலோகம் 41, அத்தியாயம் 18) எதிரிகளை வாட்டுபவன் (கீதை, சுலோகம் 41, அத்தியாயம் 18) என்றெல்லாம் அடைமொழி சேர்த்து உணர்ச்சியூட்டுகிறான் கண்ணன். போரை மறுத்த அர்ச்சுனனைக் கண்ணன் நயந்து பேசுகிறான். அடைமொழிகள் கொடுத்துக் குளிர வைக்கிறான். அறிவுரை கூறுகிறான். எதிரிகள் ஏற்கனவே தன்னால் கொல்லப்பட்டுவிட்டார்கள் என்பதை விஸ்வரூப தரிசனத்தில் காட்டி (கீதை, சுலோகம் 34) அவர்களைக் கொல்ல ஒரு கருவியாய் இருக்கும்படியும் பல்வேறு வழிகளில் அர்ச்சுனனை வழிக்குக் கொணர்கிறான்.

பதினெட்டு அத்தியாயங்கள் கொண்ட கீதையில் முதல் அத்தியாயமான அர்ச்சுன விஷாதயோகம், இந்நூலிற்கு ஒரு கள அறிமுகமாக, முன்னுரையாகப் பயன்படுகிறது. இரண்டாவது அத்தியாயமான சாங்கிய யோகத்திலிருந்து தன்னைக் கண்ணனுக்கு அர்ப்பணித்து அறிவுரை கேட்பதிலிருந்து மயக்கம் அழிந்தது நின்னருளாலே: நான் நினைவு அடைந்தேன்: ஐயம் நீங்கினேன்: நீ செய்யச் சொல்வது செய்வேன் (கீதை, சுலோகம் 73, அத்தியாயம் 18) என்று அர்ச்சுனன் முடிக்கும் மோட்சசந்நியாச யோகத்தோடு நிறைவுறுகிறது.

> "எப்பொழுதெல்லாம் அறம் நலிந்து மறம் தலையெடுக்கிறதோ அப்பொழுதெல்லாம் என்னை நான் பிறப்பித்துக்கொள்கிறேன். நல்லோரைக் காக்கவும், தீயோரை அழிக்கவும் அறத்தை நிலை நிறுத்தவும் யுகங்கள் தோறும் அவதரிக்கிறேன்" என்கிறான் கண்ணன்.

கீதை தோன்றிய காலகட்டத்தை, இந்திய சிந்தனை மரபு பின்வருமாறு அவதானிக்கிறது. கீதை காட்டும் கடவுள் நிலைகளைக் காரணகாரிய ரீதியாகத் தெளிந்து கொள்வதற்கு, இந்நூல் எழுந்த கால புராண இதிகாச கால கடவுள் சிந்தனைச் சூழல், அதன் சமூகத் தேவை என்பவற்றை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். 'நிலவுடைமை எழுச்சிச் சூழலில் வேதமரபுச் சிந்தனைகளை, பல்வேறு

பழங்குடி சமூகச்சிந்தனைகளுடன் இயைவுற முயற்சிகள் நடைபெற்ற வரலாற்றுக் காலகட்டத்தில் எழுந்தவை புராணங்களும் இதிகாசங்களும் ஆகும். இந்தச் சூழலில் கடவுள் என்ற கருத்துநிலை, இயற்கைக்கூறு என்ற மட்டத்திலோ பேரறிவால் உணரத்தக்க புலன்கடந்த பொருள் என்ற மட்டத்திலோ மட்டும் அமைவது, அக்காலத் தேவையை நிறைவு செய்வதாக இருக்க இயலாது. சுருங்கக் கூறின், கடவுள் என்பவர் கருத்துப் பொருள் என்ற நிலையிலிருந்து காட்சிப் பொருளாகவும், தொலைவில் எங்கோ இருப்பவர் அருகில் எப்போதும் அணுகத்தக்கவராகவும் காட்டப்பட வேண்டியது அன்றைய சூழலில் தேவையாயிற்று. அத்துடன் பல்வேறு பிரதேச மக்களின் ஆழ்ந்த நம்பிக்கைகளுடன் இணைந்து நிலைபெற்றிட்ட தெய்வங்களை, வேதமரபில் ஏற்று அவைகளுக்கு மதிப்பான ஓர் இடத்தை வழங்க வேண்டிய அவசியமும் இருந்தது'. (சுப்பிரமணியன், நா : 1996:48

கீதை கூறும் வாழ்வியல் தத்துவம்

> ஆன்மா, உலகு, இறைவன் ஆகிய முப்பொருள்களின் இயல்புகளையும், அவற்றிற்கிடையேயான தொடர்பு நிலைகளையும் இந்திய தத்துவ சிந்தனை மரபு விளக்குகின்றது. கீதையின் பொருள் உள்ளடக்கி ஐந்து ஆதார உண்மைகளைச் சாசனம் செய்கிறது. அவையாவன: கடவுள், ஜீவன்கள், பிரகிருதி, காலம், கருமம் என்பனவாகும். (பகவத்கீதை உண்மை உருவில், பக் 8-12)
>
> கீதையில் ஆன்மா அழியாதது; நிலைத்திருப்பது; பிறப்பற்றது; குறைவுபடாதது; பரந்துபட்டது; புத்திக்கெட்டாதது; மாற்ற முடியாதது போன்ற தன்மைகளாகச் சுட்டப்படுகிறது. இல்லாததற்கு இருப்பது என்பது இல்லை. மேலும் உண்மையாக இருப்பதற்கு, இல்லாமை என்பதுவும் இல்லை. இந்த இரண்டின் தத்துவம், தத்துவ ஞானிகளால் கண்டறியப்பட்டது எனக்கீதை கூறுகிறது. (கீதை, சுலோகம் 16, அத்தியாயம் 2)
>
> மனிதன் எப்படி நைந்துபோன துணிகளை நீத்துவிட்டு வேறு புதிய துணிகளை எடுத்துக் கொள்கிறானோ அவ்வாறே ஜீவாத்மா பழைய உடல்களை நீத்துவிட்டுப் புதிய உடல்களை அடைகிறது. (கீதை, சுலோகம் 22, அத்தியாயம் 2)
>
> ஒரு மகாபுருஷன் தான் இந்த ஆன்மாவை ஆச்சர்யமாகப் பார்க்கிறான். ஒரு மகாபுருஷன் தான் இந்தத் தத்துவத்தை ஆச்சர்யமாக வர்ணிக்கிறான். ஒரு மகாபுருஷன் தான் இந்த ஆன்மாவைக் கேட்கிறான். (கீதை, சுலோகம் 29, அத்தியாயம் 6)

எனப்பலவாறாகக் கீதை ஆன்மா பற்றிக் குறிப்பிடுகிறது.

ஆன்மா அழிவற்றது. உடல்கள் அழியக்கூடியவை என்பதைப் பகவத்கீதை தெளிவாகக் கூறுகிறது. நித்தியமாய், அழிவற்றதாய், அளப்பரியதாய் உள்ள ஆன்மாவின் இவ்வுடல்கள் யாவும் அழியுந்தன்மையுடையவை. (கீதை சுலோகம் 18, அத்தியாயம் 2) பிறத்தல், இருத்தல், வளர்த்தல், மாறுதல், தேய்தல், மாய்தல் ஆகிய ஆறுவித பாபவிகாரங்கள் உடலுக்கு உண்டு. ஆனால் ஆத்மாவுக்கு விகாரம் இல்லை. (கீதை, சுலோகம் 20, அத்தியாயம் 2) பிறப்புப் பற்றியும் கீதை தெளிவாகக் குறிப்பிடுகின்றது. பழுதுபட்ட துணிகளைக் களைந்து விட்டு மனிதன் புதியவைகளைப் போட்டு கொள்வது போன்று ஆன்மா பழைய உடல்களை நீத்துப் புதியனவற்றுள் புகுகின்றது. இவ்வாறு

புதிய பிறப்புக்கு ஏதுவாக அமைவன வினைகளேயாம். (கீதை, சுலோகம் 22, அத்தியாயம் 2) 'பிறந்தவன் இறப்பதும் இறந்தவன் பிறப்பதும் உறுதியெனின் விலக்கமுடியாத இவ்விடயத்தில் மக்கள் வருந்துவது பொருத்தமாகாதது' எனக்கீதை உபதேசிக்கிறது. (கீதை, சுலோகம் 27, அத்தியாயம் 2) ஒருவன் முத்தியடையும் வரை இந்நிலை தொடரும். பற்றுக்கு ஆளாயிருக்கும் வரை பிறப்பதும் இறப்பதும் இயல்பு என்பதும் வினையின்படி வருகின்ற மரணத்தைத் தடுக்க யாருக்கும் இயலாது என்பதும் உணர்த்தப்படுகின்றது.

> ஆத்ம தத்துவத்தைப் பற்றிக் கூறிய கீதை ஆத்மவிமோசனத்திற்கும் வழிகூறி நிற்கின்றது. உள்ளத்திலே நடுவுநிலையோடு நிற்கும் ஞானிகள் வினைப்பயனை விட்டொழித்துப் பிறவித்தளை நீங்கிக் கேடில்லாத பெருநிலை அடைகின்றனர். (கீதைசுலோகம் 51, அத்தியாயம் 2) மனத்தில் எழுகின்ற ஆசைகளை அடக்கி, ஆத்மாவில் ஆத்ம திருப்தி அடைந்திருப்பவனை 'ஸ்திதப்பிரக்ஞன்' என்று கீதை குறிப்பிடுகின்றது. (கீதை, சுலோகம் 55, அத்தியாயம் 2) நலமும் கேடும் கலந்துள்ளது உலகம். பற்றுடையார்க்கு அது இன்பதுன்பத்தை விளைவிக்கிறது. பற்றற்ற ஞானி அத்தகைய விளைவுகளுக்கு ஆட்படுவதில்லை. 'எவன் பற்றற்றவனாய் நலம் வரும்போது மகிழாமலும் கேடு வரும் போது துயரடையாமலும் இருக்கின்றானோ அவனுடைய அறிவு உறுதிபெறுகின்றது' என்பது கீதையின் போதனையாகும். (கீதை, சுலோகம் 57, அத்தியாயம் 2)

யாகத்தில் எஞ்சியதை உண்ணும் நல்லோர் எல்லாப் பாபங்களிலிருந்தும் விடுபடுகின்றனர். ஆனால் தங்கள் பொருட்டே உணவைச் சமைக்கும் பாபிகள் பாபத்தை உண்கின்றனர். (கீதை, சுலோகம் 13, அத்தியாயம் 3) எச்செயலைச் செய்தாலும் அதன்மூலம் உலக நன்மையும் இறைவனது பெருமையும் முன்னணியில் நிற்றல் வேண்டும். தான், தனது என்னும் செருக்குப் பின்னணிக்குப் போகுமளவு அது புண்ணியச் செயலாகக் கருதப்படுகின்றது. நித்திய கடமையில் இதற்குரிய உதாரணத்தைக் குறிப்பிடுமிடத்து, அன்றாடம் சமைத்து உணவை மற்றவர்களுக்கு முதலில் வழங்கிவிட்டு எஞ்சியதை உண்பவன் மேலோன். இல்வாழ்வான் ஒருவன் ஐம்பெரும் வேள்விகளைச் செய்யக் கடமைப்பட்டவன். தேவயக்ஞம் என்பது கடவுள் வழிபாடு. அடுத்து பிரமயக்ஞம் என்பது உலகநன்மையின் பொருட்டுச் சான்றோர் அமைத்த தெய்வநெறி நூல்களை முறையாக ஆராய்வதும் அவற்றை மற்றவர்களுக்கு எடுத்து ஓதுவதும் ஆகும். இது ரிஷிகளைப் போற்றுவதற்கு ஒப்பானதாகும். நூல்களை ஓதுதல் பிரமயக்ஞமாகும். பித்ருயக்ஞம் மூன்றாவதாக முக்கியத்துவம் பெறுகின்றது. மனிதன் வாழ்ந்து வரும் உடலுடன் கூடிய வாழ்க்கையில் தம்முன்னோர்க்கும் கடப்பாடுடையவன் ஆகின்றான். எனவே அவர்களைக் குறித்து நாம் வழிபடுதல் வேண்டும். உயிரோடிருக்கும் பெற்றோருக்குப் பணிவிடை நாள்தோறும் செய்வதும் இதன் பாற்படும். நான்காவதாகிய நரயக்ஞம் மக்களது பசியைப் போக்குதல், பிணியை நீக்குதல், வாழ்க்கையைப் பண்படுத்தல், கல்வியைப் பெருக்குதல் எனும் இவை யாவற்றையும் உள்ளடக்கியது. ஐந்தாவதாகிய பூதயக்ஞம் ஆடு, மாடு முதலிய உயிரினங்களைப் பேணிவருதலைக் குறிக்கும். இந்த ஐவகை யக்ஞத்தில் மனிதன் உறுதியாக ஈடுபடுமிடத்து ஆத்மீகநலம் கிட்டுகின்றது.

ஒருவன் ஆன்மீக மேம்பாடு அடைய விரும்பின் பிறப்பு இறப்பு என்ற பெருங் கடலில் மூழ்காது தன்னைத் தானே உயர்த்திக் கொள்ளுதல் வேண்டும். தன்னை இழிவுறுத்தலாகாது. ஏனெனில் தானே தனக்கு நண்பன். தானே தனக்குப் பகை என்று கீதை உபதேசிக்கின்றது. (கீதை, சுலோகம் 5, அத்தியாயம் 6) ஆத்மமேம்பாட்டுக்குத் தியானம் ஒரு சிறந்த சாதனையாகக் கீதை குறிப்பிடுகின்றது. மனதைத் தியானத்தில் நிறுத்தி உள்ளத்தை அடக்கிய யோகி, இறைவனிடத்தில் முக்திநிலையில் நிறைவு பெறுகின்ற சாந்தி எய்துகிறான். (கீதை சுலோகம் 15, அத்தியாயம் 6) இறைவனை பக்தியுடன் வழிபடுபவர்க்குப் பக்தியோகம் கைவரப் பெற்று இறைவனை அடைகின்றனர். இறைவன் அவர்களுக்கு அருள் கொண்டு அந்தக்கரணத்தில் வீற்றிருந்து மெய்ஞ் ஞானச் சுடர் விளக்காய் அறியாமை என்னும் இருளை அகற்றிவிடுகின்றார். (கீதை, சுலோகம் 11, அத்தியாயம் 10) இறைவனை அடைந்தவனுக்கு மறுபிறப் பில்லை என்பது கீதையின் போதனை. அனைத்துத் தர்மங்களையும் இறைவனுக்கென்றே அர்ப்பணஞ் செய்து அவனைச் சரணடைதல் வேண்டும். அப்பொழுது இறைவன் அனைத்துப் பாவங்களிலிருந்தும் எம்மை ஈடேற்றுவான். கவலையும் ஒழியும் (கீதை, சுலோகம் 66, அத்தியாயம் 18) என்ற உபதேசம் ஆத்மீக மேம்பாட்டுக்கு மிகவும் உறுதுணையாக அமைவதாகும். வள்ளுவரும் ஆத்மீக நிலையை அடைவதற்கு,

'பிறவிப்பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேராதார்' (குறள்:10)

எனக்குறிப்பிடுகின்றார். எனவே இவற்றால் பிறவிப் பெருங்கடலை நீந்துவதே ஆத்மீக வாழ்க்கையின் முக்கிய நோக்கம் என்பது பெறப்படுகின்றது.

கீதையை வாழ்க்கைக்கு வழிகாட்டும் நூலாகக் கருதுபவர்கள் அதனை வாழ்க்கை பற்றிய ஒரு உருவகமாகக் கொள்வர். இந்தவகையில் சுவாமி சிற்பவானந்தர் தரும் விளக்கம் பின்வருமாறு,

'மானுட சரீரமே குருஷேத்திரம் ஏனென்றால் அது ஒவ்வொரு ஜீவனுக்கும் தர்மஷேத்திரமாகிறது. அவரவர் வினையை நல்வினையாக்குவதற்கு உற்ற இடம் உடல். பாண்டவர்கள் நல்ல இயல்பின் பிரதிநிதிகள். கௌரவர்கள் கெட்ட இயல்பின் பிரதிநிதிகள். பாண்டவர் கௌரவர் ஆகிய இரு சாராரும் ஒரே ராஜகுடும்பத்தைச் சேர்ந்தவர்கள். ஜீவனிடத்து நல்லியல்பு கெட்ட இயல்பு ஆகிய இரண்டும் உண்டு. எல்லா ஜீவன்களுக்கும் சாரதியாக சர்வேஸ்வரன் மனத்தகத்து வீற்றிருக்கிறார். அவர் மனச்சாட்சியாக இருந்து ஒழுங்குபடுத்துவது நல்லோர்க்கு விளங்குகிறது. மற்றவர்களுக்கு அது விளங்குவதில்லை'. (சுவாமி சிற்பவானந்தர், ஸ்ரீமஸ்ரீ பகவத்கீதை, ப 56)

கீதை பிறந்த இடம் போர்க்களம். நாம் வாழும் இந்த உலகம் முழுவதுமே போர்க்களமாகும். இதில் பல்வேறு அணிகளாக மக்கள் பிரிந்து நிற்கின்றனர். முரண்பட்டு மோதிக் கொள்கின்றனர். சமூகம், குடும்பம் தனிமனிதநிலை ஆகிய பல மட்டங்களிலும் இது நிகழ்ந்து கொண்டு இருக்கிறது. இவ்வாறான முரண்பாடுகள் பல காணப்படினும் நுணுகி நோக்குவார்க்கு இரு பெரும் பிரிவுகளுள் அவை அமைவது புலனாகும். அவற்றுள் ஒன்று சுயநலச்சார்பான அணி. மற்றது பொது நலம் சார்ந்த அணி. இந்த இருநிலைகளுக்கும் அப்பால் மூன்றாவது அணி, ஒன்று அமைவது சாத்தியமில்லை. தனித்து விலகி நிற்பது என்ற பேச்சுக்கும் இடமில்லை.

மூன்றாவதாகக் கூறிக் கொள்வதென்பது முரண்பாடுகள் பற்றிய தெளிவின்மையின் விளைவாகலாம். அல்லது கோழைத் தனத்தின் விளைவாகலாம். இவ்விரண்டுமே சுயநல அணிக்குச் சாதகமான சூழ் நிலையை ஏற்படுத்தவல்லன. எனவே உலகின் பொதுநலன் பாதுகாக்கப்பட வேண்டுமாயின் தெளிவின்மை (அறியாமை) கோழைத்தனம் என்பன அகற்றப்பட வேண்டும். இதற்கு அறிவின் துணை தேவை. அதன்வழிபட்ட பலன் கருதாத செயல்திறன் தேவை என்றவாறு கீதையின் வாழ்வியில் நோக்கு அமைகின்றது.

கர்மம்

கர்மாவைச் செய் செய் என்று தொடர்ந்து வற்புறுத்திக் கொண்டே யிருப்பது கீதை. ஒவ்வொரு விநாடியும் ஓய்வின்றித் தொடர்ந்து கர்மம் ஆற்றிக் கொண்டிருப்பதாகக் கண்ணன் அறிவிக்கின்றான். கர்மாவில் சந்நியாசம் இல்லை. ஆனால் அந்தக் கர்மா செய்யும் போது அதன் மீதுள்ள பற்றினை விலக்கிவிட்டு நிஷ்காமியமாக பலன் கருதாத கர்மமாகப் புரியவேண்டும். அத்துடன் அதனால் விளையும் பயன் களை ஈஸ்வரனுக்கு அர்ப்பணம் செய்திட வேண்டும் என்பது கண்ணன் உபதேசம். உண்மையை அறிவதற்கு ஞானமே பயன் படும். ஞானமே கட்டுக்களை உடைக்கும். பற்றுதலை நீக்கும். விடுதலை ஆக்கும். கர்மயோகத்தைப் புரிவது ஞான யோகத்தை எதிர்ப்பதாகாது. உண்மையில் ஞானம் தெளிவடைந்தால் கர்மயோகம் இலகுவில் முடியும்.

உடலில் குடிகொண்டுள்ள எந்த உயிராலும் செயல்களை முற்றிலும் துறக்க முடியாது. ஆனால் செயல்களின் பயனைத் துறந்தவன் தியாகி. (கீதை, சுலோகம் 11, அத்தியாயம் 18) உன் கர்மாவைச் (செயலை) செய்யத்தான் உனக்கு உரிமை இருக்கிறது. அதன் பயனைப் பற்றிய அதிகாரம் உனக்கு இல்லை. எனவே உன் செயலின் பயன் உன் இலட்சியமாக இருக்கக்கூடாது. (கீதை, சுலோகம் 47, அத்தியாயம் 2) பற்றினை விட்டுத் தான் செய்யும் செயல்களனைத்தும் பிரம்மத்திற்கு அர்ப்பணிப்பவன் தண்ணீரால் களங்கமடையாத தாமரை இலையைப் போல களங்கமடையமாட்டான். (கீதை, சுலோகம் 10, அத்தியாயம் 5) கர்மம் செய்வதென்பது குல தர்ம விதிகட்கு உட்பட்டது என்பதை நினைவில் கொள்ள வேண்டும் எனப்பலவாறாகக் கர்மம் பற்றி கீதை உரைக்கின்றது.

ஞானம்

தன்னை உணர்வதற்கும் அதன்மூலம் இறைவனை அடைவதற்குமான பாதைக்கு ஞானமார்க்கம் தவிர்க்க முடியாத வல்லமையுள்ள யோகமாகிறது. ஞானம் பெறுவதற்கு உபநிடதம் மூன்று படிநிலைகளைக் கூறுகிறது. அவை சிரவணம் (தக்க குருவின் மூலம் கற்பது) மனனம் (கற்றதை உரிய முறையில் சிந்தித்தல்) நித்யாசனம் (கற்றதைத் தியானித்தல்) என்பனவாகும்.

தியானம் முதலியவற்றால் எப்பொழுதும் என்னிடமே ஈடுபடுகிறவர்களுக்கும், பேரன்போடு வழிபடுபவர்களுக்கும் நான் ஞான வடிவாகிய யோகத்தை அளிக்கின்றேன். (கீதை, சுலோகம் 10, அத்தியாயம் 10) புலனுணர்வுப் பொருள்களை ஒருவனிடமிருந்து விலகி விட்டாலும் அவனிடம் ஒரு ஏக்கம் இருக்கிறது. பரம்பொருளைப் பற்றிச் சிந்திக்கும் போது அந்த ஏக்கம் நீங்கிவிடும். (கீதை, சுலோகம் 37, அத்தியாயம் 4) ஞானத்தைவிடத் தூய்மையான பொருள் உலகில் வேறொன்றும் இல்லை. (கீதை, சுலோகம் 38, அத்தியாயம் 4) முழுமையான நம்பிக்கை உடையவனும் அதிகாரத்தை உடையவனும் புலன்களை அடக்கிக்

கட்டுப்படுத்தியவனுமாகிய ஒருவன் ஞானத்தை அடைகின்றான். (கீதை, சுலோகம் 39, அத்தியாயம் 4) அற வழியில் செல்வோர், துன்புறுவோர், அறிவை விரும்புவோர், பொருளை நாடுவோர் ஆகிய நால்வரும் என்னை வழிபடுகிறார்கள். நான் ஞானியை நானாகவே கருதுகிறேன்.

யோகம்

யோகம் என்பது இணைதல் ஆகும். ஆன்மா பேரான்மாவுடன் இணைவது. கீதையில் யோகம் பற்றியும் கூறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

> "காற்று வீசாத இடத்திலிருக்கும் விளக்குச்சுடர் எவ்வாறு அசையாமல் இருக்குமோ அதைப் போல பரமாத்மாவை நினைத்துத் தியானத்தில் ஈடுபடுகின்ற யோகியின் வெற்றி கொள்ளப்பட்ட மனம் இருக்கும்". (கீதை, சுலோகம் 19, அத்தியாயம் 6) முற்றிலும் தன்வசப்பட்டுள்ள உள்ளம் எப்போது பரமாத்மாவிடமே நன்கு நிலை பெற்றிருக்கின்றதோ அப்போது அனைத்துப் போகங்களிலிருந்தும் பற்று நீங்கிய மனிதன் யோகத்தில் முதிர்ந்த நிலைமை பெற்றவனாகின்றான். (கீதை, சுலோகம் 18, அத்தியாயம் 6) தட்ப வெட்பம், இன்ப துன்பம், மான அவமானம் ஆகியவற்றில் எவனுடைய மன நிலை மிகவும் அமைதியாக இருக்கின்றதோ தன்னை அடக்கி வெற்றி கொண்ட அந்த மனிதனின் ஞானத்தில் சத்சித் ஆனந்த மயமான பரமாத்மா நன்கு நிலைத்து நிற்கிறது. (கீதை, சுலோகம் 7, அத்தியாயம் 6)

பக்தி

> இறைவனிடத்தில் அன்பு செலுத்துதலே பக்தியாகும். தனித்த அறஒழுக்கத்திற்கும் அறிவால் பெறும் உறுதிக்கும் மேலாக அனுபூதி தரும் உணர்வு நிலை, பக்தி நிலை ஆகும். கீதை பக்தி பற்றிப் பல கருத்துக்களை உபதேசிக்கின்றது. பக்தி அல்லது தியாகம் பற்றற்ற கருமத்தைக் கடவுளுக்குச் செய்யக் கூட்டிச் செல்கின்றது. பலன் கருதாத பக்தியும் நல்ல ஞானமும் உடையவனே சிறந்த பக்தனாக முடியும். தன்னை முழுமையாக இழந்து இறை மீது உறுதி வைப்போர்க்கு உறுதியான கடவுள் பேறு கிடைக்கிறது. ஆன்மீக மேம்பாட்டிற்காகப் பகவானை அடைவதற்குச் சாதனை புரியும் எந்தமனிதனும் தாழ்நிலை அடைவதில்லை. அவன் இங்கு மட்டுமல்லாது மேலுலகிலும் பெருமையுறுகின்றான். (கீதை, சுலோகம் 40, அத்தியாயம் 6)

முக்தி

ஜீவாத்மா பரமாத்மாவுடன் இணைவது முக்தி. ஆன்மாதனக்குஅந்நியமானவற்றோடு தன்னை ஒன்றுபடுத்துவதாலேயே அது துன்பமுறுகிறது. அந்தத் துன்பத்தினை ஞானத்தால் வெல்ல முடியும். ஞானம் பெற ஆத்மா பிரம்மா ஒன்றிப்பு ஏற்படும். இதுவே முக்தி. இது விதேக முக்தி (தேகம் நீங்கிய பின் ஏற்படுவது) ஜீவன் முக்தி (உடலோடு இருக்கும் போதே பெறப்படுவது) இவ்வாறு இரு வகை நிலைகளையும் கீதை ஒத்துக்கொள்கிறது.

கீதை இறப்புப் பற்றிய சிந்தனைகளைத் தெளிவுபடுத்துவதில் முக்கியத்துவம் பெறுகின்றது. கீதையின் இரண்டாம் அத்தியாயத்தில் கிருஷ்ணபரமாத்மா உபதேசிக்கும் கருத்துக்களும் இறப்பினையும் அதற்குப் பின்னுள்ள நிலையினையும் தெளிவுபடுத்துகின்றது. மரணம் என்பது உயிரைப் பற்றியதல்ல. உடலுக்குத்தான் மரணம் ஏற்படுகின்றது. உயிர் எனப்படும் ஆன்மா அழிவில்லாதது. உடலுக்கு அழிவு திண்ணமாக ஏற்படுகின்றது. இளமை, முதுமை என்ற நிலை

களைப் போல மரணம் என்பதும் ஒரு நிலையே ஆகும். இதனை எண்ணிப் பார்க்கும் அறிவாளி சாக்காட்டினைக் கண்டு வருத்தப்படமாட்டான். இவ்வாறு இறப்பு, இறவாமை பற்றி பகவான் உபதேசிக்குமிடத்து உடலுக்கு ஏற்படும் மரணம் ஆன்மாவின் முன்னேற்றத்திற்கு ஒரு நிலையாகும் என்பது தெளிவாகின்றது.

மரணபயத்தை நீக்கும் வகையிலும் கீதையில் உபதேசிக்கப்படுகின்றமை கவனித்தற்குரியது. பயத்தை நீக்குவதே தத்துவ அறிவின் முதல் நோக்கம். 'கர்ம யோகத்தினை ஓரளவு கடைப்பிடித்தாலும் சம்சாரச்சூழல் எனும் பேரச்சத்தியிலிருந்து உன்னைக் காப்பாற்றிவிடும்' என்ற உபதேசமும் குறிப்பிடத்தக்கது. 'பயமற்ற பெருநிலையே மோட்சம்' எனப் பிருகதாரண்யக உபநிடதம் கூறுகின்றது.

"நாமார்க்கும் குடியல்லோம்
நமனையஞ்சோம்
நரகத்திலிடர்ப்படோம்"

என நாவுக்கரசர் கூறுவதும் பயநீக்கம் கருதியேயாகும். பிறப்பினின்றும் விடுதலை பெறக் கீதை கூறும் பிறிதோர் வழியும் இங்கு குறிப்பிடத்தக்கது. அது கர்மயோகத்தினைப் பின்பற்றி ஒருவன் கர்மசந்நியாசியாக வாழவேண்டுமென்பதை வற்புறுத்துகின்றது. கருமத்தின் பயனாகவே புண்ணியமும் பாவமும் தொடர்கின்றன. இவற்றின் காரணமாகவே மனிதன் பிறப்பு இறப்பு என்னும் சம்சார பந்தத்தில் சிக்கி அல்லற்படுகின்றான். இத்துயரிலிருந்து மீள்வதற்காகவே கரும யோகத்தின் சிறப்பு வற்புறுத்தப்படுகின்றது. சாதாரண கருமத்திற்குப் புண்ணிய பாவமெனும் தளைகள் உண்டு. பலனில் ஆசை வைக்காமல் செய்யப்படும் கருமத்திற்கு தளைகள் கிடையாது. பயன் கருதாமலே கருமத்தைச் செய்யும் சாதகனுக்கு எவ்வித தளைகளும் விலகிப் போவதால் சம்சாரத்தில் துன்புறும் அவலநிலை ஏற்படுவதில்லை. இறுதியில் அவன் இறைவனடி சேர்வான். கருமப் பலதியாகத்திற்கு ஒருவன் பற்றற்ற உள்ளம் கொண்டவனாகவும் இருத்தல் அவசியம். இன்பத்திலும் துன்பத்திலும் மாறாத தன்மையுடையவனே கருமயோகி எனக்கீதை காட்டுகிறது. இவனே ஆசையை அகற்றியவன் எனவும் அது கூறும். இன்ப துன்பங்களை ஒப்ப நோக்குதல் இருவினையொப்பாகும். இந்நிலையைப் பெரியபுராணம்

"கேடும் ஆக்கமும் கெட்டதிருவினார்
ஓடும் செம்பொன்னும் ஒக்கவே
நோக்குவார்"

எனச் சிறப்பிக்கின்றது.

மனநிலை பண்படைவதற்குக் கருமயோகம் துணைநிற்கின்றது. 'கடமையைச் செய் பலனை எதிர்பாராதே' என்ற கீதை உபதேசத்தில் உயர்ந்த தத்துவப்பொருள் அடங்கியுள்ளமை உணரற்பாலது. இத்தகைய உபதேசங்கள் ஆஸ்திகரின் உள்ளத்தில் எழும் மரணபயத்தினை நீக்குவதற்கு அருமருந்தெனத் துணைபுரிந்து வந்துள்ளமை கவனிக்கத்தக்கது.

கீதையின் உள்ளடக்கம்

சமுதாயத்தின் ஒட்டுமொத்த நலனுக்காகத் தனிமனிதன் தன்னை முழுமையாக ஒப்படைக்க வேண்டும் என்பதே கீதையின் சாரம்சமாகும். அதன் பதினெட்டு அத்தியாயத்தில் அமைந்த எழுநூறு சுலோகங்களும் இதன் விரிவுரைகளே ஆகும். இவ்வாறு ஒப்படைப்பதற்கு அமைய வேண்டிய மனப்பக்குவம் என்ற வகையிலே கீதை பலனில் பற்றுவைக்க செயல்திறன், செயலில் துறவு என்பது பற்றிக் கூறுகிறது. இவ்வாறான பற்றின்மை செயலாக்கத்தைப் பாதிக்கலாகாது என்பதனைச் சுட்டுவதற்காகக் கடமையுணர்வு வற்புறுத்தப்

படுகின்றது. கடமையில் உணர்வு பூர்வமாக ஈடுபடுவதற்காக இந்நூல் தியானம், பக்தி ஆகிய அணுகுமுறைகளை முன்வைக்கின்றது.

> இன்பம் துன்பம் லாபம் நஷ்டம் வெற்றி தோல்வி என்பவற்றைச் சமமாக கருதிச் செயற்படு (போர் செய்) இதனால் உனக்குப் பாவம் அணுகாது (கீதை, சுலோகம் 35, அத்தியாயம் 2)

செயலாற்றுவதில் மட்டுமே உனக்கு அதிகாரம் உளது

அதன் விளைவில் அல்ல (கீதை, சுலோகம் 47, அத்தியாயம் 2)

> எல்லாத் தருமங்களையும் துறந்துவிட்டு என்னை மட்டும் சரணடைக. நான் உன்னை எல்லாப் பாவங்களினின்றும் விடுவிப்பேன், வருந்தற்க (கீதை, சுலோகம் 66, அத்தியாயம் 8)

என்பவை கீதையின் உயிர் நிலைகள்.

குருஷேத்திரப் போரில் பாண்டவ கௌரவ அணிகளுக்கிடையில் போர் மூளவிருந்த சூழலில் அர்ச்சுனன் உறவுசார் உணர்வுகளாற் பாதிக்கப்பட்டு மனச்சோர்வு அடைகின்றான். இந்நிலையில் சாரதியான கண்ணன் அவனது மனச்சோர்வுக்கான அடிப்படைகளை அகற்றும் வகையில் புத்தி புகட்டுகிறான். தனது தெய்வீகக் காட்சியை வழங்கி அதன்மூலம் அவனைப் போருக்கு நெறிப்படுத்துகிறான். இந்நிலையில் சோர்வகன்ற அர்ச்சுனன் கண்ணன் சொற்படி செயற்பட ஆயத்தமாகிறான். கீதையின் முதலாவது இயல் "அர்ச்சுன விஷாத யோகம்" அர்ச்சுனனுக்கு ஏற்பட்ட மனத்துயரை எடுத்துக் காட்டுகிறது. திருதராஷ்டிர மன்னன் கேட்டுக் கொண்டபடி போர்க்கள நிகழ்ச்சிகளை சஞ்சயர் நேர்முக வர்ணனையாக எடுத்துக்கூறும் உத்தியில் கீதையின் தொடக்கம் அமைந்துள்ளது. இறுதி இயலின் முடிவுரையும் சஞ்சயர் கூற்றாகவே அமைந்துள்ளது. போர்க்களத்தில் தன்னால் எதிர்க்கப்பட வேண்டிய கௌரவப் படையை நோக்கிய அர்ச்சுனனுக்கு அதில் தனது உறவினர்களும் நண்பர்களும் வணக்கத்திற்குரியவர்களும் இருப்பதைக் காணும் போது பாசபந்த உணர்வுகள் பாதிக்கின்றன.

இரண்டாவது இயல் 'சாங்கிய யோகம்' ஆகும். சாங்கியம் என்பது நிறைஞானம் எனப் பொருள்படும். அர்ச்சுனனின் மனக்குழப்பத்திற்கு அடிப்படையான அறியாமையை அகற்றி அவனை அறிஞனாக்கும் முயற்சி இதுவாகும். எழுபத்தியிரண்டு சுலோகங்களில் நீண்டமைந்த இந்த இயலில் முதலில் கண்ணன் அர்ச்சுனனுடைய கோழைத் தனத்தைக் கண்டிக்கிறான். பின்னர் 'அழியாப் பொருளாகிய உயிருக்காகவோ அன்றேல் அழியும் பொருளாகிய உடலுக்காகவோ கவலை கொள்வது அறிவீனம்' என்கிறான். பின்னர் இன்பம் துன்பம் முதலியற்றைச் சமமாக நோக்க வேண்டுமென அறிவுறுத்துகிறான்.

மூன்றாவது இயல் 'கர்மயோகம்' பற்றியதாக அமைகின்றது. இதனை அடுத்து ஞானகர்ம சந்நியாசயோகம், சந்நியாசயோகம் எனும் இரு இயல்களில் இடம்பெறுகின்றன. இவற்றின் சாரம்சம் பின்வருமாறு அமைகின்றது.

> 'அறிவுநிலை முற்றறிவினர்க்கு உரியது. அர்ச்சுனன் அந்நிலையினன் அல்லன். அவன் செயலாற்ற வேண்டிய நிலையினன். அதனை அவன் துறந்து விலகமுடியாது. அப்படித் துறப்பது பயனும் தராது. ஒருகணப் பொழுதும் எவரும் செயலாற்றாதிருக்கவும் முடியாது. எனவே செயல்புரிய

வேண்டும். அதனைப் பற்றின்றிப் புரியவேண்டும். அப்பற்றின்மையே செயற்பலனில் இருந்து அவனைப் பாதுகாப்பது. எனவே செயலாற்ற வேண்டிய நிலையில் உள்ள ஒருவன் அச்செயலைத் துறப்பதை விட, பற்றற்ற நிலையில் அதனைப் புரிவதே மேலானதும் செய்யத்தக்கதுமாகும்'.

இவ்வாறு செயல்புரியும் நிலையில் பற்றின்றி இருப்பதற்கான வழிகாட்டு நெறிமுறைகளை ஆறாவதான 'தியான யோகம்' கூறுகிறது. புலனடக்கம், மனவடக்கம், அறிவினாலும் அனுபவத்தினாலும் திருப்தி அடைதல் ஆகியவற்றின் மூலம் இறைவனைச் சரணடைதல் என்பன இவ்வியலில் விரித்துரைக்கப்பட்டுள்ளன.

இதனை அடுத்து சரணடைவதற்குப் புகலிடமாக உள்ள இறைவனது பரம் பொருள் நிலை சரணடைவதற்கன அணுகுமுறைகள் என்பவற்றின் விளக்கங்களாக ஏழு தொடக்கம் பன்னிரண்டு வரையிலான இயல்கள் அமைகின்றன. இவற்றில் முதல் நான்கு இயல்களும் கண்ண பரமாத்மாவின் பெருநிலை பற்றிப் பேசுவன. உலகின் அனைத்துப் பொருட்களுக்கும் அவனே தோற்றக் காரணமாகவும் ஒழுக்கப் புகலிடமாகவும் உளன் என்பதை இவ்வியல்கள் விரித்துரைக்கின்றன. இவ்வாறு கண்ணன் தன் வாய்மொழியாகக் கூறியவற்றை அர்ச்சுனனின் கட்புலனுக்கு உணர்த்தும் வகையில் தனது ஒப்பற்ற திருப்பெருவடிவைக் காட்டுகிறான். இதனை பதினொராம் இயலான விஷ்வரூப தரிசனத்தில் காணலாம். இத்தகு இறைவனைச் சரணடைவதற்கான வழி என்ற வகையில் பக்திநெறி பற்றி பன்னிரண்டாம் இயலான பக்தியோகம் கூறுகிறது. இவ்வகையில் மேற்படி இயல்களில் கூறப்பட்ட விடயங்களுக்கு மேலும் விளக்கம் தரும் பொருட்டும் அர்ச்சுனனுக்கு தொடர்ந்து எழுந்த ஐயங்களைக்களை யும் பொருட்டும் கண்ணன் தரும் விரிவுரைகளாகவே பதின்மூன்று முதல் பதினெட்டு வரையான இயல்கள் விளங்குகின்றன. பதின்மூன்றாவது இயல் உடலுக்கும் உயிருக்கும் உள்ள தொடர்பைப் பேசுகிறது. பதினான்காம் இயல் முக்குண இயல்புகளை விவரிக்கிறது. பதினைந்தாம் இயலில் பிரபஞ்சம், மூலப்பிரகிருதி என்பவற்றிலிருந்து விடுபட்டநிலையிலுள்ள புருசோத்தமனாகிய தனது இயல்பைக் கண்ணன் கூறுகிறான். பதினாறாவது இயலில் தெய்வசம்பத்து, அஸ்/ரசம்பத்து என்னும் பெயர்களில் நல்லோரியல்பு, தீயோரியல்பு என்பவற்றை வேறுபடுத்தி விவரிக்கின்றது. பதினேழாவது இயல் முக்குணங்களுடன் செயற்படுவோரின் இயல்பினைக் கூறுகிறது. நன்னெறியைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பது இவ்வியல் கூறும் கருத்தாகும். இறுதி இயலான 'மோக்ஷசன்யாச யோகம்' என்னிடம் உன்னை முழுமையாக ஒப்படைத்துவிடு என்ற சரணாகதித் தத்துவத்தைக் குறிப்பிடுகிறது. இவ்வாறு கூறும் கண்ணன் கீதையானது தகுதிவாய்ந்தோர்க்கு உபதேசிக்கத்தக்கது என்று கூறி போதனையை நிறைவு செய்கிறார் *(சுப்பிரமணியன்.நா, : 1996 : 49)*

திருக்குறள் கூறும் அறவியல் சிந்தனைகள்-அறிமுகம்

திருவள்ளுவர் தமிழ்நாட்டில் தோன்றியருளிய சான்றோர்களுள் தலைசிறந்தவர். இவர் அருளிச் செய்த திருக்குறளின் கருத்துக்களையும், சொற்பொருளையும் அவருக்குப் பின்வந்த சான்றோர்கள் அனைவரும் மிகவும் வியந்து போற்றியதுடன் அக்கருத்துக்களைத் தழுவியும் உள்ளனர். நாயன்மார்களும் ஆழ்வார்களும் வள்ளுவரின் கருத்துக்களை ஆங்காங்கு

தத்தம் பாடல்களில் போற்றியுள்ளனர். திருவள்ளுவர் சிறந்த பெருங்கவிஞர், ஒப்புயர்வற்ற நீதி நூலாசிரியர். மிகச்சிறந்த தத்துவஞானி. இலக்கியப் பேராசிரியர். அரசியல் நுண்ணறிஞர். பொருளியல் மேதை. பல்கலைக் குரிசில். உலகுக்கே ஒரு பெரும் வழிகாட்டி. காலமும் இடமும் கடந்து, சாலவும் நிலை பெற்று, ஞாலமே புகழ்ந்து வியக்கும் திருக்குறள் என்னும் செந்தமிழ் அறநெறிப் பெருநூலை இயற்றி அளித்த பெருவள்ளல். பழமைக்குப் பழமையாகவும், புதுமைக்கும் புதுமையாகவும் அவர்தம் அருளுரைகள் அமைந்து விளங்குகின்றன.

உலகப்பெரும் சமயத்தலைவர்களும் சான்றோர்களும் கூறியுள்ள கருத்துக்கள் யாவும் திருக்குறளில் செறிந்து கிடக்கின்றது. வள்ளுவர் அனைத்துச் சமயத்தவரும் ஒப்பும் உண்மைகளை நடுநிலை பிறழாமல் விளக்கியுள்ளார். 'தொட்டனைத் தூறும் மணற்கேணி போலக் கற்றனைத் தூறும் அறக்கருத்துக்கள் பலவற்றை உடையதாக விளங்குகின்றது. ஒரு நாடு, ஒரு காலம், ஒரு மொழி, ஓர் இனம் என்பற்றிற்கே உரியதாகிவிடாமல், எல்லாக் காலமும், எல்லா நாடும், மொழியும், இனமும் என்பவற்றைச் சேர்ந்த மக்கள் அனைவருக்குமே உரிய மாபெரும் பொது மறை நூலாகத் திருக்குறள் திகழ்கின்றது. வாழ்க்கையின் பலதிறக் கூறுகளையும் ஒருசேர முன்னொடு பின்முரண்படாமல் விளக்கும் திருக்குறளுக்கு இணையாக வேறெந்த நூலும் இல்லை எனக்கூறலாம். இல்லறத்தான், துறவறத்தான், அரசன், அமைச்சன், நண்பன், பகைவன், போர்வீரன், கற்றான், கல்லான், கள்ளுண்பான், சூதாடுவான், ஆண், பெண், முதலிய அனைவருக்குமே அறிவுரைகள் கூறும் அளப்பரிய சமுதாயப் பெருநூலாகத் திருக்குறள் சிறந்து விளங்குகின்றது. அறம், பொருள், இன்பம் என்னும் முப்பெரும் பொருளையும் உள்ளடக்கிக் குறைவிலா நிறைவாய் விளக்கும் வகையில் திருவள்ளுவருக்கு நிகர் எவருமில்லை. இவர் இற்றைக்கு ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவர் என்பது இன்று அறிஞர் பலரும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

திருக்குறளின் அமைப்புமுறை

அறமே திருக்குறளின் உயிர்நாடியாகும். அதனை மையமாகக் கொண்டே ஏனைய கருத்துக்கள் யாவும் கூறப்பட்டுள்ளன. ஒரு பண்பட்ட உயர்ந்த வாழ்வியலைக் கட்டியமைத்துக் காட்டும் முயற்சியாகத் திருக்குறள் அமைந்துள்ளது. தனிமனித நிலை, குடும்பநிலை, உறவினர்நிலை, சமூக உறுப்பினர்கள்நிலை, நாட்டுக்குடிமக்கள் நிலை ஆகிய தளங்களில் ஒருவர் பேணிக்கொள்ள வேண்டிய பண்புகள், ஆற்றவேண்டிய கடமைகள், பெறவேண்டிய அனுபவங்கள் ஆகியபல்வேறு கூறுகளையும் ஒருங்கு திரட்டி ஒழுங்கமைத்துள்ளதன் மூலம் ஒரு முழுமையான வாழ்வியலை அது முன்வைத்துள்ளது. மனித வாழ்க்கையின் முப்பெரும் பேறுகளைத் திருக்குறள் தெளிவுறுத்துகிறது. அறத்தின் மாட்சியை விளக்குவது அறத்துப்பால். அதில் அறவியல் பயன்மதிப்புகள் நன்கு விளக்கப்படுகின்றன. பொருளின் சிறப்பையும் அதை ஈட்டிக் காத்து வகுத்து வழங்கும் முறைகளையும் இரண்டாம் பகுதியாகிய பொருட்பால் எடுத்துரைக்கிறது. அதில் சமூகவியல் சார்ந்த அரசியல் நெறிமுறைகள் விரித்துரைக்கப் பட்டுள்ளன. காமத்துப்பால் குடும்பவாழ்வின் ஒரு கூறாகிய ஆண்-பெண் உறவுநிலை, திருமணத்துக்கு முன்னும் பின்னுமான காதல்நிலை பற்றிக் கூறுகிறது. மனித வாழ்க்கையின் உளவியல் பயன்மதிப்புக்களை அது தெளிவுறுத்துகிறது. நான்காவதாகிய வீடுபேற்றினைத் திருவள்ளுவர் தனியே

எடுத்துரைக்கவில்லை. அதனைப் பற்றி அறிஞர் இன்றும் ஆராய்ந்து வருகின்றனர். முப்பாலிலேயே நாற்பாலினையும் அடக்கியுள்ளதாகக் கூறுவர். (திருநாவுக்கரசு.க.த, (1979) சான்றோர் கண்ட திருவள்ளுவர், ப.9) இவை தவிர கடவுள், மழை, ஊழ், கல்வி, மருந்து முதலியன தொடர்பாகவும் திருக்குறள் விளக்குகின்றது.

அறவியல் பற்றிக் கூறும் விரிவான நூல், இதனைத் தவிர தமிழில் வேறொன்றும் இல்லை. 1330 அருங்குறட்பாக்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. 133 அதிகாரங்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. ஒவ்வோர் அதிகாரத்திலும் பத்துக் குறட்பாக்கள் உள்ளன. குடும்ப வாழ்க்கையாயினும், துறவு வாழ்க்கையாயினும் சிறந்த முறையில் வாழ்க்கையை நடத்துவதற்குரிய வழிவகைகளை 33 அதிகாரங்களில் அறத்துப்பால் வகுத்துக் கூறுகிறது. ஆட்சிக் கலையையும் பொருளாதாரப் பயன் மதிப்புக்களையும் 70 அதிகாரங்களில் பொருட்பால் விரித்துரைக்கிறது. மூன்றாவது பகுதியான காமத்துப்பால் 25 அதிகாரங்களில் காதல் வாழ்க்கையின் பல்வேறு இயல்புகளையும் புலன்நுகர் இன்பத்தின் பெற்றியையும் எடுத்துரைக்கிறது. இம்முவகைப் பேறுகளையும் ஒருங்கிணைத்து வாழ்வாங்கு வாழ்பவர், வீடு பேற்றை அடையமுடியும் என்பதைத் திருக்குறள் அறிவுறுத்துகிறது. இவ்வகையில் அது வாழ்க்கைக்கு இலக்கணங் கூறும் வாழ்வியல் நூலாக விளங்குகிறது. வள்ளுவர் வகுத்துள்ள வாழ்க்கைத் தத்துவம் செயல்முறைக்கு உகந்ததாய், நடைமுறை வாழ்க்கைக்கு ஏற்றதாய் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

திருக்குறள் கூறும் வாழ்வியல் சிந்தனைகள்

குறளில் முன்வைக்கப்பட்டுள்ள அனைத்து சிந்தனைகளுக்கும் அடிப்படைகளாக அமைந்தவை அன்பு, அறம் என்பனவாகும். இவற்றின் அடிப்படையிலமைந்த செயல்திறனும் ஒழுக்க நெறிகளுமே குறளில் பரந்து செறிந்து காணப்படும் விழுமியங்களாகும். அன்புடைமை எனும் அதிகாரம் அன்பின் பெருமை, இன்றியமையாமை முதலியவற்றைப் பேசுகிறது. அன்பின் அடிப்படையான உணர்வுநிலையைத் திருக்குறள் உணர்த்தியுள்ளது. இதனை,

'அன்பிலார் எல்லாந் தமக்குரியர்
அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு' (குறள்:72)

என்ற திருக்குறள் விளக்குகிறது. ஒருவர் தம்மை மற்றவர்களுக்காகப் பயன்படுத்தும் நோக்கிற்கு அடிப்படையான உணர்வு நிலை அது என்பது இக்குறளில் புலப்படுத்தப்பட்டுள்ளது. அன்பின் இன்றியமையாமையை

'அன்பின் வழிய துயிர்நிலை
யஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு' (குறள்:80)

என்ற திருக்குறள் சுட்டுகிறது. அன்பில்லாத வரது உடல் வெறும் சடப்பொருளே என்பது இதன் பொருளாகும்.

அன்பு என்பது தான் என்ற தனித்த எண்ணத்தைத் துறந்து, பகுத்தல் இயலாத இயற்கையனைத்தோடும் எம் உயிரை மீண்டும் இசையச் செய்வதே ஆகும். (சண்முக சுப்பிரமணியம், திருக்குறள் கூறும் இறைநெறி, ப.110) மனிதநேய மாளிகையின் முகப்பு அன்பு. அன்புடைமை மனிதநேய மலரின் முழுவடிவமாகும். அன்பின் வெளிப்பாடே கண்ணீர்த் துளிகளாகும். (குறள்:71) அன்புடையோர் எல்லோர்க்கும் சொந்தமாவார். (குறள்:72) இவ்வுலக வாழ்வே அன்பு கொண்டு வாழ்வதற்கே படைக்கப்பட்டது ஆகும். (குறள்:73) அன்பு நட்பைப் பெருக்கும். (குறள்:74) அன்பு ஒருவரை ஒருவர் விரும்புகின்ற

ஆசையை உண்டாக்குகிறது. அன்புடன் நடப்பவர்களின் உடம்பில் உயிர் உள்ளது என்கிறார் பி.எல்முத்தையா. (முத்தையா. பி.எல்(1991) திருக்குறள் முத்துக்கள், சென்னை, ப.10) அன்பின் வழியாகவே எல்லா இன்பமும் பெறமுடியும். (குறள்:75) அன்பில்லாத மனிதனை அறம் வருத்தும் (குறள்:77) வாழ்க்கை மலர அன்பு வேண்டும் (குறள்:78) உள்ளத்தில் அன்பு வேண்டும் (குறள்:79) உயிர் என்று ஒன்று இருந்தால் அன்பு என்று ஒன்று நிச்சயமாக இருக்கும். (குறள்:80)

அன்புடைமை பற்றிய வள்ளுவரின் கருத்துக்கள் மாணிக்கக் கற்களாகும். அந்தக் கற்களினால் கட்டப்பட்ட மாளிகையின் உட்கூடுதான் அன்புடைமையின் மறுவடிவ மான மனிதநேயமாகும். அதுவே இந்நூலுக்குப் பெருமையாகும். இதனை நன்னெறி, இன்னிலை, முதுமொழிக்காஞ்சி முதலான நூல்களும் எழிலோடு சுட்டிக் காட்டுகின்றன. இவ்வாறு அன்புடைமை அதிகாரத்தில் சுட்டியுணர்த்தப்பட்ட அன்பின் பன்முக விளக்கங்களாகவே இல்வாழ்க்கை, இனியவை கூறல், அருளுடைமை, கொல்லாமை, செங்கோன்மை, கண்ணோட்டம், நட்பு, சான்றாண்மை முதலிய பல அதிகாரங்கள் அமைந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. காமத்துப்பால் முழுவதும் அன்புநிலையையே பேசுகின்றது.

அறன்வலியுத்தல்

அறம் என்பது எண்ணம், சொல், செயல் ஆகிய மூன்றும் சேர்ந்த ஒன்றாகவே காட்சி தருகிறது. 'அறம் இம்மூன்றையும் கொண்ட முப்பட்டைக் கண்ணாடியாகும்' என்கிறார் சரளாஇராசகோபாலன். (இராசகோபாலன் சரளா : 1992 : 95) அறம் சிறப்பை, செல்வத்தை நல்கும். அறம் மனிதநேயத்தின் இதயமாகும். பொறாமை, பேராசை, சீற்றம், துன்பம் தரும் பேச்சு ஆகிய நான்கையும் தவிர்த்து வாழ்வதே அறவாழ்வாகும். மனிதநேய வாழ்வாகும். (குறள்:35) அறம் இறக்கும் போதும் துணை செய்யும். ஒவ்வொரு நாளும் அறம் செய்தல் வேண்டும். அதுவே மனிதநேய வாழ்விற்கும் படிக்கல்லாகும். அறத்தின் வழியாக வரும் இன்பம் உண்மையான இன்பமாகும். (குறள்:39) வாழ்வில் கொள்ளத்தக்கது அறம். (குறள்:40) இவ்வாறு வள்ளுவர் அறம் என்று கூறுவது மனித நேயத்தின் இதயமே எனக்கூறலாம்.

'அறன் வலியுறுத்தல்' என்ற அதிகாரத்திலே அறம் என்பதற்கான சுருக்கமான வரைவிலக்கணம் கூறப்படுகிறது.

'மனத்துக்கண் மாசிலன் ஆதல்
அனைத்தறன்
ஆகுல நீர பிற' (குறள்:34)

மனதில் மாசற்ற அழுக்கற்ற நிலை அறம் என இத்திருக்குறள் சுட்டுகிறது. இங்கு மாசு என்பது சுயநலம், பொய்ம்மை என்பவற்றைக் குறித்து நிற்பது தெளிவு. எனவே அறம் என்பது பொதுநலத்தையும் உண்மையையும் சார்ந்த நிலை என்பது உய்த்துணரப்படும். இந்நிலையே இன்பத்திற்கு ஒரே அடிப்படை என்பதை,

'அறத்தான் வருவதே இன்பம்
மற்றெல்லாம் புறத்த புகழும் இல'
(குறள்:39)

எனவரும் திருக்குறள் அறுவுறுத்துகிறது. திருக்குறளின் ஒரு பகுதி அறத்துப்பால் என வழங்கப்படும் நிலையானது அறம் பெற்றுள்ள முக்கியத்துவத்தை உணர்த்துவதாகும். திருக்குறள் முழுமைக்குமே 'அறம்' என ஒரு பெயரும் வழக்கில் உள்ளது என அறிஞர் சுட்டுவர். (மதுரை இளங்குமரனார், திருக்குறள் வாழ்வியல் உரை, ப.13)

அறம் உள்ளூறு பயன் மதிப்பினை உடையது. எனவே அது கருவியன்று.

அதுவே இலட்சியமாகும். அறத்தைப் பற்றிய ஆராய்ச்சியில் வள்ளுவர் இத்தகைய இலட்சிய நோக்கு உடையவராக இருந்துள்ளார் என்பதை ஆல்பர்ட் சுவைட்சர் சுட்டிக்காட்டியுள்ளார். (திருநாவுக்கரசு.க.த : 1978: 87) இவ்வாறான அறவாழ்வை தமிழ் இலக்கிய நூல்களான நாலடியார், வெற்றிவேற்கை, பழமொழி, திரிகடுகம், இன்னிலை, அறநெறிச்சாரம், நன்னெறி, இனியவை நாற்பது, ஆத்திசூடி மற்றும் உலகநீதி என்பவை வலியுறுத்திக் கூறுவதைக் காணலாம். அறவாழ்வு மனிதநேய வாழ்வே எனக்கொண்டு உறுதிபூண்டு வாழ்வதை இந்நூல்கள் பெரிதும் போற்றுகின்றன. இதனால் அறமே மனிதநேயம், மனிதநேயமே அறம் என்ற வாழ்வியல் தத்துவத்தைத் திருக்குறள் வலியுறுத்துவதை அவதானிக்கமுடிகின்றது.

இல்வாழ்க்கை

இல்வாழ்க்கை, துறவு என இரு வாழ்வியல் நிலைகள் குறளிற் பேசப்பட்டுள்ளன. இல்வாழ்க்கையின் முக்கிய கூறுகளாக வாழ்க்கைத்துணை, மக்கட்பேறு என்பன சுட்டப்பட்டுள்ளன. அன்புடைமை, இன்சொல், விருந்தோம்பல், செய்ந்நன்றியறிதல், நடுவுநிலை, பிறனில் விழையாமை முதலிய பண்புகளும் உயர்ஒழுக்கநெறிகளும் இல்வாழ்வுக்குரிய இன்றியமையாத அடிப்படைகளாகக் குறளில் விரித்துரைக்கப்பட்டுள்ளன. சுருங்கக் கூறின் ஒருவர் தம்மளவில் உலகியல் அனுபவங்களை நிறைவாகத் துய்ப்பதோடு, தம்மைச் சார்ந்த குடும்பம், சமூகம் என்பவற்றையும் நிறைவாழ்வு வாழவைக்கக்கூடிய நிலையாக இல்வாழ்க்கை குறளில் விளக்கம் பெறுகிறது. இல்வாழ்வின் நிறைவாக 'புகழ்' சுட்டப்பட்டுள்ளது.

இல்வாழ்க்கையின் நல்ல வழியில் நடக்கத் தலைவன் முற்படுதல் வேணடும் எனச்சுட்டப்படுகிறது. (குறள்:41) இங்கு நல்ல வழி என்பது மனிதநேய வழியாகும். சமுதாயப் பழிக்கு அஞ்சுதல் வேண்டும் எனவும் (குறள்:44) குடும்பவாழ்வில் அன்பும் அறமும் நிறைந்து வருவது பண்பும் பயனும் ஆகும். (குறள்:45) எனவும் வள்ளுவர் கூறுகிறார். அறவழியில் குடும்பத்தை நடத்தினால் வேறு சிந்தனையில் பெறவேண்டியது எதுவுமில்லை (குறள்:46) இயல்பாக அறத்தையே வாழ்வாகக் கொள்பவர் சிறந்தவர் ஆவார். (குறள்:47) 'தானும் நல்வழியில் வாழ்ந்து, பிறரையும் நல்வழியில் வாழவைப்பது' துறவு வாழ்வை விடச்சிறந்தது எனக்குறிப்பிட்டுக் காட்டுகிறார். (குறள்:48) அப்படிப்பட்ட துறவு வாழ்வை அறத்தால் பெறுவது எளிதாகும். அறம் என்றால் அது குடும்பவாழ்வாகும் (குறள்:49) மண்ணுலகில் வாழவேண்டிய முறைப்படி வாழ்பவன் விண்ணுலகில் தெய்வமாக மதிக்கப்படுவான் (குறள்:50) இவ்வாறு குடும்பவாழ்வையும் துறவு வாழ்க்கைக்கு இணையாக வைத்துப் போற்றியவர் வள்ளுவர். 'இல்லறமல்லது நல்லறமன்று' எனக்கொன்றைவேந்தனும் கணவரைப் பெறுவதிலும் அறத்தை அறிந்த கணவனைப் பெறவேண்டும் (குறள்:58) என வள்ளுவரும் கூறுவது இங்கு சிந்திக்கத்தக்கது. நல்ல பண்புடைய புதல்வரைப் பெறுதல் ஏழுதலைமுறைக்கும் தீமை வராது, பழி வராது (குறள்:62) எனவும் கூறுதல் சிறப்பானதாகும்.

துறவு

துறவு என்பது உலகியல் பற்றுக்களிலிருந்து விடுபட்டு, 'யான்', 'எனது' என்னும் செருக்கு அற்று, புலன்களை அடக்கியாளும் ஒரு நிலையாக குறளில் சுட்டப்பட்டுள்ளது. அருளுடைமை, நிலையாமை பற்றிய உணர்வு, தவம், கொல்லாமை முதலிய நோன்புகள் துறவு வாழ்வின் முக்கிய

கூறுகளாகச் சுட்டப்பட்டுள்ளன. மெய்யுணர்வு பெற்று அவாவறுக்கும் நிலையில் துறவு வாழ்வு நிறைவு பெறுகிறது. அறத்துப் பாலிலே துறவறவியலாக அமையும் பதின்மூன்று அதிகாரங்கள் தவிர, பாயிரவியலில் அமைந்த 'நீத்தார் பெருமை' என்ற அதிகாரமும் துறவு பற்றிப் பேசுகிறது. இதில் துறவின் பெருமை பேசப்படுகின்றது. செயற்கரிய செய்யும் வல்லோராகவும், நிறைமொழி மாந்தராகவும், உயிர்கள் மாட்டு செந்தண்மை பூணும் அந்தணராகவும் அத்துறவோர் சுட்டப்பட்டுள்ளனர். (லக்ஷ்மணன்.கி.1987, இந்திய தத்துவ ஞானம், பழனியப்பா பிரதர்ஸ் சென்னை.ப.31)

வள்ளுவர் துறவினால் உண்டாகும் நலன்களையும் அழியும் தீமைகளையும் மிகத்துல்லியமாகக் கூறுகிறார். துன்பம் இல்லாமல் இருக்க பற்று நீங்கி வாழ வேண்டும். (குறள்:341) அழியும் பொருட்கள் மீது பற்றில்லாமல் இருப்பதே சிறந்ததாகும். (குறள்:341) நான், எனது என்னும் ஆணவம் விட்டு வாழ்தல் வேண்டும். (குறள்:346) மனஅமைதியோடு வாழ துன்பம் விட்டு விலக வேண்டும். துன்பம் விட்டு விலக பற்றில்லாமல் வாழவேண்டும். (குறள்:347) பகவத்கீதை துறவு பற்றிக் குறிப்பிட்டுள்ள கருத்து இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. 'பொருட்களை நினைப்பதால் பற்று உண்டாகிறது. பற்று ஆசையாகப் பரிணமிக்கிறது. ஆசை சினமாக வடிவெடுக்கிறது. சினத்தால் மனக்குழப்பம் வரும். நினைவு நாசத்தால் புத்தி நாசம் வரும். புத்தி நாசத்தால் ஆள் அழிகிறான்' (கீதை, சுலோகம் 62,63,71)

விருந்தோம்பல்

சிறந்த உள்ளங்கள் பரிசுத்தமானவை. அத்தகையவர்களாலேயே விருந்தினரை அன்புடன் உபசரிக்க முடியும். எனவே தூய உள்ளமும் ஆதரிக்கும் பண்பும் உள்ளவர்கள் இல்லங்களையே திருமகள் நிலையாகக் கொள்கிறாள். (தங்கவயல் லோகிநாதன் (1991), குறளமுதம் பாண்டியன் பதிப்பகம், சென்னை, ப.124) குடும்ப வாழ்வாக வாழ்வது விருந்தினரைப் பேணிப் பாதுகாக்கவே ஆகும். (குறள்:81) விருந்தோம்பல் சமுதாய வேள்வியாகும் (குறள்:87) அதன் பயன் கணக்கில் அடங்காதது. பொருளைப் போற்றி வாழ்வதே விரும்பி வந்தோருக்கு விருந்து படைப்பதாகும். (குறள்:88) விருந்தோம்புதலில் சுற்றம் கூடும். அன்பு பெருகும். நட்பு வளரும். மனிதநேயம் கைகூடும்.

கீதையும் குறளும் ஒப்பீடு

கீதை, திருக்குறள் இரண்டுக்கும் உள்ள பொதுவான அடிப்படைகள் தனித்தனியே நோக்கப்பட்டன. அவை நடைமுறை வாழ்க்கையைச் சார்ந்து நின்று அற ஒழுக்க அடிப்படைகளையும் கடவுட் சிந்தனைகளையும் முன்வைத்தமை குறிப்பிடத்தக்கது. இவ்வகையில் அவை தத்துவப் பார்வைகளாவும் அறநூல்களாகவும் இலக்கியங்களாகவும் விளங்குகின்றன. கீதை வேதமரபின் வாரிசாக நின்று அறம், ஒழுக்கம் என்பவற்றை எடுத்துக்கூறுகின்றது. திருக்குறள் தமிழ் பாரம்பரியத்தின் ஊடாக அதனைச் செயற்படுத்தியது. இறைநம்பிக்கை, சேவைமனப்பான்மை, உலகியல் அனுபவங்களை மதித்து ஏற்றல், அறத்தையும் ஒழுக்கத்தையும் வற்புறுத்தல் என்பனவாக இவை ஒருங்கிணைந்த கூறுகளின் இசைவாக்கம் இந்து தத்துவ வரலாற்றில் தனியிடத்துக்குரியது. இவ் வகையில் இவ்விரு நூல்களும் பதித்துள்ள வரலாற்றுத் தடம் மிக ஆழமானது. இவை இவ்விருநூல்களின் பொதுத்தன்மைகளாகும்.

மேற்படி பொதுத்தன்மைகளுக்குப் புறம்பாக, இவ்விரு நூல்களும் புலப்படுத்தி

நிற்கும் வேறுபாடுகள் பல. கீதை ஒரு சமய நூல் என்ற வகையில் எல்லைப்பட்டு நிற்பது. அது முன்வைத்துள்ள 'சுயநலன் கருதாத செயல்திறன்' என்ற கருத்துநிலை, மக்கள் நலனுக்காகத் தனிமனிதன் தன்னை ஒப்படைக்க வேண்டும் என்றவகையில் அந்நூலில் அமைந்த தொனிப்பொருள் என்பன எவ்வளவு உயர்ந்தவனவாகக் கருதப்படினும் அதன் சமயத்தளம் அதனைப் பொது நூலாகக் கொள்ள முடியாத வகையில் எல்லைப்படுத்திவிடுகிறது. குறளை நோக்கின், அதற்கு இவ்வகையான சமய எல்லை இல்லை. அன்பு, அறம் என்பவற்றை மட்டுமே அது தளமாகக் கொண்டதால் மானிடத்தை நேசிக்கும் எவரும் தம் உடைமையாக உரிமையாக அதனை ஏற்றுக்கொள்ள வாய்ப்பு உள்ளது.

கீதையின் போதனைகள் பொதுநல நோக்கில் கடமையை வற்புறுத்துவன. நான்கு வருணத்தினரும் தத்தமக்கு விதிக்கப்பட்ட கடமைகளை மீறாலாகாது என்பது இதில் வற்புறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (கீதை 3:35, 18:41-47) இன்றைய நோக்கில் கீதையை விமர்சிப்பவர்களுக்கு அதன் இந்த வருணச்சார்பு என்ற நிலை வாய்ப்பானதாக உள்ளது. திருக்குறளை நோக்கினால் அதற்கு இத்தகைய பிரச்சினை இல்லை. அது எழுந்த காலத்தின் நிலவுடைமைச் சூழலின் உழவுத்தொழில், முடியாட்சிக் கட்டமைப்பு என்பவற்றைச் சார்ந்த நூல் எனக்கருதப்படினும் அதன் உள்ளீடு ஒட்டுமொத்தமாகப் பொது மக்கள் நலனாகும் என்பது கவனிக்கத்தக்கது. அறிஞர் ஞானி அவர்கள் முன்வைத்துள்ள திருக்குறள் பற்றிய மதிப்பீடு இங்கு கவனிக்கத்தக்கது.

'வள்ளுவர் நூலில் இன்றைய நிலையிலிருந்து பார்க்கும் போது கடவுள், மேலுலகம், கீழுலகம், அறம், மறம், விதி, மன்னராட்சி, படைவல்லமை, துறவு முதலியவை வள்ளுவரின் கருத்தாக்கத்தில் முக்கிய முனைகளாகத் தோன்றும். இவற்றுக்கு எதிரான போக்கும் நூல் முழுவதும் அழுத்தமாக ஓடுவதைக் காணமுடியும். அறத்தின் பால் வள்ளுவர் கொண்ட பற்று, உண்மை பற்றிய தேட்டம் அற்புதமானது. சமூகத்தில் முரண்பாடுகள் முற்றிய நிலையில் ஒரு சமூகம் மாறி இன்னொரு வகைச் சமூகம் ஆதிக்கம் பெறும் நிலையில் சமூகத்தில் முரண்பாடுகள் மிகுவது இயல்பு. இத்தகைய ஒரு சமூகச் சூழலில் வைத்துப் பார்க்கும் போது, வள்ளுவரின் மக்கட் சார்பை, நீதியிடம் கொண்ட பற்றை, அன்பிடம் கொண்ட நேயத்தை நாம் விளங்கிக் கொள்ள இயலும். இன்றைய நிலையிலும் புறக்கணிக்க முடியாத ஆற்றல் இலக்கியம் வள்ளுவர் நூல்'. (ஞானி, பழனிச்சாமி.கி) 1988, மார்க்சியமும் தமிழ் இலக்கியமும், பக் 14-15)

திருக்குறள் அறம், பொருள், இன்பம் எனும் முப்பொருட்களைச் சுட்டிக் காட்டுகிறது. பல்வேறு இயல்புகளை மனிதன் வாழ்வில் வாழ்வாங்கு வாழ, உலகியல் வாழ்க்கைக்கு வேண்டிய அறங்களைப் போதிக்கும் நூல் பகவத்கீதை. கர்மமார்க்கம், ஞானமார்க்கம், பக்தி மார்க்கம் ஆகிய யோகங்களால் சித்தி பெற்று இறைவனோடு ஒன்றிட ஜீவாத்மா பரமாத்மாவோடு ஒன்றிட முக்தி பெற வழிகாட்டுவது. திருக்குறள் இந்த உலக வாழ்வை நெறிப்படுத்துகிறது. கீதை இவ்வுலக வாழ்வு நிலையற்றது எனப் போதித்து, இந்த உலக வாழ்வை அறியாமை, அவித்தை, மாயை என்றெண்ணி, இறைவன் மட்டுமே உள்பொருள் விவகாரம் என்று நம்பச் செய்து முக்திக்குச் செல்ல பாதை தருவது. திருக்குறள் உடலை, உயிரை, உலகத்தை மெய்யெனக் கொண்டு, இங்கு வாழ்வைப் பற்றி அது அறவாழ்வாக அமைய

வேண்டுவது பற்றிக் கூறுகிறது. கீதை இறைவனைத் தவிர்த்து, ஏனையவை யாவும் அவனின் மாயத்தோற்றம் பிரதிவிம்பம் என மொழிகிறது.

வள்ளுவருக்குக் கடவுள் நம்பிக்கை இருந்தது. பற்றற்றான் பற்றினைப் பற்றுக என்று பாடியவர். பொதுப்படையாகக் கடவுளுக்கு ஒரு கருத்துருவாக்கம் நல்கியவர். ஆனால் கீதை முழுப்பெரும் முதல்கடவுள் கண்ணனே என்று வற்புறுத்துவதுடன் வேறு தெய்வங்களை வணங்குதல் அறியாமை என்ற கருத்தையும் குறிப்பிடுகின்றது. கீதை திருக்குறள் இரண்டுமே கடவுள் பற்றிப் பேசினாலும் நடைமுறை வாழ்க்கையில் கடவுளுக்குரிய இடத்தைத் தீர்மானிப்பதில் அவை தெளிவாக வேறுபடுகின்றன. குறளைப் பொறுத்தவரை கடவுள் என்பது அன்பு, அறம் என்பவற்றுக்குப் பற்றுக் கோடான ஒரு உணர்வு நிலை மட்டுமே. ஆனால் கீதையில் கடவுள் தான் யாவுமே என்ற நிலை காணப்படுகிறது. கடவுளிடம் முழுநிலையில் சரணடைவதையே சகல பிரச்சினைகளுக்குமான தீர்வாக அந்நூல் காட்டுகிறது.

உலகியல் வாழ்க்கையை நியாயப் படுத்திய நூல்களாகக் கீதை, திருக்குறள் இரண்டையும் கருதினாலும் குறளைப் போலக் கீதை வாழ்கையை முழுநிலையில் தரிசிக்கவில்லை. அது குறிப்பிட்ட ஒரு பிரச்சினையை மையப்படுத்தியே தன் பார்வைக்கு எட்டிய வரையில் நோக்கியது. குறளின் பார்வைப்பரப்பு மிகப்பெரியது. கீதையில் ஒருவர் தமக்குரிய கடமை எது எனத்தீர்மானிப்பதற்கான உரிமை வழங்கப்படவில்லை. கண்ணன் சமூகநலத்தின் ஒட்டுமொத்த வடிவாக நின்று கட்டளையிடுகிறான். அர்ச்சுனன் அதனை ஏற்றுக்கொள்கிறான். ஆனால் குறளில் சுயஅறிவைப் பயன்படுத்தித் தனது முடிவுகளை மேற்கொள்ளும் உரிமை புலப்படுத்தப்பட்டுள்ளது. 'எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும்' (குறள்:423) அறிவால் மெய்ப்பொருள் காணும்படி அது கூறுகின்றது.

இவை எல்லாவற்றிற்கும் மேலாகக் குறளில் காணப்படும் முக்கிய உணர்வோட்டம் சமகால சமுதாயத்தின் ஆதிக்க சார்பான நிலைகளுக்கு எதிரான தெளிவான நிலைப்பாடாகும். நல்லவர் சீரழிவதற்கும் தீயவர் பெருவாழ்வு வாழ்வதற்கும் யார் காரணம்? என்பது வள்ளுவரின் வினாவாகும். இதற்கு விடை காணும் பொறுப்பை எதிர்காலத் தலைமுறையிடம் அவர் நம்பிக்கையுடன் ஒப்படைக்கிறார். மேலும் வறுமைக்கு இந்த உலகில் இடமிருக்கவேண்டுமெனில் அதனைப் படைத்தவன் கெட்டொழிந்து போகட்டும் எனப்பொருள் தரும்.

இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின்
பரந்து
கெடுக உலகியற் றியான் (குறள்:1062)

எனும் குறட்பா அன்றைய இந்திய சிந்தனை மரபுக்குள் காணப்படும் மனிதநேய உணர்வின் சிகரம் எனலாம் என சுப்பிரமணிய ஐயர் கூறியுள்ள கருத்து இங்கு நோக்கத்தக்கது. (சுப்பிரமணியன், நா: 1996 :86)

நிறைவாக

திருக்குறள் இவ்வுலக வாழ்விற்கு வழிகாட்டும் அறநூல். கீதை மேலுலகம் செல்ல வழிகாட்டும் மோட்சநூல் ஆக, இரண்டும் வெவ்வேறு தண்டவாளங்களில் வெவ்வேறு திசை நோக்கிச் செல்லும் புகைவண்டிகள். இரண்டும் நெருங்கிட வழியில்லை. கீதை ஆன்மீக வாழ்க்கைக்கு உரியதொரு நூலாகும். அது உலக அறங்களைப் போதிக்கும் நூலன்று என அரவிந்தரும் உறுதிப்படுத்துகின்றமை குறிப்பிடத்தக்கது.

உசாத்துணை நூல்கள்

அலெக்ஸ் இருதயராசு.அ.ம. (2003), **திருக்குறளில் மனிதநேயம்,** தென்றல் நிலையம், சிதம்பரம்.

ஸ்ரீநிவாஸன்.வி (1961), **வள்ளுவர் கண்ட நல்வாழ்வு**, கோல்டன் பிரஸ், மதுரை.

சிராஜ் உன்னிசா நாசர், உமாமகேஸ்வரி.லொ.ஆ, அபிதா சபாபதி தொகுப்பாசிரியர்கள், (2003) **தமிழ் இலக்கியத்தில் அறிவியல் சிந்தனைகள்** வானதி பதிப்பகம், சென்னை.

சுப்பிரமணியன்.நா., கௌசல்யா.சு. (1996), **இந்தியச் சிந்தனை மரபு**, சவுத் ஏசியன் புக்ஸ் சென்னை.

திருக்குறள் ஆய்வுக்கட்டுரைகள், தொகுப்பு 1 (2019),பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, வடக்கு மாகாணம்,

திருக்குறள் ஆய்வுக்கட்டுரைகள், தொகுப்பு 2 (2021), பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, வடக்கு மாகாணம்,

திருக்குறள் பரிமேலழகர் உரை (1992), விசா பப்ளிகேஷன்ஸ் சென்னை.

திருநாவுக்கரசு.க.த, (1979), **சான்றோர் கண்ட திருவள்ளுவர்**, மணியக வெளியீடு, சென்னை.

பட்டுச்சாமி ஓதுவார்.தி. (1959), **திருக்குறள் உரைக்கொத்து** (பரிமேலழகர், மணக்குடவர், பரிபெருமாள், பரிதியார், காலிங்கர் உரைகளுடன்) காசிமடம், திருப்பனந்தாள்.

புலியூர்க் கேசிகன். (2010), **திருக்குறள் புதிய உரை**, பூம்புகார் பதிப்பகம், சென்னை.

ஸ்ரீமத்பகவத் கீதை, (1960), சுவாமி சித்பவானந்தரின் தமிழ் உரைவிளக்கத்துடனான பதிப்பு ஸ்ரீராமகிருஷ்ண தபோவனம். திருப்பராய்த்துறை. திருச்சி. ராமகிருஷ்ண மடம் வெளியீடு.

Word Frequency analysis of *Devīkālottarāgama*

Navaneethakrishnan,S., Balakailasanathasarma,M., Padmanaban,S.

ABSTRACT

This study focused on Word frequency analysis in Devīkālottarāgama. Word frequency analysis provides valuable information about the content and structure of a selected text corpus. The Āgamas occupy a position, next to the Vedas among the Sanskrit treasures of the Hindu Tradition. Śaivāgamās are the vast treasure believed to be revealed by Lord Śiva. The kālottarāgamas are in the tradition of Śaiva- Siddhānṭa texts, which are dependent texts of Śaivāgamās. Devīkālottarāgama is one of them, meant to be the highest ideological promise given by lord Shiva to Goddess Parvati. It contains only Jnanapadam with eighty-four verses in Sanskrit. Objective of this study is to identify distributions and categories of Sanskrit words used in Devīkālottarāgama with their frequencies and grammatical form. The research method of this study was Word Frequency Analysis. The required data for the analysis of this study was collected from Digital Corpus of Sanskrit (DCS) database. Findings of this study identified that Devīkālottarāgama consist of 551 root words with the frequency of 1259. Among the five categories of Sanskrit words namely Adjectives, Indeclinable, Noun, Pronouns, and Verbs used in this text Nouns leads with 284 words with highest frequency of 485. The letter s (स्) occupies in first rank with highest frequency as a starting letter of 58 words used in 122 grammatical forms. Among the individual words the Indeclinable word na न *was at the first rank with highest frequency of 52. This study pave way to detect the role of vocabulary in comprehension of Sanskrit texts.*

Keywords: *Śaivāgamās; Sanskrit; Linguistics; Devīkālottarāgama; Word frequency*

Introduction

Sanskrit, one of the oldest languages of the world, has the distinction of being spread over many countries of the world despite having India as its motherland. About four thousand years of literary richness, immortal vitality till today, and appearance with divine connection will make us feel its pride. It is accepted as belonging to the Indo-European language family. Among the Sanskrit sources of the Hindu tradition the Āgamas occupy a position, next to the Vedas. They are numerous and classified according to their sectarian affiliation. There are twenty-eight Śaivāgamās of which the Kāmikāgama and the Kāraṇāgama are the ones mostly used in ritualistic aspects. The Vaiṣṇava āgamas are divided into those of two schools, the Pañcarātra and the Vaikhānasa. The Agamas pertaining to the Cult of Sakti, the mother Goddess, are called Tantrās. As sources of the Hinduism, they contain elaborate expositions of doctrines and descriptions of modes of worship, religious practices and rituals. Śaiva Siddhānṭa, one of the three prevalent schools of Śaivism at present, undoubtedly 'a highly developed philosophy. The philosophy of Śaiva- Siddhānṭa is based on Vedas, Šaivāgamas as it stems also from Tēvaram, Tiruvāchakam and other Siddhānṭa śāstras.

Śaivāgamās

Śaivāgamās are the vast treasure believed to be revealed by Lord Śiva. They are considered as sacred texts of Hinduism and are still consulted on all important matters pertaining to religious practices and ideology. It is believed to be emanated from God and hence termed as 'Āgama'. The syllable 'ā' denotes that which is originated 'ga' signifies 'falling' i.e., falling to the Goddess Pārvatī and 'ma' means the religion or the doctrine for the devotees. According to some Śaiva sects 'Āgama' illustrates the knowledge [ā], the liberation [ga] and the means to destroy the bonds [ma]. Generally, the Āgamas text always follows a natural path of evolution in detailing with the four pādas. The first simple stage, caryā (daily routine), helps each individual to follow the right path prescribed in the āgamic texts. The Kriyāpāda deals with the observance of advanced ritualism. The Yogapāda teaches one to fix one's mind to the feet of his Guru and the Supreme. The Jñānapāda deals with philosophy and defines the main three entities, pati, paśu and pāśa that is the supreme soul, the bondage and their relation the cosmic world (Balakailasanathasarma, M. 2021).

Devīkālottarāgama – an introduction

The Kālottarāgamaare in the tradition of Śaiva- Siddhānṭa texts, which are dependent texts in Sanskrit based on the Sivagamic tradition. There are several types of Kalothara Agamas identified in this tradition. They are; 1. Kālōttaram 2. Pruhat kālōttaram 3. Āyutatraya samhitākālōttaram (allatu trayutakranta camhitā kālōttaram) 4. Tēvīkālōttaram (caturvimcatisahasra kālōttaram 5. Tvātaca sahasra samhitā kālōttaram 6. Ṣaṭsahasra samhitākālōttaram 7. Trayōtacacatika kālōttaram 8. Satacatikakālōttaram 9. Catucatika kālōttaram 10. Cārttatcati kālōttaram 11. Tricatikālōttaram 12. Tvicati kālōttaram 13. Skanta kālōttaram. Kālottaram means time in the past as high, special and superior divine philosophy, and Uttaram means superiority, ideology. Through this, Devīkālottarāgama is meant to be the highest ideological promise that can pave the way for the salvation given by Shiva to Goddess Parvati. This scripture contains only Jnanapadam consisting of eighty-four verses in Sanskrit. The Devīkālottarāgama was found in the Chaturvimsati Sahasrat as the sixty-fifth chapter of the Gnanasara Visaram. Various publications related to Sanskrit text of this book, editions and translations are adapted in different languages needs more deep studies (Padmanaban, S 2018).

Word frequency analysis

Word frequency analysis provides valuable information about the content and structure of a text corpus. By identifying the most frequent words, we can gain insights into the main topics, themes, or sentiments expressed in a document or collection of documents

Word frequency analysis is a statistical technique used to identify the frequency of words in a text corpus. It helps us understand which words are most prevalent and provides insights into the importance of specific terms within a given document or collection of documents. This analysis is fundamental

in various Natural Language Processing tasks, including information retrieval, document clustering, and sentiment analysis.

Review of Literature

Academic success is closely linked to word knowledge. Knowledge of words is used to access background knowledge, express ideas and communicate with people (Sedita, 2005). Klare, G. R. (1968) studied the Role of Word Frequency in Readability in English language. Iker, H. P. (1974) conducted research on the use of word-frequency contiguities in content analysis. Frequency of vocabulary, the number of instances where the specific words are encountered in the text, affects learner's word knowledge (Tyler, 2012). Brandenburg-Weeks, T., & Abalkheel, A. M. (2021). conducted a corpus-based analysis of word frequencies in a particular literature. These studies show the importance of teaching vocabulary has been widely recognized.

Significance and Rationality

In the Tamil language tradition, there are various references to Śaiva- Siddhānṭa Even though, scholars can have a clear and deep understanding of the tradition of Śaiva- Siddhānṭa in the Tamil language tradition through the knowledge of Sanskrit. It is true that if one does not know the Śaiva- Siddhānṭa philosophy which is found in the tradition of Sanskrit language, the Shaiva Siddhanta tradition itself will be a disaster. Researchers can gain insights into the main topics, themes, or sentiments expressed in a particular Sanskrit Source related to Śaiva- Siddhānṭa Philosophy by identifying the most frequent words in that particular Sanskrit text. Word frequency analysis in Devīkālottarāgama shall allow us to filter out noise words or stop words, which do not carry significant meaning, and focus on the key terms that drive the overall message. As such, this kind of studies focused on young researchers who want to know the tradition of the Sanskrit language and to be familiar with the basic Sanskrit texts. Further this study persuades Śaiva-Siddhānṭa scholars to conduct more vocabulary studies in future.

Objectives of the Study

The main objective of this study was to identify distributions and categories of Sanskrit words used in Devīkālottarāgama with their frequencies and grammatical form. Further, this study tries to detect the role of vocabulary in comprehension of the Devīkālottarāgama text in the most efficient way possible.

Research Methodology

The research method of this study was Word Frequency Analysis. The present study analyzed word frequencies in Devīkālottarāgama, which provides a useful and meaningful sample for this kind of study because it is one of the required texts for Śaiva- Siddhānṭa students. Word Frequency Analysis is a step-by-step process. Text Preprocessing is first step of word frequency analysis. Before analyzing word frequencies, it is essential to preprocess the text data. Tokenization is the process of splitting text into individual words or tokens. It breaks down a sentence or document into meaningful units, enabling further analysis. Counting the frequencies of each word or unit is the next step in

this method. After obtaining the word frequencies, ranks the words could be obtained based on their occurrence. This process allows to identify the most important terms in a selected text of study.

Data Collection Source

The required data for the analysis of this study was collected from Digital Corpus of Sanskrit (DCS) database, considering the availability and reliability of data. The Digital Corpus of Sanskrit (DCS) is a Sandhi-split corpus of Sanskrit texts with full morphological and lexical analysis. The DCS is designed for text-historical research in Sanskrit linguistics and philology. Users can search for lexical units (words) and their collocations in a corpus of about 4,800,000 manually tagged words in 650,000 text lines

Limitations

This study had three limitations. First, Preference given to get the dataset of Devīkālottarāgama from DCS in this preliminary study since DCS is the one of the most reliable Corpus databases for Sanskrit literature. Second, this study could focus only the basic terminologies defined in this database. Third, due to insufficient studies in this field, the study could not compare the outcomes with the previous findings.


Data Analysis process

The selected text Devīkālottarāgama has pre-processed and tokenized with the support of Digital Corpus of Sanskrit (DCS) database. Frequencies of each word collected through systematic process from DCS. Each record of words was checked, examined and tabulated in to separate Excel sheets based on their category for necessary analysis. After obtaining the word frequencies, ranks of the words identified based on their occurrence.

Further application soft wares such as MS excel, Notepad++ are also used in view of necessity. Findings were interpreted with tabulated and graphical display]

Distribution of words by starting letter

The Devanāgarī script of Sanskrit, composed of 48 primary letters, including 14 vowels and 34 consonants. These letters are organized based on their phonetic properties, such as articular



surface, aspiration, and voicing. Among these letters the words used in the entire text of this Devīkālottarāgama book starts with only 29 letters. The total words of this text consisting 551 Nos. used in 1259 different Grammatical Forms (GFs). Analysis of words used in Devīkālottarāgama shows that the letter s (स्) occupies in first rank with highest frequency as a starting letter of 58 words used in 122 grammatical forms (GFs) followed by n (न्) with 40 words used in 113 GFs, a (अ) with 57 words used in 95 GFs and t (त्) with 19 words used in 92 GFs. (See Table-1)




Table 1 - Distribution of words by starting letter

Sanskrit Letter	Devanāgarī script	Count of First letter	Sum of Frequency
a	अ	57	95
ā	आ	27	55
i	इ	8	24
ī	ई	4	6
u	उ	12	14
ū	ऊ	1	1
e	ए	5	43
k	क्	39	79
g	ग्	11	14
c	च्	19	88
ch	छ्	1	1
j	ज्	17	42
t	त्	19	92
d	द्	16	29
dh	ध्	10	19
n	न्	40	113
p	प्	56	88
ph	फ्	1	4
b	ब्	13	29
bh	भ्	12	32
m	म्	32	74
y	य्	15	51
r	र्	5	13
l	ल्	7	15
v	व्	47	73
ś	श्	13	28
ṣ	ष्	1	1
s	स्	58	122
h	ह्	5	14
Grand Total		551	1259

Distribution of words by Category

Different types of Word Classes that are there in Sanskrit language. Grammatically there are three basic categories in Sanskrit: *shabda* (nouns/ pronouns/ adjectives/ participles), *dhatu* (verbs), and *avyaya* (indeclinable: prepositions, conjunctions, adverbs, exclamations etc.). Considering these basic categories with their subcategories, there are five among them were selected for categorization of words in this study. They are Nouns, Pronouns, Adjectives, Indeclinable and Verbs. Among these five categories of words Among the five categories of Sanskrit words used in Devīkālottarāgama with their frequencies based on their grammatical form, Nouns leads with 284 words with highest frequency of 485 followed by Indeclinable, verbs, Pronouns and Adjectives respectively.

Table 2 - Distribution of words by Category

Word form	No. of Words	Percentage	No of frequency	Percentage
Adjective	111	20.15	155	12.31
Indeclinable	51	9.26	253	20.10
Noun	284	51.54	485	38.52
Pronoun	16	2.90	174	13.82

Verb	89	16.15	192	15.25
Total	**551**	**100.00**	**1259**	**100.00**

Frequency analysis of words

Among the entire words used in Devīkālottarāgama the Indeclinable word na न was at the first rank with the frequency of 52 followed by ca च (Indeclinable), tad - तद् (Pronoun),eva - एव (Indeclinable), sarva - सर्व (Pronoun), yad - यद् (Pronoun), mad - मद् (Pronoun), jñāna - ज्ञान (Noun), kṛ - कृ (Verb 2. Ā.), and citta - चित्त (Noun) respectively.

Table 3 – Ranked list of Top twenty words with highest frequency

Rank	Word (IAST)	Word Devanagari	Word Category	Frequency	Percentage
1	na	न	Indeclinable	52	4.13
2	ca	च	Indeclinable	43	3.42
3	tad	तद्	Pronoun	41	3.26
4	eva	एव	Indeclinable	32	2.54
5	sarva	सर्व	Pronoun	30	2.38
6	yad	यद्	Pronoun	27	2.14
7	mad	मद्	Pronoun	23	1.83
8	jñāna	ज्ञान	Noun	16	1.27
9	kṛ	कृ	Verb (2. Ā.)	16	1.27
10	citta	चित्त	Noun	14	1.11
11	tu	तु	Indeclinable	13	1.03
12	as	अस्	Verb (2. P.)	13	1.03
13	tathā	तथा	Indeclinable	12	0.95
14	ādi	आदि	Noun	12	0.95
15	api	अपि	Indeclinable	11	0.87
17	bhū	भू	Verb (1. Ā.)	11	0.87
18	rūpa	रूप	Noun	9	0.71
19	hi	हि	Indeclinable	8	0.64
20	jan	जन्	Verb (4. P.)	8	0.64

Conclusions

Findings of this study identified that Devīkālottarāgama consist of 551 root words with the frequency of 1259. Among the five categories of Sanskrit words namely Adjectives, Indeclinable, Noun, Pronouns, and Verbs used in Devīkālottarāgama with their frequencies based on their grammatical form, Nouns leads with 284 words with highest frequency of 485. The letter s (स्) occupies in first rank with highest frequency as a starting letter of 58 words used in 122 grammatical forms. Among the individual words the Indeclinable word na न was at the first rank with highest frequency of 52. In general way study of the vocabulary of high frequency words increases comprehensibility of the text and provides opportunities for students to practice analyzing word parts and the analysis of root words. On the other hand, it also runs the risk of leading learners to develop false understandings of vocabulary if they fail to study the words in a proper grammatical way. Findings of this study pave way to detected the role of vocabulary in comprehension of the Devīkālottarāgama text in the most efficient way possible.

References

Balakailasanathasarma, M. (2021) **Canons of Saivagamas** (2021) Manipay: Seethamaheswaram' Sri Buwaneswary Amman Kovil Suthumalai, ISBN 978–624 –99119–0-1, 186p.

Brandenburg-Weeks, T., & Abalkheel, A. M. (2021). The giver: a corpus-based analysis of word frequencies. **The Southeast Asian Journal of English Language Studies**, **27(3)**, 215-227. https://doi.org/10.17576/3l-2021-2703-14

Iker, H. P. (1974). A Historical Note on the Use of Word-Frequency Contiguities in Content Analysis. **Computers and the Humanities,** 8(2), pp93–98. http://www.jstor.org/stable/30199651

Klare, G. R. (1968), The Role of Word Frequency in Readability. **Elementary English**, **45(1)**, pp12–22. http://www.jstor.org/stable/41387663

Padmanaban, S., (2018) (Tr.), **Text and Tamil translation of *Devīkālottarāgama*** (in Tamil) *Chilabam: Munneswaram Devasthanam*, ISBN 978-955- 0877-57-7, 32p.

Sedita, J. (2005). Effective vocabulary instruction. **Insights on Learning Disability**, **2(1)**, pp33-45.

Tyler, A. (2012). **Cognitive linguistics and second language learning: Theoretical basics and experimental evidence**. Routledge. ISBN 9780415802505, 264p.

மாணிக்கவாசகரின் நீத்தல் விண்ணப்பப் பதிகத்தில் ‘தற்சிறுமை’ கொள்ளல் – ஓர் நோக்கு

ரமணராஜா, சீ.

ஆய்வுச்சுருக்கம்:

தற்சிறுமை என்பது ஓர் ஆன்மா தன்னளவில் தன்னைச் சிறுமை செய்யும் செயலாகும். அவ்வான்மா தனது எண்ணங்கள் மற்றும் நடத்தைகளை மனிதப்பண்பிலும் தாழ்ந்ததாக - இழிவானதாகக் காட்டிக் கொள்ளும் மனவுணர்வுச் செயற்பாங்கு இதுவாகும். இச்செயற்பாங்கின் குறிக்கோள் ஆன்மா இறைவனிடம் தன்னை முழுமையாக ஒப்படைத்தல் - அர்ப்பணித்தலே. இவ்வுணர்வுகள் மற்றும் மனப்போக்குகளானவை அருளியல் நோக்கில் வெளிப்படுவன. பக்தி இலக்கியங்களில் உணர்வுகள் சார்ந்த எண்ணங்களையும் நடத்தையியல் சார்ந்த வெளிப்படுத்துகைகளையும் பலவாறு இனங்கண்டறியலாம். சைவபக்தி இலக்கிய மரபில் முதன்மை பெறுகின்ற பன்னிரு திருமுறைகளில் திருவாசகம், திருக்கோவையார் என்பன மாணிக்கவாசகரது இலக்கியப் படைப்புகளாகும். திருவாசகத்தின் ஒரு பதிகமாக நீத்தல் விண்ணப்பம் உள்ளது. இதனைப் பிரபஞ்ச வைராக்கியம் என்பர். ஒரு ஆத்மனின் பிரபஞ்ச விடுதலைக்கான வேண்டுதல் இப்பதிகத்தில் பிரதிபலிக்கிறது. இத்தகைய வேண்டுதலில் மாணிக்கவாசகரின் மனப்வெழுச்சியினை இனங்காணலாம். இப்பின்னணியே இந்த ஆய்வுநிகழ்த்தப்படுவதற்கான சூழலை உருவாக்கியது. மாணிக்கவாசகரது பிரபஞ்சப் பற்றறுத்தலுக்கான விண்ணப்பத்தில் தற்சிறுமை கொள்ளும் மனப்போக்கு வெளிப்பட்டு நிற்கின்றது. இத்தகைய மனவியல்பினையும் அவ்வுணர்வு எவ்வாறு வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்பதனையும் வெளிக்கொணர்வதே இந்த ஆய்வின் பிரதான இலக்காகும். மாணிக்கவாசகரின் மூல நூல்களிலிருந்து தரவுகள் பெறப்பட்டு அவை உய்த்தறிவு முறையில் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு தொகுத்தறிவு முறை மற்றும் விவரண ஆய்வு முறையியல்களின் அடிப்படையில் ஆய்வுசார் முடிவுகள் பெறப்பட்டிருக்கின்றன. ஆய்வுச் செல்நெறியின் தேவைக்கேற்ப உள்ளடக்கப்பகுப்பாய்வு முறையும் பயன்படுத்தப்படுகிறது. இறைவன் முன்னிலையில் வெளிப்படுகின்ற ஆத்மனின் மனவெழுச்சிகளைப் பக்தி இலக்கியங்களில் கண்டறிவதற்கு இவ்வகை ஆய்வுகள் பயனுடையதாக அமையும் எனும் உளத்தூண்டுதலின் அடிப்படையில் இந்த ஆய்வு நிகழ்த்தப்படுகின்றது.

திறவுச்சொற்கள்: *மாணிக்கவாசகர், திருவாசகம், நீத்தல் விண்ணப்பம், தற்சிறுமை, ஆத்மன்*

அறிமுகம்

புராதன இனக்குழுமச் சமுதாய மொன்றின் பண்பாட்டுக் கூறுகளைத் தம்முள் அடக்கிய பக்தி இலக்கியங்கள், இறைவனை முன்னிலைப்படுத்தி எழுந்த படைப்புக் களாகும். ஆத்மனுக்கும் இறைவனுக்குமான நெருங்கிய உறவின் பிரதிபலிப்புகளை பக்தி இலக்கியங்களில் பரக்கக் காணலாம். ஆத்மனின் மனப் போக்குகள் இறைவன் முன்னிலையில் பலவாறு வெளிப்படுகின்றன. இந்நிலை யில் வெளிப் படுகின்ற ஆத் மனின் உள இன்பநிலை வார்த்தைகளுக்குள் அடக்கிவிட முடியாதது. இத்தகைய மனவுணர்வினால் வெளிப் படுகின்ற கருத்தியல்களும் அதன் பிரதிபலிப்புகளான நடத்தைகளும் பக்தியின் உளவியலில் தனித்த கூறுகளாகும். மாணிக்கவாசகர் எனும் ஆத் மனின் இலௌகிகப் பற்றறுத்தலுக்கான வேண்டுகை அல்லது விண்ணப்பத்தினை நீத்தல் விண்ணப்பத்தில் காணலாம். இப்பதிகம் முழுமையும் பிரபஞ்ச வைராக்கிய விருப்பும் கைவிடாதொழிதல் வேண்டுமெனும் வேண்டுகையும் வெளிப் படுகின்றது.

மனித வாழ்வியலில் இறுக்கமான நிலைமைகள் வெவ்வேறு காரணிகளால் உருவாகின்றன. இவ்வேளை அவரவர் ஆளுமைகள், உடல்நிலை, மனம், ஆற்றல், வைராக்கியம், உறவினர்களின் ஆறுதல் முதலானவற்றைப் பொறுத்தே அச்சூழலில் இருந்து விடுபட இயலும். இறுக்கமான சூழ்நிலையில் உருவாகும் உணர்வுகள் மற்றும் நடத்தைகள் வெவ்வேறான

விளைவுளைத் தோற்றுவிக்கின்றன. மன உந்துதல்களும் மனப்போக்குகளும் மேற்படி சூழலில் உருவாகும் உணர்வுகளுக்கும் நடத்தைகளுக்கும் காரணமாக அமைகின்றன. மனப் போக்குகளானவை மன உந்துதல்களிலிலிருந்து மாறுபட்டவை. ஆயினும் இரண்டும் சமநேரத்தில் தனித்து இயங்கக் கூடியவை. மனதிலெழுகின்ற பல்வகையான உந்துதல்களினால் மனப்போக்குகள் உருவாகலாம். அதே வேளை அத்தகைய உந்துதல்களின் செயற்பாடுகள் மனப்போக்கின் விளைவுகளாகவும் அமைந்துவிடுகின்றன. மாணிக்கவாசகரிடத்தே காணப்பட்ட மன உந்துதல்களே தற்சிறுமை செய்துகொள்ளக் காரணமாக அமைந்தது.

மனப்போக்குகள், மன உணர்வு சம்பந்தமானவையாகவும் ஒரு மனிதனின் நடத்தையை உணர்வுகளின் மூலம் கட்டுப்படுத்த வல்லனவாகவும் இருக்கையில் மன உந்துதல்கள் அந்நடத்தைக்குத் தேவையான சக்தியை, உணர்வுகளை அளிப்பனவாக அமைகின்றன. மன உந்துதல்கள் உடலைச்சார்ந்தவையாக (physiological) இருக்கையில் மனப்போக்குகள் உளம் சார்ந்தவையாகவே (Psychological) பெரும்பாலும் அமைகின்றன (பரமேஷ், செ., 2007:177). உந்துதல்கள் பசி, தாகம், பாலுணர்வு போன்ற உடல் தேவைகளின் விளைவில் அல்லது அவற்றைச் சரிசெய்ய ஏற்பட்ட அவசியத்தில் தோன்றும்போது, மனப்போக்குகள் கோபம், வெறுப்பு, அன்பு, பாசம், நட்பு போன்ற உள வாழ்க்கையின் தேவைகளின் விளைவில் அல்லது அவற்றைச் சரிசெய்ய அவசியமானவையாய்த் தோன்றுவன. மனிதனின் உடல் தேவைகளை நிறைவேற்றுவதைப் போன்றே உளத் தேவைகளையும் திருப்திப் படுத்த வேண்டும். இவ்விரு தேவைகளும் நிறைவேற்றப்படாதவரை மனிதன் தன்தேவையை உணருவதில்லை.

நோக்கமும் முறையியலும்

மாணிக்கவாசகரது பிரபஞ்சப் பற்றறுத்தலுக்கான விண்ணப்பத்தில் தற்சிறுமை கொள்ளும் மனப்போக்கு வெளிப்பட்டு நிற்கின்றது. இத்தகைய மனவியல்பு, அவ்வுணர்வு வெளிப்படுத்தப்பட்ட விதம், அதன் நோக்கம் என்பன இந்த ஆய்வினூடாக விளக்கமுறும். அத்துடன் பக்தியின் உளவியலில் ஆத்மனின் நடத்தைகளை இனங்காண்பதற்கும் இந்த ஆய்வு முயற்சிக்கின்றது. மாணிக்கவாசகரின் மூல நூல்களிலிருந்து தரவுகள் பெறப்பட்டு அவை உய்த்தறிவு முறையில் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு தொகுத்தறிவு முறை மற்றும் விவரண ஆய்வுமுறையியல்களின் அடிப்படையில் ஆய்வுசார் முடிவுகள் பெறப்படுகின்றன. ஆய்வுச் செல்நெறிக்கேற்ப பகுப்பாய்வு முறையியலும் பயன்படுத்தப்படுகிறது.

தற்சிறுமை - எண்ணக்கரு விளக்கம்

தற்சிறுமை என்பது ஒருவர் தன்னளவில் தன்னைச் சிறுமைப்படுத்துதல் ஆகும். தனது நற்குண நற்செய்கைகளை மனிதப்பண்பிலும் தாழ்ந்ததாக - இழிவானதாகக் காட்டிநிற்கும் மனவுணர்வுச் செயற்பாட்டினைத் தற்சிறுமை எனலாம். தற்சிறுமை செய்தல் என்பது தன்னை உணர்தலின் வழிப்பிறந்த அகத்துணர்வுச் செயற்பாங்கு ஆகையால் இதனைக் கோட்பாட்டியல் நிலையில் நோக்குவதனைக் காட்டிலும் எண்ணப்பாங்கினடிப்படையில் அணுகுவது பொருத்தப் பாடுடையதாக அமையும். தற்சிறுமை எனும் சொல் கழிவிரக்கம், பச்சாத்தாபம் எனும் தன்மையிலும் நோக்கப்படும்.

தன்னைச் சிறுமை செய்தல், இகழ்வாகக் கருதிக் கொள்ளுதல், இழித்தும் பழித்தும் கூறுதல், இகழ்ந்து கொள்ளுதல்,

தன்னையே பலவாறு நிந்தனை செய்தல் என்ற வகையில் கழிவிரக்கம் எனும் சொல்லினைச் சுருக்கமாக வரையறை செய்யலாம். கழிவிரக்கம் என்பது, கடந்து போனதை எண்ணி ஒருவன் தன்மேல் கொள்ளும் மிகையான வருத்தம் அல்லது அனுதாபம் (க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி: 275) சென்றதை நினைந்து வருந்தும் செயல் அல்லது இரக்கம், தன்மீதான வெறுப்பினடிப்படையில் எழுகின்ற மனவருத்தம், குற்றத்திற்கு வருந்துதல், வருத்தப்படுதல் என்றும் பொருள் கோடலாம். ஆகவே, தற்புகழ்ச்சியின் எதிர்ப்பதமே தற்சிறுமை ஆகும். தற்பெருமையுரைத்தல் 'தற்புகழ்ச்சி' எனின், ஒருவர் தம்மை இழித்துரைப்பதனை 'தற்சிறுமை' என்று கூறலாம்.

'ஒண்ணுதற் கோஓ உடைந்ததே
ஞாட்பினுள்
நண்ணாரும் உட்கு மென்பீடு'
(குறள்:1088)


என்கிறார் வள்ளுவர். சிறுமையுந் தோன்ற நின்றது. கழிந்ததற்கு இரங்கலின் தற்புகழ்தல் அன்றாயிற்று என்பார் பரிமேலழகர் (திருக்குறள் பரிமேலழகர் உரை, 410 - 411). தற்சிறுமையே கழிவிரக்கமாகின்றது. கழிவிரக்கம் தற்சிறுமைக்கு அடிப்படையாகின்றது. தற்பெருமையினைத் தன்னளவிலும் பிறர்வகையானும் பேசும் இலக்கியங்கள் பலவுண்டு. காதல், வீரம், கொடையளிப்புகள் முதலான பண்புடைமையாற் தற்பெருமை வெளிப்படும். தற்சிறுமை அருளியல் நிலையில் வெளிப்படுவது. இம்மரபினைப் பக்தி இலக்கியங்களில் பரக்கக்காணலாம்.

சைவசமய மரபில் மிகவுயரிய இடத்தைப் பெற்றிருக்கின்ற சமயப்பெரியவர்கள் பலரும் தம்மையும் தமது செயல்களையும் சிறுமைப்படுத்தியமைக்கான மனவுணர்வுகள் - மனப்போக்குகள் உருவாகுவதற்கான அடிப்படைகளைத் தோற்றுவித்தது எது? இந்தக் கேள்விக்கான அடிப்படைக் கூறுகளை அருளியல் நிலையிலேயே தேடவேண்டும்.

சிறுமைப்படுத்துவதனுடைய இறுதி இலக்கு ஆன்மா இறைவனிடம் தன்னை முழுமையாக ஒப்படைத்தல் அல்லது தன்னை முழுமையாக அர்ப்பணித்தலே. வைணவமரபில் இதனைப் 'பூரணசரணாகதி' என்பர். பக்தியில் திளைத்தலாகிய சரணாகதி தத்துவத்தின் பிரதிபலிப்பே ஒருவர் தன்னைச் சிறுமைப்படுத்திக் கொள்ளுவதற்கு அடிப்படையாகின்றது. மாணிக்கவாசகரின் நீத்தல் விண்ணப்பம் என்னும் பிரபஞ்சவைராக்கியப் பகுதி முழுமையும் சரணாகதி தத்துவத்தின் வெளிப்பாடாகவே இனங்காணத்தக்கவை. இறைவன் மீதான தமது களங்கமற்ற அன்பினை வெளிப்படுத்தவும், தமது தவறுகளைக் குறிப்பிட்டுக் குறையிரக்கவும் இறைவன் முன்னிலையில் தம்மைச் சிறுமை செய்வது வழக்கம். ஆணவ முனைப்பின்மை, தன்னிலையடக்கம், தன்னை உணர்தல், கழிவிரக்கம் முதலானவற்றின் அடிப்படையில் இவ்வாறான செயற்பாடுகள் நிகழும். 'நாயிற்கடையாய்க் கிடந்த அடியேன்' (திருவாசகம், சிவபுராணம், வரி: 60), 'அங்காடிநாய் போல் அலைந்தனையே' (பட்டினத்தார் பாடல், பொது:), 'நாயேன் பலநாளும் நினைப்பின்றி மனத் துன்னைப் பேயாய்த் திரிந்தெய்த்தேன்' (சுந்தரர் தேவாரம், 7:1:2), 'நாயினும் கடைப் பட்டேனை' (நாவுக்கரசர் தேவாரம்: 4:76:6), 'பித்தனேன் பேதையேன் பேயேன் நாயேன் பிழைத்தனகள் எத்தனையும் பொறுத்தாயன்றே' (மேலது: 6:95:8) என்பன இவற்றுக்கான சான்றுகள் சிலவாகும். இவ்வாறு அடியவர்கள்,

அருளியல் நோக்கு நிலையில் தம்மை மிகக் கீழான இயல்புடைமையில் சுட்டித் திருப்பது எம் கவனத்தைப் பெறுகின்றது.

'பக்தி வலையில் படுவோன் காண்க' என்பதில் அன்பின் விசாலம் வெளிப் படுகின்றது. 'அன்பு எனும் பிடியினுள் அகப்படும் மலையே' (திருவருட்பா, பரசிவவணக்கம்:3269) என்பார் இராமலிங்க அடிகள். இந்த இறையன்பே பக்தியாகக் கூறப்படும் நிலையில் அது ஆன்மாக்களின் நடத்தைகளில் அதிகம் செல்வாக்குச் செலுத்துகின்றது. பக்தியினால் உந்தப்படும் போது விரத அனுட்டானங்கள், நேர்த்திக் கடன்கள், பஜனை, திருக்கோயில் வழிபாடுகள், திருத்தொண்டுகள் என்றவாறாக உளச்செயற்பாடுகள் பலவும் நிகழ்கின்றன. இவ்வாறான மனவுணர்வுசார் செயற்பாடுகளில் ஒன்றாகவே தற்சிறுமை கொள்ளுதலையும் இனங்காணக்கூடியதாக உள்ளது. இது ஒரு நடத்தை மனப்பாங்கு ஆகும். இச்செயற்பாங்கானது, முறையீடு, குறையிரத்தல், வேண்டுதல் என்ற வடிவங்களில் வெளிப்படுகின்றது. மாணிக்கவாசகரின் வேண்டுதலானது நித்திய இருத்தலுக்கானது. இறையடியில் இருத்தலுக்கான உள்ளத்தால் வருந்தும், உள்ளத்தை வருத்தும் நடத்தையாகவே தற்சிறுமை கொள்ளுதலை இனங்காண லாம். 'இத்தாவர சங்கமத்துள் எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்த' ஓர் ஆன்மா அனைத்திலிருந்தும் விடுபட்டு நித்திய இருப்புக்கான விண்ணப்பத்தினை முன் வைத்தமை அவதானிக்கத்தக்கது. ஆயினும் தன்னளவில் தன்னை மிகவும் இகழ்ந்து கூறி விண்ணப்பம் செய்தமை ஏன்? என்பதே நம்முள் எழும் பிரதான வினாவாகும்.



ஒருவர் தன்னை இகழ்ந்து பேசுவதற்குப் பலகாரணங்கள் உள்ளன. அவை ஒவ்வொன்றும் அந்தத் தனியன்களின் வாழும் சூழல், உளநிலை, வழிபடுதன்மை, பக்திமேலீர்ப்பு என்பவற்றினைப் பொறுத்து அமையும். நாவுக்கரசர், பட்டினத்தடிகள், மாணிக்கவாசகர், நம்மாழ்வார், திருமங்கையாழ்வார், அபிராமிப்பட்டர், அருணகிரிநாதர் முதலானோர் பாடல்களில் இவ்வியல்புகளைப் பரக்கக் காணலாம். இத்தகைய எண்ணங்கள் மற்றும் அதன் வழியுருவாகும் நடத்தைகளானவை,

- தன்னை உணர்தலின் வழியுருவாதல்
- தமது ஆற்றாமையை - இயலாமை யைப் பலவாறாக வெளிப்படுத்துதல்
- கடந்தகால தன்செய்கைகளின் மீது வெறுப்புக்கொண்டுரைத்தல்
- வாழ்வியல் அர்த்தங்களின் புரிந்துணர்தலில் வெளிவருதல்
- அனைத்திற்கும் முதல்வன் இறை வனே என்ற மனவுணர்வில் ஊற்றுக் கொள்ளுதல்
- வாழ்வியலின் சலிப்பினால் தோன்று தல். (உலகப் பற்றுக்களில் இருந்து விடுவித்தல்)

எனும் காரணிகளின் அடிப்படையில் வெளிப்படுகின்றன. மாணிக்கவாசகரது திருவாசகத்தில் தற்சிறுமைப்படுத்தல்களை அதிகம் காணலாமாயினும் நீத்தல் விண்ணப் பத்தில் இதன் அதிகரித்த போக்கினைக்

கண்டுகொள்ள முடிகின்றது. பெரும்பாலும் நெஞ்சொடு புலம்பலாகவே இவ்வியல்பின் வெளிப்பாடுகள் அமைந்திருக்கின்றமை குறிப்பிடற்குரியது.

நீத்தல் விண்ணப்பம்

மாணிக்கவாசகர் சைவசமய குரவருள் நான்காமவராக வைத்தெண்ணப்படுபவர். அரசியலதிகாரச் சிறப்புகளுடன் அவரது வாழ்வியல் கட்டமைந்திருந்தாலும் அனைத்தையும் ஆன்மிக நிலையில் புறத்தொதுக்கியவர். திருப்பெருந்துறை உறையும் சிவனருளினால் ஆட்கொள்ளப் பட்டவர். சிவபுராணம் முதற்கொண்டு அச்சோப்பதிகம் ஈறாக ஐம்பத்தொரு பதிகங்களைக் கொண்ட திருவாசகம் மற்றும் திருக்கோவையார் என்பன இவரது பக்தி இலக்கியப் படைப்புகளாகும். பன்னிரு திருமுறைகளுள் இவை எட்டாம் திருமுறையாக உள்ளன.

திருவாசகத்திலுள்ள பதிகங்களுள் நீத்தல் விண்ணப்பமும் ஒன்றாகும். பொன்னார் திருவடிக்கு விண்ணப்பம் செய்தவர் நாவுக்கரசர். இந்த விண்ணப் பமானது அவரது கடந்த கால வாழ்வியலனு பவங்களை எண்ணி வருந்தியமையால் - பச்சாத்தாபத்தினால் உருவானது. ஆனால், மாணிக்கவாசகரின் விண்ணப்பமானது மேற்படி நிலையிலிருந்து முற்றிலும் வேறுபட்டது. நீத்தல் என்பது துறத்தல், நீங்குதல், விடுபடுதல் எனும் பொருள் நிலையில் எடுத்தாளப்படுகிறது. அகநிலைஞான அனுபவமுடைய ஆத்மன் உலகப் பற்றுக்களைத் துறப்பதற்கான வேண்டுகையாக இந்த விண்ணப்பம் அமைகிறது. மாணிக்கவாசகர் அகநிலை ஞான அனுபவமுடைய ஆத்மன். இவர், பேரறிவுடையதும், நித்தியமானதுமான இறைவனிடத்துச் செய்த விண்ணப் பம் உலகியல் பற்றுக்களைத் துறப்பதற் கானதல்ல. அதற்கும் அப்பால் பிரபஞ்ச பற்றறுத்தலுக்கானது.

பிரபஞ்சத்தின் ஒரு கூறாகவே உலகம் உள்ளது. அதாவது, பேரண்டமே பிரபஞ் சமாகும். பேரண்டத்துக்குள் உலகம் சிறு பகுதியாகும். பூமி, நிலம், வானம், சந்திரன், சூரியன், நட்சத்திரங்கள், கோள்கள், விண்துகள்கள், பால்வெளி மண்டலங்கள் ஆகியன அனைத்தும் பேரண்டத்துக்குள் உள்ளடங்கும். அண்டம் தொடர்பில் பின்வரும் கருத்து நோக்குதற்குரியது.

"பூமி உட்பட ஒன்பது கோள்களும் அவற்றின் உபகோள்களும் சூரியனை மையமாகக் கொண்ட ஞாயிற்றுத் தொகுதியில் அமைந்துள்ளன. இந்த ஞாயிற்றுத் தொகுதியைப் போல எண்ணற்ற (சுமார் 10,000 கோடி என்பர்) நட்சத்திர மண்டலங்களைக் கொண்டு அமையப் பெற்றதே பால்வீதி என்கின்ற ஸ்பைரல் கலக்சி ஆகும். ஸ்பைரல் கலக்சியைப் போல இலட்சக்கணக்கான கலக்சிகளை உள்ளடக்கியதே அண்டம் அல்லது பிரபஞ்சம் எனப்படுகின்றது" (முகுந்தன்,ச.,2020:152)

எனவேதான் உலகப்பற்றையன்றி பிரபஞ்சப்பற்றினைத் துறக்க விளைந்தார் எனலாம். உலகம் குறுகிய பரப்பினை உடையது. பிரபஞ்சமோ பல உலகங்களைக் கொண்ட பெரும் பரப்பினை உடையது. எனவே இந்தப் பேரண்டமாகிய பிரபஞ்சப் பற்றினை அறுப்பதில் அவாக் கொண்டு வேண்டுதல் செய்தார் என்க. உலகப்பற்றறுத்தலைக் காட்டிலும் பிரபஞ்சப் பற்றறுத்தல் நித்திய - நிலையான இன்பத்தினை அளிக்கக்கூடும்.

அவனருளாலே அவன் தாள் வணங்கி என்றுரைத்ததன் வழி அவனது அருளினைப் பெறுவதும் உலகியல் பற்றுக்களிலிருந்து விடுபடுவதற்குமான விண்ணப்பமே

இந்தப் பிரபஞ்ச வைராக்கியப் பகுதி யாகும். கட்டளைக் கலித்துறை யாப்பில் திருவுத்தர கோசமங்கையில் இவ்விண்ணப்பம் செய்யப்பட்டது. 51 பதிகங்களையுடைய திருவாசகத்தில் ஆறாவது பதிகமாக இடம்பெறுகின்ற இப்பதிகம் 50 பாடல்களால் அந்தாதிப்பதிக அமைப்பில் கட்டமைக்கப்பட்டுள்ளது. 'கடையவனேனை' எனத் தொடங்கி ஈற்றில் 'கடையவனே' என நிறைவுறு வதாக இப்பதிகமுள்ளது. பாடலின் தொடக்கத் திலும் முடிவிலும் கடைப்பட்டவனாக - இழிந்த இயல்பினனாக, மாணிக்கவாசகர் தன்னைச் சிறுமைப்படுத்தியிருப்பது அவரது உளவெளிப்பாட்டினைப் பிரதி பலிக்கின்றது.

மாணிக்கவாசகரின் தற்சிறுமை

ஜீவாத்மாவுக்குச் சிவஞானம் கிட்டா மைக்குக் காரணம் உலகியல் பற்றுக்களுடன் பொருந்தி இருத்தலாகும். சிவஞானம் பெறுதலே ஆத்மனின் உயரிலக்கு. இதற்கு உலகியல் பற்றுக்களில் இருந்து விலகுதல், நீங்குதல் அல்லது உலகப் பற்றுக்களைத் துறத்தல் வேண்டும். ஏலவே கூறியபடி அவனருளினால் அவனைப் பற்றிப்பிடிப்பதே இதற்குச் சிறந்த சாதனமாகும். வைராக்கிய உணர்வு இருந்தாலே உலகப்பற்றினை நீக்கவும் சிவன் மீது பற்று வைக்கவும் இயலும். இந்தப் பின்னணியிலேயே 'நீத்தல் விண்ணப்பம்' எனும் பதிகத்தினை அணுகுதல் வேண்டும். இதனாலேயே இதனைப் பிரபஞ்ச வைராக்கி யம் எனச் சுட்டினர் போலும்.

இறைவனின் இருப்பு, இயல்புகள், கருணைத்திறன், அட்டவீரச் செயல்கள், இவை தொடர்பான தொன்மங்கள், ஆத்மனின் இயல்பு மற்றும் இலக்குகள், வாழ்வியல் அறங்கள், உலகியற் பற்றறுத்தலின் இன்றியமையாமை என இன்னோரன்ன பல விடயங்கள் இப்பதிகத்திலுண்டு. ஆயினும் ஒரு ஆத்மனின் உலகியற் பற்றறுத்தலுக்கான விண்ணப்பத்தில் தன்னை இழிவு செய்யும் அல்லது சிறுமைப்படுத்தும் மனப்போக்கினைக் கண்டறிய இக்கட்டுரை எத்தனம் செய்கிறது.

மாணிக்கவாசகர் தன்னை சிறு மைப்படுத்திக் காட்டுமிடங்கள் பலவாகும். இவரது பெரும்பாலான பாடல்களில் இக்கருத்தியல்கள் விரவிக் காணப்படுகின்றன.

- சிவன் தன்னை ஆட்கொண்டருள வேண்டும் என அவரின் பெருமை யுரைத்தல்
- பகுத்தறிவற்ற உயிரினங்கள், ஜடப் பொருட்களுடன் ஒப்பிடுதல்
- இயலாமையை வெளிப்படுத்துதல்
- நிலையாமையைக் கூறுதல்
- இழிந்தவன் என்றுரைத்தல்
- மனித வாழ்வியலில் உயர்ந்த எண்ணம், குறிக்கோள், நெறிமுறைகள் இல்லையே என்று குறிப்பிடுதல்

என மாணிக்கவாசகர், தன்னை சிறுமைப் படுத்தும் முறைமையினைப் பகுத்து நோக்கலாம்.

சிவன், தன்னை ஆட்கொண்டருள வேண்டும் என அவரின் பெருமையுரைப் பதில் தனது அறியாமையை எடுத்துரைத்தல், சிவனின் பெருமைகளைக் கூறுதல் என்ற அடிப்படையில் தம்மை இகழ்ந்து கொள்கி றார். இங்கு தன் மீதான வெறுப்பும் உலகியல் மீதான வெறுப்பும் ஒருங்கே வெளிப்படுகின்றது. அதற்குக் காரணம், உலகியல் இன்பத்தையும் அதற்குரித்தான பொருள்களையும் புறத்தொதுக்க வேண்டுமெனும் முனைப்பே. இதனால் தன்செய்கைகளையும் அறியாமையையும் எண்ணித் துன்புறுகின்றார்.

தன்னை இழிநிலைப்படுத்தும் கருத்துக்களை வெளிப்படுத்தும் இடங்களில் பொருத்தமான பழமொழிகளைக் கையாண்டுள்ளார். தமது மனவியல் சார்ந்த எண்ணங்களைச் சாதாரண மக்களும் எளிமையாகப் புரிந்து கொள்ளக் கூடியவாறு விளக்கிய உத்திகளுள் பழமொழிக் கையாளுகையும் ஒன்றாகும். ஐவரால் அலைக்கழிக்கப்பட்டமை, குறிக்கோளிலாது இருந்து காலம் வீணாக்கியமை, தன் இயலாமை, இறையருளைப் பெறுவதற்கான முயற்சியின்மை, அதன் வழி உலகமாந்தர் உய்வதற்கான வழிகளைக் காட்ட முற்பட்டமை ஆகியன இதன் மூலம் வெளிப்படுத்தப் பட்டிருக்கின்றன.

"இருதலைக் கொள்ளியினுள்
எறும்பொத்து நினைப்பிரிந்த
விரிதலையேனை.."

(நீத்தல் விண்ணப்பம்: 9)

எனும் பாடலில் இவர் கையாண்ட பழமொழிகளில் கழிவிரக்கச் சிந்தனைகள் இழையோடியுள்ளன. ஐவராகிய புலன்களே இவ்வுலக வாழ்வின் துன்பங்களுக்குக் காரணமென்பதனை பல்வேறு இடங்களிலும் வெளிப்படுத்தியிருக்கின்றார். வஞ்சனை செய்யும் புலன்களைக் கட்டுப்படுத்தி அடக்கியாள வல்லமை அற்றதனாலேயே உலகப்பற்றுக்களிடையே கிடந்து அழுந்துபவனாயினேன் என்று பெரும்பாலான பாடல்களில் ஐம்புலன் நுகர்ச்சிகளை கோடிகாட்டிக் கருத்துரைத்துள்ளமை கவனிக்கற்காலது.

இறைவனைப் பலவாறு விழித்து, அவரது இயல்புகள், திருவருட்செயல்கள், தோற்றப் பொலிவுகள், தொன்மங்கள் என் பவற்றினை எடுத்துக் கூறி அறியாமையினால் அகப்பட்டிருந்த என்னை ஆட்கொண்டருளுவாய் என வேண்டிக் கொள்ளும் தன்மையினைப் பதிகந்தோறும் கண்டுணர முடிகிறது. இவ்வேண்டுதலினூடாக இறைவனின் பெருங்கருணைத்திறன் கூறப்பட்டு, என்னை விட்டிடுதி கண்டாய், விடுதி கண்டாய் என விண்ணப்பம் செய்திருப்பது குறிப்பிடற்குரியது. இறைவனிடத்தான முறையீடாகவே இதனைக் கருதமுடிகிறது. உலக வாழ்க்கையில் அமிழ்ந்து அழுந்துகின்ற என்னைக் கைவிடாது அதிலிருந்து மீளுவதற்குத் துணையாக அமைதல் வேண்டும் என்பதே அவரது வேண்டுகையாகும். தன்னியல்பினைக் கூறுதல், இறைவனின் குணங்களைக் குறிப்பிடுதல், இறைவனுறையும் தலங்களை விழித்தல் என்னும் தன்மையில் மேற்படி வேண்டுதல்களின் ஒழுங்கினை அவதானிக்கலாம்.

என்னைக் கைவிடா தொழிதல் வேண்டுமென இறைவனின் பெருமையுரைத்து விண்ணப்பம் செய்திருப்பினும், அவரின் பழிப்புரைகளையும் வெளிப்படுத்தத் தவறவில்லை(மேலது:46). நஞ்சுண் மழைதரு கண்டன், குணமிலி, மானிடன், தேய்மதியன், பழைதருமாபரன் என்பன இறைவன் மீதான பழிப்புரைச் சொற்களாக மாணிக்கவாசகர் முன்வைப்பனவாகும். இப்பழிப்புரைக்கான காரணம் என்னைக் கைவிடாதொழிதல் வேண்டும், அவ்வாறன்றி என்னை கைவிடின் நினது பழிப்புரைகளை அறைவன் என்பதே.

உலகப்பிறவிகள் அஃறிணை, உயர்திணை எனும் பாகுபாட்டிற்குரியன. அஃறிணைப் பிறவிகளானவை எதனையும் சிந்தித்துப் பகுத்துணரும் வல்லமை அற்றவை. இவை மனிதப் பிறவியிலும் கீழ்ப்பட்டனவாகக் கருதப்படுவன. மக்களாகப் பிறந்த அனைவரும் உயர்திணைக்கு உரியவர்களாவர். எதனையும் பகுத்தாராயும் அறிவு மனிதனுக்கு இயல்பாக உள்ளது. ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்களினால் அகப்பட்டு எண்ணம்

எதுவுமின்றி மாறுபட்ட குணவியல்புகளால் அறிய வேண்டியனவற்றை அறியவும் உணரவும் முடியாதவனாய் இருக்கும் நிலையில் மனிதன் தன்னைத் தாழ்த்திக் கொள்வதுண்டு. தமது செயலின் இழி நிலையை வெளிப்படுத்துவதற்காக கீழான பிறவிகளுடன் ஒப்பிட்டுரைக்கும் மனவுணர்வு மாந்தரிடையே இயல்பாகவே எழுவதுண்டு. பக்தி நிலையிலும் இது சாத்தியமாகக் கூடும் என்பதனை பக்தியியலாளர்களின் கருத்துக்களால் அறியவியலும். இதற்கு மாணிக்கவாசகரும் விதிவிலக்கல்ல.

மனமானது மாறுபட்ட எண்ணங்களைத் தரக்கூடியது. மனித எண்ணங்களே அவனது வாழ்வினைத் தீர்மானிக்கின்றன. 'மண்ணில் நல்லவண்ணம் வாழலாம்'(சம். தேவாரம்:3:24:1) என்பது சம்பந்தரது ஞானவுபதேசம். இதனை 'எண்ணில் (நினைத்தால்) நல்லவண்ணம் வாழலாம்' என்றே நோக்கவேண்டும். இன்பம் - துன்பம் என்ற இருவகையான மனவுணர்வு இவற்றின் விளைவுகளாகும். பெரும்பாலும் அலை பாயும் இயல்புடைய மனதினைக் கொண்டு செய்யும் செயல்களால் இன்பத்தை நுகருவதனையே இலக்காகக் கொள்ளும் நிலையில் அவையே பெருந் துன்பங்களாகவும் மாறுவதுண்டு. இத்தகைய துன்பங்களை இன்பமாக மாற்றும் வல்லமையும் மனதுக்கு உண்டு. ஆகவே மனமே அனைத்துக்கும் அடிப்படையாகும். இதனாலேயே மனதினை விலங்குக்கு ஒப்பிடுவர். மணி வாசகரும், 'விலங்கு மனத்தால் விமலா உனக்கு'(திருவாசகம்,சவபுராணம்,வரி:56) என்கிறார். விலங்கு மனம் என்பதனை பசுஞானம் எனக்கொள்ளினும் பொருந்தும். ஆகவே, பசுஞானம் மலங்களின் தொடர்பால் நிகழ்வது. இது அறியாமையைத் தோற்றுவிக்கும். அறிய வேண்டுவனவற்றைப் புறுத்தொதுக்கும்.

அறியாமையாற் செய்த செயல்களுக்கு வருந்தும் மனநிலையினை மாணிக்கவாசகரது பாடல்களில் பரக்கக்காணலாம். தனது குற்றத்தின் பொருட்டு மனம்மிக உருகி வருந்துகின்றார். இதனை, 'என் பிழைக்கே குழைந்து வேசறுவேனை'(நீத்தல் விண்ணப்பம்:50) எனுங் கருத்தாலறியலாம். 'யானுன் அருளறியாமையின்' (மேலது:6), 'அறியாச் சிறியேன்'(மேலது:37), 'ஒன்றும் ஆறு அறியாச் சிறியேன்' (மேலது:43) என தன் அறியாமை இயல்பினை வெளிப்படுத்தியிருக்கின்றார். இவ்வாறு வருந்திய நிலையில் இறைவனின் அருளினைப் பெறலாமென்பது அவரது மெய்ப்பாடு. உளவியல் நிலையிலும் இது பொருந்திவரக் கூடியதே. இதனாலேயே கீழான பிறவிகளுடன் ஒப்பிட்டுத் தம்மைத் தாழ்த்திக்கொள்ளும் மனப்போக்குக்கு அருளியலாளர் ஆளாகினார்.

மாணிக்கவாசகர் தன்னை தாழ்த்திக் கொள்ளும் முறைமைகளில் இயலாமையை வெளிப்படுத்துவதும் ஒன்றாகும். இயலுமை என்பதன் எதிர்ப்பதமே இயலாமையாகும். ஆற்றல் இல்லாமையை இச்சொல் குறித்து நிற்கிறது. பல்வேறிடங்களிலும் 'ஆற்றலில்லாதவன்'என்றபண்புடைமையில் மாணிக்கவாசகர் தன்னியல்பினை கேள்விக்கு உட்படுத்துகின்றார்.

பாடிற்றிலேன் - நினது புகழ்ச்சிகளைப்
பாடினேனல்லன்
பணியேன் - நின்னைப் பணிந்து
வணங்கினேனல்லன்
தேடிற்றிலேன் - சிவன் எவ்விடத்தவர்?
எவர் அவ்விறைவனைக் கண்டனர்?
என்ற நிலையில்
நின்னைத் யான் அலறித் தேடினேனு
மல்லன்
ஓடிற்றிலேன் - நின்னைத் தேடி
ஓடினேனுமல்லன்

கிடந்து உள் உருகேன் - நினது பிரிவின் வேதனையினால் செயலற்றுக் கிடந்து உள்ளம் உருகப் பெற்றிலேன்

பசு ஊன் வீடிற்றிலேன் - தசைகளால் போர்க்கப்பட்ட உடம்பினை நீங்கப் பெற்றிலேன் (மேலது:45)

என்றும் 'களிவந்த சிந்தையொடு உன் கழல் கண்டுங் கலந்தருள வெளிவந்திலேன்' (மேலது:15), 'குதுகுதுப்பின்றி நின்றென் குறிப்பே செய்து நின் குறிப்பில் விதுவிதுப்பேனை' (மேலது:34) 'உன் கழல் கண்டும் கலந்தருள வெளிவந்திலேன்' (மேலது:15), என்றும் தன் இயலாமையை வெளிப்படுத்தியுள்ளார். பாடுதல், பணிதல், அலறுதல், தேடுதல், ஓடுதல், உருகுதல் என்னும் இச்செயல்களெல்லாம் உடைய அடிகள், இவை ஒன்றுஞ் செய்திலேன் என எதிர்மறைமுகத்தாற் கூறியது எதனால் எனின் இறையருட்பேறு உடன் கிடைக்கப் பெறாமையே.

கருத்து விளக்க யுக்தியில் உவமையும் ஒன்று. பொதுவாக உவமைப் பிரயோகத்தில் உவமானத்துக்கான பொருளைத் தெரிவதில் செல்வாக்குச் செலுத்தும் இருவிடயங்களை அறியக் கூடியதாக உள்ளது. ஒன்று, யாருக்கு விடயம் சொல்லப்படவேண்டியதாக உள்ளதோ அவருக்கு எளிமையாக விளங்கத்தக்க வகையிலான உவமையைப் பிரயோகிப்பது குறித்த படைப்பாளியின் அக்கறை சார்ந்தது. மற்றையது, பொருளை படைப்பின் கவித்துவ - கலைத்துவ வெற்றிக்காக தன்னாற்றல் காட்டி, உவமையாகப் பிரயோகிக்கும் படைப்பாளியின் ஈடுபாடு சார்ந்தது என இரு விடயங்கள் செல்வாக்குச் செலுத்துகின்றன. அனைவருக்கும் விளங்குவதான உவமையைக் கையாள்வதற்கு இயற்கையையும், உலகியலையும் கூர்மையாக அவதானிக்கும் அறிவு இன்றியமையாததாகும். எங்கும் எப்பொழுதும் நடைபெறவல்லவற்றை உவமானமாகக் கூறினாலேயே சாதாரணரும் அவ்வுவமானங்கள் வாயிலாக, படைப்பாளி சொல்ல விழைந்த கருத்துக்களை அறிந்து கொள்ள முடியும் (பிரசாந்தன்,ஸ்ரீ.,2019:30-31). மாணிக்கவாசரும் தன் இயலாமையை உவமானங்களூடாகச் சாதராண மக்களும் அறிந்துணரக் கூடியவாறு வெளிப்படுத்தியுள்ளார்.

'காருறு கண்ணியர் ஐம்புலன் ஆற்றங் கரைமரமாய் வேருறுவேன்' (நீத்தல் விண்ணப்பம்:3) 'செழிகின்ற தீப்புகு விட்டிலிற் சின்மொழி யாரிற் பன்னாள் விழுகின்ற வென்னை' (மேலது:5), 'இருதலைக் கொள்ளியினுள்ளெறும் பொத்து நினைப்பிரிந்த விரிதலையேன்' (மேலது:9), 'கடலினுள் நாய் நக்கி யாங்குன் கருணைக் கடலினுள்ளம் விடலரியேன்' (மேலது:13), 'கொம்பரில் லாக் கொடிபோல் அலமந்தனன்'(மேலது:20), 'ஆனைவெம் போரிற் குறுந்தூறெனப் புலனால் அலைப்புண்டேன்'(மேலது:21), 'எறும்பு இடை நங்கூழ் என புலனால் அரிப்புண்டலந்த வெறுந்தமியேன்' (மேலது:25), 'பெருநீரறச் சிறுமீன் துவண்டாங்கு நினைப்பிரிந்த வெரு நீர்மையேன்' (மேலது:26), 'மத்துறு தண்டயிரிற் புலன்றீக்கது வக்கலங்கி வித்துறுவேன்' (மேலது:30), 'அடற் கரிபோல் ஐம்புலன்களுக்கு அஞ்சி அழிந்த என்னை' (மேலது:32), 'பொதும்புறு தீப்போற் புகைந்தெரியப் புலன் தீக்கதுவ வெதும்புறுவேன்' (மேலது:36), 'வலைத்தலை மானன்ன நோக்கியர் நோக்கின் வலையிற்பட்டு மிலைத்தலைந்தேன்' (மேலது:40), முழுத்தயில் வேற்கண்ணியரென்று மூரித்தழன் முழுகும் விழுதலையேன்' (மேலது:44), 'உழைதரு நோக்கியர்

கொங்கைப் பலாப்பழத் தீயினொப்பாய் விழைதருவேன்' (மேலது:45), 'விரை யார்ந்தினிய மதுமதுப் போன் றென்னை' (மேலது:34) என பொருத்த மான உவமைகளைக் கையாண்டு தனது இயல்புகளையும் அதிலிருந்து விடுபடவியலாத் தன்மையையும் வெளிப் படுத்தியுள்ளார்.

மேற்படி உவமைகளுடாக தன்னியல் பினை பலவாறு சிறுமை செய்துள்ளார். ஐம்புலன் நுகர்ச்சியே உலகப்பற்றுக்களுக்கு அடிப்படை என்பதனை இறைவன் முன்னிலையில் எடுத்துரைத்துள்ளார். உடலின்பமாகிய சிற்றின்பமே உலகப் பற்றறுத்தலுக்கு முழுவதும் தடையாக இருப்பதனை உணர்ந்தே தான் எடுத்தாண்ட உவமைகளின் வழி அதனைப் பலவாறு குறித்துக்காட்டினாரெனலாம். காம மோகத்தின் உச்சத்தினால் அல்லலுறும் ஆத்மனாக தன்னியல்பினை முன்னிறுத்தி யிருப்பதானது உலக மாந்தர்க்கான அறவுரைப்போதனையே எனலாம்.

ஆன்மாக்கள், மெய்ப்பொருளை நினையாமல், அறியாமல் அல்லது அறிவதற்கு முயலாமல் இருப்பதற்குக் காரணம் உலகியல் பற்றுக்களே. உலகியற் பற்றுக்கள் பாசங்களால் தோன்றுவன. பசுக்களைக் கட்டிய பாசங்கள் மூன்றுண்டு என்பார் திருமூலர் (திருமந்திரம்:2367). ஆணவம், கன்மம், மாயை என்பன அவையாகும். உலகியல் துன்பங்கள் யாவற்றுக்கும் இவையே அடிப்படையாகையால் இவற்றிலிருந்து விடுபடுதலே ஆன்மாக்களின் இலக்காகும். இறைவனே மும்மலப் பற்றறுப் பவனாகையால் அவன் துணையுடனேயே இவ்விலக்கினை அடைய முடியும். 'பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே' (சிவபுராணம்,வரி:64) என்றும், 'பாரிடைப் பாதங்கள் காட்டிப் பாசமறுத்தெனை யாண்ட' (குயிற்பத்து:9) என்றும், 'பாசமானவை பற்றறுத் துயர்ந்ததன் பரம்பெருங் கருணையால் ஆசைதீர்த்து அடியாரிடைக் கூட்டிய அற்புதம் அறியேனே' ஆசைப்பத்து:2) என்றும் மாணிக்கவாசகரே இதனை குறிப்பிடுவார்.

இவ்வுண்மை புலப்படவே இறைவன் முன்னிலையில் பற்றறுத்து எனை ஆண்டருள்க என்ற விண்ணப்பத்தினை முன்வைத்தார். உலகப்பற்றறுத்தாலே இறைவனைப் பற்றிக்கொள்ளவியலும். ஆனால், உலகப் பற்றினை நீக்க முடியாத ஆத்மனாகக் கருதியனடிப்படையில் தன்னை இழிவாகப் பேசியுள்ளார். பதிகத்தின்தொடக்கத்தில்கடையவனேனை எனத்தொடங்கி, கடையவனே என ஈற்றிலும் நிறைவுசெய்திருக்கின்றார். கடை என்பது இழிவு எனும் பொருள் பயப்பது. ஆகவே இழிவானவன் எனும் பொருள்படவே தன்னைக் கடையவனே (நீத்தல் விண்ணப்பம்:1,50) எனக் குறித்தார். மேலும், கள்ளேன் (மேலது:2), பொய்யவன், சிறியேன் (மேலது:7), வினையேன் (மேலது:8,11,21,35), ஐம்புலன்கள் கொண்டு விடுந்தகையேன், கடுந்தகையேன் (மேலது:12), தமியேன் (மேலது:17,38), வெற்றடியேன் (மேலது:23), அடியேன் (மேலது:23,27,28,42), புலனாலரிப் புண்டலந்த வெறுந்தமியேன் (மேலது:25), அறியாச் சிறியேன் (மேலது:37,43), வினைத்துணையேன் (மேலது:39), பழுதுசெய்வேன் (மேலது:44), ஊன் கழியா விதி அடியேன் (மேலது:42) என்று கொடிய வன்சொற்களால் தன்னையே இகழ்ந்துள்ள இடங்கள் பலவாகும்.

மாணிக்கவாசகரிடம் இயற்கை மீதான ஈடுபாடு அதிகம் இருந்தது. இறைவனின் ஆற்றல், அருள்மாட்சி, மறக்கருணை என்பன குறித்துப்பாடிய மாணிக்கவாசகர் இயற்கை வனப்பினையும் உளமுருகிப் பாடியுள்ளார்.

இயற்கை எழில்நிறைந்த இடங்களில் இறைவனுக்கான திருக்கோயில்கள் அமையப் பெற்றிருக்கின்றன. மாணிக்கவாசகர், தலங்களை குறிப்பாக உத்தரகோசமங்கையில் எழுந்தருளியிருக்கின்ற இறைவனை வர்ணித்துப் பாடுகின்ற போது தனது உயர்ந்த எண்ணம், இலக்கு, நடத்தை மற்றும் ஒழுக்க நெறிமுறைகள் குறித்தும் கருத்துப் பகர்கின்றார். இறைவன் திருவடிக்குத் தொண்டு செய்ய முடியவில்லையே எனும் இயலாமையினால் வருந்தி தன்னை இகழ்ந்து கொள்ளுமிடங்களில் இதுவும் ஒன்றாகும்.

நிறைவுரை

மாணிக்கவாசகரின் பதிகங்கள் யாவும் தன்னுணர்வின் வெளிப்பாடுகளாகத் திகழ்வதுடன், இறை-ஆன்மஉறவினை விசாலிப்புச் செய்யும் சிறப்புக்குமுரியன. திருவாசகத்திலுள்ள பதிகங்கள் ஒவ்வொன்றும் உளக்கிளர்ச்சி கொண்டவை. இங்கு, உலகப் பற்றறுக்க விழைந்த ஆத்மனின் உளப்போக்கினை வெளிப்படுத்தும் சான்றுகளாக நீத்தல் விண்ணப்பத்திலுள்ள பாடல்களை இனங்கண்டு கொள்ள முடிகின்றது. இந்த ஆய்வின், மூலமாக இப்பதிகத்தில் காணப்படுகின்ற தற்சிறுமைக் கருத்துக்கள் உய்த்தறி முறையில் அணுகப்பட்ட நிலையில் பின்வரும் முடிவுகள் தொகுத்தறி முறையினூடாகப் பெறப்படுகின்றன.

இறைவனின் இயல்புகள், திருவருட் செயல்கள், தொன்ம வரலாறுகள், எல்லையற்ற ஆற்றல் என்பன பாடல்கள் முழுமையும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. உலகப் பற்றுக்களை அறுத்தலை இலக்காகக் கொண்ட ஆத்மனின் வேண்டுதலாக இப்பதிகம் உள்ளது. இறைவனை முன்னிலைப் படுத்திய இத்தகைய வேண்டுதல்களில் அவ்வாத்மனின் தற்சிறுமைப்படுத்தும் மனப்போக்கினை பலவாறு இனங்காணமுடிகிறது. இழிந்த சொற்கையாளுகை, உவமைகள், பழமொழிகள், நிலையாமைக் கருத்துக்கள், இயலாமை, எண்ணங்கள் ஈடேறாமை, பகுத்தறிவற்ற உயிரினங்களுடன் ஒப்பிட்டுரைத்தல் என்றவாறாக உலகப் பற்றினைத் துறக்க முற்பட்ட ஆத்மனாக மாணிக்கவாசகர் தன்னைச் சிறுமை செய்துள்ளார். ஆயினும் அதிகளவான உவமைக் கையாளுகை மூலமாகவே அவரது கருத்துக்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வுவமைகளில் அவரது எண்ணங்களும் நடத்தைகளும் வெளிப்படுகின்றன. அறியாமையினால் ஏற்படும் மயக்கம் அடைய வேண்டிய இலக்கினை தடுத்துவிடுகின்றது. ஐம்புலன்களின் நுகர்ச்சியே உலகப் பற்றறுத்தலுக்குத் தடைகளாகும். மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்யும் இயல்புடையன. இத்தன்மை பல்வேறிடங்களிலும் அழுத்திப் பேசப்பட்டுள்ளது. சுருங்கக் கூறின் பிரபஞ்ச வைராக்கியமும் கைவிடாதொழிதல் வேண்டுமெனும் வேண்டுகையும் இச்சிறுமைப்படுத்தும் மனப்போக்கினூடாக வெளிப்பட்டிருக்கின்றதென்பதும் அது சரணாகதி அடைதலின் பிரதிபலிப்பே என்பதும், பக்தி உளவியலில் இந்த மனப்பாங்கு தவிர்க்கவியலாததொன்று என்பதும் இனங்காணப்பட்டுள்ளது.

உசாத்துணை நூல்கள்

அருளம்பலவனார், சு.,(1967), **திருவாசக ஆராய்ச்சியுரை**, முதலாம் பாகம், ஸ்ரீலங்கா புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

கந்தசாமி, சோ.ந., (2007), **பன்னிரு திருமுறை**, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்,.

சித்பவானந்தர் (உ.ஆ.), (2017), **திருவாசகம்**, (பதினெட்டாம் பதிப்பு), ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம், திருச்சி.

சுந்தரமூர்த்தி, இரா., (1995), **தமிழ் வளர்க்கும் திருவாசகம்,** நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்,சென்னை.

சுப்பிரமணியதேசிகர், (உ.ஆ.), (1960), **திருப்பள்ளி எழுச்சி உரை**, நாமகள் அச்சகம், யாழ்ப்பாணம்.

சுப்பிரமணியபிள்ளை, கா, (உ.ஆ.), (1997), **திருவாசகம்**, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, திருநெல்வேலி.

சுப்பிரமணியபிள்ளை,கா., (1968), **மணிவாசகப்பொருமான் வரலாறு**, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி.

திருக்குறள் பரிமேலழகர் உரை, கழகப்பதிப்பு, திருநெல்வேலி தென்னிந்தி சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை,

நடராசன், பி.ரா., (2007), **மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம் மூலமும் உரையும்**, உமா பதிப்பகம், சென்னை.

பரமேஷ்,செ., (2007), **சமூக உளவியல்**, சாந்தா பப்ளிக்ஷர்ஸ், சென்னை.

பொன்னையா, ஆ., (2003), **சிவபுராணம் தெளிபொருள் விரிவுரை**, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, திருநெல்வேலி.

முகுந்தன்,ச., (2020), **இந்து சமயத்தில் இயற்கை மெய்யியல்: திருமந்திரம், திருவாசகப் பனுவல்களை முன்னிறுத்தி**, இந்துநாகரிகத்துறை, இந்துக்கற்கைகள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

சைவசித்தாந்தம் கூறும் முத்திநிலையில் ஆணவமலம்.

ஜெயந்திரன், இ.

ஆய்வுச் சுருக்கம்

ஆன்மாவின் அறிவினை அணுத்தன்மைப் படுத்துவதால் ஆணவம் எனப் பெயர் பெறுகின்றது. ஆணவம் என்பது பண்பு அன்று, அது ஒரு பொருள். அறியாமை எனும் குணத்தை உடைய குணிப் பொருள். கண்ணினை மறைக்கும் புற இருளைப் போல அறிவை மறைக்கும் அக இருள் ஆணவம். ஆணவத்தினை ஆன்மீக இருள் 'spiritual darkness' என்றே கூறுவர். உயிர்க்கு இயல்பாக உள்ள வியாபகத்தன்மையை மறைத்து அதனைச் சிறுமைப்படுத்துவதால் சிற்றறிவும் சிறிதொழிலும் உடையதாக ஆக்குகின்றது. இந்திய தத்துவப் பரப்பில் ஆணவம் எனும் பொருளினைத் தெளிவாக விளக்கும் தத்துவமாகச் சைவசித்தாந்தம் திகழ்கின்றது. ஆன்மாபடும் அனைத்துக் கேட்டிற்கும் ஆணவமே காரணம். இருளானது புறப்பொருட்களை மறைக்கும், அதே வேளை தான் இருள் எனும் தன்மையினைக் காட்டி நிற்கும். ஆணவம் தன்னையும் காட்டாது. ஆன்மாவின் உண்மையினையும் உணரவொட்டாது. அதனால் இருளினைவிடக் கொடியது என்கிறார் உமாபதிசிவாச்சாரியார். உயிர்கள் பக்குவம் பெற்றபோது திருவருளே குருவாக எழுந்தருளிவந்து ஆணவத்தின் உண்மையினை உணர்த்தினாலே உயிர்களால் அதனை உணர முடியும். இறைமைக் குணங்களான எண்குணங்களை உடன்பட்டுச் சொல்வது போல ஆணவத்துக்கு எதிர்மறைக் குணங்கள் கூறப்படுகின்றன. முத்திநிலையில் ஆணவத்தின் இருப்புப் பற்றியும், அதன் இயல்பு பற்றியும் பல்வேறு கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. முத்திநிலையில் ஆணவம் உண்டு, முத்தியில் ஆணவம் இல்லை எனும் இரண்டுவிதமான கருத்துக்கள் காணப்படுவதை ஆய்வின் பிரச்சினையாக எடுத்துக்கொண்டு. முத்தியில் ஆணவம் உண்டு என்பதைக் கருதுகோளாகக் கொண்டு ஒப்பீடு, பகுப்பாய்வு, விபரணம் போன்ற ஆய்வு முறையியல்களைப் பயன்படுத்தி இவ்வாய்வு முன்னெடுக்கப்படுகின்றது.

திறவுச்சொற்கள்: *ஆணவம், திரோதாயி, சகசமலம், மூலமலம், சைவசித்தாந்தம்*

அறிமுகம்

சைவசித்தாந்தம் கூறும் முப்பொருட் களுள் ஒன்றாகவும், பாசம் எனும் சொல்லின் பொருளாகவும் ஆணவம் திகழ்கின்றது. ஆணவம் ஒன்றாக உள்ளபோதும் தனது எண்ணிறந்த சத்திகளால் எண்ணிறந்த உயிர்களைப் பந்திக்கின்றது. மேற்படி ஆணவமலத்தின் இயல்பை,

ஒன்றதாய் அநேகசக்தி
உடையதாய் உடனாய் ஆதி
அன்றதாய் ஆன்மாவின்தன்
அறிவொடு தொழிலை ஆர்த்து
நின்று போத்திருத்துவத்தை
நிகழ்த்தி செம்பினில் களிம்பு ஏய்ந்து

என்றும் அஞ்ஞானம் காட்டும் ஆணவம் இயைந்து நின்றே. (சித்தியார்.சுப.170)

எனச் சிவஞானசித்தியார் கூறுகின்றது. ஆணவம் ஆன்மாவிற்கு அனாதி பந்தமாகும். அப்பந்தம் நீங்குவதே ஆன்மாவின் இறுதி இலக்காகும். உலகினை முதல்வன் படைப்பதன் நோக்கம் ஆணவம் பரிபாகம் பெறும் பொருட்டாகும்.

முப்பொருளும் அநாதி என்பதற்கமைய ஆணவமும் ஆதியும் அந்தமும் அற்ற அநாதியானது. முத்தி நிலையில் ஆணவம் உண்டா? இல்லையா? எனும் வினாவிற்கு உண்டு என்றால் திருவருள் அடைதல் இயலாது, இல்லை என்றால் முப்பொருள் அனாதி என்று சொல்லுதல் முடியாது. என்னும் இரண்டு தடைகளை நிகழ்த்தி அத்தடைகளை உமாபதிசிவாச்சாரியார் சிறப்பாக நீக்குகிறார். மேற்படி பாடலில் ஆணவம் பற்றிய பல தவறான கருத்துக்களை நீக்கித் தெளிவு தருகிறார்.

அழிந்திடும் பாசம் என்னில் நித்தம் என்று
உரைத்தல் வேண்டா
அழிந்திடாது என்னின் ஞானம் அடைவது
கருத வேண்டா

அழிந்திடுஞ் சத்தி நித்த மழிந்திடா தொளியின்
முன்னர்
அழிந்திடும் இருளும் நாசம் அடைந்திடா
மிடைந்திடாவே
(சிவப்பிரகாசம்.பா.88)

சைவப் பிரிவுகளில் ஒன்றான பேதவாத சைவம் முத்திநிலையில் ஆணவம் பற்றிக் கூறுகையில் செம்பின் களிம்பானது குளிகையினாலே அழிந்து செம்பு பொன்னாவது போல ஆணவம் திருவருளால் அழிந்து ஆன்மா சிவமாக மாறும் என்பர். இவர்கள் முத்தியில் ஆணவம் அழிந்துவிடும் என்று கூறுவர். இக்கருத்தினை, "செறிவுஉறு செம்பில் கறைஉறு களிம்பு - குளிகை தாக்க ஒளிபெற் றாங்கு (சங்கற்பநிராகரணம். செ.9.வரி.2-3) எனப் பேதவாதி சங்கற்பமாக உமாபதியார் கூறுகிறார். முப்பொருட்களும் அநாதியானது என்பது சிவாகமங்களின் துணிபாகும். இதனையே திருமந்திரம், 'பதி பசு பாசம் எனப்பகர் மூன்றில் பதியினைப்போல் பசு பாசம் அநாதீ' (திருமந்திரம்) என்று கூறுகின்றது. எனவே பேதவாதிகள் சொல்வதுபோல முத்தியில் ஆணவம் அழியும் என்று கூறுவது பொருந்தாது. இதனையே, 'அழிந்திடும் பாசம் என்னின் நித்தம் என்று உரைத்தல் வேண்டா' எனக் கூறுகிறார். இக்கருத்தினை,

"மறைகள் ஆகமத் துறைகள் மற்று எவையும்
நாசம்இல் பதிபசு பாசம்என்று உரைத்தல்
அயர்த்து ஓர் குளிகைச் சயத்தால் தாம்பிரக்
காளிதம் நாசம் பாசத்து ஏய்தல் - கூடாது"

(சங்கற்ப நிராகரணம்.செ.10.வரி.1-4)

எனப் பேதவாதி சங்கற்ப நிராகரணத்தில் கூறுதல் காணலாம்.

அடுத்து சைவசமயப் பிரிவில் ஒன்றான பாடாணவாதசைவர்கள் முத்தியில் ஆணவம் அழியாது நித்தியமாக இருக்கும் என்பர். இவர்கள் முத்தியில் ஆன்மா ஆணவத்தால் அறிவு முழுமையும் மறைப்புண்டு எதுவித அனுபவமும் இன்றிக் கல்லுப்போல் கிடக்கும் என்பர். ஆணவம் உயிர்க்கு குணம் அது குற்றமில்லை என்றும் கூறுவதால் ஆணவம் முத்தியில் உயிரை விட்டு நீங்குவதில்லை என்பது இவர்களது கருத்தாகும். சித்தாந்தம் ஆணவம் உயிர்க்கு குற்றம் என்று கூறுவதால் அது முத்தியில் உயிரை விட்டு நீங்கும் என்பர். மேற்படி பாடாணவாதர் கருத்தை,

"புருடன்தன் குணம் அவித்தை எனின் சடம்
புருடன் ஆகும்
குருடன் தன் கண்ணின் குற்றம் கண்ணின் தன்
குணமோ கூறாய்"
(சிவஞானசித்தி.சுப.175)

என்னும் சித்தியார் பாடல்வரிகள் மறுத்துதமது கருத்தை நிலைநாட்டுகின்றது. ஆணவம் முத்தியில் நீங்காவிடின் ஆன்மாவிற்கு அறிவானது பிரகாசிக்காது. அறிவு பிரகாசிக்காதவிடத்து ஆன்மா முத்தி பெறுதல் இயலாது. எனவே முத்தியில் ஆணவம் அழியாது என்று கூறும் பாடாணவாதிகள் கூற்றினை மறுக்க, 'அழிந்திடா தென்னின் ஞானம் அடைவது கருத வேண்டாம்' எனச் சிவப்பிரகாசம் கூறுகின்றது. இவை இருவேறுபட்ட நிலையாகும். முத்தியில் ஆணவம் அழிந்திடும் என்பதும் தவறு அழியாது என்பதும் தவறு என்றால் எவ்வாறு கூறுவது என்பதற்கு மேல்வருமாறு விடை பகர்கிறார்.

இறைவன் வியாபகமாக இருப்பினும் மலம் அவனைப் பற்றுவதில்லை முப்பொருட்களில் ஆணவமும் அநாதி, முதல்வனும் அநாதி, உயிரும் அநாதி. அதுபோல் முப்பொருட்களும் வியாபகப் பொருளாக இருப்பினும் முதல்வனது வியாபகத்தோடு ஒப்பிடுகையில் உயிர் வியாப்பியப் பொருள் (உள்ளடக்கம்), பாசம் வியாத்திப் பொருள் (சமநிறைவு). இறைவன்

சூக்கும சித்தாக இருப்பதால் பாசத்தால் முதல்வனைப் பற்ற முடிவதில்லை. உயிர்கள் தூல சித்தாக இருப்பதால் பாசம் உயிர்களின் அறிவினைப் பற்றுகின்றது. ஆகாயமானது அனைத்து இடங்களுக்கும் இடம் கொடுத்து இருக்கும் வியாபகப் பொருள், அதன் உள்ளடக்கமாகக் கடல்நீர் காணப்படுகின்றது. கடல்நீரில் உப்புக் கலந்து காணப்படுகின்றது. உப்பானது கடல் நீரைப் பற்றுமே அல்லாது ஆகாயமாகிய வெளியைப் பற்றாது. அதுபோலப் பாசமானது உயிரைப் பற்றுமே அல்லாது. பதியைப் பற்றாது. இதனை, 'தண்கடல்நீர் உப்பு' (சிவஞானபோத எடுத்துக்காட்டு வெண்பா.44) என்னும் சிவஞான போத எடுத்துக்காட்டு வெண்பாமூலம் அறியலாம். இருபா இருபஃது எனும் நூலில் அருணந்தி சிவாச்சாரியார் தமது குருநாதராகிய மெய்கண்டாரிடம் ஒரு வினாவினை வினாவுகின்றார்.

இறைவன் வியாபாகப் பொருள். இறைவன் இல்லாத இடம் இல்லை. அவ்வாறானால். உயிருக்குத் தன் உண்மை நிலை என்பது அநாதியாகவே ஆணவத்தோடு அத்துவிதப்பட்டு இருப்பதாகும். அவ்வாறு ஆணவத்தோடு அத்துவிதப்பட்டு இருக்கும் கேவல நிலையில் உயிர் தனித்து அறியாமையில் அழுந்தி இருந்தது எனின் முதல்வனாகிய நீ எங்கே சென்றாய். அவ்வாறு உயிர் தனித்து இருக்காது முதல்வனது வியாபகத்துள்ளே இருந்தது எனின் பாசம் எவ்வாறு தன்னைப் பந்தித்தது? எனும் வினாவினைக் கேட்கின்றார். இதனை, "சடலக் கருவியா தாங்குணர்தக் காண்பதுதா னென்னை - மருவியா தென்றுரைக்க மன்" (இருபா விருபஃது: செய்யுள்.9.வரி.27-28) என்பதில் காணலாம். இதற்கான விடையாக முதல்வன் உயிரோடு அத்துவிதப்பட்டு ஒன்றாகவே இருந்தார் என்பதை,

"முன்னை மலத்தினுமிருள் மூடா
வகையகத்துள்
துன்னுமிருள் நீங்குஞ் சுடரேபோல்'
(போற்றிப்பஃறொடை. வரி.33-34)

எனப் போற்றிப்பஃறொடை கூறுகிறது. ஆணவம் உயிரின் அறிவினை முழுமையாக மறைத்திருக்கின்ற போது உயிரால் இறைவனை உணர முடிவதில்லை. சிறு பிள்ளையானது பொற்கிண்ணத்தில் பால் கொடுத்தால் பாலினை அருந்தி விட்டு அக்கிண்ணத்தின் பெறுமதியை அறியாது அதனை எங்கோ விட்டுவிடும். அதுபோல் முதல்வன் உடன் இருந்தும் உயிர்களால் அவனை உணர முடிவதில்லை. அதற்காக முதல்வன் இல்லை என்பதற்கில்லை. பதிஞானம் வளர் ஒளி என்பதால் அதனை அகவொளியாகிய ஞான ஒளி எனலாம். புற ஒளியானது பிரகாசித்தபின் குறைந்து செல்லும். அதனால் இருள் படிப்படியாக வெளிப்படும். ஆனால் அக வொளி அவ்வாறு அன்று அது வளர்ந்து கொண்டு இருக்கும். அதனால் அதன் வளர்ச்சிக்கு ஏற்ப இருளும் அடங்கிவிடும். அதனாலே வளரொளியாக இருந்து ஆன்ம அறிவினை வளர்த்து அஞ்ஞானம் நீக்குகிறார் இறைவன். கட்டுநிலையில் பாசத்திற்கும் பதிக்கும் உயிரின் அறிவே இடம் 'ஒளிக்கும் இருளுக்கும் ஒன்றே இடம்' (கொடிக்கவி.01) என்கிறது கொடிக்கவி. ஆனால் முத்தியில் பாசம் நீங்க பதிமட்டுமே உயிரின் அறிவில் இடம்பெறுகின்றது. பாசம் நீங்கினாலும் அதற்கு அழிவில்லை.

சிவஞானசித்தியார் கூறுகையில் ஆணவம் நித்தியமானது. முத்தி பெற்ற ஆன்மாக்களிடத்து அதன் ஆற்றல் நீங்கியவிடத்தும் பெத்தான்மாக்களிடம் அது இருப்பதால் அதன் அநாதித்துவத்

துக்குக் கேடு இல்லை என்கிறது. இதனை,

நெல்லினுக்குத் தவிடு உமிகள் அநாதியாயே
நெல்லைவிட்டு நீங்கும்வகை
நின்றநிலை நிகழ்த்தீர்
சொல்லியிடின் துகளற்ற அரிசியின்பால்
இல்லை தொக்கு இருந்து
மற்று ஒருநெல் தோன்றிடாவாம்
மெல்ல இவை விடும் அறவே
இவைபோல அணுவை
மேவும் மலம் உடல் கன்மம் அநாதி விட்டே
நீங்கும்
நல்ல சிவ முத்தியின்கண் பெத்தான் மாவை
நணுகிநிற்கும் ஆதலால் நாசமும் இன்றாமே.
(சித்தியார்.சுப.315)

எனும் செய்யுளில் காணலாம். அதாவது அரிசியோடு சகசமாய் நின்ற முளை, தவிடு, உமி கெட்டொழிந்தால் அரிசி முளைப்பதில்லை. அவ்வரிசியோடு முளை, தவிடு, உமி பிரிப்பின்றி நிற்கும்போதே அது முளைக்கும். அதுபோலவே மூவகைப் பாசங்களும் நீங்கியவிடத்து உயிர்க்குப் பிறப்பு இல்லை. நீங்காதவிடத்து பிறப்பு உண்டு. பிறவாப் பெருநிலையாகி முத்தியில் உயிர்க்கு பாசம் இல்லை என்று கூறுவதே பொருந்தும். பாசம் நீங்குவதாலே உயிர்க்குப் பேரின்பம் கிடைக்கின்றது. இதனை, 'இத்தை விளைத்தல் மலம்' *(உண்மைவிளக்கம்.51)* என உண்மைவிளக்கம் கூறுகின்றது. பாசம் நீங்கினும் அது அழிந்துவிடுவதில்லை. கட்டுநிலையில் உள்ள உயிர்களிடம் அது இருக்கின்றது.

சிவநெறிப் பிரகாசம் முத்திநிலையில் ஆணவம் பற்றிப் பிறிதொரு வகையான விளக்கத்தைத் தருகின்றது. முத்தியில் ஆணவத்தின் ஆற்றல் நீங்குவதில்லை. இறைஞானம் பெற்ற உயிரின் அறிவினை ஆணவம் பாதியாது என்கிறது. பூனை, கோட்டான் போன்ற உயிரினங்களின் கண்பார்வையினை புறவிருள் தடுப்பதில்லை. அவை நன்கு இருள் சூழ்ந்துள்ள போதும் நன்றாகப் பார்க்கும் திறன் கொண்டது. அதுபோல முத்தி பெற்ற உயிர்களின் ஞானத்தையும் ஆணவ இருள் தடுப்பதில்லை. அதனால் முத்தியில் ஆணவம் அழிவதும் இல்லை. அதுபோல முத்தி பெறுவதற்கும் தடையில்லை என்கின்றது. இதனை,

அனாதியாய் விபுவாகி நித்த மான
வாணவந்தா னீங்கும்வகை யாவ தெங்ஙன்
எனாதுகொணீ செம்பினுட் களிம்ப னாதி
யிரதகுளி கையினாலே யேகப் பொன்னாம்
மனாதிருடா னிறைந்திருந்தும் பூஞை யாதி
மணிவிழியி னங்ஙனருண் மன்னி னோர்பால்
துனாதுகெடு மாணவந்தான்
மற்றோர் தம்மைத்
துடக்கிநிற்கு மாதலினாற் சோர்வு மின்றே.

(சிவநெறிப்பிரகாசம்.பா.185)

எனும் செய்யுளில் காணலாம். செம்பினிடத்துண்டான களிம்பானது இரசகுளிகையின் பரிசத்தால் நீங்கிப் பொன்னாவது போல் அநாதியே மலசம்பந்தம் உற்ற ஆன்மா சிவசத்தியின் பரிசத்தால் பாசம் நீங்கித் தூய்மையாக மாறுகின்றது. இவ்வாறு தூய்மை பெற்ற ஆன்மாவைப் பாசம் பந்திப்பதில்லை. ஆனால் பெத்த நிலையில் இருக்கும் ஆன்மாவை அது பந்திக்கத் தடையில்லை.

ஆணவம் உயிர்க்கு அநாதி சம்பந்த முடையது ஆன்மாவின் தன்னுண்மை நிலை ஆணவத்தோடு அத்துவிதமாக இருப்பதாகும். ஆன்மா அறிவு, செயல், இச்சை இன்றிப் பாடாணம் போல் தன் செயலற்றுக் கிடக்கும் நிலை இதுவாகும். இதனை தாயுமான சுவாமிகள் "ஆணவத்தோடு அத்துவிதமானபடி மெய்ஞானத் தானுவோடு அத்துவிதமாவது எந்நாளோ" என்று கூறுவதில் காணலாம். படிகத்துக்கு இயல்பாக ஒளியும் செம்பிற்கு

இயல்பாக களிம்பும் உள்ளது போலவே முதல்வனுக்கு அநாதி முத்தத்துவமும் ஆன்மாவிற்கு அநாதி பெத்தத்துவமும் உள்ளது. இதனை ஞானமிர்தம், "அம்ம சீருணம் திகழ்ஒளி பளிங்கு போல" (ஞானாமிர்தம்.செய்யுள்.9.வரி.6-7) எனக் கூறுவதில் காணலாம். நெல்லிற்கு உமியும் செம்பில் களிம்பும் இயல்பாக உள்ளது போன்றது இது இதனை, "நெல்லிற்குமியும் நிகழ் செம்பினிற் களிம்பும் சொல்லிற் புதிதன்று தொன்மையே" (சிவஞானபோதம் எடுத்துகாட்டு வெண்பா.12) எனச் சிவஞானபோதம் கூறும்.

மும்மலங்களும் அவற்றின் காரியங்களும் அவை நீங்கும் முறையும்

ஆணவம் எனும் சகச மலநீங்கும் மருந்தே கன்மம், மாயை எனும் ஆகந்துக மலங்கள். இவை ஆணவம் போன்று அனாதியாகிய போதும் உயிர்களுக்கு முதல்வனால் இடையில் கூட்டப்படுவதால் அதனை ஆகந்துகம் என்பர். வினை நல்வினை, தீவினை என இருவகைப்படும். அவற்றுள் வேதாகமத்தில் விதித்தவழி நில்லாமை தீவினை, விதித்த வழி நின்று அருள்வழி நில்லாமை நல்வினை. உலகம் எதில் தோன்றி எதில் ஒடுங்குகின்றதோ அது மாயை எனப்படும். உயிர் அறிவை மறைப்பதுவும் விபரீத விடயங்களில் செலுத்துவதும் ஆணவ மலத்தின் இயல்பாகும். கன்மம் மாயைக்கு சொரூபம் அருளோடு சேர்ந்து விளக்குதல் தடத்தம் மருளோடு சேர்ந்து மயக்குதலுமாகும். இவற்றுள், ஆணவமலத்தின் காரியம் அறியாமை, கன்ம மலத்தின் காரியம் இன்பதுன்பம், மாயாமலத்தின் காரியம் உலகமும் உலகப் பொருட்களுமாகும். ஞானாமிர்தம் மாயையின் காரியம் பந்தம் என்றும் வினையின் காரியம் போகம் என்றும் ஆணவத்தின் காரியம் போகம் நிறுத்துதல் என்றும் கூறுகிறது. இதனை, "பந்தம் போகம் போகம் நிறுத்தலும் வந்தது மாயை வினை மலத்து" (ஞானாமிர்தம். செய்யுள்.51.வரி.7-8) எனக் கூறுவதும் இதனைச் சித்தியார் உரையில் சிவஞான சுவாமிகள் எடுத்துக் காட்டுவதும் குறிப்பிடத்தக்கது.

மும்மலங்களுள் ஆணவ மல நீக்கமே வீடு பேறு. ஆணவ மலம் நீங்க வேண்டுமானால் அதனைக் காரியப்படுத்துகின்ற மாயா கன்மங்கள் நீங்க வேண்டும். மாயை நீங்குவதாவது கான்ற சோறுபோல (வாந்தியெடுத்த / அருவருக்கத்தக்க) உலகை வெறுத்தல். அதாவது பற்றற்று இருத்தல். கன்மத்தில் சஞ்சிதவினை அத்துவ சோதனை மூலமும், பிராரத்தம் அனுபவத்தின் மூலமும், ஆகாமியமமும் ஆணவமும் இறைவனது ஞானா சத்தி மூலமும் நீங்கும். இதனை,

மூன்றுதிறத்து அணுக்கள் செய்யும் கன்மங்கட்கு
முந்நிலையாம் மூவிரண்டாம் அத்துவாவின்
ஆன்றமுறை அவை அருத்தி அறுத்து மலம்
முதிர்வித்து
அரும்பருவம் அடைதலுமே ஆசானாகி
தோன்றி நுகராதவகை முன்செய் கன்மத்
துகள் அறுத்து அங்கு அத்துவாத்துடக்கு
அறவே சோதித்து
ஏன்ற உடல் கன்மம் அனுபவத்தால் அறுத்து
இங்கு
இனிச்செய்கன்மம் மூலமலம் ஞானத்தால்
இடிப்பன்
(சிவஞானசித்தியார்.சுப.262)

எனும் செய்யுள் மூலம் அறியலாம்.

ஆணவத்தின் சத்தி

ஆணவத்திற்கு இரண்டு வகையான சத்திகள் உண்டு. ஒன்று ஆவாரக சக்தி. இவ்வாற்றல் மூலமே ஆன்மாவின் அறிவினை முழுமையாக மறைக்கும். அடுத்து அதோநியாமிகாசத்தி. இச்சக்தி மூலம் கட்டுநிலையில் உள்ள உயிர்களின்

அறிவினை விபரீத விடயங்களில் செலுத்துகின்றது. கேவல நிலையில் ஆவாரக சத்தி, சகல நிலையில் அதோநியாமிகாசத்தி, சுத்த நிலையில் 'அந்தர் பாவிதம்' என்பர். அதாவது முத்தி நிலையில் ஆன்மாவின் அறிவில் இருந்து நீங்கும் நிலையை ஆணவத்தின் சத்தி பெறுகையில் அதனை அந்தர் பாவிதம் என்பர். ஆனால் ஆணவத்துக்கு இரண்டு சக்திகளைக் கூறுதலே பெருமரபாக உள்ளது.

ஆணவத்தின் குணங்கள்

ஆணவம் ஒன்றாக உள்ளபோதும் அதனது ஆற்றலினைப் பலவாகக் கூறும் மரபு காணப்படுகின்றது. சிவநெறிப் பிரகாசம் ஏழு வகையான குணங்கள் உள்ளதாகக் கூறுகின்றது. இதனை,

ஏகமா யனேகமாஞ் சத்தியுள தாகி
யெண்ணிலுயிர் ஞானத்தைத் தடுப்ப தாகி
மோகமுத லேழ்குணங்க ளுடைய தாகி
முடிவிலதா யனாதியுமாய் முத்தியுயிர்க் காகப்
பாகமாம் படியாதி சத்தியது பண்ணப்
படுவதுமாய்ப் பக்குவத்தை யடையுயிர்கள் பாலில்
ஆகமா திகள்யாவு மடையாது முத்தி
யடைவதற்குத் தானீங்கு மாணவமென் றறியே
(சிவநெறிப்பிரகாசம் - 46)

எனும் செய்யுளில் காணலாம். இதில் மோகம், மதம், அராகம், விஷாதம், சோஷம், விசித்திரியம், ஹர்ஷம் எனும் ஏழு குணங்களை உடையதாகக் கூறப்படும்.

முத்தியில் ஆணவத்தின் ஆற்றல்

ஞானம் பெற்ற ஆன்மாக்களை ஆணவத்தின் ஆற்றல் பாதிப்பதில்லை. இதனைத் தத்துவப் பிரகாசம் பின்வருமாறு கூறுகிறது,

ஆணவ சத்தி தானும் அலரியின் முன்ப னிப்போற்
காணழல் இருள்போல் நஞ்சு கடியவுடதம்போற்
நாணுறு கருடன் போலும் நற்பித்தம்
இரதத் தாற்போல்
நீணுறா தகலும் அத்தால் நின்றார்பால்
அன்றிக் குன்றா.
(தத்துவப்பிரகாசம்.329)

எனக்கூறுகிறது. அதாவது ஆதித்தன் முன் பனி நீங்குவது போலவும், ஒளியோடு சேருகின்றபோது கண்ணிருள் நீங்குவது போலவும், ஔஷதம் மூலம் நஞ்சின் விடம் நீங்குவது போலவும், கருடதியானத்தின் மூலம் பாம்பின் விடம் நீங்குவது போலவும், பித்தமானது இரசபதார்த்தம் மூலம் நீங்குவது போலவும் ஞானத்தினால் அஞ்ஞானமாகிய மலம் நீங்கும். இவ்வாறு மலம் நீங்கினாலும் அது அழிவதில்லை.

சீவன்முத்தரை ஆணவம் பாதிக்காமை

முத்தி பெற்ற ஆன்மாக்களுள் உடலோடு இருக்கும் போது சிவானந்தத்தை அனுபவித்தவர்களை சீவன் மூத்தர் என்பர். இவர்களைச் சிவஞான சித்தியார் சாக்கிரத்தே அதீதத்தை உணர்ந்த தபோதனர்கள் என்று கூறுகின்றது. இவர்கள் பிராரத்த கன்மம் இருக்கும் வரைக்கும் இவ்வுடலோடு இருப்பது கட்டாயமாகும். அத்தகைய காலத்தில் ஆணவம் அவர்களைத் தாக்குவதில்லை. இதனை,

பதி பசு பாசம் மதியோர் வரத
உலையா என்பதைத் தலைநனி நிறீஇ
உடையா தாயின் ஒருபொரும் பாசம்
அடையா வீடுஎனக் கடைநனி கழறின்
தன்உரை மலைவும் முன்பின் மலைவும்
அன்னவை அருளோய் ஆம்எனில் பன்னிய
உடையா மாண்டவர் அடையா பொடிபட
மாமரம் அன்ன தளிர்க்கை தாங்கினும்
மந்திர மாக்கட்கு அந்தரம் யாதே
செம்புஇது செறிந்த புன்புறக் களங்கம் இதுஷி
என்று உரைகூடா எழில்வளர் சீருணம்

சித்து நீர்செறிந்தது ஒத்தே மிக்க
விடக்கெழு பெருவலி உளங்கொள் மந்திரத்து
அடங்கிய தன்மையும் அற்றே குடங்கர்க்
கலங்குநீர் இல்ல நலம்கிளர் விழுக்காழ்
அளைந்த மாறென இணங்குஇறந்து அகன்ற
மாசில் ஞான மன்பெரு தகையே.

(ஞானாமிர்தம்.செய்யுள்.52)

என ஞானாமிர்தம் கூறுகிறது. ஞானியரைப் பாசம் பாதிப்பதில்லை என்பதை நான்கு உவமைகள் மூலம் இப்பாடல் எடுத்து விளக்கியுள்ளது. இச்செய்யுள் முத்திநிலையில் ஆணவத்தின் தன்மை தொடர்பாக ஐயுறுபவர்க்கு தெளிந்த விளக்கமாக அமைகின்றது. பதி, பசு, பாசம் எனும் முப்பொருளும் அநாதி நித்தியப் பொருள் என்பதால் அவை ஒருபோது அழிவதில்லை. அவை ஒரு இடத்தில் இருந்து இன்னொரு இடத்துக்கு இடம் பெயர்வதுமில்லை. அது அழிவதுமில்லை. அவ்வாறானால் ஆணவம் முத்தியில் ஆன்மாவை விட்டு நீங்கும் என்று கூறுவது எதனால் எனில் அது ஆன்மாவின் அறிவினைப் பந்திப்பதில்லை என்பதற்காகவே.

மந்திரத் தம்பனம் வல்லவர்கள் நெருப்பினைக் கையில் ஏந்தினும் அது அவர்களைச் சுடுவதில்லை. அது போல சிவானந்தம் பெற்ற ஞானியரை ஆணவம் பந்திப்பதில்லை.

செம்பினை இரச குளிகை பரிசித்த காலத்தில் அதனோடு வேறறக் கலந்திருந்த களிம்பு வேறாய் நீங்கிப் போவது போல. முத்தி பெற்ற ஞானியரின் அறிவில் உள்ள ஆணவ அழுக்கும் நீங்கி விடும். இரச குளிகையில் பரிசத்தால் செம்பு பொன்னாக மாறுமே அல்லாது அழிந்து விடாது. அதுபோல ஆன்மா கெட்டுச் சிவமாக மாறுவதில்லை. மேலும் ஆணவம் ஆன்மாவின் அறிவினை அனாதியே பீடித்துள்ளமையினால் அது முத்தியில் நீங்காது என்பதில்லை. ஆணவம் ஆன்மாவிற்கு குற்றம் என்பதால் அது நீங்குவதே முறை. ஆனால் ஆன்மாவிற்கு அறிவு குணம். அதனால் அவ்வறிவு ஆன்மாவினை விட்டு என்றும் நீங்குவதில்லை. ஒருவகையில் ஆகம முறையில் ஆன்மாவின் உண்மை இயல்பு பரிபூரண சொயம்பிரகாச ஞானம் பெற்றிருத்தல் என்பதாகும்.

அடுத்து மந்திரத் தம்பனம் செய்ய வல்லார் நஞ்சை வெல்லும் மறைமொழியை உச்சரித்தவிடத்து உடம்பில் ஏறிய நஞ்சு ஆற்றல் பாதிக்காது அடங்கிவிடுவது போலச் சிவானந்தம் கைவரப் பெற்ற ஞானியரிடத்து உள்ள மலமும் அவர்களைப் பாதிப்பதிலை. இதனைச் சிவோகம் பாவனையில் சைவசித்தாந்தம் விளக்குமாற்றினையும் இங்கு ஒப்ப நோக்கலாம்.

தண்ணிக்குப் பொதுவான மரமாகிய தேற்றா மரத்தின் விதையினை கலங்கிய நீர் இட்ட கலத்தில் இடுகின்றபோது அதில் அவ்விதை இடப்பட்ட பகுதி தெளிந்து காணப்படுவது போல முத்தி பெற்ற ஆன்மாவில் சிவானந்தம் வெளிப்படுவதால் அவ்வான்மாவை ஆணவம் பாதிப்பதில்லை.

மேற்படி நான்கு உவமைகள் மூலம் முத்தியில்ஆணவம்அழியாதுஉள்ளபோதும் அவை ஆன்ம அறிவினைப் பாதிப்பதில்லை என்பதைத் தெளிவுபடுத்துகின்றது.

அருள் முன் மலம் நில்லாமை

ஒளிமுன் இருள் முனைத்து நில்லாதது போல திருவருள் முன் மலமும் முனைத்து நிற்பதில்லை. ஆன்மா தனித்து இருக்கும் பொருள் அன்று. அதன் சிறப்பியல்பே சார்ந்ததன் வண்ணமாதல். இருளோடு சேர்ந்து இருளாகவும் மருளோடு சேர்ந்து மருளாகவும் அருளோடு சேர்ந்து அருளாகவும் இருப்பது. முத்தி நிலை தவிர்ந்த கட்டு நிலையில் ஆணவத்தை

விட்டு ஆன்மா பிரிவதில்லை. சிருஷ்டி சங்கார காலங்களில் மாயை கன்மம் உயிரை வந்து பொருந்துவதும் போவதுமாகும். ஆனால் ஆணவம் அவ்வாறு போவதில்லை. அதுபோல ஆணவம் உயிரின் அறிவில் விரவி இருப்பதால் புறப்பொருள் போன்று அதனைக் காணமுடியாது. முதல்வன் குருவாக எழுந்தருளி வந்த காலத்தே உயிர்க்கு அவனருளாலே மலத்துண்மையை காட்டி அக்கணமே ஆன்மா சிவத்தில் அடங்கிவிடும். முதல்வனே ஆன்மாவிற்கு மலத்துண்மை உணர்த்த முடியும் என்பதை "உன்னரிய திருவருளை யொழியமல முளதென்று உணர்வரிது" (சிவப்பிரகாசம். செய்.36) எனச் சிவப்பிரகாசம் கூறுவதைக் காணலாம். எனவே பதிஞானம்மூலமே மலவாதனை நீங்குவதாகும். இறை உண்மையினை அறிவதாலே ஆணவத்தினை உயிர் நீங்க முடியும் என்பதை, 'இறையுண்மை பார்த்தலின் மலம்பறி' (ஞானாமிர்தம் செய்யுள். 51. வரி. 14-15) என்று ஞானாமிர்தம் கூறுதலிலும் காணலாம்.

முடிவுரை:

முத்திநிலையில் ஆணவம் உண்டு. ஆனால் அதனது ஆற்றல் வலுக்குன்றி இருக்கும். அதனால் ஆன்மாவின் அறிவினை ஆணவத்தினால் மறைக்க முடியாது என்பது சிவப்பிரகாசத்தின் வழி நாம் அறிந்துகொள்ளலாம். சிவநெறிப்பிரகாசம் முத்தியில் ஆணவமும் அதன் ஆற்றலும் என்றும் உள்ளது போலவே இருக்கும். எவ்வாறு புற இருள் சில உயிர்களின் பார்வையினை மறைப்பதில்லையோ அதுபோல முத்தி பெற்ற உயிர்களின் அறிவினை ஆணவம் மறைக்காது என்கிறது. சிவஞானசித்தியாரின்படி முத்திபெற்ற ஆன்மாக்களிடத்து மலம் நீங்கினும் அது பெத்தான்மாக்களிடம் காணப்படத் தடையில்லை என்கிறது. ஆன்மா முத்தி பெற்றபின் அது முதல்வன் திருவடி நிழலின் கீழ் இருப்பதால் ஆணவத்தின் ஆற்றல் அதனைப் பாதிப்பதில்லை. சிவப்பிரகாசத்தின்வழி இன்னுமொரு உண்மையினையும் கண்டு கொள்ளலாம். இறைவனது வியாபக ஒளியானது முத்தி பெற்ற ஆன்மாவின் அறிவில் விளங்கிப் பிரகாசித்துத் தோன்றும். அதனால் அவ் வியாபக ஒளியில் மலம் அடங்கிவிடும். புற ஒளி மேலிட்டு நிற்கும் போது எவ்வாறு இருள் அதில் அடங்கிவிடுமோ அதுபோலவே இதுவும். எனவே முத்தியில் ஆணவம் உண்டு எனும் கருத்தினை இவ்வாய்வின் வழி கண்டுகொள்ளலாம். ஞானாமிர்தம் கூறும் உவமைகள் கொண்டும் ஆணவத்தின் நித்தியத்துவத்துக்கு அழிவில்லை என்பதும். முத்திபெற்ற ஆன்மாவை ஆணவம் பந்திப்பதில்லை என்பதையும் தெளிந்து கொள்ளலாம். ஒளிமுன் இருள் நில்லாமை போன்று பதிஞானம் துணைக்கொண்ட முத்தர் முன் ஆணவம் செயற்படுவதில்லை.

துணைநூற்பட்டியல்

அருணைவடிவேலு முதலியார்.சி., (1991), **சிவஞானபோத மாபாடியப் பொருள்நிலை விளக்கம்,** தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

ஆனந்தராசன், ஆ., (2010), **சிவஞானபோதம் வழித்துணை விளக்கம்**, நர்மதா பதிப்பகம், சென்னை.

ஆனந்தராசன், ஆ., (2017), **வாகீச முனிவரின் ஞானாமிர்தம்,** நர்மதா பதிப்பகம், சென்னை.

(2021), சிவஞானசித்தியார் சுபக்கம் - **சிவஞானசுவாமிகள் பொழிப்புரையும் சுப்பிரமணியதேசிகமூர்த்திகள் பதவுரையும்**, சிவஞானசுவாமிகள் பேரவை, விக்கிரமசிங்கபுரம்.

(2008), **மெய்கண்ட சாத்திரம் என வழங்கும் சித்தாந்த சாத்திரம் பதினான்கு மூலமும் உரையும்**, சைவசித்தாந்தப் பெருமன்றம், மயிலாப்பூர்.

ஜெயந்திரன்.இ., *(2014)*, **செம்பொருள்**, சிவநெறி அருட்பணிமன்றம். கல்முனை.

ஸ்ரீநிவாஸன்.தே.ஆ., *(1958)*, **சங்கற்பநிராகரணம் நூலின் சார்புக்கட்டுரை**, திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை.

சோழர் கல்வெட்டுக்களில் திருக்கோயில் நிர்வாகம்

துஹாயா, பே.

ஆய்வுச்சுருக்கம்

இந்துப் பண்பாட்டின் நிலைக்களன்களாகத் திகழ்பவை கோயில்களாகும். கோயில் என்ற அமைப்பு அடிப்படையில் சமூக நடவடிக்கை சார்ந்தவையாகக் காணப்படுகின்றது. மனித சமூகவளர்ச்சியுடன் கோயிலும் சேர்ந்து வளர்ந்தபோது வழிபாட்டிடம் என்ற தளத்தையும் தாண்டி அரசியல் பண்பாட்டுக் கூறுகள் யாவற்றையும் உள்ளடக்கிய நிறுவனமாகக் கட்டமைக்கப்பட்டது. கி.பி.6ஆம் நூற்றாண்டின் பின் பல்லவர்காலத்தில் தமிழகத்தில் உருக்கொண்ட பக்தி இயக்கச் செயற்பாடுகள் கோயில் என்ற அமைப்பை சமூக முக்கியத்துவம் உடையதாக உருமாற்றின. இச்செயற்பாடு கோயில் என்ற நிறுவனத்தின் சமய, சமூக முக்கியத்துவத்தை உறுதிப்படுத்தின. அரசு என்ற அமைப்பையும் கோயில்களை நோக்கித் திசை திருப்பின. தென்னிந்திய வரலாற்றில் கி.பி.850-1230 வரையான காலப்பகுதியில் ஆட்சி செய்த சோழப்பேரரசின் அரசியலின் நடுநாதமாக சமய நிறுவனமாகிய கோயில்களே திகழ்ந்தன. கோயிலை வழிபாட்டிற்குரிய தலமாக மட்டும் கருதாமல் ஊரவை நிருவாகத்தின் செயலகமாகவும் கருதினர். அரசர்களாலும் ஏனைய மக்களால் கொடுக்கப்பட்ட பெரும் செல்வங்களால் சோழர்காலக் கோயில்கள் நிரம்பி வழிந்தன. இத்திருக்கோயில்கள் சோழ அரசர்களாலும் அவர்களில் நியமிக்கப்பெற்ற அதிகாரிகளாலும் சிறந்த முறையில் நிர்வகிக்கப்பட்டு வந்தது. சோழ வரலாற்றினை அறிய உதவும் முதன்மையான சான்றாதாரமாக விளங்கும் கல்வெட்டுக்களில் திருக்கோயில் நிர்வாகம் தொடர்பான விடயங்கள் விரவிக் காணப்படுகின்றன என்ற கருதுகோளின் அடிப்படையில் இந்த ஆய்வானது மேற்கொள்ளப்பட இருக்கின்றது.

திறவுச் சொற்கள்: *சோழ மன்னர்கள், திருக்கோயில் நிர்வாகம், கல்வெட்டு, நிபந்தங்கள், தேவ தானங்கள்*

அறிமுகம்

பண்டைக்காலத்துத் தமிழ்மக்கள் வாழ்வியலில் கோயில்களே தலைமை பெற்றிருந்தன. இந்து சமூகத்தின் பல் வேறுபட்ட அம்சங்களின் கலப்புறு நிறுவனமாகக் கோயில்கள் விளங்குகின்றன. கோயில் வெறுமனே வழிபாட்டு மையம் என்பதற்கு மேலாக பல்வேறு நிலை களில் இந்துக்களின் வாழ்வியலை வளப் படுத்தியிருக்கக் காணலாம். இதனை சோழப் பேரரசுகாலத்தில் எழுந்த கோயில்களினூடாகக் கண்டுகொள்ள முடிகிறது. கோயில்கள் அரசர்களாலும் பிற அன்பர்களாலும் அளிக்கப்பெற்ற பெரும்பொருளும் நிலமும் உடையவனாய் விளங்கின.

தமிழக வரலாற்றில் சோழ வம்சமானது 9ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலிருந்து 13ஆம் நூற்றாண்டின் முற்பகுதிவரை ஆட்சி அதிகாரத்தின் உச்சத்தில் இருந்த பேரரசாகும். சோழப் பேரரசானது அரசியல், சமூகம், பொருளாதாரம் போன்ற பல துறைகளில் சிறப்பாகத் திகழ்ந்தது போல சமயத்துறையிலும் மிக உன்னதமாக விளங்கியது. சோழ அரசியலின் அச்சாக சமயம் விளங்க, சமயத்தின் நிறுவனமயப்படுத்தப்பட்ட அமைப்பாக கோயில் விளங்கியது. கோயில் என்ற அமைப்பு கட்டுமானங்களாலும் செயற்பாடுகளாலும் உன்னதங்கொண்ட நிறுவனமாக சோழர் காலத்திலேயே கட்டமைக்கப்பட்டது. சோழ அரசர்கள் அடிப்படையில் சைவசமய அபிமானிகளாக இருந்தனர். இதனால் சைவக்கோயில் சார்ந்த பணிகள் துரிதம் பெற்றன. போரில் பெற்ற வெற்றியின் அடையாளமாக வெற்றித் தூண்கள் நாட்டுவதற்குப் பதிலாகக் கோயில்களை அமைக்கும் வழக்கம் இதன்வழி உருவாகியது. சோழ அரசு தமிழகத்தில் நிலைத்த காலங்களில் அதன் எழுச்சியையும் பெருவளர்ச்சியையும்

வீழ்ச்சியையும் வெளிப்படுத்திய அடையாளங்களாகக் கோயில்கள் காணப்பட்டன. சோழ அரசர்கள் தமது அதிகாரத்தை நிலைநாட்டியும் தமது சமயச் சார்புக்குப் புறம்பாக வெற்றியைப் பறைசாற்றவும் தம்மை மக்கள் குழுமத்தின் தலைவன் என நிலைப்படுத்தவும் விரும்பியதன் செயற்பாட்டு வடிவமாகக்கோயில்கள் அமைந்தன.

பல்லவர்காலப் பக்தி இயக்கமும் அதனடிப் படையிலான சைவசமய வளர்ச்சியும் சோழராட்சிக்கு ஒரு கருத்தியல் கருவியாக அமைந்தது எனலாம். கி.பி 6ஆம் நூற் றாண்டுக்குப் பின்பு தமிழகத்தில் நிலவிய பக்தி இயக்கச் செயற்பாடுகளின் வழியே தமிழகமெங்கும் ஆலயங்கள் பற்றிய விழிப்புணர்வு மேல்நிலையடைந்தது. பல்லவரைத் தொடர்ந்து ஆட்சியதிகாரம் பெற்ற சோழர்கள் புதிதாக ஆலயங்களை எழுப்பியதுடன் நின்றுவிடாது, பல்லவர்கால தேவாரப்பாடல்கள் பெற்ற தலங்களையும் கற்றளியாக்கினர். இதனால் கோயிலைச் சுற்றிய சமூக ஊடாட்டம் அதிகரித்தது. கோயில்கள் தமிழர்பண்பாட்டிலும் வாழ்வியலிலும் முக்கிய பங்கை வகிக்கத் தொடங்கின. சோழ அரசின் நாடு தழுவிய நிருவாகக் கட்டமைப்பின் அடிநிலை ஆதாரமாகக் கோயில்கள் விளங்கின. அளவற்ற கொடைகள் அவற்றுக்கு வழங்கப்பட்டன. கோயில் கட்டுமானங்கள் பாரியளவில் விசாலித்தன. நித்திய, நைமித்திய, காமிகப் பூசைகளும் விழாக்களும் நிகழ்த்தப்பட்டன. இந்தச் செயற்பாடுகளை நிகழ்த்தப் பணியாளர்கள் நியமனம் பெற்றனர். இத்தகைய விடயங்களை அறியும் சோழர்கால வரலாற்று மூலங்களில் கல்வெட்டுக்கள் முக்கியம் பெறுகின்றன. பல்லவர் காலம் முதலே சமயம் தொடர்பான விடயங்களிற்கு உண்டானவை கல்வெட்டுக்களாகும். கோயில், மடம், மறையவர் தொடர்பாகத் தானம் செய்தல் என்பவற்றைக் குறிக்க இவை தோன்றியவையாகும். சோழர் கற்கோவில்களின் சுவர்களிலும் தூண்களிலும், தரையிலும் ஏராளமான கல்வெட்டுக்களைக் காணலாம். பெரும்பாலான கல்வெட்டுக்கள் கோயில்களுக்கு நிலம் தானமாக வழங்கியமையும் நந்தா விளக்கு எரிப்பதற்கு கொடுக்கப்பட்ட தானங்களைப் பற்றியும் பேசுகின்றன. சோழர்காலத்தில் திருக்கோயில்களில் பூசை முதலிய நிர்வாகச் செயற்பாடுகள் சிறப்பாக இடம்பெறுவதற்கு பேரரசர்கள் முதல் அவர்களது பட்டத்தரசிகள், அதிகாரிகள், சிற்றரசர்கள், சாமானிய மக்கள் முதலியோர் பலவகை தானங்களைக் கொடுத்துள்ளமையினைக் கல்வெட்டுக்கள் மூலம் அறிந்துகொள்ள முடிகின்றது. இவ்வாறு கோயில்களுக்கு தானங்களாகக் கொடுக்கப்பட்ட சொத்துக்களைப் பாதுகாத்தல், பராமரிப்பதற்கு பணியாளர் குழுமத்தை நியமித்து, சோழப்பேரரசர்கள் சிறந்த முறையில் திருக்கோயில்களை நிர்வாகம் செய்து வந்தனர். இச்செய்திகளை எல்லாம் கல்வெட்டுக்கள் இயம்புகின்றன.

ஆய்வின் நோக்கம்

சோழ மன்னர்கள் வெறுமனே ஆலயங்களை அமைத்ததோடு மட்டும் நின்றுவிடாது அவற்றை நிர்வகிப்பதற்கும் சிறந்த நிர்வாகக் கட்டமைப்பினையும் ஏற்படுத்தியிருந்தனர். அதனால் ஆலயத்தின் முதன்மையான அம்சமாகிய பூசை, கிரியைகள் ஒழுங்காக இடம்பெற்றதுடன் ஆலயங்கள் சமுதாய மையங்களாகவும் திகழ்ந்தன. ஆனால் சமகாலப்புலத்தில் இந்து ஆலயங்கள் பல்வேறுவகையான நிர்வாக முரண்பாடுகளிற்கு முகங்கொடுத்த வண்ணமுள்ளன. இதற்குக் காரணம் ஆலயங்களில் ஒழுங்கான நிர்வாகக் கட்டமைப்பு இல்லாமையேயாகும். ஆகவே

சோழ மன்னர்கள் காலத்தில் நிலவிய திருக்கோயிலின் நிர்வாகக் கட்டமைப்பினை ஆய்வு செய்வதனூடாக சமகாலத்தில் ஆலய நிர்வாகக் குழுக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த முயல்தலே இவ்வாய்வின் நோக்கமாகும்.

ஆய்வின் எல்லை

சோழர்களுடைய வரலாற்றினை அறிய ஏராளமான கல்வெட்டுக்கள், செப்பேடுகள், தொல்பொருட்கள், இலக்கியச் சான்றுகள் மற்றும் வெளிநாட்டுப் பயணிகள் குறிப்புக்கள் என்பன உதவுகின்றன. இச்சான்றாதாரங்களில் செப்பேடுகளைப் போல அழிவடையாத பொருட்களால் ஆக்கப்பட்ட கல்வெட்டுக்களும் குறிப்பிடத்தக்க வரலாற்று மூலமாகும். இச்சோழர்கால கல்வெட்டுக்களில் அரசனது நாட்டு விரிவு, போர்ச் செயல்கள், சமயம் தொடர்பான செய்திகள், குடும்ப நிலை, அரசியற் செய்திகள் எனப் பல்வேறு விடயங்கள் இடம் பெற்றிருப்பினும் இவற்றில் சமயத்தின் நிறுவனமாகத் திகழும் திருக்கோயில் சார்ந்த நிர்வாக முறைகளையே இக்கட்டுரை ஆராய முற்படுகின்றது.

ஆய்வு முறையியல்

இந்த ஆய்வுக் கட்டுரையானது விபரண ஆய்வுமுறையியல், வரலாற்றியல் ஆய்வுமுறையியல் மற்றும் பகுப்பாய்வு முறையியல்களினூடாகக் கட்டமைக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் சோழர்காலம் வரை திருக்கோயில்களின் தோற்றவளர்ச்சி

பண்டைக்காலத்தில் தமிழகத்தில் ஆலயங்கள் மரத்தாலும், சுட்ட செங்கல்லாலும் சுதையாலுமே கட்டப்பட்டிருந்தன. பல்லவப் பேரரசர்களே முதன்முதலில் அழிவடையாத பொருட்களைக் கொண்டு குடைவரை ஆலயங்களை எழுப்பினர். இதற்கு மகேந்திரவர்மன் காலத்து மண்டகப்பட்டுக் கல்வெட்டுச் சான்றாகும். சோழர்கள் கற்றளிக் கோயில்களைக் கட்டியதுடன் அழகுவாய்ந்த சிற்பங்களையும் கல்லில் புதுப்பொலிவுடன் செதுக்கிச் சிறப்படைந்தனர். தமிழ்நாட்டில் வியத்தகு முறையில் கற்கோவில்கள் பலவற்றை அமைத்த பெருமை சோழர்களுக்கே உரியது. அவற்றுடன் சோழர்களுடைய வரலாற்றை அறியும் முக்கிய சான்றாதாரமாக விளங்குபவை கோயில்களேயாகும்.

கல்வெட்டுக்கள்

பண்டைய காலத்திலிருந்து எழுத்துக்களை கல்லிலும், ஓலையிலும் எழுதி வந்தனர். நீண்டகாலம் அழியாதிருக்க வேண்டும் எனக் கருதப்பட்ட செய்திகள் கற்களில் வெட்டப்பட்டன. இவ்வாறு கல்லில் பொறிக்கப்பட்ட செய்தியே கல்வெட்டு எனப்படுகிறது. வடமொழியில் இதனைச்சாசனம் என்பர். பெரும்பாலும், மன்னர்களின் ஆணைகள், அவர்கள் செய்த பணிகள் போன்றவை கல்வெட்டுக்களாகப் பொறிக்கப்பட்டன. கல்வெட்டுக்கள் இவை அனேகமாக பொதுமக்கள் பார்ப்பதற்காக வெட்டப்படுவதால் இவை கோயில்கள், குகைகள், பொதுமண்டபங்கள், வெற்றித் தூண்கள், நடுகற்கள் (இறந்தோர் நினைவுக்கற்கள்) போன்றவற்றில் காணலாம். தமிழகத்தில் கிடைக்கப்பெற்றுள்ள கல்வெட்டு, செப்பேடு போன்றவற்றில் ஐந்து பகுதிகள் காணப்படுகின்றன.

1. மங்கல வாசகம்
2. சாசனம் எழுதப்பட்ட காலம்
3. சாசனச் செய்தி
4. கையெழுத்துக்கள்
5. ஓம்படைக்கிளவி (நாகசுவாமி முதலியார், இரா :39)

மங்கலவாசகம் கல்வெட்டின் தொடக்

கத்தில் பொறிக்கப்பட்டிருக்கும். பெரும் பாலான கல்வெட்டுக்களில் 'ஸ்வஸ்தி ஸ்ரீ' (மங்கலமுண்டாகட்டும்) எனும் சொல் தான் காணப்படுகின்றது. பின்னர் கொடையளித்த காலத்தில் ஆட்சிபுரிந்த மன்னனையும், அம்மன்னனின் ஆட்சி ஆண்டும் குறிக்கப்பெறும். பெரும்பாலான கல்வெட்டுக்களில் கோயில்களுக்கு நிலம் தானமாக வழங்கியதையோ அல்லது கோயில்களில் திருநந்தா விளக்கு அமைப்பதற்கு பசு அல்லது எருமை கொடுத்ததையோ குறிக்கின்றன. அத்துடன் அளிக்கப்பட்ட கொடைகளைப் பாதுகாக்க வேண்டும் எனவும் பாதுகாப்பதால் ஏற்படும் நன்மைகளையும் பாதுகாக்காவிட்டால் ஏற்படும் தீமைகளையும் கல்வெட்டுக்கள் எடுத்தியம்புகின்றன.

திருக்கோயில் நிர்வாகம் வரையறை

ஆன்மா இலயப்பட்டு ஆத்ம இலாபத்தை ஈட்டும் பொருட்டு வழிபடுகின்ற இடங்களே கோயில்களாகும். ஒவ்வொரு கோயில்களும் தமக்குரிய மரபுரிமைகளையும் ஒழுங்குகளையும் காலத்துக்கு காலம் பேணி ஒழுங்கமைத்து வருகின்றன. மரபு மாறாத சிறப்புடன் கோயில்களைப் பராமரித்தலே திருக்கோயில் நிர்வாகம் எனப்படுகிறது. இத்திருக்கோயிலை வழிபாட்டு மரபில் பழமை குன்றாமலும் பாரம்பரியம் சிதைந்து போகாமலும் பாதுகாக்க வேண்டிய கட்டமைப்பு நிர்வாகத்தினருக்கேயுரியதாகும்.

சோழர் கல்வெட்டுகளில் திருக்கோயில் நிர்வாகம்

தமிழர் நாகரிகம் சோழ அரசர்களால் மிகவும் உயர்ந்த நிலையை அடைந்தது. முற்காலச் சோழர்கள் சங்ககாலத்தில் ஆட்சிபுரிந்தனர். பின்னர் பல்லவர்கள் ஆட்சி வீழ்ச்சியுற்றபோது சோழர் ஆட்சி மீண்டும் தலைதூக்கியது. விஜயாலய மன்னனால் மீண்டும் புதுப்பொலிவுடன் சோழர் ஆட்சி ஆரம்பித்து வைக்கப்பட்டது. பிற்காலச் சோழ மன்னர்கள் கி.பி 850 முதல் கி.பி 1279 வரை சுமார் 430 ஆண்டுகள் ஆட்சிபுரிந்தனர்.

சோழர்கால வரலாற்றைப் பற்றிய தகவல்கள் அறிய உதவும் சான்றுகளில் முதன்மையானவை கல்வெட்டுக்கள் ஆகும். விஜயாலய சோழன் முதல் கி.பி 13ஆம் நூற்றாண்டு வரையான சோழர் வரலாற்றை அறிய ஆயிரக்கணக்கான கல்வெட்டுக்களும் செப்பேடுகளும் துணைபுரிகின்றன. இவற்றுள் சிறந்தவை இராசராசன் காலம் முதல் தோன்றிய கல்வெட்டுக்களும் செப்பேடுகளுமே ஆகும். இக்கல்வெட்டுக்கள் சோழ அரசர்களின் வாழ்க்கை, ஆட்சிமுறை, அரசியல், பொருளாதார, சமய, சமூக, பண்பாட்டு நிலைகளைப் பற்றிக் கூறுகின்றன. இவை கோவில்களில் உள்ள தூண்களிலும் சுவர்களிலும் பொறிக்கப்பட்டுள்ளன.

சோழர்காலத் திருக்கோயில் நிர்வாகக் கட்டமைப்பு - சபை, ஊர், நகரம்

சோழர்கால நிர்வாக முறைகளை கோயில் நிர்வாகம், ஊரவை நிர்வாகம், அரசு நிர்வாகம் என மூன்றாகப் பாகுபடுத்தினர். கோயிலை வழிபாட்டிற்குரிய தலமாகக் கருதாமல், ஊரவை நிருவாகத்தின் செயலகமாகக் கருதினர். சோழர் காலத்தில் திருக்கோயில் நிர்வாகம் முறையான அமைப்பின் கீழ் இருந்தது. இதில் சபை, ஊர் மற்றும் நகரம் ஆகியவை முக்கியமான அமைப்புக்களாக இருந்தன. ஒவ்வொரு அமைப்புக்களும் நிர்வாகக் கடமைகளை முறையாக மேற்கொண்டதால், கோயில்களின் பராமரிப்பு மற்றும் பணிகள் சிறப்பாக நடந்தன.

சபைகள் / சபாக்கள்

சபையின் உறுப்பினர்கள் சமூகத்தில் உயர்ந்தவர்களாகவும், நன்கு கல்வியறிவு பெற்றவர்களாகவும் இருந்தனர். இச்சபாக்கள் திருக்கோயில்களுக்காக பூஜைகள் நடத்துவது, திருவிழாக்கள் நடத்துவது, மற்றும் கோயில் நிலங்களை நிர்வகிப்பது போன்ற பணிகளை மேற்கொண்டன. சபைகள் கோயிலுக்கான நிதி உதவி, நிலப்பராமரிப்பு மற்றும் பொருளாதார விஷயங்களில் முடிவுகள் எடுத்தன.

ஊர்கள்

ஊர் என்பது கிராம மக்கள் ஒருங்கிணைந்த குழுவாகும். ஊரின் உறுப்பினர்கள் பொதுவாக அனைத்து சாதியினரும் கலந்துகொள்ளும் அமைப்பாக இருந்தது. ஊர் நிர்வாகம் கோயில்களின் பராமரிப்பிலும், சீரமைப்பிலும் பங்களிப்பு செய்தது. ஊராட்சிகள் கோயிலுக்குச் சார்ந்த பூமிகளின் வருவாயை நிர்வகித்து, நிலத்தை பண்ணையிட முயலும் விதமாக முடிவுகளை எடுத்தனர். இதன் மூலம் தன்னிறைவுப் பொருளாதாரம் ஏற்படக் கூடியதாக இருந்தது.

நகரங்கள்

நகரம் என்பது பெரும்பாலும் வர்த்தகர்கள் மற்றும் கைவினைப் படைத்த தொழிலாளர்களைக் கொண்டு அமைந்திருந்நது. நகரத்தின் உறுப்பினர்கள் முக்கியமாக வணிக மற்றும் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்ததால், அவர்கள் கோயிலுக்கு வருவாய் மற்றும் பொருளாதார உதவியை அளித்தனர். நகர மக்கள் தங்களின் வருமானத்தில் ஒரு பகுதியை கோயிலுக்கு நன்கொடையாக அளித்து, கோயில் நிர்வாகத்திற்கு உதவினர். இந்நகரங்களில் உள்ள வணிகர்கள் தங்களை சங்கங்களாக ஒழுங்கமைத்துக் கொண்டனர். இவ் வணிகச் சங்கங்களின் நிதியுதவி பெரிய கோயில்கள், திருவிழாக்கள், தினசரி சடங்குகள் மற்றும் கட்டுமானத்திட்டங்களுக்கு ஆதாரமாகச் செயற்பட்டன. நகர அளவிலான கல்வெட்டுக்கள் கோயில்களுக்கு நிலம், கால்நடைகள் மற்றும் பொக்கிஷங்களின் பங்களிப்புகளைப் பிரதிபலிக்கின்றன.

கோயில் நிர்வாக நடவடிக்கைகளில் மன்னர் இறுதி அதிகாரத்தைக் கொண்டிருந்தாலும் ஊர் மற்றும் நகர சபைகள் கணிசமான சுயாட்சியைக் கொண்டிருந்தன.

திருக்கோயில் நிர்வாகத்தில் பூசகர்கள்

சோழர்காலத்தில், கோயில் பூசாரிகள் ஆன்மீக மற்றும் சடங்கு நடவடிக்கைகளில் முக்கிய பங்கை வகித்தனர். ஆனால் கோயில் நடவடிக்கைகளின் நிர்வாக மற்றும் நிதி அம்சங்களில் அவர்களின் பொறுப்புக்கள் குறைவாகவே இருந்தன. சோழர்கள் கோயில்களை நாடு முழுவதும் பராமரிக்க, பூசகர் அமைப்பையும் முறையான கட்டுப்பாட்டுடன் வளர்த்தனர். சபை, ஊர், நகர அமைப்புக்களுடன் இணைந்து கோயிலின் வழிபாட்டு முறைகள் சிறப்பாகச் செய்யப்படுவதற்கான மேலாண்மையில் பங்கெடுத்தனர்.

கோயில் அர்ச்சகர் பெரும்பாலும் ஸ்தானிகா அல்லது மூர்த்தி பூசாரி என அழைக்கப்படும் ஒரு தலைமைப்பூசாரியை உள்ளடக்கியிருந்தார். அவர் அனைத்து மத விழாக்கள், சடங்குகள் தெய்வத்தின் சரியான பராமரிப்பை மேற்பார்வையிட்டார்.

குறிப்பிட்ட தினசரி சடங்குகள், திருவிழாக்கள் மற்றும் விசேட விழாக்களைச் செய்வதற்குப் பொறுப்பான துணைப் பூசாரிகள் (அர்ச்சகர்கள்) குழுவை தலைமைப் பூசாரி மேற்பார்வையிட்டார்.

பெரிய கோயில்களிலுள்ள பல் வேறு சந்நிதானங்களுக்கு மற்ற மூத்த அர்ச்சகர்களுடன் ஸ்தானிகா ஒருங்கிணைக் கப்பட்டார்.

தேவதானங்கள்

சோழமன்னர்கள் கோயில்களை மேலாண்மை செய்வதற்காக எண்ணி லடங்காத தேவதான நிலைகளையும், நிபந்தங்களையும் விடுத்துள்ளனர். கோயில்களுக்கு இறையிலியாக (வரி விதிக்காமல்) விடப்பட்ட நிலங்களே தேவதானம் எனவும், பிராமணர்களுக்கு வழங்கப்பட்டவை பிரமதேயம், பட்ட விருத்தி எனவும் மடங்கள் அறநிலையங்களுக்கு விடப் பட்டவை சாலா போகம் எனவும் அழைக்கப்பட்டன (சோமசுந்தரம் பிள்ளை,ஜே.எம்.,1948:139). இத் தேவதான நிலங்கள் கோயில் செயல்பாடுகளுக்குத் துணையாக விவசாய நடவடிக்கைகள் மூலம் நிலையான வருமானத்தை அளித்தன.

வடார்க்காடு ஜில்லா திருவல்லத்திற்கு வடக்கே, ஆறுமைல் தொலைவிலுள்ள மேற்பாடி என்னும் ஊரிலிருக்கும் சோழேச்சுரக் கோயில் அடித்தளத்தில் முதலாம் இராசராச சோழனின் (கி.பி 985-1014) 29ம் ஆட்சியாண்டில் எழுந்த கல்வெட்டு காணப்படுகின்றது (குருசாமி தேசிகர்,வி.சா.,1957:42). இக்கல்வெட்டில் இராசாசிரயபுரத்தில் அரிஞ்சயேச்சுரம் என்ற கோயிலை இராசராசன் எடுப்பித்து அக்கோயிலை நிர்வாகம் செய்வதற்காக 5136 - குழி நிலத்தை தேவதான இறையிலியாகக் கொடுத்துள்ளான் என்ற செய்தி காணப்படுகிறது (குருசாமி தேசிகர்,வி.சா., 1957 :43).

முதலாம் இராசராசன் பெரும்பற்றப் புலியூரில் அறப்பெருஞ் செல்வி என்னும் தருமசாலையை உண்டாக்கி அதற்குரிய நிலப்பட்டயங்களைக் கோயிலிலுள்ள திருக்கைக் கோட்டியல் (Temple-treasury) சேர்ப்பிக்க வேண்டுமெனக் கட்டளையிட்டதை ஒரு கல்வெட்டுத் தெரிவிக்கின்றது. (சோமசுந்தரம் பிள்ளை,ஜே.எம்.,1948:140).

தேவதானங்கள் போதாமல் போகும் பட்சத்தில் சுற்றூரிலுள்ள விளைநிலங்களில் மா ஒன்றுக்கு குறுணிவீதம் தானியமும் பாக்குமரம் ஒன்றுக்குப் பாக்கு ஒன்றும் ஒவ்வொரு குடியானவனும் ஓர் உழக்கு எண்ணெயும் கொடுக்க வேண்டியதென்றும் அவற்றையெல்லாம் அரசனின் குடிமையை வசூலித்து அதிகாரியே கோயிலுக்குக் கொடுக்க வேண்டியதென்றும் காமராச வல்லிக் கல்வெட்டொன்று குறிப்பிடுகிறது. (சோமசுந்தரம் பிள்ளை,ஜே.எம்.,1948:140).

இரண்டாம் இராசேந்திரனின் (கி.பி.1052-1064) படைத்தலைவர்களுள் ஒருவர்; சேனாபதிகள் ஐயங்கொண்ட சோழபிரமாதிராயர் ஆவார். இவர் அந்தண குலத்தினர். இவருடைய தாயார் காமக்கவ்வை என்பவர் காமகோடி விண்ணகர ஆழ்வார்க்கு இறையிலி நிலம் அளித்துள்ளமை பற்றிய செய்தியையும் கல்வெட்டுத் தெரிவிக்கின்றது (குருசாமி தேசிகர்,வி.சா., 1957:105).

வீரராசேந்திர சோழனின் 1122 ஆம் ஆண்டுக் கல்வெட்டொன்று துறவிகளுக்குச் சோறுந்துணியும் கொடுக்கவும் தானம் அளிக்கவும் 44 கிராமங்கள் தேவதானமாகக் கொடுக்கப்பட்டனவெனக் கூறுகின்றது (சோமசுந்தரம் பிள்ளை,ஜே.எம்.,1948:127).

நிபந்தங்கள்

தஞ்சைப் பெருங்கோயில் நிர்வாகம் சிறப்பாக இடம் பெற இராசராச சோழன் பல நிபந்தங்களை வழங்கினான். இம்மன்னன் தான் புரிந்த போர்களில் வென்று கொணர்ந்த பொருள்கள் யாவற்றையும் அக்கோயிலுக்கே அளித்தான்.

பலவித ஆபரணங்களும், பாத்திரங்களும், நெல் விளையும் கிராமங்களும், நாள்வழிபாட்டிற்கும் விழாக்களுக்கும் வேண்டியளவு பொன்னும், பொருளும், தந்துவந்ததோடு தீபங்களுக்கு நாடோறும் விளக்கு ஒன்றினுக்கு உழக்கு விழுக்காடு, நெய் அளப்பதற்கு ஆடு, பசு, எருமை என்ற மூவினமும் இடையர்கட்குக் கொடுத்து என்றைக்கும் யாவும் தாராளமாகக் கிடைத்து வரும்படி அமைத்துத் திருப்பணியை நிலைபெறச் செய்தான் என இராசராச சோழன் கல்வெட்டுக் கூறுகின்றது (சோமசுந்தரம் பிள்ளை, ஜே. எம்.,1948:56).

மூன்றாம் குலோத்துங்கன் கல்வெட்டொன்றில் எண்ணெய் விளக்கேற்றுவதற்காக 1100 காசு மூலதனமாக வைத்து அம்மூலதனத்தை ஐந்து வருடத்திற் கொருமுறை கோயில் அதிகாரிகள் தன்முன் கொணர்ந்து காட்டவேண்டுமென்ற செய்தி காணப்படுகின்றது (சோமசுந்தரம் பிள்ளை, ஜே. எம்.,1948:140).

திருவியலூர் சிவயோக நாதசுவாமி கோயிலுக்கு உத்தமசோழன், ஆதித்த கரிகாலன், முதலாம் இராசராசன், முதலாம் இராசேந்திரன், முதலாம் இராசாதிராசன், மூன்றாம் குலோத்துங்கன் ஆகியோர் விட்ட நிபந்தங்கள் பலவாகும். இக்கோயிற் சுவர்களிலுள்ள 94 கல்வெட்டுக்கள் குறிப்பிடத்தக்கவை. அவற்றுள் முதலாம் இராசராச சோழன் இக்கோயிலில் துலாபாரதானமும், அவன் மனைவி தந்திசக்திவிடங்கியார் ஹேமகர்ப்பதானஞ் செய்தது ஒரு கல்வெட்டின் மூலம் புலனாகிறது. (சோமசுந்தரம் பிள்ளை, ஜே. எம்.,1948:34-35).

போளூருக்கு அருகிலுள்ள திருமலையின் உச்சிப் பாறையில் முதலாம் இராசேந்திர சோழனின் 12வது ஆட்சியாண்டுக்குக் கல்வெட்டு (கி.பி.1024) செதுக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டில் பெரும்பாணப்பாடிக்கரை வழி மல்லியூரில் இருக்கும் வியாபாரி நன்னப்பையன் மணவாட்டி சாமுண்டப்பை என்பவள், ஜயங்கொண்ட சோழமண்டலத்துப் பங்களநாட்டு நடுவில் உள்ள வகை முகைநாட்டுப்பள்ளிச் சந்தம் வைகவூர்த் திருமலை ஸ்ரீ குந்தவை சிவனாலயத்தில் உள்ள தேவர்க்கு ஒரு நந்தாவிளக்கு வைத்து அதற்கு இருபது காசும், திருவமுதுக்குப் பத்துக்காசும் நிபந்தமாக அளித்துள்ளார் என்ற செய்தி வெளிப்படுத்தப்பட்டுள்ளது. (குருசாமி தேசிகர், வி.சா., 1957 :73).

முதலாம் பராந்தக சோழனின் கல்வெட்டானது மதுரைக்கு வடகிழக்கு ஆறு மைல் தூரத்தில் ஆனைமலை நரசிங்கப்பெருமாள் கோயில் கருப்ப இல்லி (certral shine) வாசலுக்கு இடதுபக்கமுள்ள பாறையின்மீது செதுக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டானது பிராமணர் உண்ணுதற்கு அளித்த நிவந்தம் பற்றி எடுத்தியம்புகிறது. ஒருவர்க்குப் பத்து அல்லது எட்டுமுறை குற்றப்பட்ட இருநாழி அரிசியும், கறிமூன்றும், தயிர் நாழியும், நெய் இரு செவிடும், பாக்கு இரண்டும், வெற்றிலை இரண்டும் ஆக இம்முறைப்படி ஐவர்க்கு அமுது செய்விப்பதற்கான ஏற்பாட்டைச் செய்துள்ளான். இவர்களுக்குச் சமைப்பானுக்கு நாடோறும் நெல் ஐந்நாழியும் ஆறுமாதங்களுக்கு ஒருமுறை புடைவையும் (வேட்டியும்) கொடுக்குமாறு திட்டம் செய்திருந்தான்(சுந்தரேச வாண்டையில், வை, 2008: 16).

முதலாம் இராசேந்திர சோழனின் கல்வெட்டு ஒன்றில் இம்மன்னனது 25-ஆவது (கி.பி 1036) ஆட்சி ஆண்டில், இவன் மறைநூல் கல்லூரி ஒன்றையும், அதில் 300 மாணவர்களும் 10 கற்பிப்போரும் கோயிலை ஒட்டித் தங்குவதற்கான விடுதி ஒன்றும் கட்டித்தானம் செய்தான் என

தென் ஆர்க்காடு சில்லா, எண்ணாயிரம், இராசராச விண்ணகரிலுள்ள கல்வெட்டுக் கூறுகின்றது.

வீரராசேந்திர சோழமன்னனுடைய (கி. பி 1062-67) கட்டளைப்படி திருமுக்கூடல் மஹாவிஷ்ணு கோயிலில் மாதவன் எனும் வைசியன் ஜனநாதமண்டபம் என்றதொரு பெரிய மண்டத்தையும், அதைச் சூழ்ந்த மண்டபங்களையும் நிறுவி, அங்கு மறைகள் மற்றக்கலைகள் ரூபாவாதாரம் முதலிய நூல்கள் கற்பிக்கக் கலாசாலையும் மாணவர்கள் தங்க விடுதியும், 15 படுக்கைகளையுமுடைய வீரசோழன் எனப் பெயரிய மருத்துவ ஆதுலர் சாலையும்(Hospital) ஏற்படுத்தினான் என்பதனை திருமுக்கூடல் கல்வெட்டு இயம்புகிறது. இவ்வாறாக கோயிலுக்கு அளிக்கப்பட்ட தானங்கள் மருத்துவம் போன்ற நற்காரியங்களுக்காகவும் பயன்படுத்தப்பட்டன. ஆகவே ஆலயங்கள் வெறுமனே வழிபாட்டிடங்களாக மட்டுமன்றி சமுதாய மையங்களாக விளங்கியமை குறிப்பிடத்தக்கது (சோமசுந்தரம் பிள்ளை,ஜே.எம்.,1948:126).

இசை, நடனக்கலைஞர்களிற்கு அளிக்கப்பட்ட தானங்கள்

தேவரடியார் / நடன,நாடகக் கலைஞர்கள்

குலோத்துங்க சோழனின் சாசனமானது எலவானாசூர் கோயிலில் ஆடல், பாடல் உள்ளிட்ட சேவகங்களைச் செய்து வந்த தேவரடியார்களுக்கு அரும் புலிப் பாடி என்னும் சிற்றூர் சீவிதமாக வழங்கப் பட்டமையைப் புலப்படுத்துகிறது. (குப்புசாமி.சு., 1976 : 54).

இரண்டாம் இராசேந்திரசோழனின் 4ஆம் ஆட்சியாண்டில் (கி.பி.1056) தோன்றிய இக்கல்வெட்டானது, செங்கற்பட்டு மாவட்டம், காஞ்சிபுரம் வட்டம், மணிமங்கலம் ஊரிலுள்ள இராசகோபாலப்பெருமாள் கோயிலின் உட்பிரகாரத்துக் கீழ்புறச்சுவரில் பொறிக்கப்பட்டுள்ளது. (குருசாமி தேசிகர்,வி.சா., 1957:99). இம்மன்னன் நாடகம் முதலான கலைகளில் பெரும் பற்றுடையவன் என்பதனால் தஞ்சைக் கோயிலில் இராசராசேச்சுர நாடகம் நடிப்பதற்கு ஆண்டு ஒன்றுக்கு 120 கலம் நெல் நிபந்தமாக அளித்தான் என இக்கல்வெட்டினூடாக அறியக்கிடக்கிறது.(குருசாமி தேசிகர்,வி. சா., 1957:100).

விக்கிரம சோழனின் 14-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டொன்றில் திருவெங்கவாசல் ஈசனார் முன் ஒன்பது கூத்துக்கள் நடித்ததற்கு எழுநாட்டு நங்கை என்பாளுக்கு நிலதானம் செய்யப்பட்ட செய்தி குறிக்கப்பெற்றுள்ளது. (சோம சுந்தரம் பிள்ளை,ஜே.எம்.,1948:132).

இராசராசனது 66-ஆவது சாசனத்தில் இராசராசேச்சுவரமுடையார் கோயிலுக்குரிய பணிகளைக் குறைவின்றிச் செய்யவும், நடனம் புரியவும், சோழநாட்டுப் பிறகோயில்களினின்றும் பதியிலார் நானூறு பேர்களைக் கொணர்ந்து இராசராசேச்சுவரத்தை அடுத்து வடபுறத்திலும் தென்புறத்திலும் இவர்கட்காகத் தனித்தனி மனைகள் கட்டிக்கொடுத்தும், ஒவ்வொருவருக்கும் நூறு கலம் நெல்விளையும் ஒவ்வொரு வேலி நிலமும் தந்தும் அவர்களைக் கோயிற்பணியிற் புகுத்தி ஆதரித்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. (சோமசுந்தரம் பிள்ளை,ஜே.எம்.,1948:59).

பிடாரர்- இசைக்கலைஞர்கள்

கோயில்களில் தேவாரம், திருவாசகம் முதலான திருப்பதிகங்களை ஓதுகின்றவர்கள் சோழர்காலத்தில் பிடாரர் என்று அழைக்கப் பட்டனர். சிவன் கோயிலில் நாள்தோறும் திருப்பள்ளி

எழுச்சி பாடப்பட்டது. விக்கிரமசோழன் காலத்தில் ஞாயிற்றுக்கிழமை தோறும் திருச்சாழல் (திருவாசகத்தில் உள்ள ஒரு பகுதி) பாடப்பட்டது.

தஞ்சை இராசராசேச்சர கோயிலின் வடபுறச் சுவரில் முதலாம் இராசராசனின் கல்வெட்டுக் காணப்படுகின்றது (கி.பி.1014). முதலாம்இராசராசசோழன்தஞ்சை இராசராசேச்சரமுடையார்க்கு திருப்பதியம் விண்ணப்பம் செய்வதற்குப் பிடாரர்கள் நாற்பத்தெண்மர், கொட்டி, மத்தளம் வாசிப்பவர் ஒருவர் ஆக ஐம்பதின்மரை நியமித்து அவர்களுக்கு நாடோறும் ஆள் ஒன்றுக்கு இராசகேசரியோடொக்கும் ஆடவல்லான் என்னும் மரக்காலால் முக்குறுணி நெல் உள்ளூர்பண்டாரத்தில் கொடுக்குமாறு ஏற்பாடு செய்திருந்தான். (சுந்தரேச வாண்டையார், வை, 2008: 55).

முதலாம் இராசேந்திர சோழனின் 25-ஆவது (கி.பி 1036) ஆட்சி ஆண்டுக் கல்வெட்டில் திருக்கோயிலில் திருவாய் மொழி இசைக்கும் நால்வருக்கும் கோயில் மடத்திலுள்ள இருபத்தைந்து வைணவர்களுக்கும் உண்ண வசதிகளை ஏற்படுத்தியுள்ளமையை அறியமுடிகின்றது (சோமசுந்தரம் பிள்ளை, ஜே.எம்.,1948:125).

பிரம்மதேயங்கள்

முதலாம் இராசராச சோழனின் 7-ஆவது ஆண்டுக் (கி.பி 492) கல்வெட்டு ஒன்றில் 'இது செம்பியன் மாதேவிச் சதுர்வேதி மங்கலம்' எனக் குறிக்கப்படுகிறது. செம்பியன் மாதேவி என்பவர் கண்டராதித்த சோழன் மனைவி. சிறந்த சிவபக்தி உடையவர். சிவத்தலங்கள் பலவற்றிற்கு எண்ணற்ற அறங்களைச் செய்துள்ளார். இவ்வம்மையாரின் பெயரால் வேதம்வல்ல அந்தணர்களுக்குப் பிரம்மதேயம் உரிமையாக வழங்கப்பட்டமையால் இது செம்பியன் மாதேவிச் சதுர்வேதி மங்கலம் என்று பெயர்பெற்றுள்ளது. (குப்புசாமி.சு., 1972 : 61-62).

செங்கற்பட்டு மாவட்டம் காஞ்சிபுரம் வட்டம் மணிமங்கலம் இராச கோபாலப் பெருமாள் கோயில் மண்டபத்தில் வடபுறச்சுவரில் வீரராசேந்திரன் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. (சுந்தரேச பாண்டையர்,வை.,2008:111). இவன் சோழநாடு, துண்டிரநாடு, பாண்டிநாடு, கங்கவாடிநாடு இவைகளில் வேதங்களில்வல்ல நாற் பதினாயிரம் பிராமணர்களுக்கு நிலங் களை வழங்கியுள்ளான். (சுந்தரேச பாண்டையர்,வை.,2008:112). என்ற செய்தி பொறிக்கப்பட்டுள்ளது.

தேவர் பண்டாரம்

கோயிலுக்குச் சென்று அறவோர்களால் அவ்வப்போது வழங்கப் பெறும் விலையுயர்ந்த பொருட்கள், அணிகலன்கள், ஆடைகள், பொற்காசுகள், நவமணிகள் முதலானவற்றைப் பாதுகாப்பாக வைத்துப் போற்றப்படும் இடம் தேவர் பண்டாரம் எனப் பெயர்பெற்றது. விளக்குத்தானமாக வழங்கப்பட்ட 32 பசுக்கள் தேவர் பண்டாரத்தில் கொடுக்கப்பட்டதாக மூன்றாம் இராசராச சோழனின் கல்வெட்டுக் கூறுகின்றது. (குப்புசாமி.சு., 1957:56).

விக்கிரம சோழனின் (கிபி.1120-1136) 4ம் ஆட்சியாண்டுக் கல்வெட்டானது தஞ்சாவூர்ப் பெரிய கோவில் கர்ப் பக்கிருகத்தின் வடபுறச்சுவரில் காணப் படுகின்றது. தஞ்சைப் பெரிய கோயிலுக்கு உரிய வெளியூர்ப் பண்டகசாலைகளுக்குச் சென்று அங்குள்ள நெல் முதலிய பண்டங்களை அளந்துகொண்டு வந்து பெரிய கோயிலிலுள்ள களஞ்சியத்தில் சேர்க்க வேண்டிய தொழிலுக்கு கல்லாலை என்பவனை நியமனம் செய்யப்பெற்றமை

பற்றி இக்கல்வெட்டுச் செப்புகிறது. (குருசாமி தேசிகர்,வி.சா., 1957:142).

திருச்சிராப்பள்ளிக்கு அருகிலுள்ள திருவானைக்கா கோயிலின் இரண்டாம் பிரகாரத்தின் கீழ்ச்சுவரில் முதலாம் குலோத்துங்க சோழனின் கல்வெட்டுக் காணப்படுகின்றது. இக்கல்வெட்டால் பின்வரும் செய்தி அறியப்படுகின்றது. (சுந்தரேச பாண்டையர்,வை.,2008:130).

"திருவானைக்காவில் திருவெண்ணாவின் கீழ் இனிது எருந்தருளிய திரிபுவனபதிக்குப் பழைய அடியாராகிய சண்டேஸ்வரர் உள்ளிட்ட கன்மிகன் வளம்பகுடி அரையன் மகன் முனையன் அருமொழி தேவனான வில்லவராயனுக்கு மீக்கோழை ஆளிகுடியில் நாலேமுக்கால் வேலி நிலத்தை விற்றுக்கொடுத்து அக்காசைக் கோயில் பண்டாரத்தில்ஒடுக்கியுள்ளார். இந்நிலத்தில் பயிரிட்டுவரும் வருவாயான இருபத்து முக்கலனே இருதூணிக் குறுணி நெல்லையும் கொண்டு இவ்வில்லவராயன் திருவானைக் கோயிலில் எழுந்தருளிவித்த இடங்கை நாயக்கருக்கும் அவர்தம் பிராட்டியார்க்கும் திருமஞ்சனப்படிகளுக்கும் திருவமுது படிக்கும் இரண்டு திருநாளிலும் இரண்டுநாள் எழுந்தருளுகைக்குமாகப் பயன்படுத்திக்கொள்ளுமாறு நிபந்தஞ் செய்து கொடுத்துள்ளான். (சுந்தரேச பாண்டையர்,வை.,2008:131).

கோயில் நிர்வாக அதிகாரிகள்

ஸ்ரீ காரியம்

கோயில் காரியம் மேற்பார்வை செய்யும் அறங்காவலர் ஸ்ரீ காரியம் பார்ப்பவர் எனவும், ஸ்ரீ காரியப் பெருமக்கள் அல்லது ஸ்ரீகாரியம் ஆராய்வார் என்று அழைக்கப்பட்டனர். அவரைக் கண்காணிப்பவரை ஸ்ரீ காரியக்கண்காணி நாயகம் எனவும் சோழர்கள் அழைத்தனர். கோயிலுக்கு ஆண்டுதோறும் வரவேண்டிய பல்வேறு வருவாய்களை வசூலிப்பது இவர்கள் கடமையாகும். கிராமத்தார் தமது வாணிபப் பொருள்களின் மீது இடப்பட்ட வரியை இறையிலியாகக் கோயிலுக்கே கொடுக்கும்படி கட்டளையிட்டனர்.

மூன்றாம் குலோத்துங்கன் தனது 28-ஆவது ஆண்டு சாசனத்தில் குளிக்கரை கிராமத்தால் அவ்வித வரியை ஊர்ச் சபையாரே வசூலிக்கும் படியாக கல்வெட்டொன்று தெரிவிக்கின்றது. (சோமசுந்தரம் பிள்ளை,ஜே.எம்.,1948:112).

விக்கிரம சோழனின் (கிபி.1120-1136) 4ம் ஆட்சியாண்டுக் கல்வெட்டானது தஞ்சாவூர்ப் பெரிய கோவில் கர்ப்பக் கிருகத்தின் வடபுறச்சுவரில் காணப் படுகின்றது. தஞ்சை இராசராசேச்சுரம் என்னும் பெருவுடையார் கோயிலில் நெல் அளத்தல் தொழிலைச் செய்துவந்த இராசராசப் பல்லவரையனுக்கு அத் தொழிலைச் செய்பவர் அனுபவித்து வந்த நிலத்தை உரிமையாக்கி விக்கிரமசோழன் அத் திருக் கோயிலில் ஸ்ரீகாரியம் செய்வானுக்கும் தேவகன்மிகளுக்கும் ஆணையிட்ட திருமுகம் கல்லில் வெட்டப்பட்டுள்ளது. (குருசாமி தேசிகர்,வி. சா., 1957:142).

தேவகன்மிகள்

கோயில்களில் உள்ள திருமேனிகளுக்குத் திருமஞ்சன நீராட்டு நிகழ்த்தல், திருப்பரிச்சட்டம் அணிவித்தல், மலர் மாலை சூட்டல், திருவமுது படைத்தல், உள்ளிட்ட காரியங்களைச் செய்பவர்கள் சோழர் காலத்தில் தேவகன்மிகள் என்றழைக்கப்பெற்றனர். சிவன் கோயிலில் இத்தகைய பணிகளுக்குப் பட்டர் நியமிக்கப்பட்டனர். அவர்கள் அறுபது வட்டத்துச் சிவப்பிராமணர்கள் என்று சாசனங்களில் குறிக்கப்படுகின்றனர். (குப்புசாமி,சு.,1976:52)

நிர்வாகச் சீர்கேடும் அபராதமும்

கோயில் நிர்வாக முறைகளை சீர்பட நடாத்துவதில் சோழர்கள் மிக ஊக்கம் காட்டியமையை பல கல்வெட்டுகள் மூலம் அறிந்துகொள்ள முடிகின்றது. அரசர்களும் அரசியல் அதிகாரிகளும் ஊர்தோறும் போய்க்கவனித்து வருகையில் கோயில்களையும் அவற்றின் பொருள்களையும் கண்காணித்தனர். திருமாற்பேறு அக்னீசுவரர் கோயில் நிபந்தங்கள் நடவாமல் நிற்க அதன் தேவதானங்கள் பிறரால் அபகரிக்கப்பெற்று தினசரி திருவமுது இரண்டு நாழியாகக் குறைவுபட்டிருந்ததால் மதுராந்தகன் கண்டராதித்தனார் தாமும் அவ்வூர்ப் பஞ்சாயத்தாரும் விசாரித்து, கோயில் அறைகாரனுக்கு அபராதம் விதித்துத் தேவதான நிலங்களை மறுபடியும் சேர்த்துக்கொண்டதாக கல்வெட்டுத் தெரிவிக்கின்றது. (சோமசுந்தரம் பிள்ளை,ஜே.எம்.,1948:133).

கூகூர்க் கல்வெட்டொன்றில் வட ஆர்க்காடு சில்லா திருவல்லத்திலுள்ள கோயிலில் நிபந்தங்கள் நடைபெறாது போகவே முதலாம் இராசராசசோழனது அரசியல் பணியாளர் ஒருவரால் அது கண்டுபிடிக்கப்பட்டு, களவாடியவனுக்கு அபராதம் விதித்து அப்பொருளைக் கொண்டு ஒரு தங்கத்தட்டுச் செய்து கோயிலுக்குக் கொடுத்ததாகவும் செய்தி பதிவு செய்யப்பட்டுள்ளது. (சோமசுந்தரம் பிள்ளை,ஜே.எம்.,1948:133).

முதலாம் இராசராசன் ஊர்களில் பவனிவரும்போது, திருவெறும்பியூர்க் கோயிற் கணக்குகளைச் சிறுகுடையூர்க்காளி ஆதித்தன் என்பான் தணிக்கை (Audit of accounts) செய்தானென்பதும், அதனால் கோயில்களின் வருமானம், செலவுத்திட்டங்கள் அரசனின் காப்புக்குள் அடங்கியிருந்தனஎன்பதும்அறிந்துகொள்ள முடிகின்றது. (சோமசுந்தரம் பிள்ளை,ஜே.எம்.,1948:134).

முதலாம் குலோத்துங்கன் காலத்து அரசியல் பணியாளர்கள் திருப்பனந்தாளில் கோயில் திருக்கைக்கோட்டிப் பண்டாரத்தைத் (Temple-treasury) தணிக்கை(Audit of accounts) செய்யும் காலத்து அர்ச்சகர்கள் மூன்று தடவைகளில் நகைகளையும் பரிகலங்களையும் அபகரித்துள்ளமை கண்டு அரசன் முன் கொணர்ந்து 540 காசு அபராதம் விதிக்கவே அவர்களில் ஒருவன் தன் பகுதியான தொகையைக் கொடுக்கமுடியாது, கோயில் முறையான தனது பாகத்தில் 4நாள் விட்டுக்கொடுத்தான் என்பதைக் கல்வெட்டுக் கூறுகின்றது. (சோமசுந்தரம் பிள்ளை,ஜே.எம்.,1948:134).

சோழர்களின் இலங்கைக் திருக்கோயில் நிர்வாகம்

முதலாம் இராசராச சோழனது திருக்கேதீஸ்வரம் கல்வெட்டு

இக்கல்வெட்டில் சோழரின் நிர்வாக அதிகாரியாக விளங்கிய தாழிக் குமரன் என்பவன் மாதோட்டத்தில் சிவாலயம் ஒன்றினை நிர்மாணித்த செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தலத்திற்கு இராஜ ராஜ-ஈஸ்வரம் எனப் பெயரிட்டனர். இச்சிவாலயமே திருக்கேதீச்சரமாகும். தாழிக் குமரன் அங்குள்ள கோயிலின் பழைய கட்டடங்களை இடித்துப் புதியதோர் கோயிலை உருவாக்கினான். (பத்மநாதன்,சி., 2013:55). இராஜராஜ -ஈஸ்வரத்தில் நாள் வழிபாடுகளும்உற்சவங்களும்செய்வதற்காக அவ்வாலயத்திற்கு வழங்கிய நிவந்தங்கள் பற்றி இச்சாசனம் செப்புகிறது. ஆலயத்திற்கு கிடைக்கின்ற நன்கொடைகளையும் அவற்றை ஆதாரமாகக் கொண்டு செய்ய வேண்டிய ஆலய தருமங்களையும்

பதிவுசெய்வதற்காகவே இச்சாசனம் எழுதப்பட்டது. இவ் நன்கொடைகள் இரு நோக்கங்களுக்காக வழங்கப்பட்டன என்பதை சாசனங்களின் துணைகொண்டு அறியலாம்.

1. வைகாசி விசாகம் ஏழுநாள் உற்சவமாகிய திருநாட் தர்மத்திற்கும்
2. நாள் வழிபாட்டிற்கும்

என்பனவாகும். இங்கு நெசவுத்தறிகள், வட்டம் (வரி), பாதைப்படவுகள் என்பவற்றின் மூலம் கிடைத்த வருமானங்கள் நன்கொடையில் அடங்கின. அந்த மூன்று வகையான வருமானங்களும் முழுமையாகவே கோயிலுக்கு வழங்கப் பெற்றன என்று கொள்ளும் வண்ணமாகவே சாசனக்குறிப்பு அமைந்துள்ளது.

ஆலயத்தில் நாள்தோறும் மூன்றுவேளை ஆராதனை நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஒவ்வொரு வேளையும் இருபடி அரிசிகொண்டு திருவமுது செய்து நெய்வேத்தியம் வைக்க வேண்டும். ஆராதனை செய்வதற்கு இளம் பிராமணர் இருவர் நியமிக்கப்பட்டிருந்தனர். அவர்களுக்கு வேதனமாக நெல்லும் எண்ணெயும் வழங்க வேண்டும். மடபதி ஒருவனைப் பற்றிய குறிப்புண்டு. அடியார்களுக்கு அன்னதானம் வழங்குவதற்கு அதில் வசதிகள் இருந்தன என்றும் கருதலாம். மடபதிக்கு அளிக்கப்பட வேண்டிய நன்கொடை பற்றிய பகுதி அழிந்துவிட்டது. (பத்மநாதன்,சி., 2013:63). இவ்வழிபாட்டிற்குரிய வருமானங்களை மாதோட்டத்து நெசவுத்தறிகள், வட்டம்(வரி), பாதைப் படவுகள் என்பன மூலமாகப் பெறவேண்டும் மென்று சாசனத்திலே சொல்லப்படுகின்றன. இவ்வருமானங்களை என்ன விகிதத்தில் கொள்ள வேண்டும் என்றும் கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது. இச்சாசனப்பகுதி ஒரு கட்டளை என உணரப்படுகின்றது. அதாவது சோழமன்னரால் மாதோட்டத்தில் ஆட்சியதிகாரியாக நியமிக்கப்பட்டவர்களுக்கு அனுப்பிய கட்டளையேயாகும். எனவே திருநாட் தர்மம், நாள்வழிபாடு என்பன தொடர்பான அறக்கட்டளை சோழமன்னரின் பிரகடனம் என்பது புலனாகின்றது. நாள்வழிபாட்டிற்கு வேண்டிய முதலை மாதோட்டத்திலுள்ள குடியானவர் சிலரிடமிருந்தும் வணிக சமூகங்களிடமிருந்தும் பெற்றுக்கொள்வதற்கு அரசனால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஆகவே பாடல் பெற்ற தலமாகிய திருக்கேதீச்சரத்தில் புதிய ஆலயமொன்றை நிர்மாணஞ்செய்து, அதில் நாள் வழிபாடு உற்சவங்களும் நடைபெறுவதற்கு வேண்டிய நிவந்தங்களை இராசராசன் வழங்கினான் என்பது சாசன வாசகத்தின் மூலம் தெளிவாகின்றது. கொழும்பு அருங்காட்சியத்திலுள்ள முதலாம் இராஜேந்திர சோழன் காலத்துக் கல்வெட்டுக்கள் இச்சாசனம் மாதோட்டத்தில் திருவிராமேஸ்வரம் எனும் சிவாலயம் அமைந்திருந்தமையினைப் பற்றி கூறிநிற்கின்றது. சோழப் படையமைப்பிற் சேவைபுரிந்த சிறுகுளத்தூருடையான் தேவன் என்பவன் திருவிராமேஸ்வரத்தில் உற்சவ காலத்தில் விளக்கெரிப்பதற்குச் சில ஏற்பாடுகளைச் செய்தான். அது ஆனித்திங்கள் முதலாக நடைபெற வேண்டும் என்றும் சொல்லப்படுகின்றது. (பத்மநாதன், சி., 2013:90). இவன் இராசேந்திர சோழ தேவர் பெருந்தனத்துப் பணிமகன் என்பதையும் சாசனங்கள் குறிப்பிடுகின்றது.

நிறைவுரை

சோழ அரசின் நாடு தழுவிய நிர் வாகக் கட்டமைப்பின் அச்சாணியாக திருக்கோயில்கள் விளங்கின. இக்கோயில்களிற்கு சோழ அரசர் கள்

முதல் குடிமக்கள் வரை அறக்கொடை களையும் நிபந்தங்களையும் நல்கி வந்தனர். இதனால் கோவில்கள் செல்வங்கொழிக்கும் நிலையங்களாக மிளிர்ந்தன. இக்கோயில்களின் சொத்துக்களைப் பராமரிப்பதற்கும், சிறந்த முறையில் அவற்றை நிர்வாகம் செய்யவும் பல பணியாளர் குழுக்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். இந்த அடுக்குக் கட்டமைப்பின் மூலம், சோழர் கோவில் நிர்வாகம், சபைகள், நகர அதிகாரிகள் மற்றும் அரச அதிகாரிகளை திறம்பட ஒருங்கிணைத்து, சோழர் காலக் கோயில்களை சமுதாய மையங்களாகத் திகழ வைத்தன. இதற்குக் காரணம் திருக்கோயில் நிர்வாகம் ஒழுங்கான முறையில் கட்டமைக்கப்பட்டமையேயாகும். ஆகவே கல்வெட்டுக்கள் சோழ ஆட்சியில் கோயில்கள் ஆற்றிய பொருளாதார, சமய மற்றும் சமூகப் பாத்திரங்களின் பதிவேடுகளாக அமைந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

உசாத்துணை நூல்கள்

இராசமாணிக்கனார்,மா., (1985), **சோழர் வரலாறு** (மூன்றாம் பாகம்), பூரம் பதிப்பகம், சென்னை.

குப்புசாமி.சு., (1976), **வரலாற்று வடிவங்கள்**, சென்னை.

குருசாமி தேசிகர், வி.சா., (1957), **தென்னாட்டுத் திருக்கோயிற் கல்வெட்டுக்கள்**, விக்டோரியா அச்சகம். மாயூரம்.

சுந்தரேச வாண்டையார்,வை., (2008), **முப்பது கல்வெட்டுக்கள்**, அறிவுப் பதிப்பகம், சென்னை.

சோமசுந்தரம்பிள்ளை, ஜே.எம்., (1948), **சோழர் கோயிற்பணிகள்,** ஆசிரியர் நூற்பதிப்புக்கழகம், சென்னை.

பத்மநாதன்,சி., (2013), **இலங்கைத் தமிழ்ச்சாசனங்கள்** -II, இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு.

மகேஸ்வரன்,வ., (2008), **சோழர்கால கோயிலும் சமூகமும்**, குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

ஸ்ரீதர்,தி., ஸ்ரீ., (பதிப்பு),(2004), **தமிழ்நாட்டுக் கல்வெட்டுக்கள்**, தமிழ்நாடு அரச தொல்லியற்துறை, சென்னை.

கல்வெட்டியல், அலகு: III, சோழர்காலத்திய ஆவணப்பதிவு முறைகள்.

சோழப்பேரரசும் சமயப் பெருநெறிகளும், ஆய்வரங்குச் சிறப்புமலர், (2008), மத அலுவல்கள் ஒழுக்க மேம்பாட்டு அமைச்சு, இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம். கொழும்பு.

இந்துப்பண்பாட்டுக்குரிய சித்தமருத்துவப் பாரம்பரியத்தில் அசுரமருத்துவ முறைகள்: பரராசசேகரத்தினை முன்னிறுத்தியது

கிஷாந்தினி, தி.

ஆய்வுச்சுருக்கம்:

இந்துப்பண்பாட்டு மரபில் அறிவியல் சிந்தனை முதன்மையானது. இந்து அறிவியற் புலத்தில் முறைசார் அறிவியற் கூறுகளுள் ஒன்றான மருத்துவவியலானது ஆயுர்வேதம். சித்த மருத்துவம் என இருபெருஞ் செல்நெறிகளினூடாக வளர்ச்சிபெற்ற அறிவியற்புலமாகும். அதர்வவேதத்தின் கிளையாகவும் உபவேதங்களில் ஒன்றாகவும் மேற்கிளம்பிய ஆயுர்வேதம் ஆத்ரேயர் மரபு. தன்வந்திரி மரபு என இரண்டு சிந்தனைப் பள்ளிகளூடாக வளர்ச்சி கண்டது. தென்னிந்தியாவில் சித்தர்களால் வெளிப்படுத்தப்பட்ட மருத்துவப் பனுவல்களை மூலமாகக் கொண்டு சித்த வைத்திய மரபு வளர்ச்சி பெற்றது. இந்திய தேசத்தில் முகிழ்த்த மருத்துவவியல் ஈழத்திலும் அரும்பிடத்தொடங்கியது. ஈழத்தில் சித்தர் மரபினூடாகத் தோற்றம்பெற்ற சித்த மருத்துவமானது. யாழ்ப்பாணத் தமிழ் மன்னர்களான ஆரியச்சக்கரவர்த்திகள் காலத்திலே மிகச் சிறந்த இரண்டு மருத்துவ நூல்கள் எழுச்சி பெறுவதற்கு வித்திட்டது. அவை செகராசசேகரம் மற்றும் பரராசசேகரம் என்பனவாகும். செகராசசேகரத்தின் முழுமையான தொகுப்பு காலவோட்டத்தில் கரைந்துவிட்டமை கெடுவாய்ப்பாகும். இருப்பினும் பரராசசேகரம் பன்னீராயிரம் செய்யுட்களுடன் தோற்றம்பெற்று இன்று எண்ணாயிரம் செய்யுட்களுடன் கிடைக்கப்பெற்றுள்ளது. இந்நூலானது ஆயுர்வேதத்தின் தன்வந்திரி மரபையும் சித்த மருத்துவத்தின் அகத்தியர் மரபையும் அடியொற்றி எழுதப்பட்ட மருத்துவ நூலாகும். இந்து மருத்துவவியலின் முக்கிய கிளைப்புலமாகிய அசுரமருத்துவம் தொடர்பில் இந்நூல் கரிசனை கொண்டுள்ளது. மருந்துகளால் குணப்படுத்த முடியாத வியாதிகளுக்கு நரம்பைக் குத்தி. கீறி இரத்தம் வாங்குதல். கூடு போடுதல். வன்மத் தானங்களைக் கண்டறிதல். கட்டிகளைக் கீறித் தைத்தல். கண்புரை அகற்றுதல் உள்ளிட்ட அறுவைச்சிகிச்சை முறைகள் பற்றியும் அவற்றுக்குத் துணைசெய்யும் பல வகையான கருவிகள் பற்றியும் பரராசசேகரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவற்றை வெளிப்படுத்துவதில் இந்த ஆய்வுப்புலம் முனைப்புக் கொண்டுள்ளது. இந்த ஆய்வானது விபரண ஆய்வு முறையியலுக்கு அமையக் கட்டமைக்கப்பட்டுள்ளது. பொருத்தமான சந்தர்ப்பங்களில் தரவுகள் உள்ளடக்கப்பகுப்பாய்வு முறையியலுக்கும் உட்படுத்தப்பட்டுள்ளன.

திறவுச்சொற்கள்: *அசுரமருத்துவம், சித்தமருத்துவம், பரராசசேகரம், உதிரம் வாங்குதல், அறுவை*

அறிமுகம்

சமயம், தத்துவம், கலை, இலக்கியம், அரசியல், பொருளியல், நீதிபரிபாலனம், அறிவியலின் பல்வேறு புலங்கள் எனப் பண்பாட்டில் உள்ளடங்குகின்ற பொருண்மைகள் அனைத்தும் இந்துப் பண்பாட்டுக் கற்கைகளில் செறிந்து விரவியுள்ளன. ஆயினும் இந்துப் பண்பாட்டையும் அதுசார்ந்த கற்கைகளையும் சமயத்துறையாக மட்டுமே அடையாளப்படுத்துகின்ற பாங்கு உலகளாவிய ரீதியில் நிலைபெற்றுள்ளமையும் கவனித்தற்குரியது. மேலைத்தேயத்தில் நிலைபெற்றுள்ள விஞ்ஞானச் சிதறல்கள் இந்துக்களின் அறிவியல் சித்தாந்தத்திலிருந்து முகிழ்தனவே. ஆக, அறிவியலானது இந்துக்களால் தோற்றுவிக்கப்பட்டது. பின் விஞ்ஞானமாக மேலைத்தேயத்தவர்கள் தமக்குரியதாக்கினர்.

அந்தவகையில், இந்துநாகரிக வரலாற்றில் இந்து அறிவியல் சிந்தனை முதன்மையானதாகும். இந்துமதமானது வெறுமனே ஆன்மிகத்தை மட்டும்கூறுகின்ற மதமல்ல. அது அறிவியல் பூர்வமான பல பிரபஞ்ச உண்மைகளைக் கூறுகின்ற மதமாகவும் உள்ளது. சிந்துவெளியில் குடியேறிய இந்துக்கள் காலம் காலமாகக் கைக்கொண்ட அறிவியல் சிந்தனைகளின் தொகுப்பை இந்து அறிவியல் எனலாம். அவ்வகையில், மருத்துவம், வானியல், அண்டவியல், இயற்பியல், இரசாயனவியல்

போன்ற முறைசார்ந்த அறிவியற் புலங்களும் இரசவாதம்,சோதிடம், குண்டலினியோகம், தியானம், காயசித்தி போன்ற முறைசாராத அறிவியற் புலங்களும் காலாதிகாலமாக காணப்பட்டுள்ளன.

இந்து அறிவியற் புலத்தில் மருத்துவ மானது முதன்மையானதாகக் காணப் பட்டது. பண்டைக்கால மருத்துவர்கள் உடல் உறுப்புக்களின் அமைப்புக்களை ஆழமாக அறிந்திருந்தனர். மருந்துகளைப் பற்றிய ஆரம்பகாலக் குறிப்புக்கள் அதர்வ வேதத்தில் காணப்படுகின்றன. கி.பி 02ஆம் நூற்றாண்டில் இந்து சமுதாயத்தில் இரண்டு புகழ் பெற்ற ஆயுர்வேத மேதைகள் தோன்றினர். சுஸ்ருதர், சரகர் என்பவர்களே அவர்களாவர். இந்த ஆயுர்வேத மருத்துவம் ஆத்திரேயர் மரபு, தன்வந்திரி மரபு எனும் இரண்டு நிலைகளிலும் வளர்ந்து வந்தது. இவை மானிட மருத்துவம், தேவ மருத்துவம் மற்றும் அசுர மருத்துவம் எனும் மூவகைகளில் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும் நோய்கள், அவை ஏற்படுவதற்கான காரணங்கள், சிகிச்சை முறைகள், மருந்துகள், அறுவைச்சிகிச்சை போன்ற பல அறிவியற் கருத்துக்களை உள்வாங்கிய மருத்துவமாக இந்து மரபில் போற்றப்பட்டு வருகின்றது.

இந்துநாகரிக மூலங்களில் காலத்தால் முற்பட்டதாக அமைகின்ற இலக்கிய மூலங்களான வேதங்களில் மருத்துவம் பற்றிய விடயங்கள் காணப்படினும் சத்திர சிகிச்சை தொடர்பில் சிறப்பான குறிப்புக்கள் இனங் காணப் படவில்லை. எனினும் அதர்வவேதத்தில் மனித உடற்கூற்றியல் குருதிச் சுற்றோட்டம் ஆகியவை பற்றிய சில விவரணப் பகுதிகள் உள்ளன.

அதர்வ வேதத்தின் கிளையாக அமையப் பெற்ற ஆயுர்வேத மரபானது கி.மு 800க்குப் பின்பு ஆத்திரேயர் மரபு, தன்வந்திரி மரபு என இருவகை சிந்தனாகூடங்களாக வளர்ச்சி கண்டது. இவற்றுள் தன் வந்திரியால் ஆயுர்வேதம் எட்டுப் பிரிவுகளாக வகுக்கப்பட்டதென்றும் அவற்றுள் ஒன்று சல்யதந்திரா எனச் சுட்டப் பெறும் அறுவைச்சிகிச்சை என்பதும் குறிப்பிடத்தக்கது. மேலும் வடஇந்திய வரலாற்றில் அறுவைச்சிகிச்சை தொடர்பில் ஆழமாக ஆராய்ந்து அதன் பயில்நிலைகளை செய்முறை விளக்கங்களுடன் எடுத்துரைக்கும் ஆயுர்வேதப் பனுவலாக சுஸ்ருத சம்ஹிதை விளங்குகின்றது. (முகுந்தன்,ச., 2016:123) இந்நிலையில், ஈழத்துச் சித்த மருத்துவப் பாரம்பரியத்தில் அசுர மருத்துவம் தொடர்பில் அதிக விபரங்களைத் தொகுத்துத் தந்துள்ள நூல்களுள் பரராசசேகரத்தை முதன்மைப்படுத்தலாம்.

ஈழத்தில் அறுவைச் சிகிச்சையின் முன்னோடிகள்: ஆரியச்சக்கரவர்த்திகள்

ஆரியச்சக்கரவர்த்திகளின் வெற்றிக்கும் புகழுக்கும் அவர்கள் அறுவை மருத்துவத்தில் பெற்றிருந்த திறமை மற்றும் ஆற்றல் பேருதவியாக இருந்துள்ளது. செகராசசேகரம், பரராசசேகரம் 12000 ஆகிய இரு நூல்களும் சிறந்த மருத்துவ நூல்களாகத் திகழ்கின்றன. அவை கூறும் மருத்துவத்தில் அசுர மருத்துவம் முதன்மையானது. கி.பி 13ஆம் நூற்றாண்டில் சிங்கை நாட்டு மருத்துவர்கள் உடற்கூற்றியலை, சிங்கைநாடன் செகராச சேகரன் வாள் போர்க்களத்தில் வெட்டி வீழ்த்திய வடக்கர்களின் உடலைக்கீறி, உறுப்புக்களை அளந்து ஆய்ந்து ஐயம் சிறிதுமின்றிக் கற்றார்கள் என்று செகராசசேகர நூல் தெரிவிக்கின்றது.

"இயம்பிய வுடலுமூனு மென்பு நாடிகளு மற்றும் செயம் பெறு சிங்கை நாடன் செகராச சேகரன்மா லுயர்ந்தவாள் வடக்கராக முருட்டிய களத்தின் மீதே அயஞ்சிறி துளதீர வளந்தளந் தறிந்த தாமே"

இது விஞ்ஞான வளர்ச்சியில் அவர்கள் அடைந்திருந்த உயர்ந்த நிலையைக் காட்டுகிறது. மேல்நாட்டில் கி.பி. 1543இல் தான் முதன்முதலாக உடலை வெட்டிப் படித்தார்கள் என டாக்டர் சிற்சபை

தெரிவித்துள்ளார். கி.பி. 1843இல் ஈதர் விறைப்பு மருந்து கண்டுபிடிக்கப்பட்டது. கி.பி. 1881இல் தான் குளோரோபோம் மயக்க மருந்து பாவனைக்கு வந்தது. ஆனால் கி.பி.13ஆம் நூற்றாண்டில் சிங்கை அரசர்கள் அங்குசத்தினால் வன்மத்தில் குத்தி விறைக்கப்பண்ணி நோயாளிக்கு வலியின்றி அறுவைச்சிகிச்சை செய்து வந்தனர் என்று ஆரியச்சக்கரவர்த்திகளின் மரபில் வந்த இராஜசேகரம் என்பவர் தனது சிங்கை அரசர்களின் அறுவை மருத்துவம் என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார். (இராஜசேகரம், 2010:vii – viii)

ஈழத்துச் சித்தமருத்துவப் பாரம்பரியத்தில் கதிர்காமமும் பரராசசேகரமும்

இலங்கை உட்பட பாரதத்தின் தென்பகுதிகளில் சிவவழிபாடு ஆதியானதாக இலங்குகின்றதோ அதேபோல சிவசம்பிரதாயமுடைய சித்த(ர்) மருத்துவமும் புராதன காலந்தொட்டே வழக்கிலிருந்து வந்துள்ளது. சித்த மருத்துவமானது சிவபெருமான் உமையம்மையாருக்குக் கூறியதாகவும், உமையம்மையாரிடம் இருந்து அதைக்கேட்ட முருகப்பெருமான் அகத்தியர், திருமூலர் முதலான சித்தர்களுக்கு உபதேசித்ததாகவும், இச்சித்தர்களே பூமியில் சித்தமருத்துவத்தைப் பரப்பியதாகவும் கூறுவர். (சிவசண்முகராஜா, செ., 2000:1) ஆகவே, சித்தருள் சித்தரான சிவபெருமானால் வழங்கப்பெற்று சித்தர்களால் வளர்க்கப்பட்டதால் சித்த மருத்துவம் என்றும், தமிழில் உள்ளமையால் தமிழ்க் கடவுள் முருகப் பெருமானால் சித்தர்களுக்கு உபதேசிக்கப்பட்டமையாலும் தமிழ் மருத்துவம் என்றும் பெயர் பெற்றது (சிவசண்முகராஜா, செ., 2000:2) என்ற கருத்தும் நிலவுகின்றது.

ஈழத்தில் சித்த மருத்துவப் பரம்பலில் கதிர்காமம் முக்கிய இடம் பெற்றுள்ளது. பதினெண் சித்தர்களில் ஒருவரான போகநாதர் என்பவரே முருகனருளால் கதிர்காம யந்திரத்தை ஸ்தாபித்தவர் என்று கூறுவர். தமிழ்நாட்டில் பொதிகை மலையைப் போல் ஈழநாட்டில் கதிரமலை சித்தர்களின் புண்ணிய வாசஸ்தலமாக விளங்கி வந்துள்ளது. முத்துலிங்க சுவாமி அவர்களும் கதிர்காமத்தோடு தொடர்புடையவரே. மூலிகை வளம்மிக்க இப்புண்ணிய பூமியில் சித்தர் கணத் தலைவரான முருகப் பெருமானின் யந்திரத்தை ஸ்தாபித்து சித்தர்கள் வழிபட்டு வந்ததுடன், அங்கிருந்து சித்த மருத்துவத்தையும் பரப்பியிருத்தல் வேண்டும். கதிர்காமத்தில் மூலிகை மருத்துவம் பெற்றிருந்த முக்கியத்துவம் காரணமாக அங்கு மூலிகைச் சந்தை பன்னெடுங்காலமாக இருந்து வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

ஈழத்தமிழர் மருத்துவத்தில் கதிர்காமம் பெற்றிருந்த முக்கியத்துவத்தைப் பரராசசேகர வைத்திய நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. சித்த வைத்தியத்தில் பரராசசேகரம் மிக முக்கியத்துவம் பெற்ற நூலாகும். அத்தகைய நூலில் கதிர்காமத்திற்கும் கதிர்காமக் கந்தனுக்கும் கொடுத்த முக்கியத்துவமானது ஈழத்தில் சித்த(ர்) மருத்துவத் துறையில் கதிர்காமத்துக்குத் தனிச்சிறப்புள்ளதை வெளிப்படுத்தி நிற்கிறது. மருந்து, மாத்திரைகள் பிழைத்தால், கதிரைமலை மேவு முருகனை வணங்கிட அந்நோய்கள் மாறிவிடும் என்று பரராசசேகரம் என்ற நூலில் பலவிடங்களிலும் கூறப்பட்டுள்ளமையை செ.சிவசண்முகராஜா சுட்டிக்காட்டியுள்ளார். (சிவசண்முகராஜா, செ., 1993:14)

பரராசசேகரம்

யாழ்ப்பாண நல்லூரில் தமிழரசர்களின் ஆட்சிக்காலத்தில் தோன்றியிருக்கக்கூடிய சித்த மருத்துவ நூல்களுள் பரராசசேகரமும் ஒன்றாகும். தமிழ்மொழியில் முழுமையான தொரு ஆயுர்வேத நூலை ஆக்க வேண்டும் என்னும் நோக்கத்தில் சிங்கைச் செகராச சேகர மன்னனின் ஊக்குவிப்பின் பேரில்

ஆக்கப் பெற்ற நூலாக்க முயற்சிகள் முழுமையடைவதற்குள் பல ஆண்டுகள் கழிந்துவிட்டன. இம்முயற்சியில் ஈடுபடுத்தப்பெற்ற பாவலர்களின் ஆக்கங்கள் ஒன்றுதிரட்டப்பட்டும் பூர்த்தியடையாத பகுதிகள் புதிதாக எழுதிச் சேர்க்கப்பட்டும் 12000 பாடல்கள் கொண்ட பரராசசேகரம் என்னும் பெருந்தொகுப்பு உருவானது. (தாய்வீடு, 2017- May: 13) இத்தொகுப்பு முழுமையடைந்தபோது பரராசசேகரன் என்பவரே அரியணையிலிருந்தமையால் அவனது பெயரிலே இந்நூல் வழங்கப் பெற்றது என்பதற்கு பின்வரும் பாடல் பதச்சோறாகும்.

"பார்மேவும் அரசர்குல திலகமான பரராச
சேகரன் மால் பருகி ஏந்தி
ஏர்மேவும் உலகு புரந்தருளு நாளில் இசைத்
தனன் ஐங்கரக்கரியை இறைஞ்சலுற்றே"

(பரராச. 1:585)

மேலும் தன்வந்திரி பெயரில் வழங்கப்பெற்ற சம்ஸ்கிருத மொழியிலமைந்த ஆயுர்வேத நூல்களையும் தேரையர், அகத்தியர் ஆகியோரின் சித்த வைத்திய நூல்களையும் ஆதாரங்களாகக் கொண்டு பரராசசேகர வைத்தியத்தொகுப்பு நூல் உருவாக்கப்பட்டுள்ளமையும் சான்றுகளின்வழி உறுதிப்படுத்தப் பட்டுள்ளது.

"தாரணியோர் மிகப்புகழுந் தன்வந்திரி செய்
தகவுடைய கீர்த்திபெறு மாயுள்வேதப்
பேரணியும் வாகடத்தைப் பெரிது பேணிப்
பெட்புடைய தமிழ்ப்பாவாற் பேசும் வண்ணம்"
"தேரையன் அன்று சொன்ன தென்மொழி
ஆரைநெய்யை
வாருறு குழலாய் செய்யும் வகையினை
உரைக்கக் கேளாய்"

என்ற பரராசசேகர கடவுள் வாழ்த்துச் செய்யுளையும் பிறவற்றையும் இதற்குச் சான்று கொள்ளலாம்.

பரராசசேகரமாலை, பரராசசேகர வைத்தியம், பரராசசேகரம் என்னும் பெயர்களால் சுட்டப்படும் இந்நூலானது தற்போது பன்னீராயிரம் செய்யுட்களிலிருந்து எண்ணாயிரம் செய்யுளளவில் கிடைக்கப்பெறுகின்மை ஈழத்துச் சித்த மருத்துவத்துறைக்கான கெடுவாய்ப்பாகவே எண்ணத் தோன்றுகிறது. இந்நூலை ஏட்டுப்பிரதிகளிலிருந்து அச்சில் பதிப்பித்தவர்களில் ஏழாலையைச் சேர்ந்த ஐ.பொன்னையா மற்றும் அச்சுவேலியைச் சேர்ந்த ச.தம்பிமுத்துப்பிள்ளை ஆகிய இருவரும் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களுள் ஐ.பொன்னையா அவர்களின் பதிப்பேதற்போது கிடைக்கப்பெற்றுள்ளது. ஐ.பொன்னையா அவர்கள் 1928-1936 ஆண்டு காலப்பகுதியில் பரராசசேகரத்தை ஏழு பாகங்களாகப் பிரித்து வெளியிட்டுள்ளார். (சிவசண்முகராசா,செ., (உரை) 2020:XV)

முதல் பாகம் : சிரரோகநிதானம்

இரண்டாம் பாகம் : கெர்ப்பரோக நிதானம், பாலரோக நிதானம்

மூன்றாம் பாகம் : சுரரோக நிதானம், சன்னிரொக நிதானம், வலிரோக நிதானம், விக்கல்ரோக நிதானம், சத்திரோக நிதானம்

நான்காம் பாகம் : வாதரோக நிதானம், பித்தரோக நிதானம், சிலேற்பனரோக நிதானம்

ஐந்தாம் பாகம் : மேகரோக நிதானம், பிளவைரோக நிதானம், வன்மவிதி, சத்திரவிதி, சிரைவிதி, இரட்சைவிதி

ஆறாம் பாகம் : உதரரோக நிதானம்

ஏழாம் பாகம் : மூலரோக நிதானம், அதிகாரஆராக நிதானம், கிரகணிரோக நிதானம், கரப்பன்ரோக நிதானம், கிரந்திரோக நிதானம், குட்டரோக நிதானம்

பரராசசேகரத்தில் அசுர மருத்துவம்

மானிட மருத்துவம் எனப்படும் மூலிகைகளினால் செய்யப்படும் சிகிச்சை

குடிப்பதற்கு கசப்பாகவும் அளவில் அதிக மாகவும் இருக்கலாம். தேவ மருத்துவம் எனப்படும் நீறு, சிந்தூரம் முதலிய மருந்துகள் அருந்த எளிதானது. மணமோ, சுவையோ தெரியாதது. இரக்கமின்றி பிணியாளனுக்கு வழங்கப்படும் நோவுடன் கூடிய சிகிச்சைகளான அழுத்தல், தட்டுதல், முறித்தல், சுட்டிகை, கீறிக்கட்டல், அறுவை முதலியவை அசுர மருத்துவம் எனப்படும். வெளிமருந்துகளே அசுர மருத்துவத்தின் போது பயன்படுத்தப்படுகின்றன. மேலும் சத்தகம், கத்தி, கருவி, ஊசி முதலிய கருவிகளின் துணைக்கொண்டு சிகிச்சை செய்யப்படுகின்றது.

பரராசசேகரத்தின் ஐந்தாம் பாகத்தில் அசுர மருத்துவம் பற்றிய விடயதானங்கள் தொகுக்கப்பட்டுள்ளன. வன்மவிதி, சத்திரவிதி, சிரைவிதி, இரட்சைவிதி என்பன இதற்குள் அடக்கம்.

1. வன்மவிதி : சத்திரம், சல்லியம் முதலியவற்றால் ஊறுபடின் அபாயத்தை விளைவிக்கும் தானங்களைப் பற்றிக் கூறுவது. மற்றும் அறுவைச்சிகிச்சையின் போது நோயாளியை மயக்கமடையச் செய்வதற்கானதானங்களும்(வன்மங்கள்) இவற்றில் சொல்லப்பட்டுள்ளது.

2. சத்திரவிதி : புண்கள், கட்டிகள் முதலியவற்றைக் கீறுதல் முதலிய வேலைகளுக்கு வேண்டிய கருவிகளின் தன்மை, அளவு போன்றவற்றைக் கூறுகிறது.

3. சிரைவிதி (சிரை-நரம்பு) : வேறு சிகிச்சை களால் தீராத நோய்கள் சிலவற்றில் இரத்தம் எடுக்கும் முறைகளும் சிரை யென்னும் காரிரத்தோட்ட நரம்புகளின் நிலைகளும் பற்றிக் கூறப் பட்டுள்ளன.

4. இரட்சைவிதி : சிலநோய்களில் சுடுதானங்களும் அதற்கு வேண்டிய கருவிகளின் இலட்சணங்கள் பற்றிக் கூறுகின்றது.

வன்மவிதி

மனித உயிர்களை மரணத்திலிருந்தும் நோய்களிலிருந்தும் மீட்டுக்கொடுக்கும் முயற்சியாகவே வன்மத்தானங்களை அறிந்து மருத்துவம் செய்தனர். நரம்பு களில் தட்டுவதால் உணர்விழப்பது, சிலநரம்புகளில் குறிப்பிட்ட இடங்களில் குறிப்பிட்ட அளவில் குறிப்பிட்ட நேரத்தில் தட்டுப்படுவதால் தான் ஒருவன் உணர்விழப்பான். வன்மவித்தையை அறிந்தவர்கள் இதை மிக இரகசியமாகவே போற்றி வருகின்றனர்.

சித்த ஆயுர்வேத பாரம்பரியத்தில் அறுவைச்சிகிச்சை செய்யும்போது உடலை விறைக்கச்செய்து நோவை உணராமல் இருப்பதற்கும் இரத்தம் அதிகம் இழக்கப்படுவதைத் தடுப்பதற்கும் வன்மங்கள் பயன்படுத்தப்பட்டன. அவ்வாறு அறுவைச்சிகிச்சையின்போது வன்மங்களைக் கையாளும் ஒழுங்குகளைத் தொகுத்து வன்மவிதி எனப் பெயரிட்டனர். எனவேதான் பரராசசேகரம் என்ற நூலில் சத்திரவிதிக்கு (அறுவைச்சிகிச்சை செய்வதற்குரிய உபாயங்கள்) முன்பாக வன்மவிதி கூறப்பட்டுள்ளது போலும். இதில் 100 செய்யுட்கள் உள்ளன.

பரராசசேகரத்தில் வன்மம் மொத்தம் நூற்றேழு ஆகச் சொல்லப்பட்டுள்ளது. வன்மத்தானங்கள் ஒவ்வொரு கையிலும் காலிலும் பதினொன்றாக மொத்தம் நாற்பத்து நான்கு, வயிற்றில் மூன்று, மார்பில் ஒன்பது, முதுகில் பதினான்கு, கழுத்தில் முப்பத்தேழு என்பனவாகும்.

“பெருகு வன்ம நூற்றேழில் பிறங்கு
மொருதா ளோரோன்றில்
மருவு வன்மம் பதினொன்று வயங்கு
கரமு மதுவேயாம்
ஒருவு முதரத் தொருமூன்று முரத்தின்
மீதி லொன்பதுவாம்
கருது முதுகிற் பதினாலு களன்மேன்
முப்பத் தேழாமே” (4474)

அறுவைச்சிகிச்சைக்கான கருவிகள்

புராதன இந்து அறிவியற்புலத்தில் அறுவைச்சிகிச்சை முறைமைகளில் அறுவைச்சிகிச்சைக்குப் பயன்படும் கருவிகளின் பயில்நிலை மிக முன்னேற்ற கரமானது. சிறுகட்டிகளை அகற்றுதல், பிளக்கப்பட்ட இரணப் பகுதியினுள் மருந்தினைப் பூசுதல், சூட்டுச்சிகிச்சைக்கு உதவுதல், இரணங்களைத் துப்புரவு செய்தல், உணவுக்குழாய் மற்றும் சிறுநீர்ப்பாதை ஆகியவற்றின் தடைகளை அகற்றுதல் போன்ற தேவைகளுக்கு உதவும் வகையிலான ஊடுருவிகள் தொடர்பில் அறிய முடிகிறது. (முகுந்தன்,ச., 2016:127)

மண்புழு, சர்ப்பத்தின்தலை, அம்பின் முனைப்பாகம், வினாக்குறி வடிவத்திலான கருவிகள் பல அக்காலத்தில் சத்திரசிகிச்சை நிபுணர்களால்அறுவைச்சிகிச்சையின்போது பயன்படுத்தப்பட்டன. சில விசேடமான தேவைகளுக்கு விசேடமான வடிவத்தில் அமைக்கப்பட்ட கருவிகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. மூக்கிலிருக்கும் சிறுகட்டியினை அகற்றுவதற்குப் பிளவுபட்ட இடுப்பெலும்பின் வடிவத்திலான கூர்மையான முனைகளைக் கொண்ட ஒரு ஊடுருவி பயன்படுத்தப்பட்டது. கண்ணிலுற்ற காசத்தைக் குத்தி நீக்குவதற்கு தாமரை மொட்டு அல்லது இதழ் வடிவுகொண்ட நுனியையுடைய கருவி பயன்படுத்தப்பட்டுள்ளது.

மருந்துப்பொருட்களைப் பூசுவதற்கென குழியான கரண்டி போன்ற வடிவமுடைய ஊடுருவிகள் பயில்நிலையிலிருந்தன. தொற்றகற்றலுக்கான சிலவகையான அறுவைச்சிகிச்சையின் போது சூடு போடுதல் நடைமுறையும் இருந்தது. இதற்குத் துணைசெய்யும் விதத்தில் ஈட்டிமுனைகொண்ட கருவிகள் பயன்பாட்டிலிருந்தன. இவ்வாறாக இருபத்தாறு வகையான கருவிகளைப் பரராசசேகம் பட்டியற்படுத்தியுள்ளது. (பரராச, 4543, 4545-46) இங்கு சுட்டப் பெற்ற கருவிகள் பொதிகை மலையில் வசிக்கும் அருந்தவ முனிவரான அகத்திய மாமுனிவர் ஆயுள்வேதத்தில் கூறியவையே தமிழில் சுட்டப்பெறுகிறது என்று 4544ஆவது செய்யுள் நவில்கின்றது.

வெட்டுவதற்கும் துளைப்பதற்குமான கருவிகள்

அறுவைச்சிகிச்சையில் உடலைக் கீறுதல், வெட்டுதல், காயங்களைத் தூய்மைப்படுத்தல் போன்றன மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பங்களில் பயன்படுத்தப்படும் பதினேழுக்கும் அதிகமான கருவிகளைப் பரராஜசேகரத்தில் அடையாளப்படுத்தியுள்ளது.

01. கரபத்திரம் : சிறிய வாள். ஒரு சாண் நீளம், இருவிரற்கிடை அகலமும் கொண்டது. ஒருபக்கம் சிறுசிறுபற்களையும் கூர்மையான முனையையும் மரத்தாலான கைப்பிடியும் கொண்டது. எலும்புகளை அறுப்பதற்கு பயன்படும்.

02. விண்டகண்ணி : குழாய் போன்ற கருவி. தொண்டையின் நோய்களைப் பார்ப்பதற்கும் அண்ணாக்கு வளர்ச்சி, தொண்டைக்கிரந்தி வளர்ச்சி என்பவற்றைப் பரிசோதனை செய்யவும் சிகிச்சை அளிக்கவும் பயன்படுகிறது. பெண்குறியைப் பரிசோதனை செய்யவும் புண் முதலியவற்றுக்குச் சிகிச்சை அளிப்பதற்கும் பயன்படுகிறது. நடுவில் துவாரமுள்ள குழாய் என்பதால் குறிப்புண்களைக் கழுவவும் மருந்து போடவும் ஆசனவாயில் விரணம், மூலம், முளை, பகந்தரம் போன்ற நோய்களைச் சோதனை செய்யவும் சிகிச்சை அளிக்கவும் இக்கருவி பயன்படுகிறது. நோய்களுக்கு ஏற்ப விண்டகண்ணிகளில் துவாரங்கள் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு இடங்களில் அமைந்திருக்கும்.

03. சாரி : நாரை அலகு போன்ற கூரான ஆயுதம். இவை சிரையிலிருந்த

(நரம்பு) இரத்தம் வடியப்பண்ணப் பயன்படுத்தப்படுகிறது.

04. துவிமுகம் : சலாகையின் இரு பக்கங் களிலும் இரு முகங்களைக் கொண்ட ஆயுதம். முன்மனை மலரின் மொட்டு போன்று அமைந்திருக்கும். கண்ணில் பசாடு உரிக்கப் பயன் படுகிறது. மறுமுனை - மருந்திடப் பயன்படுகிறது. வெள்ளி, செம்பினாலானது.

05. விரிகி : அகன்ற ஊசி போன்றது. நெல் வடிவமானது. கட்டிகளைக் கீறவும் சீழ்க்கட்டிகளை பிளப்பதற்கும் தசையின் கீழுள்ள குழாயைக் கீறவும் பயன்படுத்தப்படுகிறது.

06. உத்பலம் : நீலோத்பல மலர் வடிவுடைய சத்தகம்.

07. விருத்தி : அகலமான கூரான உளி போன்ற சத்தகம். இதில் மூன்று வகையுள்ளது. ஒன்று நேராகவும் முனை முக்கோண வடிவும் கொண்டது. இரண்டாவது முனை அகலமாகவும் உட்புறமாக வளைந்ததுமாகும். மூன்றாவது முனை அகலமாகவும் வில் போன்று முதுகுப்புறமாகவும் வளைந்தது.

08. குடோரி : கைப்பிடியுடன் கூடிய சிறிய கோடரி. குடோரி எனும் சிகிச்சை முறையில்இதுபயன்படுத்தப்படுவதால் அப்பெயராலே பரராசசேகரம் குறிப்பிட்டுள்ளது. கோடரியினால் அரை அங்குல வெட்டுப்போட்டு அதில் மருந்துப் பொடியை நேரடியாக இரத்தத்துடன் கலக்கச்செய்வதாகும். ஆபத்தான வேளைகளிலும் அவசரம் கருதியும் மருந்தினைக் குடிக்க முடியாத சந்தர்ப்பத்திலும் குடோரி சிகிச்சை செய்யப்படுகிறது.

09. முத்தரி : மூன்று முனையுள்ள அரம் போன்ற கருவி நுனியில் உருண்டு வழுவழுப்பாகவும் உள்ள கருவி. கல்லடைப்பு, சதையடைப்பு சுத்தம் பண்ணப் பயன்படுத்தப்படுகிறது. ஒரு பக்கம் சுத்தினால் மட்டுமே சுரண்டும். மறுபக்கம் சுத்தினால் சுரண்டாது.

10. கத்தரி : பல வடிவங்களைக் கொண்ட கத்தரிக்கும் கருவிகள். நேரானவை, நுனி கூரானவை, வளைந்தவை. இவை தோல், தசை, மயிர் மற்றும் நூலிழைகளைத் துண்டிக்க உதவுகின்றன.

11. பணபத்திரம் : பாம்பு வடிவமும் தலையில் கருக்கும் கொண்ட சத்தகம். ஒருமுனை அகலமாகவும் விறகுத்தீயில் காய்ச்சி எடுக்கப்பட்ட கருவியாகும். சுலதாரை, குறி முதலானவற்றைச் சுத்தம் பண்ணவும் அடைப்பினை நீக்கவும் பயன்படுகிறது. தொண்டையில் அடைப்புண்டானால் நாக்கை அழுத்தி உட்பார்க்கவும் பயன்படுத்தப்படுகிறது.

12. தத்தரி : சீரற்ற பற்களை அரிந்து சீர்ப்படுத்தவும் பற்களில் படிந்துள்ள கறை மற்றும் அழுக்குகளை நீக்கவும பயன்படுத்தும் கருவி.

13. சத்தகம் : தட்டையான மெல்லிய தகடு போன்ற மிகவும் கூரான சிறிய ஆயுதம். அகல சத்தகம், வளைவு சத்தகம், சிறு சத்தகம், சத்தகம், உத்பலசத்தகம், வஞ்சியிலை சத்தகம் (வேதபத்திரம்) என அறுவைச்சிகிச்சையில் பல சத்தகங்கள் பயன்படுகின்றன. இவை வடமொழியில் சஸ்திரங்கள், சத்திரங்கள் என அழைக்கப்படுகின்றன.

14. தாரை : உட்பக்கம் துளையுள்ள குழாய் போன்ற சலாகை வடிவான கருவி. செம்பு மற்றும் வெள்ளியிலானது. நீராமை, சல அடைப்பு போன்ற நோய்களில் தடைப்பட்டு தேங்கியுள்ள நீரினை வெளியேற்றப் பயன் படுகிறது. உடம்பிலுள்ள சிறு வெளிப்பொருட்களைப் பார்ப்பதற்கும் உறிஞ்சுவதற்கும் பயன்படுகிறது.

15. வீணை : வீணையின் தந்தி போன்ற அமைப் பிலுள்ள சலாகைகள். மெல்லிய அழுத்தமான வழுவழுப்பான கம்பி போன்ற தடவு சலாகைகள். காது, மூக்கு, விரணம் முதலியவற்றைத் தடவிப்பார்க்கவும் உள்ளிருக்கும் பிற பொருட்களை அகற்றவும் பயன்படுத்தப்படும் கருவியாகும். இது பலவகைகளில் உள்ளது.

16. குறும்பி வாங்கி : சலாகைப் புட் போலவும் ஒரு பக்கம் குழி மடக்கி எடுக்கப்பட்டதாகவும் அமைந்தி ருக்கும். காதில் புகுந்த பூச்சியினங்கள், குடம்பி முதலியவற்றை அகற்ற உபயோகப்படுத்துவர்.

17. கொம்பு : கூரான முனையாகச் செய்யப் பட்ட கொம்புகள், இரத்தம் உறிஞ்சப் பயன்படுகிறது. கெட்டுப் போன மலைப் பாலை உறிஞ்சப் பயன்படுத்துவர். சிலவற்றில் அடிப்பாகம் மூன்று அங்குல அக லத்தில் தோலால் இறுக்கமாகக் கட்டப்பட்டு பை போன்று காணப் படும்.

தையலிடுவதற்கான கருவிகள்

இழைகள் நன்கு நுழையக்கூடிய துவாரங்களைக் கொண்ட ஊசிகள் பயன்படுத்தப்பட்டன. இவை உடையா மலும் பலமாகவும் இருத்தல் வேண்டும். சதைப்பிடிப்பான பகுதிகளைத் தைப்பதற்கு நேரான ஊசிகள் மூன்று அங்குல நீளம் கொண்டவையாகும். உள்ளுறுப்புக்களைத் தைப்பதற்கு வளைந்த இரண்டரை அங்குல ஊசி பயன்படுகிறது.

கௌவிகள்

01. தூண்டில் : மிகக்கூர்மையான நுனியுடை யது. முகப்பகுதி வளைந்திருக்கும். நாடி, நரம்புகளையோ, அண்ணாக்கு போன்ற பிற பகுதிகளையோ கொழுவி இழுக்கப் பயன்படும் கருவியாகும். தொண்டையில் சிக்கிய மீன்முள்ளு, தலைமயிர் முதலியவற்றை வெளியேற்ற உதவுகின்றது.

02. படிசம் : கவ்விப்பிடிக்கும் கருவி களாகும். அளவில் பெரியவையாகும். உடலில் புகுந்த பிற பொருட்களைப் பிடித்து இழுத்து வெளியே எடுக்கப் பயன்படுகிறது. அறுவைச்சிகிச்சையின் போது உடலின் உறுப்புக்களைப் பிடிப்பதற்கு சாதகமாக இவை அமைந் துள்ளன. மேலும் கெட்டியாகப் பிடிப் பதற்கு இடுக்கி எனப்படும் சாவணம் பயன்படுமென பரராசசேகரம் பரிந்துரைத்துள்ளது. குறடுகள் அதன் வடிவத்தைக் கொண்டு சாதாரண குறடு, சிங்கமுகக் குறடு, காகக் குறடு, நண்டுக்கால் குறடு, கரடிவாய் குறடு, பருந்து குறடு எனப் பலவிதமான இடுக்கிகளைத் தேவைக்கு ஏற்ப பயன்படுத்தினர். நடுவில் வளைவுள்ள பெரிய கர்ப்ப சாவணம் கர்ப்பத்தை வெளியேற்றப் பயன்படுத்தப்பட்டது. நுனியில் வளைந்த சாவணம் புண்களில் அழுக்குகளை நீக்கவும் பயன்படுத்தினர். இவை அறுவையின் போது படிய வைப்பதற்காகப் பயன்படுத்தியமையால் இவற்றை படிசம் என்ற ஒற்றைச் சொல்லால் பரராசசேகரம் சுட்டி யுள்ளது.

இவ்வாறு இருபத்தாறு வகையான கருவிகளைப் பரராசசேகரம் பட்டியற் படுத்தியுள்ளது. இவற்றை சத்திர விதி பகுதியில் இரண்டாவது, நான்கு மற்றும் ஐந்தாவது செய்யுள்களால் அறியலாம்.

வேதங்களில் பொதுவாகவும் சுருக்கமாகவும் கூறப்பட்ட வழிபாட்டு முறைகள், சிவாகமங்களிலே மிக விரிவுபடக் கூறப்பட்டுள்ளன. மூலாகமங்கள் இருபத்தெட்டு. அவை காமிகம் முதல் வாதுளம் ஈறாக, சிவபேதம், உருத்திர பேதம் எனும் இருவகைப்பாட்டுக்குள் உள்ளடங்குகின்றன. அவ்வாறே உபாகமங்கள் இருநூற்றியேழு ஆகும். ஆகமங்கள் சைவ சமயத்தவர் இவ்வுலகில் வாழ்ந்து பல இன்பங்களை அனுபவிப்பதற்கும் முடிவில் பரம்பொருளான சிவபெருமானின் திருவடிகளை அடைவதற்கும் வழிமுறைகளை வகுத்துக் கூறுகின்றன. அந்தவகையில் சைவசமயச் சடங்குகளையும் சிவ வழிபாட்டையும் மேற்கொள்ளத் தேவையான தகுதியை வழங்கும் தீட்ஷை வழங்கும் முறை, மந்திரங்களைப் பற்றிய விரிவான செய்திகள், தீட்ஷை பெற்றவன் தினந்தோறும் ஆற்ற வேண்டிய ஸ்நானம், கடைப்பிடிக்கவேண்டிய ஒழுக்கநியமங்கள் என்பவற்றை மிக விரிவுபட விளக்கி நிற்பவையாக சிவாகமங்கள் விளங்குகின்றன. இந்தவகையில் சிவாகமங்களும் சிவதீட்ஷைகளும் என்ற தலைப்பினாலான இந்த ஆய்வுக் கட்டுரையானது சிவாகமங்களிலே சுட்டப்பட்டுள்ள தீட்ஷை குறித்த விடயங்களை வெளிப்படுத்துவதாக அமைகின்றது. விபரண ஆய்வு முறையியலுக்கு அமைவாகவும் பண்புசார் அணுகுமுறையினூடாகவும் இந்த ஆய்வுக்கட்டுரை அமைக்கப்பட்டுள்ளது. ஆசார அனுஷ்டானங்கள் ஒரு மனிதனின் வாழ்வில் பூரணத்தைக் கொடுப்பதாகும். அவற்றை நல்ல முறையில் பேணிக்காப்பது சைவ சமயத்தவர்களின் முக்கிய கடமையாகும். அந்தவகையிலே அஞ்ஞானத்தைப் போக்கி மெஞ்ஞானத்தை அளிக்கவல்ல உபாயமாக விளங்கும் தீட்ஷை அனைவராலும் கைக்கொள்ளப்பட வேண்டிய அனுட்டானமாக விளங்குகின்றமை சிறப்பாகும்.

திறவுச்சொற்கள் : *சிவாகமங்கள், அனுட்டானங்கள், பத்ததி, தீட்ஷை, வழிபாட்டுமுறை*

அறிமுகம்

சிவனால் ஸ்தாபிக்கப்பட்ட நெறி சைவம், சைவர்களின் முழுமுதற்கடவுள் சிவபெருமான். எனக் காரணாகமம் குறிப்பிடுகிறது. "சிவனே ஸ்தாபிதம் சைவம் சைவனே ஸ்தாபித : சிவ" (காரணாகமம், பூர்வபாகம்:1) சைவத்தின் முடிந்த முடிபாகச் சிவாகமங்கள் நிர்ணயம் செய்திருப்பதனால் சைவசித்தாந்தம் என சிறப்புப் பெறுகிறது. சிவாகமங்கள் சைவசித்தாந்த நூல்களாகவும். சித்தாந்த சைவசமயத்தின் பிரமாணங்களாகவும் உள்ளன. இருபத்தி யெட்டு சிவாகமங்களையுமே தமது திருமேனியாகச் சிவன் கொண்டருள்வதாக அனைத்து ஆகமங்களும் கூறுகின்றன. ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான தாள் வாழ்க" என மாணிக்கவாசகர் குறிப்பிடுகிறார்.

"இந்த சரீரம் நமக்கு கிடைத்தது நாம்
கடவுளை வணங்கி முக்தியின்பம் பெறும்
பொருட்டேயாம்"
(ஆறுமுகநாவலர்: 2004:13)

ஈழத்து சைவமறுமலர்ச்சிக்கு வித்திட்ட வராகிய நல்லைநகர் ஆறுமுகநாவலர் சைவவாழ்வை மேம்பாடு அடையச் செய்தார். "அரிது அரிது மானிடராதல் அரிது" பிறவிகளிலே சிறந்த பிறவி மானிடப்பிறவி; அதுவே தலையாயது என்கிறார் ஔவையார் மனிதப்பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே என நாவுக்கரசர் குறிப்பிடுகிறார்.

மனிதன் சிறந்த சமூக உறுப்பினனாக வாழ்வதற்கு விழுமியப் பண்புகளைத் தன்னகத்தே வளர்த்துக் கொள்ளல் அவசியமானதாகும். இதற்கான திறவுகோலாகவும், ஆற்றுப்படுத்தும்

ஊக்கியாகவும் அமைய வல்லவை சைவ ஆசார அனுட்டானங்களாகும். சைவ ஆசார அனுட்டானங்களின் நுழைவாயிலாக அமைவது தீட்சை நெறிமுறையாகும்.

சிவாகமங்களில் கிரியாபாதமே சிவ தீட்ஷை பற்றி எடுத்தியம்புகின்றது. தீட்ஷை என்பது எல்லாச் சமயங்களாலும் எடுத்தாளப்படும் முக்கிய சடங்காகவும் முக்திக்கான மார்க்கமாகவும் உள்ளது. சைவநெறியும் இதற்கு விதிவிலக்கல்ல. அறியாமையை அகற்றி ஞானத்தையும் அளிக்கும் முறையாகத் தீட்ஷை எடுத்தாளப் படுகின்றது. தீட்ஷை அஞ்ஞானத்தைப் போக்கி மெய்ஞ்ஞானத்தைத் தருவது எனப்பொருள் கொள்ளப் படுகின்றது. (அகோரசிவாச்சாரியார்: 1967:14)

சைவசமயத்தில் ஒருவர் பிறந்துவிட்டால் மாத்திரம் அவர் சைவராகி விடமுடியாது. தமது வாழ்வில் சைவ ஆசாரங்கள் சைவ ஒழுக்கங்களைக் கடைப்பிடிப்பவரே உண்மைச் சைவராவார். சிவநெறி நிற்கும் சைவர்களுக்கு உரிய சிவசின்னங்கள் விபூதி, உருத்திராக்கம், சிவபஞ்சாட்சரம் என்பனவாம். இச்சிவசின்னங்கள் சிவபெருமானைக் குறித்து நிற்பன. சைவமக்களால் இவை அணியப்பெற்றும் துதிக்கப்பெற்றும் வருபவை. எனவே இச்சிவசின்னங்களை அணிவதற்கும், துதிப்பதற்கும் முதலில் சைவராய் பிறந்தோர் அனைவரும் சிவாகமமுறைப்படி தீட்ஷை பெற்றுக் கொள்ள வேண்டும். (அகோர சிவாச்சாரியார்: 1967:18)

சிவதீட்ஷை

சிவாகமமரபில் சிவதீட்ஷை என்பது மிக முக்கியமான கிரியையாகும். "யதேவ வித்யயா கரோதி சிரத்தயா உபநிஷதாததேவ வீர்யவத்தரம் பவதி"

குரு, சிஷ்யன் இருவரும் தீட்ஷை என்பதன் தத்வஉண்மை, காரண காரிய விளக்கம் தெரிந்து செய்கின்றபோது அதன் பலனும், பலாபலனும் அதிகமாகக் கிடைக்கிறது என சாந்தோக்கிய உபநிடதம் விளக்குகின்றது. இதனை "சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார் செல்வர் சிவபுரம்" (திருவாசகம்: சிவபுராணம்) என்ற மணிவாசகர் கூற்றினால் உணரலாம். ஆகமங்களில் கூறிய கிரியைகளை பதினென்கிரியா பத்ததிகள் நெறிப்படுத்தின. அவற்றை மேலும் தெளிவுபடுத்தி இலகுவாக்கி நமது முன்னோர்கள் தயார்செய்து தாம் பயன்படுத்தி வந்தனர். அவற்றில் பல பத்ததிகள் அச்சுவாகனமேறி அனைவருக்கும் பயன்தருகின்றன.

தீட்ஷை என்றால் ஆன்மாக்களுக்கு மலத்தைக் கெடுத்து ஞானத்தைக் கொடுப்பது. தீட்ஷை பெற்றவர்களே உண்மையான சைவசமயிகள், தீட்ஷை பெறாதவர்கள் அருட்பாக்களை ஓதுவதற்கும் புராணங்களைப் படிப்பதற்கும் ஞானசாத்திரங்களைக் கேட்டல், படித்தலுக்கும் பிரதிஷ்டை, விவாகம், அந்தியேட்டி, சிராத்தம் போன்ற சமயக்கிரியைகளைச் செய்வதற்கும் செய்விப்பதற்கும் தகுதியுடையவர் ஆகார். (ஆறுமுகநாவலர்: 2004:14-16) கிரியைகளிலே மந்திரசெபமும் மந்திரத்தால் பூசையும் செய்யவேண்டியிருப்பதால் தீட்ஷை பெறாதவன் இவைகளைச் செய்ய இயலாமல் இருப்பான். தீட்ஷை நடக்கும் போது மந்திரத்தினாலும் கிரியையினாலும் சிவபெருமானுடைய பேரருள் மாணாக்கர்களுக்கு கிடைக்கும். அந்த அருளோடு கேட்கப்பெற்றால் மாத்திரம் மந்திர உச்சாடனம் பயன்படும். தீட்ஷை பெறாமல் செய்யும் மந்திர உச்சாடனம் பயன்படமாட்டாது.

நமது உடம்பின் புறஅழுக்கை நீரினால் சுத்தம் செய்வதுபோல உள்ளிருக்கும்

சூக்கும உடம்பினையும் அதில் உள்ள தீய அழுக்குகளையும் ஆசமனம், மந்திரம் முதலான அனுஷ்டானக் கிரியைகளினாலே போக்கமுடியும். இவற்றினைச் செய்வதற்கு வேண்டிய பயிற்சியும் முயற்சியும் தேவை. அதனை உணர்ந்தே நம் சமயத்தில் ஏழுவயதில் தீட்ஷைபெற வேண்டும் என்ற விதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஏனெனில் நாம் கால், கைகளை அடக்கி ஆளும் பக்குவமும் மனதில் இச்சைகள் தோன்றி விருத்தியாகக்கூடிய தன்மைகளும் அப்பருவகாலத்தில் இருந்துதான் ஏற்படுகின்றன. இவ்வயதில் தீட்ஷை பெற்றிருந்தால் அனுஷ்டான சாதனங்களினால் தேகத்தையும் மனத்தையும் அடக்கி நம்வசப்படுத்தவும் இயலும்.

சைவசமயி ஒருவர் பெறவேண்டிய தீட்ஷைகள்

சமயதீட்ஷை

விஷேட தீட்ஷை

நிர்வாண தீட்ஷை

ஆச்சாரிய அபிஷேகம்

என்பவையாகும்.

(கைலாசநாதக்குருக்கள், கா: 1996:9)

தீட்ஷையானது அளிக்கப்படும் முறைக்கேற்ப ஆதார தீட்ஷை, நிராதர தீட்ஷை என இருவகைப்படும். இறைவன் ஞானாசிரியர் ஒருவர் மூலம் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களையும் உடைய நம்போன்ற சகலருக்கு அளிக்கும் தீட்ஷை ஆதாரதீட்ஷை எனப்படும். இறைவன் நேரே வந்து வேறோர் ஆதாரத்தையும் வேண்டாது தானே குருவாய் நின்று ஆணவம், கன்மம் ஆகிய இருமலங்கள் மட்டும் உடைய பிரளயாகலருக்கு முக்தியளிக்கும் தீட்ஷை நிராதர தீட்ஷை ஆகும். தீட்ஷை அளிக்கப்படும் முறைக்கேற்ப ஆதார தீட்ஷையானது நயனம், பரிசம், வாசகம், மானசம், சாத்திரம், யோகம், ஒளத்திரி என ஏழுவகையாகிறது.

ஆசாரியர் தமது திருக்கண் நோக்கினால் நயனதீட்ஷையும் திருக்கைகளினால் தீண்டி ஸ்பரிச தீட்ஷையும் திருவாய் மலர்ந்து உபதேசித்து வாசகதீட்ஷையும் சீடர் தம் சிரத்தில் பொற்பாத மலர்வைத்து திருவடி தீட்ஷையும் அளிக்கிறார். ஒளத்திரி தீட்ஷையானது குண்டமண்டல வேதிகைகளுடன் செய்யப்பவதாகும். இதுவே கிரியாவதி தீட்ஷை என்றும் சொல்லப்படும்.

தீட்ஷைபெற்று சமயம் ஒழுகுதலுக்குப் பல பிறவிகளில் செய்த புண்ணியப்பேறே காரணமாகும் என அருணந்தி சிவாச்சாரியார் குறிப்பிடுகிறார்.

"வாழ்வெனும் மையல்விட்டு

வறுமை யாம் சிறுமை தப்பி

தாழ்வெனும் தன்மை யோடு

சைவமாம் சமயம்சாரும்

ஊழ் பெறல் அரிது"

நாயன்மார்களும் சிவதீட்ஷை பெற்ற பின்புதான் இறைவனின் நாமங்களைப் புகழ்ந்து பதிகங்களைப் பாடியுள்ளார்கள்.

இலங்கையில் பின்பற்றப்படும் பத்ததிகளும் கிரியை முறைகளும்

பத்ததி என்பது மார்க்கம் அல்லது வழி எனப்படும். ஆகமங்களின் கிரியா காண்டப் பொருளைத்திரட்டி விரித்துக்கூறும் விதிகள் அனைத்தையும் பிரமாணமாகக் கொண்டு கிரியை செய்யும் முறையினை ஒழுங்குபடுத்தி முறையாக பிரயோகமுறையில் கூறும் நூல்களே பத்ததிகள் எனப்படும். பதிணெண் சிவாச்சாரியார்களால் இயற்றப்பட்டுள்ளது

பத்ததிகள் ஆகும். (அகோரசிவாச்சாரியார்: 1967:24)

இலங்கையில் சோமசம்பு பத்ததியும் அகோரசிவாச்சாரியார் பத்ததியும் பெரிதும் பின்பற்றப்படுகின்றன. பத்ததிகள் கிரியை முறையில் சைவசித்தாந்தக் கருத்துக்களை எடுத்துக் கூறுவனவாக உள்ளன. கிரியை முறையில் மந்திரம், தந்திரம், பாவனை, சிவயோக பாவனை, பூதசுத்தி, அந்தர்ஜயனம், அந்தர்யாகம், அக்னிபூஜை, இறைவனை ஆவாஹானம் செய்தல், பிரதிஷ்டை செய்தல், மஹோற்சவப் பஞ்சகிருத்தியம், தசகாரியம் போன்ற நிகழ்வுகளும், சிவாகமமரபில் பத்ததிகளினூடாகச் சைவசித்தாந்தக் கருத்துக்களை முன்வைத்தே கிரியைகளாக இடம்பெற்று வருகின்றன. அகோரசிவாச்சாரியார் பத்ததி "க்ரியாக்ரமஜோதி" என்னும் பத்ததிக்கு வெளிச்சம் எப்படி வழிகாட்டுமோ அதுபோல வீடுபேற்றிற்குரிய வெளிச்சத்தை இந்நூல் காட்டுவதால் இப்பெயர் வைக்கப்பட்டது. சாதகன் முத்தியடைய வேண்டுமாயின் சைவ நாற்பாத வழியில் நிற்க வேண்டும் என பத்ததிகள் விளக்கம் தருகின்றன. (அகோரசிவாச்சாரியார்: 1967:28-30)

பதினெண் பத்ததிகள்

பத்ததிக்காரர்களின் பெயர்களாலேயே பதினெண் பத்ததிகளும் குறிப்பிடப்படுகின்றன. அவை வருமாறு

1. ஈசானசிவபத்ததி
2. துர்வாசர் பத்ததி
3. பிங்களர் பத்ததி
4. உக்கிரஜோதி பத்ததி
5. சுபோதர் பத்ததி
6. ஸ்ரீ கண்டர் பத்ததி
7. விஷ்ணு கண்டர் பத்ததி
8. வித்தியாகண்டர் பத்ததி
9. ராமகண்டர் பத்ததி
10. ஞானசிவம் (ஞானசம்பு) பத்ததி
11. ஞானசங்கரர் பத்ததி
12. சோமசம்பு பத்ததி
13. பிரம்மசம்பு பத்ததி
14. திரிலோசனசிவம் (சம்பு) பத்ததி
15. அகோரசிவ பத்ததி
16. பிரசாதசிவ பத்ததி (நாராயண கண்டர் பத்ததி)
17. ராமநாதசிவ பத்ததி
18. வருணசிவ பத்ததி

"சைவபூஷணம்" என்னும் நூலில் இப்பதினெண்மரில் துர்வாசர், பிங்களர், சுபோதர், ஞானசங்கரர், பிரசாதசிவம், ராமநாதசிவம் என்னும் அறுவரும் நீக்கப்பட்டு ஹ்ருதய சிவம், ஈஸ்வர சிவம், சத்தியோஜோதி விபூதிகண்டர், நீலகண்டர், வைராக்கியசிவம் சேர்க்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. பத்ததிக்காரர்கள் அனைவரும் சம காலத்தவர்களல்லர், 13 - 15 ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்தவர்களாவர்.

பத்ததிகள் பற்றிய குறிப்புக்கள்

சோமசம்பு பத்ததி, க்ரியாகாண்ட க்ரமாவளி என்றும் வழங்கப்படுகிறது. இது 1860 சுலோகங்களைக் கொண்டது. அகோரசிவாசாரியார் பத்ததி க்ரியாக்ரம ஜோதிகை என்றும், க்ரியாக்ரம பத்ததி என்றும் கூறப்படுகின்றது. ஏனைய சிவாச்சாரியார்கள் செய்த பத்ததிகளில் திரிலோகசிவாச்சாரியார் பத்ததி என்பது சித்தாந்த சாராவளியை அச்சிட்டோராலும் (1887), ஈசான சிவகுரு பத்ததி என்பது சோமசம்பு பத்ததியை அச்சிட்டோராலும் (1934) பல இடங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளன. வேறுசில பத்ததிகள் பதினெண்பத்ததிகளைவிட வேறு சில பத்ததிகளும் காணப்படுகின்றன.

சூரியனார் கோயில் ஆதீனத்தின் மூல ஆசிரியரான சதாசிவாசாரியாரின் சதாசிவபத்ததி

சிவாக்கிர யோகீந்திர ஞானசிவாசாரிய சுவாமிகளின் சைவ சந்நியாச பத்ததி

கலாநிதி பாலகைலாசநாத அவர்களின் பூர்வகர்ம உற்சவ பத்ததி

பிரம்மஸ்ரீ சுப்ரமண்ய சாஸ்திரிகளின் நவராத்ர பூஜா பத்ததி

ப.சிவானந்த சர்மா அவர்களால் தொகுக்கப்பட்ட விவாக மங்கள கிரியா பத்ததி

சிவஸ்ரீ கைலாசநாதக் குருக்களின் கைலாசநாத பத்ததி

என்பனவும் பத்ததி வரிசையில் இடம்பெறுகின்றன.

ஆறுமுகநாவலரின் சைவவினாவிடை நூலில் தீட்ஷை பெற்றவர்களால் வணங்குவதற்குரியோர் பற்றியும் சிறப்பித்துக் கூறப்படுகின்றது. (ஆறுமுகநாவலர்: 2004:13-14)

குரு என்றால் தீட்ஷாகுரு, வித்யாகுரு, போதககுரு முதலானோர் ஆவார் சங்கமம் என்பது நிர்வாண தீஷீதர், விஷேஷதீஷிதர், சமய தீஷிதர் எனும் முத்திறத்துச் சிவபக்தர்களை அழைப்பர்.

சமயதீட்ஷிதர் வணங்குவதற்கு உரியவர்கள்: ஆசாரியர், நிர்வாணதீஷிதர் விஷேஷ தீட்ஷிதர், சமய தீட்ஷிதர் தம்மில் மூத்தோரையும் வணங்குவர்.

விஷேஷ தீட்ஷிதர் வணங்குவதற்கு உரியவர்கள்:

ஆசாரியாரையும் நிருவாண தீட்ஷிதரையும், விஷேஷ தீட்ஷிதர்களுள்ளே தம்மில் மூத் தோரையும் வணங்குவதற்கு உரியர்.

நிர்வாண தீட்ஷிதர் வணங்குவதற்கு உரியவர் ஆசாரியாரையும் நிர்வாண தீட்ஷிதருள்ளேதம்மில்மூத்தோரையும் வணங்குவதற்கு உரியர்.

ஆசாரியர் வணங்குவதற்கு உரியவர்கள்:

ஆசாரியர்களுள்ளே தம்மில் மூத் தோரையும் வணங்குவதற்கு உரியர்.

என வணக்க வழிபாட்டு ஒழுங்கு முறையும் விதிக்கப்பட்டுள்ளது.

மேலும் சிவாகமமரபில் தீட்ஷைக்குகந்த மாதங்கள், வருடங்கள், திதிகள், நட்சத்திரங்கள், இலக்கினங்கள் என்பன சிறப்பித்துக் குறிப்பிடப்படுகின்றன. (சிவசாமி,வி.: 1989:5)

தீட்ஷைக்குகந்த மாதங்களாக

உத்தமம் - வைகாசி

மத்திமம் - பங்குனி, மார்கழி, ஆனி

அதமம் - ஆடி, ஆவணி, மாசி

விலக்க வேண்டியவை - சித்திரை, தை, புரட்டாதி

தீட்ஷைக்குகந்த வாரங்களாக - ஞாயிறு, திங்கள், புதன், வியாழன், வெள்ளி

தீட்ஷைக்குகந்த திதிகளாக - துவிதீயை, திருதியை, பஞ்சமி, ஷஷ்டி, சப்தமி, தசமி, ஏகாதசி, துவாதசி, பௌர்ணமி

தீட்ஷைக்குகந்த நட்சத்திரங்களாக - அஸ்வினி, ரோகினி, மிருகசீரிடம், புனர்பூசம், பூசம், மகம், உத்தரம், சித்திரை, சுவாதி, விசாகம், அனுஷம், மூலம், பூராடம், உத்தராடம், சதயம், பூரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி

தீட்ஷைக்குகந்த இலக்கினங்களாக - இடபம், சிம்மம், கன்னி, தனு, மீனம்.

விக்னேஸ்வர பூஜை, பஞ்சகவ்ய பூஜை, புண்ணியாக வாசனம் முதலியவற்றை அடுத்து யாகபூஜைக்கான பூர்வாங்கங்களான மிருத்சங்கிரகணம், அங்குரார்ப்

பணம், ரக்ஷாபந்தனம் ஆகியனவும் நடைபெறும்.

யாகபூஜையில் துவாரபூஜைகள் முதலிலும் பரிவாரகும்ப பூஜைகள் அதைத் தொடர்ந்தும் நிகழும். யாகவேதிகையில் (ஸ்தண்டிலம்) பஞ்சலிங்கங்கள் தீட்ஷா மண்டலமாக அமைக்கப்பட்டிருக்கும். அருகே பஞ்சலிங்கங்களுக்கான கும்பங்களும் மேடையொன்றில் வைக்கப்பட்டிருக்கும் இவற்றுக்கான பூஜைகளைத் தொடர்ந்து அக்னிகாரியம் நிகழும். (பட்டநாராயண கண்டர், மிருகேந்திர உரை:8)

அக்னிகாரியத்தின் முடிவில் ஸ்தாலீ பாகம் என்ற கிரியை செய்யப்படுகிறது. சிவாக்கினியை வளர்த்தபின் அதன் மேற்குப் பகுதியிலிருந்து கார்ஹபத்யாக்னியைத் தனியாக எடுத்து யாகசாலையின் தென்புறத்திலே அக்னிகும்பத்திற்கு மேற்கே இதற்கெனத் தயார் செய்யப்பட்ட மேற்குமுகமான அடுப்பில் வைத்துச் சிறிது அன்னத்தைத் (சரு) தயார் செய்வதே ஸ்தாலீபாகம். (சிவபாதசுந்தரம்,சு.: 2000:68-70)

பகவானே உமது அனுமதியோடு நல்லவர்களும் லட்ஷணமுடையவர்களுமான இச்சிஷ்யர்களுக்கு உமது திருவடியை நினைக்கச் செய்யும்படியாக இந்தத் தீட்ஷையைச் செய்கிறேன்என்று குரு பிரார்த்தனை செய்து யாகமண்டப மேற்குவாசலின் வெளியே கிழக்கு நுனியாகத் தர்ப்பை, புஷ்பம் அக்ஷதை இட்டு மண்டலத்தில் பிரணவாசனம் கல்பித்து அதில் சிஷ்யனைக் கிழக்கு முகமாக நிற்க வைத்து நிரீக்ஷணம், புரோக்ஷணம் முதலிய சம்ஸ்காரங்களால் அவனைத் தூய்மையாக்கி விபூதியிட்டு தர்ப்பை நுனியால் நாபிக்கு மேலும் அடியினால் நாபிக்குக் கீழும் மூன்று முறை வரைந்து இருதயத்தைத் தொட்டு அவனை சிவமூர்த்தமாகப் பாவித்து வெண்பட்டால் கண்களை மூடிக்கட்டிக் கைகளில் பூக்களைக் கொடுத்துப் பிரதக்ஷணமாக அழைத்து வருவார். ஸ்தண்டிலத்திற்குத் தெற்கே நிற்கவைத்துப் பூக்களை மண்டலத்தில் இடச்செய்து துணியை விலக்கி லிங்கங்களைத் தரிசிக்கச் செய்வார். எந்த லிங்கத்தின்மேல் அவனது பூக்கள் விழுந்தனவோ அதுவே அவனது தீட்ஷா நாமம். (சுப்ரபேதாகமம்: 38-40)

நிறைவுரை

சைவம் என்பது சிவனைப் பரம் பொருளாகக் கொள்ளும் சிவநெறி. சிவநெறி சார்ந்த ஒழுகலாறு சைவசமயம், சிவப்பேறு உணர்த்தும் மெய்யியல் சைவசித்தாந்தம். சைவத்தின் அடிப்படை நூலாக சிவாகமங்கள் போற்றப்படுகின்றன. ஆகமம் என்பது தொன்றுதொட்டு வரும் அறிவாகும். சிவாகமங்களில் கிரியாபாதமே சிவதீட்ஷை பற்றி எடுத்தியம்புகின்றது. சைவமரபின் நிலைக்களனான நூல்கள் சிவாகமங்கள். சிவாகமங்களின் மொழிமரபு சமஸ்கிருத மரபுடன் ஒன்றிணைந்தது. சிவாகமங்களின் பரந்த தன்மை சிவாகமப் பண்பாட்டிற்குரிய தனித்துவமான அடையாளமாகும்.

சிவாகமமரபின் பரந்த பண்பாடு சைவவாழ்வியலின் பல்வேறுபட்ட பரிமாணங்களையும் எடுத்துக்காட்டி நிற்கின்றது. அந்நிலையில் விஞ்ஞானம், பொறியியல், புவியியல், கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, நடனக்கலை, இசைக்கலை, திட்டமிடல் எனப் பரந்த தன்மைகளில் பல்வேறு வித்தைகளையும் கூறிநிற்கும் வேளை சைவசித்தாந்த மூல ஊற்றுக்களாகவும் இவை விளங்குகின்றன. சைவவாழ்வியல் பற்றிய விடயத்தில் சிவதீட்ஷை, சிவபூஜை, சைவ ஆசாரம் என்பன தனித்துவம் பெறுவனவாக

அமைகின்றன. அவை கிரியை மரபில் தனித்துவம் மிக்கனவாக விளங்கி நிற்கின்றன. அந்தவகையில் சிவாகமங்களின் கிரியாபாதமே சிவதீட்ஷைகள் பற்றி எடுத்தியம்புகின்றன. கிரியாபாதத்தில் மந்திரங்களின் உத்தாரணம் சந்தியாவந்தனம், பூஜை, ஜெபம், ஹோமம், சமய, விசேஷ, நிர்வாண ஆச்சார்ய அபிசேகங்களும் உபாய தீட்ஷை முதலியனவும் கூறப்பட்டுள்ளது. கிரியாபாதத்தில் முக்கியமாக கூறப்பெறுவது தீட்ஷையாகும். இதில் அனுக்கிரகம் புரியும் கர்த்தாவாக விளங்குதல் பற்றிப் பதியும் திருவருளைப் பெறுவதற்கு தகுதியுடையதாக விளங்குதல் பற்றிப் பசுவும் ஆன்மாவினால் நீக்கத்தக்கவையாக என்பது பற்றிப் பாசமும் ஆராயப்பட்டுள்ளன. எனவே தீட்ஷை பெற்றால் ஞானம் பெறலாம். ஞானத்தின் வாயிலாக முத்திபெற முடிகிறது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

உசாத்துணை நூல்கள்

அகோர சிவாச்சாரியார், (1967), **கிரியாக்ரம த்யோதி,** சென்னை.

அழகப்பாமுதலியார். மயிலை., (1921) **காரணாகமம் பூர்வபாகம்**, 1ம் பாகம், சிவஞானபோத யந்திரசாலை, சித்தாந்திரிப்பேட்டை, சென்னை.

ஆறுமுகநாவலர். ஸ்ரீலஸ்ரீ, (2004), **சைவவினாவிடை 1ம், 2ம் புத்தகம்**, அஷ்டலஷ்மி வெளியீடு.

ஈசான சிவாச்சாரியார், (1924), **சிவலிங்க பிரதிஷ்டாவிதி,** சாம்பசிவ சிவாச்சாரியர் பதிப்பு.

கிரணாகமம், (1932), சிவாகம சித்தாந்த பரிபாலன சங்கம், தேவகோட்டை, கும்பகோணம்.

கைலாசபிள்ளை.த., (1995), **ஆறுமுகநாவலர் சரித்திரம்**- யாழ்ப்பாணத்து நல்லூர்.

கோபாலகிருஷ்ணஐயர்.ப., (1992), **இந்துப்பண்பாட்டு மரபுகள்,** வித்தியா வெளியீடு, யாழ்ப்பாணம்.

சபாரத்தினம். எஸ்.பி., (2002), **சைவ ஆகமங்கள் ஒர் அறிமுகம்,** சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம்

சிவம்.ப., (2007) **சிவாச்சாரிய அபிஷேக தீட்ஷா பத்ததி**, சர்வானந்தமயபீடம், இணுவில், யாழ்ப்பாணம்.

சிவபாதசுந்தரம், சு., (2000), **சைவக்கிரியை விளக்கம்**, சைவபரிபாலன சபை, யாழ்ப்பாணம்.

சிவசாமி.வி., (1989), **சமஸ்கிருத இலக்கியச் சிந்தனைகள்,** நியூஈரா பப்ளிகேசன்ஸ் லிமிடெட் - யாழ்ப்பாணம்.

சிவாச்சார்ய அபிஷேக தீஷாபத்ததி, (2007), சர்வானந்த மயபீடம், யாழ்ப்பாணம்.

சுவாமிநாதக்குருக்கள்., (1975), **பூர்வபாகம், காமிகாகமம்,** பதிப்பு, தென்னிந்திய அச்சக சங்கம், சென்னை.

பத்மநாபன், பிரம்மஸ்ரீ.ச., (2017), **சிவாகமமரபு,** வெளியீடு, ஸ்ரீ, முன்னேஸ்வரம் தேவஸ்தானம், சிலாபம்.

பாலகைலாசநாதசர்மா.ம, (1994), **காமிகாகம அர்ச்சனாவிதிப்படலம் ஓர் சிறப்பு ஆய்வு**, பிரசுரிக்கப்படாதது.

மயிலை அழகப்பா முதலியார், (1907), **சுப்ரபேதாகமம்,** சிவஞானபோத யந்திரசாலை, சித்தாரிப் பேட்டை, சென்னை (பதி). கலி 5009

தெல்லிப்பளைப் பிரதேசத்து இந்துக் கோயிற்கலைகள்– பாதிப்பும் மீளுருவாக்கமும்

கோபிராஜ், கு.
வேதநாதன், மா.

ஆய்வுச் சுருக்கம்

யாழ்ப்பாண மாவட்டத்தில் வடபகுதியில் அமைந்துள்ள தெல்லிப்பளைப் பிரதேசத்தில் அதிகளவான இந்துக்கோயில்கள்,இந்துக்களின் சமாதிக்கோயிலகள்,மடங்கள் போன்றன தொன்றுதொட்டுக் காணப்பட்டன. இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டு யுத்தம் காரணமாக அதிகளவு ஆலயங்கள் பாதிக்கப்பட்டதுடன் கோயில்களுடன் இணைந்த நுண் கலைகளான கட்டிடம்.சிற்பம்.ஓவியம்.இசை கிராமியகலை போன்ற கலைகளும் அதிக ளவு பாதிக்கப்பட்டன. அந்தவகையில் தெல்லிப்பளைப் பிரதேசத்து இந்துக் கோயிற் கலைகள்- பாதிப்பும் மீளுருவாக்கமும் எனும் தலைப்பில் இவ் ஆய்வுக் கட்டுரை இடம் பெறுகிறது. பெரும்பாலான ஆலயங்கள் பகுதி அளவிலும், சில ஆலயங்கள் முழுமை யாகவும் பாதிக்கப்பட் தெல்லிப்பளைப் பிரதேசத்தில் இருபத்தைந்து வருடங்களுக்கு மேலாக உயர்பாதுகாப்பு வலயத்துள் பலஇந்துக் கோயில்கள் காணப்படுகின்றன. இப்பிரதேசத்தில் 1986ஆம் ஆண்டிலும், 1990ஆம் ஆண்டிலும் இரண்டு தடவைகள் இந்து ஆலயங்களுக்கு பாதிப்புக்களும் மக்களின் இடப்பெயர்வுகளும் ஏற்பட்டன. இப் பகுதியில் இருந்த இந்து ஆலயங்களின் விமானம் கோபுரம், தேர், சப்பறம், மஞ்சம், வாகனங்கள் போன்றனவும் ஆலயத்துடன் இணைந்த பிரதான இந்துக்கோயில்கலைகளும் இந்து கோயிற்கிரியைகளும் பாதிப்பிற்குள்ளாகின. அதன் பின்னர் புலம்பெயர்ந்து சென் றோர் வழங்கிய நிதியுதவியினால் இங்குள்ள பெரும்பாலான ஆலயங்களிலின் கோபுரம், தேர்.சப்பறம், மஞ்சம்.கருவறை.வாகனங்கள் போன்றன மீள்உருவாக்கம் பெற்றன.இதனை விட மிகப்பிரமாண்டமான ஆலயங்களும் மிகஉயர்ந்த தேர்களும், ஆலயத்தின் நான்கு புறத்திலும் கோபுரமும் எனப் புதிய எழுச்சியை இப்பகுதியில் உள்ள இந்து ஆலயங்க ளில் அவதானிக்க முடிகின்றது. அத்துடன் பெருமளவான ஆல யங்களில் கும்பாபிசேகப் பெருவிழா நிறைவு பெற்றுள்ளது. மீள் குடியமர்ந்த மக்கள் தமது இருப்பிடங்களை புனரமைப்பு செய்வதற்கு முன்பாக அவ்விடத்து ஆலயத்தை புனருத்தாரணம் செய்துள் ளமை குறிப்பிடத்தக்கது. தெல்லிப்பளை பிரதேசத்தினை அடிப்படையாகக் கொண்டு இந்துகோயிற் கலைகளில் ஏற்பட்ட பாதிப்புக்கள் பற்றியும் அவற்றின் மீள் உருவாக் கம் என்பவற்றை முதன்மைப்படுத்தியும் இவ்வாய்வு மேற் கொள்ளப்படுகின்றது. இந்த ஆய்வில் விவரண ஆய்வுமுறை, வரலாற்று ஆய்வுமுறை மற்றும் கள ஆய்வு முறைகள் பயன்படுத்தப்பட்டு உள்ளன. 1983ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை இந்து கோயில் கலைகளிற்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகள் புனருத்தாரண பணிகள்போன்றவற்றை வெளிப்படுத்துவதை நோக்காக கொண்டு இவ் ஆய்வுக்கட்டுரை அமைகின்றது.

திறவுச்சொற்கள்: *இந்துக் கோயில்கள், கலைகள், மீளுருவாக்கம்,கோபுரம், தெல்லிப்பளை*

அறிமுகம்

இந்துக்கோயில்கள் வழிபாட்டுக்குரிய இடங்களாகமட்டுமன்றி,இந்துக்கலைகளின் பிறப்பிடமாகவும் வளர்ப்பிடமாகவும் விளங்குகின்றன. இந்துக்கோயில்கள் தெய்வீகக் கலைக்கோயில்களாகத் தொன்றுதொட்டு வளர்ந்து வந்துள்ளன. இந்துக்கோயில்களில் பிரதான கலை வடிவங்களான கட்டடம், சிற்பம், ஓவியம், இசை, நடனம், நாடகம்ஆகிய நுண்கலைகள் மட்டுமன்றி இவற்றோடு தொடர்புடைய விக்கிரகக்கலை, அலங்காரக்கலை, தேர், மஞ்சம், சப்பரம், கோபுரம் என்பனவற்றை யும் கிராமியக்கலைகளையும் கோயிற் கலைகளாகக் கொள்ளமுடியும். இலங்கை யில் காலந்தோறும் இடம்பெற்ற பல்வேறு சூழமைவுகளினால் இந்துக்கோயில்கள் பெரிதும் பாதிப் படைந் துள் ள நிலையில் அதனோடு தொடர்பான கலைகளும் பாதிக்கப் பட்டுள்ளன. இந்த ஆய்வுக்கட்டுரையானது 1983ஆம் ஆண்டு தொடக்கம் தற்காலம்வரை தெல்லிப்பளைப்பிரதேசத்தில் பாதிக்கப் பட்ட இந்துக் கோயிற் கலைகள் பற்றியும் அவற்றின் மீளுருவாக்கம் பற்றியும், புதிய கோயிற் கலைகளின் எழுச்சி பற்றியும் ஆராய்வதை நோக்காகக் கொண்டு விளங்குகின்றது. இக்காலப்பகுதியில்

இந்துக்கோயில்கள் பாதிக்கப்பட்டமைக்கு உள்நாட்டு யுத்தம், இடப்பெயர்வு, புலப்பெயர்வு மற்றும் நீண்டகாலம் மீள் குடியேற்றம் இடம்பெறாமை போன்றனவும் காரணிகளாக அமைந்துள்ளன.

தெல்லிப்பளையும் இந்து ஆலயங்களும்

தெல்லிப்பளைப் பிரதேசம் 55.8சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பையும் 45 கிராம சேவையாளர் பிரிவுகளையும் உள்ளடக்கியுள்ளது. தெல்லிப்பளைப் பிரதேச செயலர் பிரிவில் அதிகளவு வைரவர் ஆலயங்கள் காணப்படுகின்றன. எழுபத்தைந்து வைரவர் ஆலயங்களும் அறுபத்துமூன்று அம்மன் ஆலயங்களும் நாற்பது விநாயகர் ஆலயங்களும் பதினாறு சிவன் ஆலயங்களும் ஏழு முருகன் ஆலயங்களும் நான்கு நாராயணர் ஆலயங்களும் முப்பத்துமூன்று சிறுதெய்வ ஆலயங்களுமாக மொத்தம் இருநூற்று அறுபத்தொன்பது ஆலயங்கள் தெல்லிப்பளைப் பிரதேசத்தில் பதிவு செய்யப்பட்ட இந்துக் கோயில்களாகும். தனிப்பட்ட ஆலயங்கள் நாற்பத்து மூன்று ஆலயங்களும் நிர்வாக ரீதியான ஆலயங்கள் இருநூற்று நாற்பத்தைந்தும் பிரதேச சபையின் பராமரிப்பில் ஒரு ஆலயமும் காணப்படுகின்றன. உள்நாட்டு யுத்தம் இடம்பெற்றதனால் அரச நிதிப்பங்களிப்பைப்பெற தனிப்பட்ட ஆலயங்களும் திருப்பணிச்சபை என ஒருநிர்வாக அலகை வைத்து இயங்குவதனை அவதானிக்க முடிகிறது. (ஆலய விபரத்திரட்டு பிரதேச செயலகம், தெல்லிப்பளை)

மயிலிட்டி, தையிட்டி, காங்கேசன்துறை, வசாவிளான், தெற்கு குரும்பசிட்டி, கட்டுவன் பகுதிகளில் உள்ள முழுஆலயங்களும் முழுமையாக பாதிக்கப்பட்ட ஆலயங்களாகக் காணப்படுகின்றன. அந்த வகையில் காங்கேசன்துறை முதலிவளவு முத்துமாரி அம்மன் ஆலயம், வசாவிளான் மானம்பராய் ஞானவைரவர் ஆலயம், தென்மயிலை அண்ணாமார் ஆலயம், சிவகுருநாதர் ஆலயம், மயிலிட்டி பேச்சி அம்மன் ஆலயம் போன்றனவும் பகுதியளவு பாதிக்கப்பட்ட கோயில்களாகக் கட்டுவன் ஞானவைரவர் ஆலயம், கட்டுவன் நாச்சிமார் கோவில், தெல்லிப்பளை துர்க்கையம்மன் கோயில் போன்றனவும் காணப்படுகின்றன. அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் இன்று வரை சென்று வழிபட முடியாத கோயில்களாக காங்கேசன்துறை மத்தி வைரவர் கோயில், கீரிமலை கதிரையாண்டவர் கோயில், ஸ்ரீபாத நாராயணர் கோயில், லிங்கேஸ்வரர் கோயில், மானம்பிராய் கண்ணகை அம்மன் கோயில், மயிலிட்டி தெற்கு நரசிங்க வைரவர் கோயில், கீரிமலை ஆதிசிவன் கோயில், கீரிமலை விஸ்ணு கோயில் போன்றன காணப்படுகின்றன. இதனைவிட தெல்லிப்பளைப் பிரதேச செயலர் பிரிவில் பதியப்படாமலும் பெருமளவு ஆலயங்கள் இப்பகுதியில் உள்ளன. வீட்டுடன் இணைந்த குலதெய்வ வழிபாட்டுக்குரிய சிறு கோயில்களும் காணப்படுகின்றன. சிறுதெய்வ வழிபாட்டு நம்பிக்கைகள் அதிகளவு இப்பகுதியில் இடம் பெறுவதுடன், ஆகமம் சார்ந்த, ஆகமம் சாராத வழிபாடுகள் இப்பகுதியில் பெருமளவு தொன்றுதொட்டு இன்றுவரை காணப்படுகின்றன. (உதயகலா, எஸ்., *14.11.2023*)

கலைகளின் பாதிப்பும் மீள் உருவாக்கமும்

சமய அனுபவம், கலை அனுபவம் ஆகிய இரண்டும் ஒரே அனுபவத்திற்கு இடப்பட்ட இரட்டைப் பெயர்கள் என்பது கலாயோகி ஆனந்தகுமாரசுவாமியின் கருத்தாகும். (குமாரசுவாமி, ஏ.கே., *1975:17*) அந்தவகையில் இலங்கையில் உள்ள இந்துக் கோயில்கள் யாவும் கலைப் பொக்கிசங்களாக இந்து சமயக்

கருவூலங்களாக திகழ்கின்றன. யாழ்ப்பாண மாவட்டமும் அவ்வாறே கோயில் நகராகக் காட்சி தருகின்றது. இலங்கையில் காணப்படும் நாலாயிரத்து அறுநூற்று தொண்ணூற்று ஏழு இந்துக்கோயில்களில் ஆயிரத்து இருநூற்று அறுபத்தி எட்டு இந்துக் கோயில்கள் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் காணப்படுகிறன. (சுகந்தினி சி.2017:3) இவற்றுள் தெல்லிப்பளைப் பிரதேச செயலர் பிரிவில் கீரிமலை நகுலேஸ்வரம், மாவிட்டபுரம் கந்த சுவாமி கோயில், தெல்லிப் பளை துர்க்கை அம்மன் ஆலயங்களின் பாதிப்புக்களையும் இப்பிரதேசத்தில் காணப்படுகின்ற சமாதி கோயில்கள், மடங்கள், திருமண மண்டபங்கள் போன்றவற்றின் பாதிப்புக்களையும் இவற்றில் காணப்படும் கோயில் கலைகளில் முக்கியமாக விமானம், கட்டடம், மண்டபம், கோபுரம் மற்றும் தேர், மஞ்சம், சப்பறம், வாகனங்கள் ஆகியவற்றில் ஏற்பட்ட பாதிப்புக்களையும் ஆராய்வதாக இந்த ஆய்வு அமைகிறது. உள்நாட்டு யுத்தச் சூழமைவில் இக்கோயில்கள் பாதிக்கப்பட்ட போதிலும் தொடர்ந்து ஏற்பட்ட இப்பிரதேச மக்களின் இடப்பெயர்வு மற்றும் புலப்பெயர்வுகளினால் கோயில் பற்றிய ஈடுபாடுகள் இந்த ஆய்வில் நோக்கப்பட்டு உள்ளது. புலம்பெயர்ந்த மக்களின் நிதி உதவி கொண்டு 2010ம் ஆண்டிற்குப் பின்னர் இப் பிரதேசத்துக் கோயில்களில் கலை வடிவங்கள் மிகவும் சிறப்பாக அமைக்கப்பட்டு வருவதைக் காண முடிகிறது. இதற்கு இலங்கை நாட்டு சிற்பிகள் மட்டுமன்றி தென் இந்தியச் சிற்பிகளும் பெரிதும் பங்காற்றி உள்ளனர். இந்துக் கோயில்களின் கருப்பை கட்டடக்கலை என அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். கட்டடம் இருந்தால் தான் அதற்குள் சிற்பம், ஓவியம், இசை, நடனம் என்பவற்றை இடம் பெறச் செய்யமுடியும். இந்துக்கோயில்களின் கட்டடக்கலை அமைப்பில் குறிப்பாக விமானம், கோபுரம், மண்டபங்கள், தூண்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. இந்தவகையில் தெல்லிப் பளைப் பிரதேசத்தில் இக்காலப் பகுதியில் இந்துக்கோயில் கட்டடக்கலை பெரிதும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது. இந்துக்கோயில் கட்டடக்கலை அமைப்பில் முதன்மை பெறுவது விமானமாகும். விமானம் என்பது கீழே பீடத்தில் இருந்து மேலே கலசம் வரை உள்ள பகுதி ஆகும். மூலமூர்த்தி இருக்கும் இடம் கருவறை அல்லது கர்ப்பக்கிருகம் என அழைக்கப்படுகின்றது. (கைலாசநாதகுருக்கள், கா., 1983:55) இவை பெரும்பாலும் வெள்ளைக் கல்லினாலும் கருங்கல்லினாலும் அமைக்கப்பட்டு இருக்கும். மேற்பகுதி செங்கற்களினால் கட்டப்பட்டிருக்கும். அவற்றிலே கோயில்களின் பெயருக்கேற்ப சிற்பங்கள் இடம்பெறுகின்றன. தெல்லிப்பளைப் பிரதேசத்தில் உள்ள ஆலய விமானத்தின் கருவறை பெரும்பாலும் பாதிக்கப்படவில்லை. காரணம் வெள்ளைக் கல்லினாலும் கருங்கல்லினாலும் அமைக்கப்பட்டு இருந்தது. கருவறையின் மேற்பகுதி பெருமளவு பாதிக்கப்பட்டு இருந்தது. தெல்லிப்பளைப் பிரதேச கோயிற் கட்டடங்கள் ஆகம மரபில் திராவிட கோயில் கட்டடக்கலைப் பாணியில் பெரும்பாலும் கட்டப்பட்டுள்ளன. (கோபாலகிருஸ்ண ஐயர் :1992:70)

கருவறையில் சிறுசேதங்கள் மட்டும் ஏற்பட்ட ஆலயங்களாக துரத்தை கட்டி வைரவர் ஆலயம், மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயம், மாவிட்டபுரம் தலைசிட்டி ஞான வைரவர் ஆலயம் போன்றவற்றைக் குறிப்பிடலாம். தெல்லிப்பளைப் பிரதேசத்தில் கோபுரங்களோடு கூடிய கோயிலாக மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில், தலைசிட்டி ஞானவைரவர்கோயில்

தெல்லிப் பளை துர்க்கை அம்மன் ஆலயத்தினைக் குறிப்பிடலாம். தற்போது இவை மீண்டும் புனருத்தாரணம் செய்யப்பட்டு உள்ளன. இவற்றை விட இப்பிரதேசத்தில் பல புதியகோபுரங்கள் தோற்றம் பெற்று உள்ளன. அந்தவகையில் வீணியவரை இராஜராஜேவரி அம்மன் ஆலயம், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் கிழக்கு, தெற்கு கோபுரங்கள் மற்றும் தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலயத்தில் நான்கு பக்க கோபுரங்கள் எழுந்துள்ளன. நுழைவாயிலிலும் கோபுரம் அமைக்கும் வகையில் இவ்ஆலயத்தின் நுழைவாயில் கோபுரம் காணப்பபடுகிறது. இதைவிட மணிக்கோபுரம் பாதிக்கப்பட்ட கோயில்களாக வீணியவரை இராஜரா ஜேஸ்வரி அம்மன் ஆலயம், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் மற்றும் தையிட்டி கனவியச்குழ பிள்ளையார் ஆலயம் போன்றவை காணப்படுகின்றன. நாற்பத் தொரு அடி உயரமான புதிய மணிக் கோபுரம் தெல்லிப் பளை துர்க்கை அம்மன் ஆலயத்தில் காணப்படுகிறது. (கனகசூரியன்,அ., 2017:16)

2000ஆம் ஆண்டிலிருந்து 2019ம் ஆண்டுவரை கோபுர எழுச்சிக்கால மாகக் கொள்ளப்படுகின்றது. (ரமணராஜா,சி., 2009:67) வசந்தமண்டபம், ஏனைய மண்டபங்கள், மண்டபக் கூரைகள், சுவர்கள், தேர்முட்டி மண்டபம், தேர் கொட்டகை தரிப் பிடம், மஞ் சக் கொட் டகை என்பனவும் பாதிக்கப்பட்ட ஆலயங்களாக மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில், குரும்பசிட்டி முத்துமாரி அம்மன் ஆலயம், வீணியவரை இராஜராஜேஸ்வரி அம்மன் கோயில், கனவியற்குள பிள்ளையார் ஆலயம் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இந்த ஆலயங்களில் வசந்த மண்டபம், ஏனைய மண்டபக் கூரைகள், சுவர்கள், தேர்முட்டி மண்டபம், தேர்க்கொட்டகை தரிப்பிடம், மஞ்சக்கொட்டகை என் பனவும் யாகசாலை, மடப் பள்ளி, களஞ்சிய அறை, வாகனசாலை என்பனவும் தற்போது புனரமைக்கப்பட்டும் உள்ளன. மூன்று வீதிகள் கொண்ட மாவிட்டபுர கந்தசுவாமி கோயில் வெளிவீதி தார் ஊற்றி செப்பனிடப்பட்டதுடன் தாமரைத் தடாகம், பழனி ஆண்டவர் சந்நிதி, கருங்கல் நில வேலைகளுடன் கூடிய மீள் உருவாக்கம் காணப் படுகின்றது. கோபுரத்திற்கும் உள் மண்டபத்திற்கும் இடையே நீண்ட பிரமாண்ட மணி மண்டபம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலயத்தில் முழுமையாக இந்தியக் கலைப்பாணியில் அமைந்த ஒவ் வொரு தூணிலும் யாழிகளும் பொம்மையும் செதுக்கப்பட்டு உள் ளன. பரிவாரத் தெய்வங்களும் புது மெரு கூட்டப்பட்டு உள்ளன. கட்டுவன் வீர பத்திரர் ஆலயத்தில் புதிய பரிவாரத் தெய்வமாக ஆஞ்சநேயர் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. சிற்ப வேலையில் மாவிட்டபுர கந்தசுவாமி கோயில் நிருத்த மண்டபத்தின் மேல் விதானத்தில் சூரியனை மையமாகக் கொண்டு பன்னிரண்டு ராசிகள் அமைக்கப்பட்டுள்ளன. அதைவிட தூ ண்களும் முழுமையாகப் பாதிக்கப்பட்ட நிலையில் நூற்று எண்பத்தி நான்கு அடி நீளமுடைய வசந்தமண்டபமும், ஏனைய ஸ்தம்ப மண்டபம், நிருத்த மண்டபம், யாகசாலை, வேட்டை மண் டபம் என்பனவும் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன. (ஞானஸ்கந்தசர்மா, து.,.ச.,2015:43) மூல விக்கிரகம் தவிர ஏனைய விக்கிரகங்கள் யாவும் காணாமல் போன ஆலயங்களாக மாவிட்டபுர கந்தசுவாமி கோயில், கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயம், குரும்பசிட்டி முத்துமாரி அம்மன் ஆலயம் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். (வசந்தா, வை.,2007:35)

ஆலய விக்கிரகம், மணி, ஏனைய தள பாடங்கள், அணிகலன்கள் போன்றன காணாமல் போன ஆலயங் களாக

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில், குரும்பசிட்டி முத்துமாரி அம்மன் கோயில், கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயம் போன்ற ஆலயங்கள் காணப்படுகின்றன. நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையினால் மக்கள், ஆலய நிர்வாகத்தினர் இடம் பெயர்ந்து செல்லும் போது சில விக்கிரகங்களை எடுத்துச் சென்று தாம் சென்ற இடத்தில் வைத்து வழிபாடு செய்தனர். அந்தவகையில் மயிலிட்டி பெரும் பரப்பு பிள்ளையார் ஆலய விக்கிரகங்கள், சுன்னாகம் பூதனார் கோயிலில் வைத்து வழிபடப்பட்டதைக் அறியமுடிகின்றது. (சிவபாலன், கா., 2019: 81) சில விக்கிரகங்கள் சேதமடைந்து காணப்பட்டாலும் அதனை அந்த ஆலயத்தின் ஒருபகுதியில் வைத்து அதன் தொன்மையையும் மகிமையையும் பாதுகாத்து வருகின்றனர். அந்தவகையில் குரும்பசிட்டி முத்துமாரி அம்மன் ஆலயம், குரும்பசிட்டி விநாயகர் ஆலயத்தில் இதனைக் காணலாம். ஆலய சுற்றுமதில் முழுமையாக சேதமடைந்த ஆலயங்களாக கட்டுவன் வீரபத்திரர் ஆலயம், குரும்பசிட்டி முத்துமாரி அம்மன் ஆலயம், ஆதிமயிலிட்டி பெரும்பரப்பு விநாயகர் ஆலயம், துரத்தை கட்டி ஞானவைரவர் ஆலயம் போன்ற ஆலயங்களைக் குறிப்பிடலாம். தலைசிட்டி வைரவர் கோயில் தனிக்கல்லினால் அமைக்கப்பட்டு நந்தி பலிபீடத்துடன் கூடிய, பெரிய விக்கிரகத்துடன் கூடிய வைரவர் கோயிலாகக் காணப்படுவதுடன் பாரிய சுற்றுமதில் அமைந்த ஆலயமாக இருப்பதும் தனிச் சிறப்பாகும். இலங்கையிலேயே மிக உயரமான வைரவர் விக்கிரகம் அமைந்த ஆலயம் என்ற சிறப்பும் இதற்குண்டு. (ஞானஸ்கந்தசர்மா, து.இ.ச., 2015: 42)

கொடியேற்றத்திற்கு ஆதாரமாக அமைவது கொடிமரமாகும். (தியாகராசா, 2003: 73) மக்கள் இடம்பெயர்ந்து சென்றபோது கொடிமரத்தைச் சுற்றிய வெள்ளி காணாமல் போனமை முக்கிய பாதிப்பாக இன்றுவரை காணப்படுகிறது. அதே வெள்ளிக் கொடிக்கம்பத்தினைச் செய்யமுடியாது கொடி ஏற்றாது கம்போற்சவத் திருவிழா நடைபெறும் ஆலயமாக மாவிட்டபுரம் கந்தசுவாமிகோயில் விளங்குகிறது. (ராமசந்திரகுருக்கள் பாபுசர்மா 291: 76) ஏனைய பாதிக்கப்பட்ட ஆலயங்களாக கட்டுவன் வீரபத்திரர் ஆலயம் மற்றும் மாவிட்டபுரம் வீணிய வரை இராஜராஜேஸ்வரி அம்மன் ஆலயம் என்பவற்றைக் குறிப்பிடலாம். குரும்பசிட்டி முத்துமாரி அம்மன் ஆலய கொடிமரம், பித்தளை மேற்பகுதி காணாமல் போய் அழிவடைந்துள்ளது. புதிதாகக் கொடிக்கம் பத்தினைச் செய்து திருவிழா நடைபெறும் ஆலயமாக மாவைகலட்டி பேச்சிஅம்மன் ஆலயத்தினைக் குறிப்பிடலாம். (ஈஸ்வரபாலன், எஸ்., குரும்பசிட்டி 1.08.2023)

ஆலயக் கட்டுமான சிற்ப ஸ்தபதிகள் வரிசையில் ஈழத்து அராலியூர் கலைஞர்கள் தெல்லிப்பளையில் அதிக ஆலயங்களைக் கட்டியதுடன் இந்தியக் கலைப்பாணியில் ஸ்தபதி கா.புருசோத்தமன் பல கோபுரங்கள், ஆலயங்கள், அமைத்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. தேர், வாகனம், ஓவியம் போன்ற வற்றிற்கு ஈழத்துக் கலைப்பாணியே பெருமளவு பயன்படுத்தப்பட்டுள்ளது. தையிட்டி கனவியற்குள பிள்ளையார் ஆலயம், தையிட்டி காளி கோயில் போன்ற ஆலயங்களில் ஆலய வீதியில் பாரியமணல் அகழ்ந்து எடுத்துச் சென்றமையால் ஆலய வீதிகள் பாரிய பள்ளமாக தேர் ஓடமுடியாத நிலையில், சப்பரம் ஓடமுடியாத நிலையில் பாதிக்கப்பட்டுள்ளன. (சயந்தன், எஸ்., 5.02.2023)

ஒவ்வொரு தெய்வத்திற்கும் உரியதாக வாகனங்கள் காணப்படுகின்றன. மயில், இடபம், எலி, நாய், கருடன், நாகம்,

காராம்பசு, அன்னம், கைலாய வாகனம் போன்றன காணப்படுகின்றன. வாகனங்கள் மரத்தினால் அழகுற அமைக்கப்படுவதும் ஒருவகை மெழுகு பூசி வர்ணம் தீட்டப்பட்டு வாகனத்தின் பீடம் அமைக்கப்படுகிறது. இருபதிற்கு மேற்பட்ட வாகனங்கள் வசாவிளான் முத்துமாரி அம்மன் ஆலயங்களில் காணப்பட்டன. மயில், எலி, மகரம், காராம்பசு போன்ற பல மிருகங்கள் வாகனமாக காணப்பட்டன. அனைத்தும் காணாமல் போய்விட்டன. மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலில் எலி, அன்னம், மயில், பூந்தண்டிகை, கைலாய வாகனம் போன்றன அழிக்கப்பட்டு உள்ளன. கட்டுவன் வீரபத்திரர் ஆலயம், துரத்தை கட்டி வைரவர் ஆலயம், வீணிய வரை அம்மன் ஆலயம், கனவியற்குள பிள்ளையார் ஆலயம் போன்றவற்றுக்குச் சொந்தமான அனைத்து வாகனங்களும் காணாமல் போனமை முக்கிய விடயமாகும். விசேட விழா நடைபெற்றுக்கொண்டு இருந்தபோது ஆலயம் பாதிக்கப்பட்டு மக்கள் ஆலயத்தை விட்டு வெளியேறினர். கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தில் கேதாரகௌரி விழாவிலும், மாவிட்டபுர கந்தசுவாமி கோயில் கந்தசஷ்டி விழா நடைபெற்று கொண்டிருந்தபோதும் ஆலயங்கள் அனர்த்தத்திற்கு உட்பட்ட நிலையில் மக்கள் வெளியேறினர். ஏனைய விழாக்கள், திருவிழா, திருவெம்பாவை, சரஸ்வதி பூசை போன்ற பல விழாக் களில் பூசைகள் பல வருடமாக நடைபெறமுடி யாத சூழல் இருந்தது. குறிப்பாகக், கீரிமலை நகுலேஸ்வர ஆலயம் எட்டு வருடங்களாகவும் மாவிட்டபுரம் கந்த சுவாமி கோயில் ஐந்து வருடங்களாகவும், கனவியற்குள பிள்ளையார் கோயில், கட்டு வன் வீரபத்திரர், குரும்பசிட்டி முத்துமாரி அம்மன், துரத்தை கட்டி ஞானவைரவர் ஆலயம் போன்றன இருபது வருடங்களுக்கு மேலாகவும் பூசை, பராமரிப்பு அற்ற நிலையில் ஆலய பரிவாரதெய்வங்கள், நவக்கிரகம், யாகசாலை, மடப்பள்ளி போன்றனவும் பாதிக்கப்பட்டன. *(தவசுதன், எஸ்.,1.7.2022)*

தேர்கள்

அசையும் ஓர் ஆலயமாக தேரை இந்துக்கள் கருதுகின்றனர். தெல்லிப்பளைப் பிரதேசத்தில் வீணியவரை அம்மன் கோயில், கனவியற்குள பிள்ளையார் கோயில் தேர் பகுதியளவு பாதிக்கப்பட்டு மீள் உருவாக்கம் பெற்றுள்ளது. தேர் இன்றிய கோயில்களில் புலம்பெயர் மக்கள் உதவியுடன் புதிதாகத் தேர்கள் அமைக்கப்பட்டுள்ளன. பெரும்பாலான தேர்கள் இந்தியச் சிற்பிகளினாலும் சில தேர்கள் இலங்கைச் சிற்பிகளினாலும் உருவாக்கப்பட்டுள்ளன. வலி.வடக்கில் ஐந்து தேர்கள் காணப்படும் ஆலயங்களாக மாவிட் டபுரம் கந்தசுவாமி கோயில், குரும்பசிட்டி முத்துமாரி அம்மன் ஆகிய ஆலயங்களினைக் குறிப்பிடலாம். இந்த இரண்டு ஆலயங்களிலும் ஐந்து தேர்களும் முற்றாக சேதமடைந்து புதிய ஒருதேர் முத்துமாரி அம்மனுக்கு முப்பத்திரண்டு அடி உயரத்திலும், மாவிட்டபுர கந்தசுவாமி கோயில் முருகனுக்கு முக உத்தர தேராக நாற்பத்தைந்து அடி உயரத்திலும் இன்று அமைக்கப்பட்டுள்ளன. மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில், சண்முகர், கந்தசுவாமி, சந்திரசேகரர், சண்டேஸ்வரர், விக்னேஸ்வரர் போன்றோருக்கும் வசாவிளான் முத்து மாரி அம்மன் கோயிலில் அம்மன், முருகன், பிள்ளையார், சண்டேஸ்வரர், வைரவர் போன்ற மூர்த்திகளுக்கும் தேர் அமைக்கப்பட்டுள்ளமையும் அவதானிக்க முடிந்தது. உயர்ந்த தேராக மாவிட்டபுர கந்தசுவாமி கோயில் தேர், ஈழத்துக் கலைப் பாணியில் பூமந்தர வடிவத்தில் அதிஉச்ச மட்ட வேலையுடன் அழகிய யாழிகள், பலகைகள், உளி, சொக்கட்டான்

கூரை அமைப்பைத் தாங்கி நிற்கிறது. பிரமாண்ட மேல் விமானத்துடன் இரும்புச் சில்லுகளுடன் இலங்கையில் மிகஉயர்ந்த தேராகக் காணப்படுகின்றது. *(கந்தசாமி,இ.,15.3.2022)*

மஞ்சம் மரத்தினால் தேர் போன்று அமைக்கப்பட்டு சில்லுகள் பூட்டப்பட்டு முகத்திருவாசி, அழகிய வேலையுடன் காணப்படுவதனைக் காணலாம். முப்பத்தாறு அடி உயரமான திருமஞ்சம் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலில் காணப்பட்டது. பின்னர் முழுமையாகச் சேதமடைந்துள்ளது. வீணியவரை இராஜராஜேஸ்வரி அம்மன், கனவியற்குள பிள்ளையார் ஆலயத்தில் ஓரளவு உயரமான மஞ்சமும் முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. குரும்பசிட்டி முத்துமாரிஅம்மன் ஆலயத்தில் புதிதாக மஞ்சம் அமைக்கப்பட்டு உள்ளதை அவதானிக்கலாம்.

சப்பறங்கள்

சப்பறம் என்பது தெய்வங்கள் திருவீதி உலா வருவதற்கென அமைக்கப்பட்ட அலங்காரக்கலை எனப் பலவகையிலும் காணப்பட்டாலும் முத்துச் சப்பறம், கண்ணாடிச்சப்பறம், பூச்சப்பறம், படல் சப்பறம் போன்றன சகடையை அடித்தளமாகக் கொண்டு பலதடிகள் துணையுடன் அமைக்கப்படுகின்றது. *(சண்முகவடிவு, க., 01.01.2023)*

மிக உயர்ந்த சப்பறமாக மாவிட்டபுர ஆலய சப்பறம் காணப்பட்ட நிலையில் குரும்பசிட்டி முத்துமாரி அம்மன் சப்பறமும் முழுமையாக சேதமடைந்து உள்ளது. தற்போது இங்கு கட்டுச்சப்பறம் பயன்படுத்தப்படுவதனைக் காணமுடிகிறது. முதல் பூச்சப்பறம் மாவிட்டபுர கந்தசுவாமி கோயிலில் அமைக்கப்பட்டது. தற் போது ஆலயங்களில் பூச்சப்பறம் குறைவாக உள்ள நிலையில் சாத்துப்படி செய்வோர் பலர் புலம்பெயர்ந்து சென்றமை யால் சாத்துப்படிக் கலைஞர்களே பற்றாக் குறையாக உள்ளனர். ஒரு சில கலைஞரே பலஆலயங்களுக்குச் சாத்துப்படி செய்கின்றனர். தற்போது பிளாஸ்ரிக் வகை பூக்கள் சாத்துப்படியில் பயன்படுத்தப்படுவதை அவதானிக்கலாம்.

கலை வளர்க்கும் மன்றங்கள்

இப்பிரதேசத்தில் கலை வளர்க்கும் மன்றங்களாக மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலில் முத்தமிழ் மன்றமும், கீரிமலை நகுலேஸ்வர ஆலயத்தில் சிவநெறிக்கழகமும் காணப்பட்ட நிலை யில் இருமன்றங்களும் சேதமடைந்து பாதிக்கப்பட்டு கலைவளர்ச்சியும் பாதிக்கப்பட்டு உள்ளதுடன் விழாக்கள், வெளியீடுகள், அரங்கேற்றங்கள் அனைத்தும் பாதிக்கப்பட்டு உள்ளன. கிராமியக் கலைகளாக வசந்தன் ஆட்டம், ஒயிலாட்டம், கரகம், காவடி, கும்மி, கோலாட்டம் வலி. வடக்கில் அதிகம் ஆலயத்தை மையமாக கொண்டு அமைவு பெற்றாலும் தற்போது அருகிவரும் கலைகளாகவே காணப்படுகிறன.

ஓவியங்கள்

இந்து ஆலயங்களில் சிறுவர் முதல் பெரியவர்கள் வரை கண்ணைக்கவரும் கலையாக ஓவியங்கள் காணப்படுகின்றன. ஓவியங்கள் புராணச் செய்திகளை விளக் குபவையாகக் காணப்படுகின்றன. நடனமாதர்கள், தாமரைக்குளம், முனிவர்கள், மிருகங்கள் என்பன ஓவி யங்களாகத் தீட்டப்பட்டுள்ளன. *(கைலாசநாதகுருக்கள்,கா.,1983.85)* கீரிமலை நகுலேஸ்வர ஆலயத்தின் சுவரில் ஓவியமாக யமசங்காரம், ஆனந்த தாண்டவம், தட்சணாமூர்த்தி போன்ற இறை திருவிளையாடல்களும் மாவிட்டபுர

ஆலயத்தில் துவாரபாலகர், முருகன் சரவண பொய்கையில் அவதரித்தல், ஆனந்த தாண்டவம் போன்றனவும் ஓவியங்களாகத் தீட்டப்படடுள்ளன. கீரிமலையில் ஏற்கனவே இருந்த ஓவியங்களுக்கு புதிதாக வர்ணம் தீட்டப்பட்டு உள்ளதுடன் மாவிட்டபுர கந்தசுவாமி கோயிலில் பழைய ஓவியங்கள் அழிக்கப்பட்ட நிலையில் புதிதாக ஓவியங்கள் பல தீட்டப்பட்டும் உள்ளன. (வரதராசா,க18.12.2023).

இசைக் கலைஞர்கள்

இசைக்கலையில் தவில் நாதஸ்வர கலைஞர் தட்சணா மூர்த்தி, உருத்திராபதி, இராசா போன்றோர் வலி.வடக்கைச் சேர்ந்தவர்களாகக் காணப்பட்டதுடன் மாவிட்டபுர ஆலயத்தில் எந்நேரமும் நாதஸ்வர இசையை கேட்ககூடியதால் இசை வேளாளர் மடம் எனத் தனிமடம் அமைக்கப்பட்டுள்ளது. இந்திய நாதஸ்வர கலைஞர்கள் மாவிட்டபுர ஆலயத்தில் தவில் நாதஸ்வரம் வாசிப் பதற்கு ஈழத்துகலைஞரின் அங்கீகாரம் தேவைப்படுமளவிற்கு இசைக்கலை ஈழத்தில் விஞ்சி நின்றமையை அவதானிக்கலாம். பெரிய புராணம், திருவிளையாடல் புராணம், கந்தபுராணம் ஆகியவற்றுக்கு முன்பு உரை கூறி பயன் கூறிவந்த நிலையில் தற்போது புராணம் மட்டும் ஓதப்படுகின்றது. (கோபிராஜ், கு.,2020:13)

மடங்கள்

தெல்லிப்பளைப் பிரதேசத்தில் ஆலயங்களை அண்டிய நிலையில் மடங்கள் காணப்பட்டன. மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில், கீரிமலை நகுலேஸ்வரம் ஆலயம் போன்றவற்றில் அதிகளவு மடங்கள் காணப்பட்டன. பல மடங்கள் பாதிக்கப்பட்டன. கீரிமலையில் செகராஜசேகரமடம், கோப்பாய் ஆச்சி மடம், ரேணுகா மடம், அந்தியேட்டி மடம், பத்தர் மடம், சடையம்மா மடம், சிறாப்பர் மடம், வைத்திலிங்கம் மடம் போன்றனவும் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலில் இசை வேளாளர் மடம், திருநல்வேலியர் மடம், அம்பலவாணர் மடம், ஞானியர் மடம், குருநாதபிள்ளை மடம், முத்தர் மடம், முதலியார் மடம், பன்றி மடம், தேரடி மடம், விஸ்வகுல மடம் போன்ற பல மடங்களும் காணப்படுகின்றன. (குமுதா,சோ.,2007:35) உள்நாட்டு யுத்தத்தினால் பராமரிப்பற்ற நிலையில் அனைத்து மடங்களும் முற்றாக அழிக்கப்பட்ட நிலையில் கீரிமலை நகுலேஸ்வர ஆலயத்தில் ஆலய அன்னதான மடமும் சிவபூமி மடமும் மாவிட்டபுர கந்தசுவாமி கோயிலில் ஆலய அன்னதான மடமும், சீமெந்து தொழிற்சாலை அன்னதான மடமும் மட்டுமே இயங்கிக் கொண்டிருப்பதை அவதானிக்கலாம். (கோபிராஜ்,கு., 2020:18)

சமாதிக்கோயில்கள்

இப்பிரதேசத்தில் உள்ள சமாதிக் கோயில்களாக வறுத்தலைவிளான் கணேசையர் சமாதிக் கோயில், அளவெட்டி சிதம்பரேஸ்வரர் சமாதிக் கோயில், கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தை அண்டிய குழந்தைவேல் சுவாமி சமாதிக் கோயில், அருளம்பலவர் சுவாமி சமாதிக் கோயில் போன்ற சமாதி கோயில்கள் பூசைகள் மற்றும் பராமரிப்பற்ற நிலையிலும் பாதிக்கப்பட்டு தற்போது மீள் உருவாக்கம் பெற்றுள்ளன. (கந்தையா, மு., 2016:60)

முடிவுரை

யாழ்ப்பாண மாவட்டத்தின் வலி வடக்குப் பகுதியில் அமைந்துள்ள தெல்லிப்பளைப் பிரதேசத்தில் அமைந்திருக்கின்ற இந்துக் கோயில்களும் அக்கோயில்களில் காணப்பட்ட கலைகளும் 1983ஆம் ஆண்டு தொடக்கம் உள்நாட்டு யுத்தம் மற்றும் புலப்பெயர்வு

போன்றவற்றினால் முழுமையாகவும் பகுதியளவிலும் பாதிக்கப்பட்டுள்ளன. குறிப்பாகக் கோபுரங்கள், விமானங்கள், மண்டபங்கள் மற்றும் தேர், சப்பரம் ஆகியன பாதிக்கப்பட்டுள்ளன. இருப்பினும் தற்போது இக்கோயிற் கலைகளில் மீளுருவாக்கம் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் இவ்வாறாக 1983ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை தெல்லிப்பளைப் பிரதேச எல்லைக்குள் காணப்பட்ட இந்துக்கோயில்களும் அவற்றோடு இணைந்த நிலையில் கோயில் கலைகளும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன என்பதும் புலம்பெயர் நாட்டுமக்களின் நிதியுதவி கொண்டு பாதிக்கப்பட்ட பல கோயில்கள் மீண்டும் மீளெழுச்சி பெற்று கலைக்கோயில்களாக மாற்றம்பெற்று வருகின்றன என்பதும் அறியமுடிகின்றது. அத்துடன் இப்பிரதேசத்தில் புதிய இந்துக்கோயில்கள் உருவாக்கம் பெற்று வருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

உசாத்துணை நூல்கள்

இராமச்சந்திரக்குருக்கள் பாபுசர்மா, (2019), மாவைக் கந்தன் எப்போது அழகு பெறுவார், **முக உத்தரத் தேர் வெள்ளோட்டச் சிறப்பு மலர்,** மாவிட்டபுரம்,

கனகசூரியர், அ., (2011), அருள்மிகு துர்க்காதேவி ஆலயத்தின் வரலாற்றுப் பதிவுகள், **இந்து ஒளி,** அகில இலங்கை இந்துமாமன்றம், கொழும்பு.

கந்தையா,மு., (2016), **குழந்தைவேல் சுவாமிகளும் குரு பரம்பரையும்,** மீள் புனருத்தாரண சபை.

குமாரசுவாமி, ஏ.கே., (1980), **சிவானந்தநடனம்,** இந்துக்கலா அபிவிருத்திச் சங்கம், கொழும்பு.

குமுதா, சோ., (2007), **யாழ்ப்பாணத்துப் பண்பாட்டில் மடமும் மடக் கட்டடக்கலையும்,** குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

கைலாசநாதக் குருக்கள், கா., (1963), **சைவத்திருக்கோயில் கிரியைநெறி,** இந்துக் கலா அபிவிருத்திச் சங்கம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

கோபாலகிருஷ்ண ஐயர்.ப., (1992), **இந்துப் பண்பாட்டு மரபுகள்,** வித்தியா வெளியீடு. யாழ்ப்பாணம்.

கோபிராஜ், கு., (2020), **மாவையூர்,** மாவை பொதுச்சேவை கழகம், மாவிட்டபுரம்.

சண்முகவடிவு, க., (1998), **திருக்கோயில் வளர்த்த அலங்காரக் கலை,** யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறைக்கு சமர்ப்பித்த ஆய்வுக்கட்டுரை.

சிவபாலன், கா.,(2019), எழுச்சி பெறுநிலை கண்டு விளங்கும் வரலாற்றுப் பெருமைமிக்க மாவை கந்தப் பெருமானுக்கு முக **உத்தர திருத்தேர் வெள்ளோட்ட விழா,** சிறப்பு மலர், மாவிட்டபுரம்.

சுகந்தினி,சி., (2017), "யாழ்ப்பாணத்து இந்துக்கோயில் பண்பாட்டில் புராணங்களின் செல்வாக்கு", **பேராசிரியர் கா.கைலாசநாதகுருக்கள் நினைவு பேருரை மலர்,** யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.

ரமணராஜா,சி., (2009), "யாழ்ப்பாணத்துத் திருக்கோயிற் செல்நெறியில் கோபுரங்கள்: சமகால அவதானிப்புகள்", **நல்லைக்குமரன் மலர்,** யாழ்ப்பாணம்.

வசந்தா,வை., (2007), **ஈழத்துச் சிவாலயங்கள்,** திருக்கேதீஸ்வரம், தொண்டர் சபை வெளியீடு, கொழும்பு.

தகவல்: எஸ் தவசுதன், (வயது52), அளவெட்டி வடக்கு, 01.07.202.

தகவல்: கு.புவிராஜா, (வயது32), மாவிட்டபுரம், 07.08.2023.

தகவல்: எஸ். உதயகலா, கலாசார உத்தியோகத்தர், (வயது55), ஏழாலை, 14.11.2023.

தகவல்: எஸ். சயந்தன், மயிலிட்டி, (வயது48), 15.02.2021.

தகவல்: இ.கந்தசாமி ஸ்தபதி, மாவிட்புரம், (வயது60), 15.03.2022.

தகவல்: க.வரதராசா,, மாவிட்டபுரம், (வயது62), 8.12.2023.

தகவல்: க.சண்முகவடிவு, (வயது 58), 01.01.2023.

தகவல் : எஸ்.ஈஸ்வரபாலன், குரும்பசிட்டி, (வயது60), 01.08.2023.